# நன்னூல்

# உரை வளம்

3

## எழுத்தியல்-1

இரா. கண்ணன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies

## நன்னூல் உரைவளம் (தொகுதி-3)

# எழுத்தியல் – 1

பதிப்பாசிரியர்
முனைவர் இரா. கண்ணன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
இரண்டாம் முதன்மைச் சாலை,
தரமணி, சென்னை–600 113

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | **E̲luttiyal 1 (Vol. 3)** |
| Author | : | Dr. R. Kannan<br>Associate Professor<br>Dept. of Tamil Language<br>Presidency College, Chennai - 5 |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus, Tharamani<br>Chennai-600 113<br>Ph: 22542992 |
| Publication No. | : | 679 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2010 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 11 Point |
| No. of Pages | : | 264 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 115/- (Rupees One hundred and fifteen only) |
| Printed by | : | Sri Venkateswara Offset<br>New No. 47, Rajanga Mathya Street<br>Vadapalani, Chennai - 600 026.<br>Phone : 23621409 |
| Subject | : | Tamil Grammar |

## சுருக்க விளக்கம்

| | | |
|---|---|---|
| அவி | – | அவிநயம் |
| இடள் | – | இதன் பொருள் |
| இல, விள | – | இலக்கண விளக்கம் |
| உ–ம் | – | உதாரணம் |
| உணர்–ற்று | – | உணர்த்துதல் நுதலிற்று |
| எ–டு | – | எடுத்க்காட்டு |
| எ–று | – | என்றவாறு |
| எ–னின் | – | என் நுதலிற்றே எனின் |
| சுவாமி | – | சுவாமிநாதம் |
| சூ–ம் | – | சூத்திரம் |
| தொல், எழு | – | தொல்காப்பியம் எழுத்ததிகாரம் |
| தொல், சொல் | – | தொல்காப்பியம் சொல்லதிகாரம் |
| தொல், பொருள் | – | தொல்காப்பியம் பொருளதிகாரம் |
| தொன் | – | தொன்னூல் விளக்கம் |
| நச் | – | நச்சினார்க்கினியர் |
| ந.பா | – | நவநீதப் பாட்டியல் |
| நேமி | – | நேமிநாதம் |
| பா–டு | – | பாட வேறுபாடு |
| பொ–ரை | – | பொழிப்புரை |
| மா.அலங் | – | மாறனலங்காரம் |
| து.வீ | – | முத்துவீரியம் |
| வீர | – | வீரசோழியம் |
| வெண், பாட் | – | வெண்பாப் பாட்டியல் |

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ ,ஒ, ஓ, ஔ,
ஃ - இவ்வெழுத்துக்கள் முறையே

a , ā , i , ī ,u ,ū ,e, ē ,ai ,o,
ō, au, <u>kh</u>

எனவும்,

க், ங் , ச், ஞ் , ட் ,ண், த், ந் , ப், ம், ய், ர் , ல்
வ், ழ், ள், ற் , ன் - இவ்வெழுத்துக்கள் முறையே

k, ṅ , s, ñ , t , ṇ, ṭ , n , p ,
m , y , r , l , v ,ḷ , l̲, ṛ , n̲, <u>kh</u>

எனவும் ஆங்கில எழுத்துப்பெயர்ப்பில் பயன்படுத்தப் பெற்றுள்ளன.

# முன்னுரை

தமிழிலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐம்பெரும் பிரிவுகளை உடையது என்பர். இது பொது வழக்கே யாயினும் பிற்காலத்தில் பாட்டியல் அனைய புதுப்புது இலக்கணப் பிரிவுகள் தமிழில் தோன்றி நன்கு செழித்து வளர்ந்துள்ளன. அவ்வாறே எழுத்து, சொல் முதலான ஒவ்வொரு பிரிவினிலும் தோன்றிய இலக்கண நூல்களும் பல உள. தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று அதிகாரங்களை உடையதாதலான் அது மூன்றிலக்கணம் கூறும் நூல் என்பது போதரும். ஆயினும் பொருளதிகாரத்துள் அமைந்து கிடக்கும் உவமவியலும், செய்யுளியலும் முறையே அணியிலக்கணத்தையும், யாப்பிலக்கணத்தையும் வேண்டுமளவிற்கு விளக்கிக் கூறுதலான், அந்நூல் ஐந்திலக்கண நூலுமாம். தொல்காப்பியத்திற்குப் பின் ஐந்திலக்கணங்களையும் தொகுத்துக் கூறும் வகையிலோ, ஐந்திலக் கணங்களையும் தனித் தனியே விளக்கும் வகையிலோ பல்வேறு இலக்கண நூல்கள் எழுந்தன. அக்காலத்தே பெருவழக்காய் வழங்கிய அவ்விலக்கண நூல்கள் இன்று வீழ்ந்து போயின. இன்று வழங்கப் பெறும் இலக்கண நூல்களுள் வீரசோழியம், தொல்காப்பியத்திற்குப் பின் எழுந்த முதல் ஐந்திலக்கண நூலாகும். ஆயினும் அந்நூல் வடமொழி சார்பினைப் பெரும்பான்மை தழுவிச் செல்வதால் அது அவ்வளவாகப் போற்றப்படுவதில்லை. வீரசோழியத்திற்குப் பின் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டளவில் பவணந்தி முனிவரால் நன்னூல் இயற்றப்பட்டது. நன்னூல் ஐந்திலக்கணம் கூறிய நூல் என்றும், இன்று எழுத்து மற்றும் சொல்லிலக்கணம் உரைக்கும் பகுதி மட்டுமே கிடைக்கப் பெறுகிறது என்றும் எஞ்சிய பகுதிகள் காலச் செலவால் அழிந்திருக்கக் கூடும் என்றும் கருதுவாரும் உண்டு. இன்று வழக்கில் உள்ள நன்னூலின் மொத்த நூற்பாத் தொகை நான்னூற்று அறுபத்திரண்டு. பாயிரம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என மூன்று பகுதிகளாய் அமைந்துள்ள இந்நூலின்கண் பாயிரம் 55 நூற்பாக்களையும், எழுத்ததிகாரம் 202 நூற்பாக்களையும் சொல்லதிகாரம் 205 நூற்பாக்களையும் பெற்றுள்ளன. பாயிரம், பவணந்தியால் இயற்றப்பட்டதன்று என்பர்.

நன்னூலிற்கு இன்றுகாறும் எழுந்துள்ள உரைகள் பல. ஆயினும் மயிலைநாதரின் உரையே முதலில் எழுந்த உரையாகும். மயிலைநாதர் நன்னூல் ஆசிரியர் பவணந்தியின் சம காலத்தவர். மயிலை நாதரின் உரை நன்னூலிற்கு இன்று வரை எழுந்துள்ள உரைகள் யாவற்றிலும் தலைமையானது, தனிச் சிறப்புடையது. இவ்வுரைக்குப் பின் பல உரைகள் எழுந்தன. மயிலைநாதரின் காலந் தொடங்கி இருபதாம் நூற்றாண்டின் தொடக்கக் காலம் வரை எழுந்த உரைகள் இவ்வுரை வளத்தில் திரட்டப் பெற்றுள்ளன. மயிலைநாதர், சங்கர நமச்சிவாயர், சிவஞான முனிவர், கூழங்கைத் தம்பிரான், விசாகப் பெருமாளையர்,

ஆ.முத்துத்தம்பிப் பிள்ளை, முகவை இராமானுசக் கவிராயர், கா . கோபாலாசாரி, தி.கோ.ரங்காசாரி,ஆறுமுக நாவலர், வ.குமாரசாமிப் புலவர்,வை.மு. இராமானுசாசாரி, சே.கிருஷ்ணமாசாரி, பவானந்தம் பிள்ளை, கொ. இராமலிங்க தம்பிரான்,கா.நமச்சிவாய முதலியார்,மோசசு பொன்னையா ஆகியோரின் உரைகள் இவ்வுரை வளத்தில் இடம் பெற்றுள்ளன.

நூற்பா அதன்கீழ் சீர் பிரிக்கப் பெற்ற நிலையில் நூற்பா,ஆங்கில ஒலிபெயர்ப்பு, இலாசரசு செய்த மூல நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு, தொல்காப்பியம் முதல் சுவாமிநாதம் வரையிலான இலக்கண நூல்களில் இருந்து தரப்பெற்றுள்ள ஒப்புமை நூற்பாக்கள் ஆகியன இவ்வுரை வளத்தில் நிரல்படுத்தப்பட்டுள்ளன. நன்னூலிற்கு விருத்த யாப்பில் எழுந்த ஆண்டிப்புலவர் உரை அழிந்து போனது. அவ்வாறே பல உரைகள் காலச் செலவால் காணாது ஒழிந்தன. அச்சேறிய உரைகளுள் பல இன்று அருகி பெய்யரளவில் மட்டுமே அறியப் பெறுபவையாக உள்ளன. எனவே அச்சேறிய உரை நூல்களையேனும் காக்க வேண்டும் என்னும் நோக்கில் சிறந்தவையும் காலப்பழமை உடையவையுமான நன்னூல் உரைகள் இவ் உரைவளத்தில் திரட்டித் தரப் பெற்றுள்ளன. தமிழ் உலகம் ஏற்றுப் போற்றும் என நம்புகிறேன்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர், பேராசிரியர் முனைவர் ***கரு. அழ. குணசேகரன்*** அவர்களும்,இணை இயக்குநர் ***திரு. க. வீரபாகு சுப்பிரமணியம்*** அவர்களும் நன்னூல் உரைவள நூல்கள் அனைத்தையும் விரைந்து வெளிக்கொணர்ந்தனர். அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

இவ்வுரைவளத் திரட்டுப் பணியின்போது உற்றுழி உதவிய அனைவர்க்கும் உளமார்ந்த நன்றியினை உரித்தாக்கிக் கொள்வதோடு, தோன்றாத் துணையாய் இருந்து எம்மை இயக்கி வரும் தில்லைக் கூத்தனின் பொன்னார் திருவடிகளைப் போற்றிப் பணிந்து அமைகிறேன்.

10.11.2010

**இரா.கண்ணன்.**

சென்னை-55

*******

முனைவர் கரு.அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை – 113

# அணிந்துரை

வாழ்வை இலகுவாக்க மனிதன் படைத்துக் கொண்ட கருவிகள் பற்பல. அவற்றுள் மொழியும் ஒன்று. ஆயினும் பிற கருவிகள் யாவற்றுள்ளும் தலையாயதும் தனிச் சிறப்புடையதும் மொழியே. மொழி இன்றேல் வேறு எக்கருவியும் தோன்றி யிராது. மொழி, மனத்தின் உயிர்; பிறபிற கலைகளுக்கும் கருவிகளுக்கும் தாய். மாந்தரின வாழ்விற்கு இத்துணை இன்றியமையாக் கருவியாய்த் திகழும் மொழி, உலகம் யாண்டும் பரவிக் கிடக்கும் மக்களினக் குழுக்களிடையே பலவாகக் காணக்கிடக் கிறது. அம் மொழிக்கூட்டத்திடையே பன்மீன் நாப்பண் விளங்கு பால்மதி போல் இலங்குவது தமிழ்.

வரலாற்றுக்காலந் தொடங்கி இன்றளவும் தன்னேரிலாத் தகைசால் சீர்மையுடன் திகழும் இத் தமிழ்மொழியின் இலக்கிய இலக்கணப் பரப்பு அளந்திட்டுக் கூற ஒண்ணா விரிவும் ஆழமும் உடையது. காலமும் கடும்புனலும் கொண்டதுபோக எஞ்சியன சிலவேயாயினும், மறைந்து போனவற்றிற்கு மாற்றாகக் காலந்தோறும் தோன்றிய பனுவல்களோ பற்பல. அழகு தமிழில் அமைந்த அந் நூல்களின் பொதிபொருளைப் பழகு தமிழில் விளக்க எழுந்த உரைகளும் மிகப் பல.

ஓல்காப் புகழுடைய தொல்காப்பியத்திற்குப் பின் ஏறத்தாழ பன்னிரண்டு நூற்றாண்டுகள் கழித்துத் தோன்றி, இன்றளவும் தனிச்சிறப்புடன் வாழ்வது நன்னூல். பெயருக்கு ஒப்பவே தமிழின் இலக்கணத்தை நலம்படவும் நயம்படவும் இயம்பும் இந்நூலிற்கு உரை விளக்கம் கண்டோர் பலர். அவ்வுரைகளுள் பல, தம் பெயரை மட்டுமே நிறுத்தி தாம் மாய்ந்தன. வேறு பலவோ, அச்சேறியபோதும் இன்று காணுதற்கும் அரியனவாய் உள்ளன. இவ்வாறு காலச் செலவால் அருகி உள்ள உரைகளை அரிதின் முயன்று திரட்டி இருபத்திரண்டு தொகுதிகளாக உருவாக்கப் பெற்றுள்ள இவ்வுரைவளத்தினை எம்நிறுவனத்தின் வழி வெளி யிடுவதில் பெருமிதம் கொள்கிறோம்.

மயிலை நாதர், சங்கர நமச்சிவாயர்,சிவஞான முனிவர், கூழங்கைத் தம்பிரான், விசாகப் பெருமாளையர், ஆ.முத்துத் தம்பிப்பிள்ளை, இராமானுச கவிராயர், கா.கோபாலாசாரியார், தி.கோ.ரங்காசாரியார், ஆறுமுக நாவலர்,வ.குமாரசாமிப்புலவர், வை.மு.சடகோபராமானு சாசாரியார், சே.கிருட்டிணமாசாரியார், பவானந்தம் பிள்ளை, கொ.இராமலிங்கத் தம்பிரான், கா.நமச்சிவாய

முதலியார், மோசசு பொன்னையா ஆகியோரின் உரைகளும், என்றி பவார் செய்த பாயிரப் பகுதிக்கான ஆங்கில மொழி பெயர்ப்பும், இலாசரசு செய்த எழுத்ததிகாரம் மற்றும் சொல்லதிகாரத்திற்கான ஆங்கில மொழிபெயர்ப்பும் இவ்வுரைவளத்தில் திரட்டப் பெற்றுள்ளன. நன்னூலைத் தழுவி இயற்றப் பெற்று ஒரு நூற்றாண்டு காலத்திற்கும் மேல் மீள்பதிப்புக் காணாத திருப்பாற்கடல்நாதன் கவிராயரின் தமிழிலக்கணம், சி.அருணாசலம் பிள்ளையின், TAMIL GRAMMAR, இ.சாமுவேல் பிள்ளையின் தொல்காப்பிய நன்னூல், G.U.போப்பின் காண்டிகையுரை, ஆ.முத்துத் தம்பிப் பிள்ளையின் நன்னூல் இலகுபோதம் ஆகியன இவ் உரைவளத் திரட்டில் தனித்தனி நூல்களாக வெளி யிடப்பெற்றுள்ளன. இவ்வுரைவளம் தமிழன்னைக்கு அணி சேர்க்கும் என்பதில் ஐயமில்லை.

நன்னூல் உரைவளத்தின் பதிப்பாசிரியரான முனைவர் இரா.கண்ணன், சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்த் துறையில் இணைப்பேராசிரியராகப் பணியாற்றுகிறார். இவர் அறுபதிற்கும் மேற்பட்ட நூல்களின் ஆசிரியர். இவ் உரைவளத்தின் பதிப்புப் பணியோடு எழுத்துக் கோர்த்தல், மெய்ப்புத் திருத்தல், வடிவமைத்தல் உள்ளிட்ட அனைத்துப் பணிகளையும் தனியொருவராக இருந்து சிறப்புடன் செய்துள்ள இப்பதிப்பாசிரியரை மனதார வாழ்த்துவதுடன் நன்றி நவிலுங் கடப்பாடுமுடையேன்.

நிறுவனப்பணிகளில் எம்முடன் இணைந்து பணியாற்றும் துணை இயக்குநர், பேராசிரியப் பெருமக்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் ஆகிய அனைவர்க்கும் எம் நன்றி உரித்தாகுக.

**கரு.அழ.குணசேகரன்**

12.01.2011.

சென்னை – 113.

# நன்னூல் உரைவளம் - 1

## எழுத்ததிகாரம்

## எழுத்தியல் (Orthography)

### தொகுதி - 1

### கடவுள் வணக்கமும் அதிகாரமும்

55. **பூமலி யசோகின் புனைநிழ லமர்ந்த**
**நான்முகற் றொழுதுநன் கியம்புவ னெழுத்தே.**

**பூ மலி அசோகின் புனை நிழல் அமர்ந்த**
**நான்முகன் தொழுது நன்கு இயம்புவன் எழுத்தே.**

pū mali asōkin̲ pun̲ai niḷal amarnṭa
nān̲mukan̲ ṭoḷuṭu nan̲ku iyampuvan̲ eḷuṭṭē.

**இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )**

Invoking the aid of the four-faced (Argha) who dwells in the delightful shade of the flower abounding Asoka, I hope to treat fully of Orthography.

**மயிலை நாதர்**

எ—து, சூத்திரம். இவ்வதிகாரம் [1]என்னுதலி எடுத்துக் கொள்ளப்பட்டதோ வெனின், அதிகார நுதலியதூஉம் அதிகாரத்தினது பெயருரைப்பவே விளங்கும். ஆயின், இவ்வதிகாரம் என்ன பெயர்த்தோவெனின், எழுத்திலக்கணம் உணர்த்தினமையின் எழுத்ததிகாரமென்னும் பெயர்த்து. எழுதப்படுதலின் எழுத்தெனக் கொள்க. அதிகாரமென்றது முறைமை, எ — று.

இவ்வதிகாரத்துள் எனைவகை யோத்தினான் எழுத்திலக்கண முணர்த்தினானோ எனின், ஐவகை யோத்தினான் உணர்த்தி னானென்க. அவற்றுள், இம் முதலோத்து என்னுதலிற்றோ வெனின், ஒத்து நுதலியதூஉம் ஒத்தினது பெயருரைப்பவே விளங்கும். ஆயின், இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின்,

---

பாட வேறுபாடு :- 1. என்னுதலிற்றோ வெனின்

எண் பெயர் முதலான எழுத்திலக்கணம் பத்தும் உணர்த்திற் றாகலான், எழுத்தியலென்னும் பெயர்த்து. இவ்வோத்தினுள், இத்தலைச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், ஒரு சாரார் வேண்டும் சிறப்புப் பாயிரம் உணர்த்துதல் நுதலிற்று. என்னை?

**வணக்க மதிகார மென்றி ரண்டுஞ்**
**சொல்லச் சிறப்பென்னும் பாயிர மாம்"**

என்றாராகலின்,

'பூமலி... தொழுது' என வணக்கம் சொன்னவாறு.

'நன்கியம்புவனெழுத்து' என அதிகாரம் சொன்னவாறு.

அஃதேல், நூல் நுவல்வான் புகுந்து ஈண்டு வணக்கம் வைக்கவேண்டியது என்னையோ வெனின், நன்று சொன்னாய்!

**வழிபடு தெய்வ வணக்கஞ் செய்து**
**மங்கல மொழி முதலாக வகுத்தே**
**யெடுத்துக் கொண்ட விலக்கண விலக்கியம்**
**இடுக்க ணின்றி யினிது முடியும்**

என்பவாகலின், ஈண்டு வணக்கம் செய்யப்பட்டது.

**இ—ள்.:** பூமலி அசோகின், **எ – து** பூக்களால் மிக்குள்ள அசோகினது, **எ – று.**

புனை நிழல் அமர்ந்த எ – து, அலங்கரியா நின்ற நிழலிலே எழுந்தருளி யிருந்த **எ – று.**

நான்முகன்தொழுது **எ—து,** நான்கு திருமுகங்களையுடையானை வணங்கி **எ – று.**

நன்கு இயம்புவன் **எ – து** ,அழகிதாகச் சொல்லுவன், **எ – று.**

எழுத்து **எ – து,** எழுத்திலக்கணத்தை, **எ – று.**

ஏகாரம் ஈற்றசை. பதப்பொருளுரைத்தவாறு. என்னை?

**"என்ன சொல்லினு மியன்ற மருங்கிற்**
**பன்னி யுரைப்பது பதப்பொரு ளாகும்"**

என்றாராகலின்.

**பொழிப்புரை.:–**

நால்வகைப் பூக்களினால் மிக்குடைய அசோகினது [1]தன் எல்லையை இகவாதே எப்பொழுதும் அலங்கரியா நின்ற நிழலிலே எழுந்தருளியிருந்த நான்முகத் தொருவனை மனமொழி மெய்களின் மகிழ்ந்துடன் வணங்கி ஈரைங்குற்றமுமகற்றி ஈரைந்தழகொடும் புணர்ந்து அரிதின்றி விளங்க எழுத்திலக் கணத்தை யான் சொல்லுவன் **எ – று.**

இது பொழிப்புரை; என்னை?

**"பொழிப்பெனப் படுவது பொருந்திய பொருளைப்**

---

**பாட வேறுபாடு:–**

**1. எல்லையை**

**பிண்ட மாகக் கொண்டுரைப் பதுவே"**

என்றாராகலின்.

## சங்கர நமச்சிவாயர்

**ஏ — னின்,** கடவுள் வணக்கமும் அதிகாரமும் **உணர் — ற்று.**

**இ — ள்.:** பூக்கள் மலிந்த அசோகமரத்தினது அலங்கரிக்கும் நிழலின்கண் எழுந்தருளியிருந்த நான்கு திருமுகங்களையுடைய கடவுளை வணங்கி, நன்றாகச் சொல்லுவன் எழுத்திலக்கணத்தை, **எ — று.**

எல்லா நூலும் மங்கலமொழி முதல் வகுத்துக் கூறவேண்டுதலின் பூமலி என்றும், எல்லாச் சமயத் தோராலும் வணங்கப்படும் படைப்பு முதலிய ஐந்தொழிற்கும் உரிய எல்லாக் கடவுளாகியும் நின்றான் ஒருவனே என்பார், அருகனை நான்முகன் என்றும் கூறினார். இவ்வாறு வள்ளுவநாயனாரும் ஒரு தெய்வத்தைக் குறியாமல்,

**"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடுவாழ் வார்"**

என வரையாது கூறுதல் காண்க. எழுத்து என்பது ஆகுபெயர். ஏகாரம் ஈற்றசை.

எல்லாம் வல்ல கடவுளை வணங்கலான் இனிது முடியும் என்பது கருதி நன்கு இயம்புவன் என்று புகுந்தமையின், இது **நுதலிப்புகுதல்** என்னும் உத்தி.

## கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், வணக்கமும் அதிகாரமும் சொன்னது.

**இ—ள்.: பூமலி** — பூக்கள் நிறைந்த, **அசோகின்** — அசோக மரத்தினது, **புனைநிழல்** — அலங்காரமாகிய நிழலிலே, **அமர்ந்த** — எழுந்தருளியிருந்த, **நான்முகன்** — நான்கு திருமுகங்களை உடையானை, **தொழுது** — வணங்கி, **நன்கியம்புவன்** — அழகிதாகச் சொல்லுவன், **எழுத்தே** — எழுத்திலக்கணத்தை, **எ—று.**

பூ — நால்வகைப் பூக்களும் ; **புனைநிழல்** — தன் அடிவிட்டு நீங்காத நிழலும் ; **தொழுது** — மன வாக்குக் காயத்தால்.

## விசாகப் பெருமாளையர்

**இது,** கடவுள் வணக்கமும் அதிகாரமும் உணர்த்துகின்றது.

**இ—ள்.:** பூ — பூக்களானவை, **மலி** — நிறைந்த, **அசோகின்** — அசோகமரத்தினது, **புனை**—அலங்கரிக்கும், **நிழல்** — நிழலின்கண், **அமர்ந்த** — எழுந்தருளியிருந்த, **நான்முகன்** — நான்கு திருமுகங்களை உடைய கடவுளை, **தொழுது** — வணங்கி, **நன்கு** — நன்றாக, **இயம்புவன்** — சொல்லுவன், **எழுத்து**— எழுத்திலக்கணத்தை, **எ—று.**

**ஏகாரம்** – ஈற்றசை.எல்லாம் வல்ல கடவுளை வணங்கலால் இனிது முடியுமென்பது கருதி நன்கியம்புவன் என்று புகுந்தமையின் இது **நுதலிப்** புகுதலென்னும் உத்தி.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

*கடவுள் வணக்கமும் எடுத்துக்கொண்ட விஷயமுங் கூறுஞ் சூத்திரம் யாது?*

பூமலி யசோகின் புனைநிழ லமர்ந்த
நான்முகற் றொழுதுநன் கியம்புவ னெழுத்தே

(பூமலி அசோகின் புனைநிழல் அமர்ந்த
நால் முகன் தொழுது நன்கு இயம்புவன் எழுத்தே)

**இதன் பொருள்.: பூமலி** – பூக்கள் நிறைந்த, **அசோகின்** – அசோகமரத்தினது, **புனை** – அலங்கரிக்கப்பட்ட, **நிழல் அமர்ந்த** – நிழலின்கண் எழுந்தருளியிருந்த, **நான்முகற்றொழுது** – நான்கு முகங்களையுடைய, கடவுளை வணங்கி, **எழுத்து** – எழுத்திலக்கணத்தை, **நன்கு இயம்புவன்** – நன்றாகச் சொல்வேன், **எ–று.** ஏகாரம் – ஈற்றசை.

*இச் சூத்திரத்துள் எது முதல் எதுகாறுங் கடவுள் வணக்கம் கூறப்பட்டது?*

"பூமலி யசோகின் புனைநிழ லமர்ந்த; நான்முகற்றொழுது" என்பதுவரையுமே.

**எது முதலெதுகாறும் எடுத்துக் கொண்ட விஷயங் கூறப்பட்டது?**

"நன்கியம்புவனெழுத்தே" என்பது வரையும்.

*இந் நூலாசிரியர் ஆருகதர் என்பது எதனால் விளங்குகின்றது?*

"பூமலியசோகின் புனைநிழலமர்ந்த, நான்முகற்றொழுது"

என்பதனால். நான் முகன் – அருகன். அருகனை வழிபடுவோன் ஆருகதன்.

*எடுத்துக்கொண்ட விஷயம் யாது?*

"எழுத்து" (எழுத்து – எழுத்திலக்கணம்)

கடவுள் வணக்கஞ் செய்தது எதன் பொருட்டு?

எடுத்துக்கொண்ட விஷயம் இனிது முடிதற் பொருட்டு.

## முகவை இராமானுச கவிராயர்

என்ற இத்தலைச் சூத்திரம், தெய்வ வணக்கமுஞ் செயப்படு பொருளும் உணர்த்தலால் தற்சிறப்புப் பாயிரம் என்னெனின்,

***தெய்வ வணக்கமுஞ் செயப்படு பொருளு***
***மெய்த வுரைப்பது தற்சிறப் பாகும்***

என்றாராகலின், தற்சிறப்பாவது சிறப்புப் பாயிரத்துட் சிறப்புப் பாயிரமெனக் காண்க.

**இ—ள்.: பூமலி அசோகின்** – மலர்கள் நிறைந்த அசோகமரத்தினுடைய, **புனைநிழல்** – அலங்கரிக்கப்பட்ட நிழலிலே, **அமர்ந்த** – வீற்றிருந்த, **நான்முகன்தொழுது** – நான்கு முகங்களையுடையவனாகிய அருகதேவனை வணங்கி, எழுத்து – எழுத்திலக்கணத்தை, **நன்கியம்புவன்** – நன்றாகச் சொல்லுவேன் யான் **,எ—று.**

ஏகாரம் – ஈற்றசை. எழுத்திலக்கணத்தை எழுத்தென்றது ஆகுபெயர். தான் வழிபடுகடவுளை வணங்கி அதினாலே எடுத்துக் கொண்ட பொருள் இனிதாக முடியும் என்று எண்ணி. நன்கியம்புவனென்று புகுந்ததினாலே இது **நுதலிப்புகுத** லென்னும் உத்தி. நுதலல் – எண்ணல்.

இச்சூத்திரத்தில் யான் என்பது தோன்றா எழுவாயாக நின்றது. இயம்புவன் என்பதை அதற்குப் பயனிலையாக்கி முடித்துக் கொள்க.

## கா . கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

அஃதாவது எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணங்களுள் ஒன்றாகிய எழுத்தினது அகத்திலக்கணமான எழுத்தியலையும், புறத்திலக்கணமான பதவியல், உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல்களையுங் கூறும் அதிகாரம் என்பது. அதிகாரம் இங்குப் பெரும்பிரிவு.

எழுத்தினது அகத்திலக்கணத்தை உணர்த்தும் இயல். இங்கு இயல் என்றது மேற்சொல்லிய அதிகாரத்துக்கு அங்கமாகிய சிறு பிரிவை.

**உரை :– பூமலி** – பூக்கள் நிறைந்துள்ள, **அசோகின்** – அசோகமரத்தினது, **புனை நிழல்** – அலங்கரிக்கும் நிழலில், **அமர்ந்த** – எழுந்தருளிய, **நான்முகன்** – நான்கு திருமுகங்களையுடைய அருகக்கடவுளை, **தொழுது** – வணங்கி, **எழுத்து** – எழுத்திலக்கணத்தை, **நன்கு** – நன்றாக, **இயம்புவன்** – (யான்) சொல்லுவேன்.

**குறிப்பு :–**

ஒவ்வொரு நூலின் முதலிலும் மங்கலமொழி வகுத்துக் கூறவேண்டுதலின், இங்கு 'பூ' என்று தொடங்கினார்.

எழுத்து – எழுத்திலக்கணத்துக்கு ஆகுபெயர்.

எல்லாம் வல்ல கடவுளை வணங்குதலால் எடுத்தகாரியம் இனிது முடியுமென்று கருதி 'நன்கியம்புவன்' என்று புகுந்தமையின் இது **நுதலிப்புகுதல்** என்னும் உத்தி.

இச் சூத்திரம் தற்சிறப்பு. **"தெய்வ வணக்கமுஞ் செயப்படு பொருளும் – எய்த வுரைப்பது தற்சிறப் பாகும்"** என்பதனால் அறிக.

'தொழுது', 'எழுத்து' என்பவற்றில் முறையே கடவுள் வணக்கமும் செயப்படுபொருளும் காண்க.

'அமர்ந்த' என்பதன் இடைநிலை காலங்காட்டாது தன்மை யுணர்த்திற்று.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: பூ மலி அசோகின் புனை நிழல் அமர்ந்த நான்முகற்றொழுது** – பூக்கள் நிறைந்த அசோக மரத்தினது அலங்கரிக்கப்பட்ட நிழலின்கண் எழுந்தருளியிருந்த நான்கு திருமுகங்களை யுடைய கடவுளை வணங்கி, **எழுத்து நன்கு இயம்புவன்** – எழுத்திலக்கணத்தை நன்றாகச் சொல்வேன் யான், **எ–று.**

> எழுத்தென்பது ஆகுபெயர். ஏகாரம் ஈற்றசை.எல்லாம் வல்ல கடவுளை வணங்கலால் இனிது முடியுமென்பது கருதி நன்கியம்புவ னென்று புகுந்தமையின் இது **நுதலிப்புகுத** லென்னு முத்தி.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். பூ மலி அசோகின்** – பூக்கள் நிறைந்த அசோக மரத்தினது, **புனை நிழல் அமர்ந்த** – அலங்கரிக்கப்பட்ட நிழலின்கண் வீற்றிருந்த, **நான் முகன் தொழுது** – நான்கு திருமுகங்களை யுடைய கடவுளை வணங்கி, **எழுத்து – எழுத்திலக்கணத்தை, நன்கு இயம்புவன்** – நன்றாகச் சொல்வேன் (யான்) **எ–று.**

> இங்கே எழுத்து என்பது ஆகுபெயர். ஏகாரம் ஈற்றசை.எல்லாம்வல்ல கடவுளை வணங்கலால் இனிதுமுடியு மென்பது கருதி நன்கியம்புவனென்று புகுந்தமையின் இது நுதலிப்புகுதலென்னும் உத்தி, நுதலல் – எண்ணல், கருதுதல்,
>
> பூமலி – தொழுது எனக் கடவுள் வணக்கங் கூறப்பட்டது.
>
> நன்கியம்புவன் எழுத்தே என அதிகாரங் கூறப்பட்டது. யான் தோன்றாத எழுவாய்; இயம்புவன் பயனிலை; எழுத்து செயப்படுபொருள்.

## வை.மு. சடகோபராமானுசாசாரி

## சே. கிருஷ்ணமாசாரி

எழுத்தின் அகத்திலக்கணம், புறத்திலக்கணம் என்னும் இருவகை யிலக்கணங்களையும் உணர்த்தும் அதிகாரம்; அதிகாரம் இங்கே பெரும் பிரிவு.

எழுத்தின் அகத்திலக்கணத்தை உணர்த்தும் இயல்; இயல் – இங்கே சிறுபிரிவு.

**இ–ள்.: பூமலி** – பூக்கள் நிறைந்த, **அசோகின்** – அசோகமரத்தினது, **புனை நிழல்** – அழகிய நிழலில், **அமர்ந்த** – எழுந்தருளிய, **நான்முகன்** – நான்கு திருமுகங்களையுடைய கடவுளை (அருகதேவனை), **தொழுது**–வணங்கி, **எழுத்து** – எழுத்து இலக்கணத்தை, **நன்கு இயம்புவன்** – நன்றாகச் சொல்வேன், (யான்); **எ–று.**

எல்லா நூல்களும் மங்கலமொழி முதல் வகுத்துக் கூறவேண்டு தலால், 'பூ' என்று தொடங்கப்பட்டது.

எழுதப்படுதலின் எழுத்து எனக் கொள்க. எழுத்திலக்கணத்தை 'எழுத்து' என்றது, ஆகுபெயர்.

எல்லாம் வல்ல கடவுளை வணங்கியதனால் எடுத்துக்கொண்ட காரியம் இனிது முடியுமென்பது கருதி, 'நன்கியம்புவன்' என்று தொடங்கியதனால் இது **நுதலிப் புகுதல்** என்னும் உத்தி; (நுதலிப்புகுதல் – சொல்லித் தொடங்குதல்)

## பவானந்தம் பிள்ளை

**இ–ள். பூ மலி** – பூக்கள் நிறைந்த, **அசோகின்** – அசோக மரத்தினது, **புனைநிழல்** – அலங்கரிக்கப்பட்ட நிழலின்கண், **அமர்ந்த** – எழுந்தருளியிருந்த, **நான்முகன் தொழுது** – நான்கு திருமுகங்களையுடைய கடவுளை வணங்கி, **எழுத்து நன்கு இயம்புவன்** – எழுத்திலக்கணத்தை நன்றாகச் சொல்வேன் (யான்). **எ–று.**

எழுத்து – ஆகுபெயர். ஏகாரம் ஈற்றரசை.

எல்லாம் வல்ல கடவுளை வணங்கலால் இனிது முடியுமென்பது கருதி, 'நன்கியம்புவன்' என்று புகுந்தமையின், இது 'நுதலிப் புகுதல்' என்னும் உத்தி. 'யான்' என்பது தோன்றா எழுவாய்.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

இது, எழுத்தின் அகத்திலக்கணம் புறத்திலக்கணம் என்னும் இரண்டிலக் கணங்களையும் உணர்த்திய அதிகாரம் என விரியும்; எழுத்தினது அதிகாரம் எனினுமாம்.

எழுத்தியல் இது, எழுத்தின் அகத்திலக்கணத்தை உணர்த்திய இயல் என விரியும். இயல் என்பது மேற்சொல்லிய அதிகாரத்திற்கு அங்கம்.

**இ – ள்.:– பூ–** பூக்களானவை, **மலி** – நிறைந்த, **அசோகின்** –அசோக மரத்தினது, **புனை** – அலங்கரிக்கப்பட்ட, **நிழல்** – நிழலிலே, **அமர்ந்த** –எழுந்தருளி யிருந்த, **நான்முகன்** – நான்கு திருமுகங்களை யுடைய கடவுளை (அருகதேவனை), **தொழுது** – வணங்கி, **எழுத்து** – எழுத்திலக்கணத்தை, **நன்கு** – நன்றாக, **இயல்புவன்** – சொல்லுவேன் யான், **எ–று.** ஏ – ஈற்றசை.

**பொழிப்புரை.:–**

பூக்கள் நிறைந்த அசோகத்தினது அலங்கரிக்கப்பட்ட நிழலில் எழுந்தருளிய நான்கு திருமுகங்களை யுடைய அருகதேவனை வணங்கி எழுத்திலக்கணத்தை நன்றாக (யான்) சொல்லுவேன்.

எல்லாம் வல்ல கடவுளை வணங்கலால் இனிது முடியும் என்பது கருதி, நன்கு இயம்புவன் என்று புகுந்தமையின் இது, நுதலிப் புகுதல் என்னும் உத்தி. (நுதலிப்புகுதல் – இதனைச் சொல்லுவே னென்று சொல்லிப் புகுதல்). நுதலல்–சொல்லல்; எண்ணாதலுமாம்.

எழுத்து – எழுத்திலக்கணத்தை உணர்த்தினமையின், ஆகு பெயர்.

## கா. நமச்சிவாய முதலியார்

எழுத்ததிகாரம் என்பது எழுத்தினது இலக்கணத்தை உணர்த்தும் அதிகாரம் என்று பொருள்படும்; எழுதப்படுதலின் எழுத்தாம். அதிகாரம் முறைமை; அஃது இங்கே நூலின் ஒரு பெரும் பிரிவை உணர்த்தும்.

எழுத்ததிகாரம், எழுத்தின் அகத்திலக்கணம் புறத்திலக்கணம் என்னும் இருவகையினை யுடையது.

**எழுத்தின் அகத்திலக்கணம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | எண். | – | (எழுத்தின் எண்) |
| 2. | பெயர் | – | (எழுத்தின் பெயர்) |
| 3. | முறை | – | (எழுத்து நிற்கும் முறை) |
| 4. | பிறப்பு | – | (எழுத்தின் பிறப்பு) |
| 5. | உருவம் | – | (எழுத்தின் வரிவடிவம்) |
| 6. | மாத்திரை | – | (எழுத்து ஒலிக்கும் கால அளவு) |
| 7. | முதல்நிலை | – | (சொல்லுக்கு முதலில் எழுத்து நிற்கும் நிலை) |
| 8. | ஈறுநிலை | – | (சொல்லுக்கு இறுதியில் எழுத்து நிற்கும் நிலை) |
| 9. | இடைநிலை | – | (சொல்லுக்கு இடையில் எழுத்து நிற்கும் நிலை) |
| 10. | போலி | – | (போலி எழுத்துக்கள்) |

எனப் பத்துப் பகுதிகளை யுடையதாம்.

**எழுத்தின் புறத்திலக்கணம்:**

1. பதம்
2. புணர்பு

என இரண்டு வகைப்படும்.

ஆக, எழுத்ததிகாரம் பன்னிரண்டு பகுதியினையுடையதாதல் காண்க.

பதவியலில் வடமொழி ஆக்கமும், புணரியலில் உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் ஆகிய மூன்று இயல்களும் அடங்கும்.

**பூமலி** – பூக்கள் நிறைந்த, **அசோகின்** – அசோகமரத்தினது, **புனை நிழல்** – அழகிய நிழலில், **அமர்ந்த** – எழுந்தருளிய, **நான்முகன்** – நான்கு முகங்களையுடைய அருகதேவனை, **தொழுது** – வணங்கி, **எழுத்து** – எழுத்ததிகாரம் என்னும் இப்பகுதியை, **நன்கு இயம்புவன்** – (யான்) நன்றாகச் சொல்வேன்.

> பூ என்பது மங்கலமொழி. எழுத்து – ஆகுபெயர். அன் என்னும் விகுதி, தன்மை யொருமைக்கும் வருமென்று இவ்வாசிரியர் கொள்ளுதலால், அது தோன்ற இங்கே, **'இயம்புவன்'** என்றார். **இது எதிரது போற்றல்** என்னும் உத்தி.
>
> எல்லாம் வல்ல இறைவனை வணங்குதலின் இது இனிது முடியும்

என்பது கருதி, '**நன்கியம்புவ னெழுத்தே**' என்றார்; **இது நுதலிப் புகுதல்** என்னும் உத்தி.

## மோசகூ பொன்னையா

எழுத்தினது இலக்கணத்தை உணர்த்தும் அதிகாரம் எழுத்ததிகாரம் எனப்பட்டது; அதிகாரம் – விரிவு; எழுத்தின் விரிவாக அமைந்த பிரிவு எனப் பொருள்படும்.

இலக்கண நூலார் உணர்த்தும் எழுத்து, ஒலியெழுத்து வரியெழுத்து என இருவகைப்படும். எழுப்பப்படும் ஒலியாகிய ஒலியெழுத்து, எழுதப்படும் வரியாகிய வரியெழுத்திற்கு முந்தியதே ஆகும். 'எழுதப் படுதலின் எழுத்தே' என்ற நூற்பாவின் தொடரைக் காட்டி, வரி வடிவாற் பெற்ற பெயரே எழுத்து என்பாரும் உளர். எனின், எழுதப்படு முன் ஒலிவடிவுக்குப் பெயர் யாதோ?

எழுத்தினது இலக்கணத்தை ஆசிரியர் எழுத்தியல், பதவியல், உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் என்னும் ஐந்து இயல்களில் உரைத்தார். அவற்றுள், எழுத்தியல் எழுத்தின் அகத்திலக்கணத்தையும், ஏனைய அதன் புறத்திலக்கணத்தையும் கூறுகின்றன.

எழுத்துக்களின் இயல்பினைக் கூறும் இயல் எழுத்தியல் எனப்பட்டது. பிரித்துக் கண்ட தனி எழுத்துக்களின் இயல்பும், மொழியின் கண்ணே அறியப்படும் அவற்றின் இயல்பும் இவ்வாசிரியரால் இவ்வோரியலிலேயே கூறப்படுகின்றன. தொல்காப்பியர் அவற்றை முறையே நூன்மரபு, மொழிமரபு என்னும் இரண்டு இயல்களிற் கூறியுள்ளார்.

பூ நிறைந்த அசோக மரத்தினது அழகிய நிழலில் வீற்றிருக்கும் நான்முகனாகிய அருகனை வணங்கி, எழுத்திலக்கணத்தை நன்றாகச் சொல்லுவேன் **என்றவாறு**.

இந்நூற்பா பூமலி யசோகின் புனைநிழ லமர்ந்த நான்முகற் றொழுது என வணக்கமும், நன்கியம்புவன் எழுத்தே என அதிகாரமும் உரைத்ததனாற் சிறப்புப் பாயிரமாம். என்னை?

**வணக்க மதிகார மென்றிரண்டும் சொல்லச்**
**சிறப்பென்னும் பாயிர மாம்.**

எனவும்,

***வழிபடு தெய்வ வணக்கஞ் செய்து***
***மங்கல மொழிமுத லாக வகுத்தே***
***யெடுத்துக் கொண்ட விலக்கண விலக்கியம்***
***இடுக்க ணின்றி யினிது முடியும்.***

எனவுங் கூறினாராகலின், பூ என மங்கலமொழி முன்வகுத்து நான்முகன்தொழுது, அதனால் இனிது முடியும் என்ற துணிவால் நன்கியம்புவன் எழுத்தே, எனக் கூறினார்.

(1)

# எழுத்திலக்கணத்தின் பகுதி

56. எண்பெயர் முறைபிறப் புருவ மாத்திரை
முதலீ றிடைநிலை போலியென்றா
பதம்[1] புணர் பெனப்பன் னிருபாற் றதுவே.

எண் பெயர் முறை பிறப்பு உருவம் மாத்திரை
முதல் ஈறு இடைநிலை போலி என்றா
பதம் புணர்பு எனப் பன்னிரு பாற்று அதுவே.

eṇ peyar muṟai piṟappu uruvam māṭṭirai
mutal īṟu itainilai pōli eṉṟā
paṭam puṇarpu eṉap paṉṉiru pāṟṟu aṭuvē.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

### Division of Orthography

Orthography treats of twelve particulars (regarding Letters): Number, name, order, production, form and quantity; initials, finals, medials and substitutes; words and combinations.

## ஒப்புமைப் பகுதி

எண்பெயர் முறைபிறப் புருவளவு முதலீ
றிடைநிலை போலியொடு பதம்புணர் புளப்பட
வாறிரு பகுதித் ததுவென மொழிப

(இ.வி. : 2)

பெயரெண் முறைபி றப்புவடி வளவு முதனிலையே
பின்னிலையே இடைநிலை போலியதாம்பத் துடனே
முயல்பதமும் புணர்வும் உறப் பன்னிரண்டு...

(சுவா.: 14)

## மயிலை நாதர்

எ–ன், மேல் எழுத்திலக்கண மியம்புவனென்றார்; அஃது இத்துணைப் பகுதியான் உணர்த்தப்படுமென்று அதுபடும் [2]பாகுபாடுணர்த்துதல் நுதலிற்று.

---

பாட வேறுபாடு .:–

1. புணர்ப்பென
2. பெருட்பாகுபாடு

**இ—ள்.:**— எழுத்துக்களது தொகையும் பெயரும் முறையும் பிறப்பும் வடிவும் அளவும் மொழிக்கு முதலாவனவும் ஈறாவனவும் இடையாவனவும் போலியுமென்னும் இவ்வெழுத்துக் கூறுபாடு பத்தும் இவ்வெழுத்தானாம் பதமும் அப்பதம் தம்மோடும் உருபோடும் புணரும் புணர்ச்சியுமெனப் பன்னிரு [1]பகுதியினை யுடைத்து, மேற்சொன்ன எழுத்திலக்கணம், **எ—று.**

என்றா வென்பது எண்ணிடைச்சொல். ஏகாரம் ஈற்றசை.

## சங்கர நமச்சிவாயர்

**எ—னின்,** அவ்வெழுத்திலக்கணம் இத்துணைத்து என்பது **உணர்—ற்று.**

**இ—ள்.:** இப்பன்னிரு பகுதியினையும் உடைத்து அவ்வெழுத்திலக்கணம் **எ—று.**

> என்றா என்பது எண்ணிடைச் சொல். இச் சூத்திரம் **தொகுத்துச் சுட்டல்** என்னும் உத்தி; மேல் வருவன எல்லாம் **வகுத்துக் காட்டல்.**

## கூழங்கைத் தம்பிரான்

**சூ—ம்,** எழுத்திலக்கணம் இவ்வளவு பகுதிப்படும் **எ—று.**

**இ—ள்.: எண்** – எழுத்துக்களது தொகையும், **பெயர்** – எழுத்துக்களது பெயரும், **முறை** – எழுத்துக்களது முறையும், **பிறப்பு** – எழுத்துக்களது தோற்றமும், **உருவம்** – எழுத்துக்களது வடிவும், **மாத்திரை** – காலவழியும், **முதல்** – எழுத்துக்கள் மொழிக்கு முதலாய் வருவனவும், **ஈறு** – எழுத்துக்கள் மொழிக்கு ஈறாய் வருவனவும் **இடைநிலை** – எழுத்துக்கள் மொழிக்கு நடுவாய் வருவனவும், **போலி** – எழுத்துக்கள் போலியாவனவும், **என்றா** – இப்பத்துக் கூறுபாடும், **பதம்** – எழுத்துக்கள் பதமாவனவும், **புணர்வு** –நின்ற பதத்தின் ஈற்றெழுத்து வரும் பதத்தின் முதலெழுத்துப் புணரும் புணர்ச்சியும் என இவ்விரு கூறுபாடும், **பன்னிரு பாற்று** – ஆகப் பன்னிரண்டு பகுதியை உடையதாம், **அதுவே** – மேற்சொல்லிய எழுத்திலக்கணம், **எ—று.**

## விசாகப் பெருமாளையர்

**இது,** அவ்வெழுத்திலக்கணம் இவ்வளவிற் றென்பதை யுணர்த்துகின்றது.

**இ—ள்.: எண்** – எழுத்தினெண்ணும், **பெயர்** – பெயரும், **முறை** – முறையும், **பிறப்பு** – பிறப்பும், **உருவம்** – வடிவமும், **மாத்திரை** – அளவும், **முத(னிலை)** – **பன்னிருபாற்று** – பன்னிருபகுதியினை யுடைத்தாகும், **அது**—அவ்வெழுத் திலக்கணம் , **எ—று.**

---

பாட வேறுபாடு .:—

1. பகுதிப்பு

என்றா வென்பது எண்ணிடைச்சொல். இச்சூத்திரம் **தொகுத்துச் சுட்டலென்னுமுத்தி**, மேல்வருவனவெல்லாம் **வகுத்துக் காட்டல்.**

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

*எழுத்திலக்கண மெத்தனை பகுப்பினையுடையது?*

எண்பெயர் முறைபிறப் புருவ மாத்திரை

முதலீ றிடைநிலை போலி யென்றா

பதம்புணர் பெனப்பன் னிருபாற் றதுவே.

(எண் பெயர் முறை பிறப்பு உருவம் மாத்திரை

முதல் ஈறு இடைநிலை போலி என்றா

பதம் புணர்ப்பு எனப் பன்னிருபாற்று அதுவே.)

**இ–ள்.: எண்**– எழுத்தினெண்ணும், **பெயர்** – பெயரும், **முறை** – முறையும், **பிறப்பு** – பிறப்பும், **உருவம்** – வடிவமும், **மாத்திரை** – ஒலியளவும், **முதல் ஈறு இடைநிலை** – முதல்நிலை கடைநிலை இடைநிலைகளும், **போலி** – போலியும், **பதம்** – பதமும், **புணர்ப்பு** – புணர்ச்சியும், **எனப் பன்னிருபாற்று** – என்று பன்னிருபகுதியினை யுடைத்தாகும், **அது**– அவ்வெழுத்திலக்கணம்,எ–று.

*அவற்றுள் அகத்திலக்கண மெத்தனை?*

"எண் பெயர் முறைபிறப் புருவ மாத்திரை, முதலீ றிடைநிலை போலி" எனப் பத்து.

*புறத்திலக்கண மெத்தனை வகைப்படும்?*

பதம்புணர்பென இரண்டு.

*அகம்புறமென்னும் பாகுபாடு எதனாற் பெறப்பட்டது?*

"என்றா" என்னும் எண்ணிடைச்சொல் பிரித்தலால். அகத்திலக்கணம் – பொருளைவிட்டு நீங்காதமைந்த இலக்கணம். புறத்திலக்கணம் – சம்பந்த இலக்கணம்.

*எழுத்திலக்கண மெத்தனை இயல்களாற் கூறப்படும்?*

அகத்திலக்கணம் பத்தும் எழுத்தியலென வோரியலாகவும், புறத்திலக்கண மிரண்டனுள் அவ் வெழுத்தானாகும் பதம் பதவியலென வோரியலாகவும், அப் பதம் புணரும் புணர்ப்பு உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரிய லென்னும் மூன்றும் புணரியலென வோரியலாகவும் ஆக மூன்றியலாற் கூறப்படும்.

## முகவை இராமானுச கவிராயர்

இது, அவ்வெழுத் திலக்கணம் இத்தனை வகையென உணர்த்துகின்றது.

இ–ள்.: எண் – எழுத்துக்களின் கணக்கிலக்கணமும், பெயர் – அவற்றின் பெயரிலக்கணமும், முறை – அவை முன்பின் நிற்கும் முறையிலக்கணமும், பிறப்பு – அவற்றின் பிறப்பிலக்கணமும், உருவம் – அவற்றின் வடிவிலக்கணமும், மாத்திரை – அவற்றின் அளவிலக்கணமும், முதல் – அவை மொழிக்கு முன்னிற்கு மிலக்கணமும், ஈறு – அவை மொழியிறுதியிலே நிற்குமிலக்கணமும், இடைநிலை – அவை மொழியிடையிலே நிற்கு மிலக்கணமும், போலி – (சில எழுத்துக்கள் கூடிச் சில் எழுத்துக்கள் போலே யொலிப்பதும், ஒரெழுத்து நின்ற இடத்தில் அதுபோல மற்றோரெழுத்து வந்து நிற்பதுமாகிய) போலி இலக்கணமும் (ஆகிய எழுத்தின் அகத்திலக்கணம் பத்துடனே) பதம்–(அவ்வெழுத்தாலாகிய) பதத்திலக்கணமும், புணர்பு – (அப்பதம் ஒன்றோடொன்று புணரும் புணர்ச்சி யிலக்கணமும், என – என்று, (ஆகிய புறத்திலக்கணம் இரண்டையுங் கூட்ட) பன்னிருபாற்று– பன்னிரண்டு வகையினை யுடையதாம், அது – அவ்வெழுத் திலக்கணம் என்னுந் தொகை, எ–று.

ஏகாரம் – ஈற்றசை, அகத்திலக்கணம் புறத்திலக்கண மென்பது தோன்ற, என்றா வென்னும் எண்ணிடைச் சொற் கொடுத்துப் பிரித்தோதினார்.

இச் சூத்திரந் தொகுத்துச் சுட்டல், மேல் வருவன வெல்லாம் வகுத்துக் காட்டல் என்னும் உத்தி. சுட்டல் – குறித்தல், உத்தி – புத்தி நுட்பம். அது இங்கே புத்தி நுட்பத்தினாலே அமைக்கப்பட்ட பொருளின் மேல் நின்றது.

இச் சூத்திரத்தில் அது வென்பதை எழுவாயாகக் கொண்டு, பன்னிருபாற்று என்பதை அதற்குப் பயனிலையாக்கி முடித்துக் கொள்க.

## கா . கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :– அது** – அவ்வெழுத்திலக்கணம், **எண்** – (எழுத்தின்) கணக்கும், **பெயர்** – (எழுத்தின்) பெயரும், **முறை** – (எழுத்து நிற்கும்) வரிசையும், **பிறப்பு** – (எழுத்தின்) பிறப்பும், **உருவம்** – (எழுத்தின்) வடிவமும், **மாத்திரை** – (எழுத்துகள் உச்சரிக்கப்படும்) அளவும், **முதல்** (நிலை) – (மொழிக்கு) முதலில் நிற்பதும், **ஈறு** (நிலை) – (மொழிக்கு) இறுதியில் நிற்பதும், **இடை நிலை** – நடுவில் நிற்பதும், **போலி என்றா** – போலியும், **பதம்** – பதமும், **புணர்பு** – புணர்ச்சியும், **என** – என்று, **பன்னிருபாற்று** – பன்னிரண்டு வகையினை யுடையதாம்.

**குறிப்பு :–**

எண் முதலிய பத்தும் எழுத்தின் அகத்திலக்கணம் என்பதும், பதம் புணர்பு என்னும் இரண்டும் எழுத்தின் புறத்திலக்கணம் என்பதுந்தோன்ற 'என்றா' என்னும் எண்ணிடைச்சொல் கொடுத்துப் பிரித்தார்.

எழுத்தின் அகமும் புறமுமாகிய பன்னிரண்டு இலக்கணங்களையும் தொகுத்துக் குறித்தமையால்

இச்சூத்திரம் **தொகுத்துச்சுட்டல்** என்னும் உத்தி. மேல்வருவன **வகுத்துக்காட்டல்.**

எழுத்தின் அகத்திலக்கணமாகிய எண் முதலிய பத்தையும் **எழுத்தியல்** என்று ஓரியலாக்கி முதலிலும், அவ்வெழுத் தாலாகிய பதத்திலக்கணத்தைப் **பதவியல்** என்று ஓரியலாக்கி அதன் பின்னும், அப்பதம் புணரும் புணர்ச்சி யிலக்கணத்தை **உயிரீற்றுப்புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல்** என்று மூன்றாக்கி, அவற்றுட் சிறந்த உயிரீற்றுப் புணரியலைப் பதவியலின் பின்னும், மெய்யீற்றுப் புணரியலை அதன் பின்னும், உயிரீறு மெய்யீறு என்றவற்று ளடங்குதலால் உருபு புணரியலை அவ்விரண்டின் பின்னும் **ஒத்துமுறை வைப்பு** என்னும் உத்தியால் வைத்தார்.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: எண்**– எழுத்தினெண்ணும், **பெயர்** – பெயரும், **முறை**– முறையும், **பிறப்பு** – பிறப்பும், **உருவம்** – வடிவமும், **மாத்திரை** – அளவும், **முத(னிலை)** – முதனிலையும், **ஈறு (நிலை)** – கடை நிலையும், **இடைநிலை** – இடைநிலையும், **போலி** – போலியும், **பதம்** – பதமும், **புணர்பு** – புணர்ச்சியும், **எனப்பன்னிருபாற்று**– என்று பன்னிரு பகுதியினையுடைத்தாகும், **அது** – அவ்வெழுத்திலக்கணம், **எ–று.**

இச்சூத்திரந் **தொகுத்துச்சுட்ட**லென்னு முத்தி; மேல் வருவன வெல்லாம் **வகுத்துக் காட்டல்.**

இப்பன்னிரு பகுதியுள்ளும், எண் முதலிய பத்தும் எழுத்தின் அகத்திலக்கணம், பதம் புணர்பென்னும் இரண்டும் புறத் திலக்கணமென்பது தோன்ற, என்றா வென்னும் எண்ணிடைச் சொற்கொடுத்துப் பிரித்தோதினார்.

எழுத்தின் அகத்திலக்கணம் பத்தையும் எழுத்தியலென ஓரியலாகவும், புறத்திலக்கணம் இரண்டனுள் அவ்வெழுத்தாலாம் பதத்தைப் பதவியலென ஓரியலாகவும், அப்பதம் புணரும் புணர்ப்பை உயிரீற்றுப்புணரியல் மெய்யீற்றுப் புணரியல் உருபு புணரியலென மூன்றியலாகவும், **ஒத்து முறைவைப்பு** என்னும் உத்தியால் வைத்தார்.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். எண்** (என்றா) – எண்ணும், **பெயர்** (என்றா)– பெயரும், **முறை** (என்றா) – முறையும், **பிறப்பு** (என்றா) – பிறப்பும், உருவம் (என்றா) வடிவமும், **மாத்திரை** (என்றா) **அளவும், முதல் ஈறு இடைநிலை** (என்றா) – முதனிலையும் இறுதிநிலையும் இடைநிலையும், **போலி என்றா** – போலியும், **பதம்** (என) பதமும், **புணர்பு என** – சந்தியும் என்று, **பன்னிரு பாற்று** – பன்னிரண்டு வகையினை யுடைத்தாகும், **அது** – அவ் வெழுத்திலக்கணம். **எ–று.**

முதல் (நிலை) ஈறு (நிலை) இடைநிலை என்று முதல்ஈறு என்பவைகளோடும் நிலை என்பதைக் கூட்டிக் கொள்ளுக. இச்சூத்திரம் **தொகுத்துச்சுட்டல்** என்னும் உத்தி. மேல் வருவன **வகுத்துக்காட்டல்.**

இப் பன்னிரு பகுப்பினுள்ளும் எண் முதலிய பத்தும் எழுத்தின் அகத்திலக்கண மென்பது விளங்க அவற்றினிறுதியில் என்றா என்னுமிடைச் சொற்கொடுத்தெண்ணியும், பதம் புணர்பு என்னுமிரண்டும் எழுத்தின் புறத்திலக்கணம் என்பது விளங்க அவற்றினிறுதியில் என என்னுமிடைச் சொற்கொடுத் தெண்ணியும் வேற்றுமை உண்டாக்கி யோதினார்.

முறையாவது எழுத்துக்கள் முன்னும் பின்னுமாக நிற்கிற வரிசை.

போலி – சொல்லிலே ஒரெழுத்து நின்ற இடத்தில் மற்றோரெழுத்து வந்து நின்று முன் போலப் பொருடருதலும், சில எழுத்துக்கள் கூடி வேறோரெழுத்துப் போலொ லித்தலுமாம்.

எழுத்தின் அகத்திலக்கணம் பத்தையும் எழுத்தியல் என ஓரியலாகவும், புறத்திலக்கணம் இரண்டனுள் அவ்வெழுத்தாலாம் பதத்தைப் பதவியல் என ஓரியலாகவும், அப்பதம் புணரும் புணர்ப்பை உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபுபுணரியல் என மூன்றியலாகவும் ஒத்துமுறை வைப்பு என்னும் உத்தியால் வைத்தமை காண்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரி
## சே. கிருஷ்ணமாசாரி

**இ–ள்.: எண்** – (எழுத்துக்களின்) கணக்கும், **பெயர்** – பெயரும், **முறை** – (நிற்கும்) முறைமையும், **பிறப்பு** – பிறத்தலும், **உருவம்** – வடிவமும், **மாத்திரை** – (உச்சரிக்கும்) அளவும், **முதல் (நிலை)** – (மொழிக்கு) முதலில் நிற்றலும், **ஈறு**(நிலை) – (மொழிக்கு) இறுதியில் நிற்றலும், **இடை நிலை** – (மொழிக்கு) நடுவில் நிற்றலும், **போலி** – போலியும், **என்றா** – என்றும், **பதம்** – பதமும், **புணர்பு** – புணர்ச்சியும், என – என்றும், **பன்னிருபாற்று** – பன்னிரண்டு வகையினை யுடையதாகும், **அது** – அவ்வெழுத்திலக்கணம், **எ–று.**

பிறப்பும், மாத்திரையும் – எழுத்தின் ஒலிவடிவத்தையும், உருவம்– எழுத்தின் வரிவடிவத்தையும் பற்றியவை. மற்றவை பொது.

எண் முதலிய பத்தும் எழுத்தின் அகத்திலக்கணம் என்பதும், பதம் புணர்பு என்னும் இரண்டும் எழுத்தின் புறத்திலக்கணம் என்பதும் தோன்ற, 'என்றா' என்றும், 'என' என்றும் வெவ்வேறு சொற்களைக் கொடுத்துப் பிரித்தார்.

இச் சூத்திரம் **தொகுத்துச் சுட்டல்** என்னும் உத்தி. மேல் வருவன **வகுத்துக் காட்டல்.** (தொகுத்துச் சுட்டல் – திரட்டிச்சொல்லுதல். வகுத்துக் காட்டல் – விவரித்துச் சொல்லுதல். உத்தி – யுக்தி)

எழுத்தின் அகத்திலக்கணமாகிய பத்தையும் எழுத்தியல் என ஓரியலாக்கி முதலிலும்; அவ்வெழுத்தாலாகிய பதத்தின் இலக்கணத்தைப் பதவியல் என ஓரியலாக்கி அதன் பின்னும்; அப் பதம் புணரும் புணர்ச்சி யிலக்கணத்தை உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் என மூன்று இயலாக்கி, உயிரெழுத்து மெய்யெழுத்துக்களின் முறைமை பற்றி உயிரீற்றுப் புணரியலைப் பதவியலின் பின்னும், மெய்யீற்றுப் புணரியலை அதன் பின்னும், உயிரீறு மெய்யீறு என்றவற்றுள் அடங்குதலால் உருபு புணரியலை அவ்விரண்டன் பின்னும் **ஒத்துமுறை வைப்பு** என்னும் உத்தியால் வைத்தார். (ஒத்துமுறை வைப்பு – இயல்களைக் காரணம் பற்றி முறைப்பட வைத்தல்.)

## பவானந்தம் பிள்ளை

**இ—ள். எண்** – எழுத்தினெண்ணும், **பெயர்** – பெயரும், **முறை** – (அவை முன்பின் நிற்கும்) முறையும், **பிறப்பு** – பிறப்பும், **உருவம்** – வடிவமும், **மாத்திரை** – அளவும், **முதல் (நிலை)** – (அவை மொழிக்கு)முதலில் நிற்கும் நிலையும், **ஈறு (நிலை)** – கடை நிலையும், **இடைநிலை** – இடைநிலையும், **போலி** – போலியும், **பதம்** – பதமும், **புணர்பு** – (பதங்கள் ஒன்றோடொன்று புணரும்) புணர்ச்சியும், **எனப் பன்னிரு பாற்று** – என்று பன்னிரு பகுதியினை யுடைத்தாகும், **அது** – அவ்வெழுத்திலக்கணம். **எ—று.**

இச் சூத்திரம் '**தொகுத்துச் சுட்டல்**' என்னும் உத்தி; மேல் வருவன வெல்லாம் '**வகுத்துக் காட்டல்**'.

இப் பன்னிரு பகுதியுள்ளும், எண் முதலிய பத்தும் எழுத்தின் அகத்திலக்கணம்; பதம் புணர்பென்னும் இரண்டும் புறத்திலக்கணம்; என்பது தோன்ற, என்றா என்னும் எண்ணிடைச்சொல் கொடுத்துப் பிரித்தோதினார்.

எழுத்தின் அகத்திலக்கணம் பத்தையும் எழுத்தியலென ஓரியலாகவும், புறத்திலக்கணம் இரண்டனுள் அவ்வெழுத்தாலாம் பதத்தைப் பதவியலென ஓரியலாகவும், அப்பதம் புணரும் புணர்ப்பை உயிரீற்றுப் புணரியல் மெய்யீற்றுப் புணரியல் உருபு புணரியலென மூன்றியலாகவும் வைத்தார் 'ஒத்து முறை வைப்பு' என்னும் உத்தியால்.

உத்தி 32. அவற்றை 14 ஆவது சூத்திரத்தால் அறிக.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ—ள். எண்** – (எழுத்தின்) எண்ணும், **பெயர்** – பெயரும், **முறை** –முறையும், பிறப்பு – பிறப்பும், **உருவம்** – வடிவமும், **மாத்திரை** – அளவும், **முதல் (நிலை)** – முதனிலையும், **ஈறு (நிலை)** – கடைநிலையும், **இடைநிலை** – இடைநிலையும், **போலி** – போலியும், **பதம்** – பதமும், **புணர்பு** – புணர்ச்சியும், **என** – என்று, **பன்னிரு பாற்று** – பன்னிரண்டு பகுதியினை உடையதாம், **அது** – அவ்வெழுத்திலக்கணம், **எ—று.**

**பொ—ரை.:**

(எழுத்தின்) கணக்கும், பெயரும், முறையும் பிறப்பும், வடிவமும், அளவும், முதல் நிலையும், கடை நிலையும் இடைநிலையும், போலியும், பதமும், புணர்ச்சியும் என்று பன்னிரண்டு பகுதியினை யுடையதாம் அவ்வெழுத்திலக்கணம்.

என்றா என்பது எண்ணிடைச்சொல்.

இவ் சூத்திரம் தொகுத்துச் சுட்டல் என்னும் உத்தி. (தொகுத்துச் சுட்டல் – பலவும் தொகுத்துக் காட்டல்.) மேல்வருவன வெல்லாம் வகுத்துக் காட்டல். (வகுத்துக் காட்டல் – தொகுத்துக் காட்டியவைகளை வேறு வேறு விரித்துக் காட்டுதல்.)

இப் பன்னிரண்டு பகுதியுள்ளும் எண் முதலிய பத்தும் எழுத்தின் அகத்திலக்கணம் என்பதும், பதம் புணர்பு என்னும் இரண்டும் புறத்திலக்கணம் என்பதும் தோன்ற என்றா என்னும் எண்ணிடைச் சொல் கொடுத்துப் பிரித்து ஓதினார்.

எழுத்தின் அகத்திலக்கணமாகிய எண் முதலிய பத்தையும் ஒரியலாகவும், புறத்திலக்கணமாகிய பதம், புணர்பு என்னும் இரண்டனுள் அவ் வெழுத்தாலாம் பதத்தைப் பதவியலென ஒரியலாகவும், அப் பதம் புணரும் புணர்ப்பை உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் என மூன்றியலாகவும் **ஒத்து முறை வைப்பு** என்னும் உத்தியால் வைத்தார். (ஒத்து முறைவைப்பு இயல்களைக் காரணகாரிய முறையால் வைத்தல்.)

## கா. நமச்சிவாய முதலியார்

**எண்** – (எழுத்துக்களின்) தொகையும், **பெயர்** – பெயரும், **முறை** – முறையும், **பிறப்பு** – பிறப்பும், **உருவம்** – வடிவமும், **மாத்திரை** – அளவும், **முதல்** (நிலை) – (மொழிக்கு) முதலிலே நிற்பனவும், **ஈறு** (நிலை) – (மொழிக்கு) இறுதியிலே நிற்பனவும், **இடைநிலை** – (மொழிக்கு) இடையிலே நிற்பனவும், **போலி** – போலியும், **பதம்** – (அவ்வெழுத்தாலாகும்) பதமும், **புணர்பு** – (அப் பதங்கள் தம்மோடும் உருபோடும் புணரும்) புணர்ச்சியும், **என** – என்று, **பன்னிருபாற்று** – பன்னிரண்டு பகுதியினை யுடைத்தாகும், **அது** – அவ்வெழுத்தியல்.

இச்சூத்திரம் **தொகுத்துச் சுட்டல்** என்னும் உத்தி; மேல் வருவனவெல்லாம் **வகுத்துக் காட்டல்** என்னும் உத்தியாம்.

எண் முதலிய பத்தும் எழுத்தின் அகத்திலக்கணம் என்பதும், பதம் புணர்பு என்னும் இரண்டும் எழுத்தின் புறத்திலக்கணம் என்பதும் தோன்ற, 'என்றா' என்னும் எண்ணிடைச்சொற் கொடுத்துப் பிரித்தோதினார்.

எழுத்தின் அகத்திலக்கணம் பத்தையும் எழுத்தியல் எனவும்,

புறத்திலக்கணம் இரண்டனுள் அவ்வெழுத்தால் ஆகும் பதத்தைப் பதவியல் எனவும், அப்பதம் புணரும் புணர்ப்பை உயிரீற்றுப் புணரியல் மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் எனவும் வைத்தமையால், இஃது **ஒத்துமுறை வைப்பு** என்னும் உத்தி.

## மோசசு பொன்னையா

எழுத்துக்களின் தொகை, பெயர், நிற்கும் முறை, பிறப்பு, வடிவம், ஒலியளவு, முதல்நிலை, இடைநிலை, கடைநிலை, போலி எனவும்; எழுத்துக்களாலான பதம், பதம் ஒன்றோடொன்று இயையும் புணர்ச்சி எனவும் எழுத்திலக்கணம் பன்னிரு வகைப்படும், **எ–று.**

எண் முதலிய பத்தும் அகத்திலக்கணம் என்றும் பதமும் புணர்ப்பும் புறத்திலக்கணம் என்றும் அறிவித்ததற்கு அவற்றிடை என்றா என்னும் எண்ணிடைச் சொற்புணர்த்தி நூற்பா செய்தார். 'அது' (எழுத்து) என்னும் தோன்றா எழுவாய் 'பாற்று' என்னும் வினைக்குறிப்பு முற்றுப் பயனிலை கொண்டு முடிந்தது.

எழுத்தின் அகத்திலக்கணம் எழுத்தியலிலும், புறத்திலக்கணமாம் பதம், புணர்ப்பு எனும் இரண்டனுள் பதம் பதவியலிலும், புணர்ப்பு உயிரீற்றுப் புணரியல் முதலிய மூன்று இயல்களிலும் கூறப்பட்டுள்ளன.

(2)

# 1. எழுத்தின் எண்

**57. மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி**
**எழுத்தது முதல்சார் பெனவிரு வகைத்தே.**

**மொழி முதல் காரணம் ஆம் அணுத் திரள் ஒலி**
**எழுத்து அது முதல் சார்பு என இரு வகைத்தே.**

moḻi mutal kāraṇam ām aṇut tiraḷ oli
eḻuttu atu mutal sārpu e̱na iru vakaittē.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

### A letter defined

A Letter is produced by a collection of minute articulate sounds; it is two kinds, Primary and Secondary.

## ஒப்புமைப் பகுதி

**மொழிக்கா ரணமா நாதகாரி யவொலி**
**யெழுத்தது முதல்சார் பெனவிரு வகைத்தே.**

(இ.வி. : 3)

**எழுதப் படுதலி னெழுத்தா கும்மே**

(மு. வீ. : 1)

**அது முதல் சார்பென வாமிரு பாலன**

(மு. வீ.: 4)

**உயிருட லென முத லோரிரு வகைய**

(மு.வீ. : 5)

**மொழிக்குக்கா ரணமாகி நாத காரியப் பட்டு**

(சுவா. : 14)

## மயிலை நாதர்

**எ–ன்,** இயம்பப் பெறும் எழுத்தாவது இன்னதென்பதூஉம் அதன் பாகுபாடும் உணர்த்துதல் நுதலிற்று.

**இ–ள்.:** மொழிக்கு முதற் காரணமாகிய பரமாணுக்களது இயைபினான் ஆகுவதான ஒலி எழுத்தெனப்படும்; அது [1]முதலெழுத்தும் சார்பெழுத்துமென இரண்டு கூறாம், **எ–று.**

ஈண்டு ஒலியெழுத்துச் சிறப்புடைமையின் எடுத்தோதினார். என்னை? **"சிறப்புடைப் பொருளைத் தானெடுத்து மொழிதல்"** என்பது தந்திரவுத் தியாகலான். ஒருசாரார் வேண்டும் உணர்வெழுத்து முதலான விகற்பமெல்லாம் இவ்வதிகாரப் புறநடையுட் கண்டு கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ–னின்,** பன்னிருபாற்றதுவே' என்றவற்றுள் எழுத்தினது அகத்திலக்கணமாகிய பத்தையும் ஓரியலாகவும், அதன் புறத்திலக்கணமாகிய பதம் புணர்பு என்னும் இரண்டனுள் அவ்வெழுத்தானாகும் பதத்தை ஓரியலாகவும், அப்பதம் புணரும் புணர்ப்பை மூன்றியலாகவும், **ஒத்து முறைவைப்பு** என்னும் உத்தியான் வைக்கப் புகுந்து, முதற்கண் வைத்த எழுத்தியலின் எழுத்தினது எண்ணினை நிறுத்தமுறையால் உணர்த்துவான் தொடங்கி, எழுத்து இன்னதென்பதூஉம் அதன் வகையும் **உணர்–ற்று.**

**இ–ள்.:** மொழிக்கு முதற்காரணமாய் அணுத்திரளின் காரியமாய் வரும் ஒலியாவது எழுத்து; அது முதலெழுத்து என்றும், சார்பெழுத்து என்றும் இருவகையினை உடைத்து, **எ–று.**

எனவே, மொழிக்கு முதற்காரணம் எழுத்தானாற்போல, எழுத்திற்கு முதற்காரணம் அணுத்திரள் என்பது பெற்றாம். ஆமென்னும் பெயரெச்சம் ஒலி என்னும் பெயரோடு முடிந்தது.

முற்கு, வீளை முதலியவற்றிக்கு முதற் காரணமாய் அணுத்திரளின் காரியமாய் வரும் ஒலி எழுத்தாகாமையின், மொழிமுதற் காரணமாம் ஒலி என்றார். சிதலது நீர்வாய்ச் சிறுதுகளால் பெரும் புற்றுரு அமைந்த பெற்றியது என்ன, ஐம்புலப் பேருரு ஐந்தும் ஐந்தணுவால் இம்பரிற் சமைவது யாவரும் அறிதலின், அநாதி காரணமாகிய மாயையினை ஈண்டுக் கூறாது, ஆதி காரணமாகிய செவிப்புலனாம் அணுத்திரளை எழுத்திற்கு முதற் காரணம் என்றார். இவ்வாசிரியர்க்கு மாயை உடன்பாடன்று.

அணுத்திரளொன்றுமேதுணிவெனின் **பிறிதொடு படாஅன் தன்மதங் கொளல்** என்னும் மதம்படக் கூறினார் என்றுணர்க. ஈண்டு அணு என்றது ஒலியினது நுட்பத்தை.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்,** எழுத்தாவது இன்னது என்பதூஉம் அதன் பகுதியும் சொல்லியது.

**இ–ள்.: மொழிமுதற் காரணமாம்** – மொழிக்கு முதற் காரணமாகியும், **அணுத்திரள்** – வாயு அணுக்கூட்டத்தின் காரியமாகியும், **ஒலி** – வரும் ஓசையை, **எழுத்து** – எழுத்தென்று சொல்லப்படும், **அது** – அவ்வெழுத்து, **முதல் சார்பென** – முதலெழுத்தென்றும் சார்பெழுத்தென்றும், **இருவகைத்தே** – இரண்டு பகுதிப்படும், **எ–று.**

எழுத்தென்றது யாதெனில், முன்பு கட்புலனாகாது மனனுருவாய் நிற்கும் கருத்துப் பொருளாய்ப் பின்பு கட்புலனாகிய வடிவமுடையவாய் வேறுவேறு வகுத்துக் கொண்டு தன்னையே உணர்த்தியும் சொற்கியைந்து நிற்கும் ஓசையேயாம்.கடலொலி, சங்கொலி முதலிய ஓசைகள் பொருள் உணர்த்தாமையானும் முற்கு, வீளை முதலியன பொருளுணர்த்திற் றாயினும் எழுத்து ஆகாமையானும் அவை ஈண்டுக் கொள்ளாராயினார்.

## விசாகப் பெருமாளையர்

**இது,** எழுத்தின் அகத்திலக்கணமாகிய எண் முதலிய பத்தையும் ஓரியலாகவும், புறத்திலக்கணமாகிய பதம் புணர்பு என்னுமிரண்டனுள் அவ்வெழுத்தாலாம் பதத்தை ஓரியலாகவும், அப் பதம் புணரும் புணர்ப்பை மூன்றியலாகவும், **ஒத்துமுறை வைப்பென்னு** முத்தியால் வைக்கப் புகுந்து முதற்கண் வைத்த எழுத்தியலில் எழுத்தினெண்ணினை அறிவிக்கும்படியாகத் தொடங்கி எழுத்து இப்படிப்பட்டதென்பதும் அதன் வகையும் உணர்த்துகின்றது.

**இ–ள்.: மொழி** – சொல்லுக்கு, **முதற் காரணமாம்**– ஆதி காரணமாகி

வருகின்ற, **அணுத்திரள்** – அணுத்திரளின் காரியமாகிய, **ஒலி** – ஒலியாவது, **எழுத்து** – எழுத்தாகும், **அது** – அவ்வொழுத்து, **முத(லென)** – முதலெழுத் தென்றும், **சார்பென** – சார்பெழுத்தென்றும், **இரு வகைத்து** – இரண்டு வகையினை யுடைத்தாகும், **எ–று.**

> அணுத்திர ளென்றது ஒலி நுட்பத்தை, மொழிமுதற் காரணமா மொலி யெழுத்தென்றால் **நா** முதலியவை எழுத்தாகா வென்றும் அணுத்திரளொலி யெழுத்தென்றால் முற்கு, இருமல் முதலியவை எழுத்தாமென்றுங் கொள்ள வேண்டுதலால் மொழிமுதற் காரணமா மணுத்திரளொலி யெழுத்தென்றார்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

*எழுத்தாவதின்ன தெனவும் அதன்வகை யித்தனை யெனவுங் கூறுஞ் சூத்திரம் யாது?*

மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி

யெழுத்தது முதல்சார் பெனவிரு வகைத்தே.

(மொழி முதற்காரணம் ஆம் அணுத்திரள் ஒலி எழுத்து;

அது முதல் சார்பு என இருவகைத்து ஏ)

**இ–ள்.: மொழிமுதற் காரணம் ஆம்** – மொழிக்கு முதற் காரணமாகிய, **அணுத்திரள்** – அணுத்திரளே, **ஒலியெழுத்து** – ஒலியெழுத்து, **அது முதல் சார்பென இருவகைத்து** –அது முதலெழுத்துஞ் சார்பெழுத்துமென விருவகையினை யுடையது, **எ–று.**

*இச் சூத்திரத்திற் கூறப்பட்ட எழுத்து எவ்வெழுத்து?*

"ஒலியெழுத்து"

*ஒலி யெழுத்தாவது யாது?*

"மொழி முதற் காரணமாம் அணுத்திரள் ஒலியெழுத்து"

*அவ்வெழுத்து எத்தனை வகைப்படும்?*

"அது முதல் சார்பு என விருவகைத்தே"

*ஒலி வடிவினதாகிய எழுத்தே யன்றி வேறுமுளதா?*

வரிவடிவினதாகிய வெழுத்துமுண்டு. அது, "கட்புலனில்லாக் கடவுளைக் காட்டுஞ் சட்டகம் போலச் செவிப்புல வொலியை, யுட்கொளற்கிடுமு ருபாம் வரியெழுத்து" என்பதனாற் பெறப்படும்.

## முகவை இராமானுச கவிராயர்

**இது**, (எழுத்தின் அகத்திலக்கணமாகிய பத்தையும் எழுத்தியலென ஒரியலாகவும், அவ்வெழுத்தா லாகிய பதத்திலக்கணத்தைப் பதவியலென

ஓரியலாக்கி அதன் பின்னும், அப்பதம் புணரும் புணர்ச்சி யிலக்கணத்தை உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியலென மூன்று இயலாக்கி அவற்றுட் சிறந்த உயிரீற்றுப் புணரியலைப் பதவியலின் பின்னும், மெய்யீற்றுப் புணரியலை அதன் பின்னும், உயிரீறு மெய்யீ றென்றவற்றுள் அடங்குவதால் உருபு புணரியலென்றதை அவ் விரண்டின் பின்னும், **ஒத்துமுறை வைப்**பென்னும் உத்தியால் வைக்கப் புகுந்து முதலிலே வைத்த எழுத்தியலின் எழுத்தினது எண்ணிலக்கணத்தை யுணர்த்தத் தொடங்கினாராதலால்) இச்சூத்திரம் எழுத்தாவது இன்ன தென்பதும் அதன் வகையும் உணர்த்துகின்றது.

**இ—ள்.: மொழி முதற் காரணமாம்** – மொழிக்கு முதற்காரணமாகின்ற, **அணுத்திரளொலி** – அணுத்திரளின் காரியவொலி, **எழுத்து** – எழுத்தாம், **அது** – அவ் வெழுத்து, **முதல் சார்பென** – முதலெழுத்துஞ் சார்பெழுத்தும் என, **இருவகைத்து** – இரண்டு வகையினை யுடையதாம் , **எ—று.**

அணுத்திரளென்றது, நாதம்; ஒலியென்றது, அதன் காரியவொலி; அணுவென்றது, ஒலி நுட்பத்தை; அணுத்திர ளொலி எழுத்தெனின், முற்கு ,வீளை, இலதை முதலிய குறிப்பிசைகளும் அணுத்திரளே யாதலால் அவை எழுத்தா காமையாலும், மொழிமுதற் காரணமாமொலி யெழுத்தெனின் அவ்வொலி இன்னவொலி யென விளங்காமையால்,

*‘ நிறையுயிர் முயற்சியினுள் வளி துரப்ப*
*வெழுமணுத் திரளொலி’*

யெனக் காட்ட வேண்டுதலாலும், மொழிமுதற் காரணமாமணுத் திரளொலி யெழுத்தென்றார். இனி இவ்வாறே,

***"மொழிக் காரணமா நாதகாரிய வொலி***
***யெழுத்தது முதல்சார் பெனவிரு வகைத்தே"***

எனப் பிறர் கூறுதலுங் காண்க. முற்கு, வீளை, இலதை யென்பன அடி நா வடியிற் காட்டப்படுவதோர் ஒலிக்குறிப்பு. அதற்கு உதாரணம்,

**வெண்பா**

***மன்றலங் கொன்றை மலர்மலைந் துஃஃஃஃ***
***என்று திரியு மிடைமகனே – சென்று***
***மறியாட்டை யுண்ணாமல் வன்கையால்***
***வல்லே***

***யறியாயோ வண்ணாக்கு மாறு***

என்றாற் போல்வன.

இச்சூத்திரத்தை – அணுத்திரளொலி எழுத்து என ஒரு முடிபாகவும், அது இரு வகைத்து என மற்றொரு முடிபாகவும் முடித்துக் கொள்க.

## கா . கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

உரை :– **மொழி முதல் காரணம் ஆம்** – சொல்லுக்கு ஆதி காரணமாகிய, **அணு திரள் ஒலி** – அணுக் கூட்டத்தின் காரியவோசை, **எழுத்து** – எழுத்தாகும்; **அது** – அவ்வெழுத்து, **முதல் சார்பு என** – முதலெழுத்தென்றும் சார்பெழுத் தென்றும், **இருவகைத்து** – இரண்டு வகையினை யுடையதாகும்.

குறிப்பு :–

'ஆம்' என்னும் பெயரெச்சம் 'ஒலி' என்பதைத் தழுவும். அணு – மிக நுண்ணிய பொருள் ; இங்கு ஒலி நுட்பத்தைக் குறித்து நின்றது. ஆகவே, இவ்வணு செவிப்புலனாம் அணு என்றறிக.

மொழிக்குக் காரணம் எழுத்தானாற் போல, எழுத்துக்குக் காரணம் அணுத்திரள் என்றபடி, மொழிக்குக் காரணமான ஒலியே எழுத்து என்றதனால் மொழிக்கு உபயோகமாகாத தும்மல் ,இருமல் முதலிய ஒலிகள் எழுத்தாகா என்று குறித்ததாயிற்று. ஆகவே, 'மொழிமுதற் காரணமாம்' என்றது, இனம் விலக்க வந்த அடைமொழி யென்க. ஆயின் ஒலியை 'அணுத்திரளொலி' என்று விசேடித்துக் கூறிய தென்னை? எனின், ஒலியின் தன்மை யறியாதார்க்கு அஃதின்ன தென்று அறிவித்தற்கு அன்றியும், அந்நிய மதங்களில் உலகத் தோற்றத்திற்குக் காரணமாகக் கூறப்படும் மாயை முதலிய தத்துவங்கள் இவ்வாசிரியர்க்கு உடன்பாடல்லாமையால் எல்லாப் பொருளும் அணுக்களாலேயே அமையும் என்னும் தமது ஆருகத மதக் கொள்கை பற்றிக் கூறினார் என்னவுமாம். இது **பிறிதொடுபடாஅன் றன்மதங் கொளல்** என்னும் உத்தி.

இனி, மொழி முதற்காரணமாகாத **ஙா–ஙி** முதலியவற்றையும் எழுத்தெனத் தழுவியது. அவற்றுள் முதலாகிய ஙகரம் மொழி முதற்காரணமாதல் பற்றி யென்க. இங்கு **"ஙப் போல் வளை"** என்னும் ஔவையா ருரையின் பொருளை ஆய்ந்துணர்க.

**"மொழி முதற்காரண ...... எழுத்து"** என்றதனால், எழுத்து இன்னதென்பதும், **'அது முதல்............. வகைத்து'** என்றதனால் அதன் வகையும் பெறப்பட்டமை யறிக.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.: **மொழி முதற்காரணம் அணுத்திரள் ஆம் ஒலி எழுத்து** – மொழிக்கு முதற்காரணமும் அணுத்திரளின் காரியமுமாகிய ஒலியாவது எழுத்து, **அதுமுதல் சார்பு என இருவகைத்து** – அது முதலெழுத்துஞ் சார்பெழுத்துமென இருவகையினை யுடைத்து, **எ–று.**

**அணுத்திரள்** – அணுக்கூட்டம். இங்கே அணு வென்றது செவிப்புலனா மணுவை; அது ஒலி நுட்பம்.

மொழிக்கு முதற் காரணம் எழுத்தானாற் போல எழுத்திற்கு முதற்காரணம் அணுக்கூட்டமாம். அணுக்கூட்டத்தின் காரியம் எழுத்தானாற் போல எழுத்தின் காரியம் மொழியாம்.

காரியமாவது ஆக்கப்பட்டது. காரணமாவது காரியத்திற்கு இன்றியமையாததாய் அதற்கு முற்காலத் திருப்பது. முதற்காரணமுந் துணைக்காரணமும் எனக் காரணம் இரு வகைப்படும். முதற்காரணம் ஆவது காரியத்தோடு ஒற்றுமை யுடையது. துணைக் காரணமாவது முதற்காரணத்திற்குத் துணையாய் அது காரியப்படுமளவும் உடனிகழ்வது. குடங் காரியம்; அதற்கு முதற்காரணம் மண்; துணைக்காரணந் திரிகை. மொழி காரியம்; அதனின் வேறாகாது அதனோடு ஒற்றுமை யுடையது எழுத்தாதலால், அதற்கு எழுத்து முதற்காரணம். எழுத்துக் காரியம்; அதனின் வேறாகாது அதனோடு ஒற்றுமையுடையது செவிப்புலனாமணு வாதலால் அதற்கு அவ்வணு முதற்காரணம்.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ—ள். எழுத்து** – எழுத்தாவது, **மொழிமுதற் காரணம் ஆம் அணுத்திரள் ஒலி** – மொழிக்கு முதற்காரணமாகும் அணுக்கூட்டத்தின் காரிய ஓசையாம், **அது** – அவ்வெழுத்து, **முதல் சார்பு என** – முதலெழுத்தும் சார்பெழுத்து மென்று, **இரு வகைத்து** – இரண்டு பகுப்பினை யுடைத்து, எ—று.

இங்கே அணுவென்றது செவிப்புலனாம் அணுவை. அது ஒலிநுட்பம். மொழிக்கு முதற்காரணம் எழுத்தானாற் போல, எழுத்திற்கு முதற்காரணம் அணுக் கூட்டமாம். அணுக் கூட்டத்தின் காரியம் எழுத்தானாற் போல எழுத்தின் காரியம் மொழியாம்.

ஆடைக்கு முதற்காரணம் நூலும், நூலிற்கு முதற்காரணம் பஞ்சும் போலவும்; பஞ்சின் காரியம் நூலும், நூலின் காரியம் ஆடையும் ஆனாற் போலவு மென்று திருட்டாந்தமுங் காண்க.

காரியமாவது செய்யப்பட்டது. காரணம் இருவகைப்படும். முதற்காரணமும் துணைக்காரணமும் என. முதற் காரணமாவது காரியத்தோடு அபேதமானது. அபேதம் எனினும், பிரிவின்மை எனினும், ஒற்றுமை எனினும் ஒக்கும். ஆடையாகிய காரியம் வேறாகவும் அந்த ஆடையிலியைந்த முதற்காரணமாகிய நூல் வேறாகவுமின்றி அபேதமாயிருத்தல் காண்க. குடமாகிய காரியம் வேறும், அந்தக் குடம் செய்யப்பட்ட மண்ணாகிய முதற்காரணம் வேறுமாகவும் அபேதமாயிருத்தலுங் காண்க.

துணைக்காரணமாவது முதற்காரணம் காரியமாய் முடியும் அளவும் துணையாய் உடன் நிகழ்வது.

பஞ்சு நூலாகிய காரியமாகு மளவும் உடனிகழும் யந்திரக் கருவி

துணைக்காரணம். அந்தப் பஞ்சு நூலாகி முடிந்தபின் நூலும் வேறாய் விடும், யந்திரக் கருவியும் வேறாய் விடும். நூலினால் ஆடையாகிய காரியம் முடியும் வரையும் உடனிகழும் தறி முதலிய கருவி துணைக்காரணம். அந் நூல் ஆடையாய் முடிந்த பின் தறி முதலிய கருவியும் ஆடையும் வேறு வேறாய்விடும்.

மொழி காரியம். அதற்கு முதற்காரணம் எழுத்து. எழுத்திற்கு முதற்காரணம் அணுத்திரள். மொழியாகிய காரியமும் அம்மொழியாக்கப்பட்ட எழுத்தும் வேறுவேறாகாமல் அபேதமாயிருத்தல் காண்க. எழுத்தாகிய காரியமும் அவ்வெழுத்தாக்கப்பட்ட அணுவாகிய ஒலிநுட்பமும் வேறுவேறாகாமல் அபேதமாயிருத்தல் காண்க. அணுத்திரள் – நாதம். அணுத்திரள் எழுத்தாகக் காரியப்படுமளவும் உடனிகழுந் துணைக்கருவி மார்பு, கண்டம், தலை, நாசி, உதடு, நா, பல்லு, அண்ணம் என்பவற்றுள் அவ்வவ் வெழுத்திற்கு ஏற்புடைய அங்கங்கள்.

இனி, மொழி முதற் காரணமாம் அணுத்திரள் ஒலியெழுத்து என்று பகுத்து, மொழிக்கு முதற்காரணமாகிய அணுக்கூட்டங்களாகிய காரியம் (வடிவெழுத்து ஒலியெழுத்து என்னும் இரண்டனுள்) ஒலியெழுத்தாம் என்று பொருள் கோடலுமாம்.

ஈளை முதலியவாக எழுமொலியும் அணுத்திரளொலி யாதலின் அவற்றை யொழித்து வேறுபாடறிந்து கொள்ளுதற்கு மொழிமுதற் காரணமாம் என்று அடை கொடுத்தார். எனவே அணுத்திரளொலிகள் பலவற்றுள் மொழிமுதற் காரணமாமொலி யெழுத்தென்றவாறாயிற்று. இச் சூத்திரம் வரிவடிவெழுத்து, ஒலி வடிவெழுத்தென்னு மிரண்டனுள் ஒலிவடிவெழுத்திற் கிலக்கணங் கூறியதென வுணர்க.

"இசைப்படு புள்ளினெழா அல்போலச் செவிப்புலனாவ தொலி யெழுத்தாகும்". எனவும், "கட்புலனில்லாக் கடவுளைக் காட்டுஞ், சட்டகம் போலச் செவிப்புலவொலியை, உட்கொளற் கிடுமுரு பாம்வடிவெழுத்தே" எனவும் முறையே ஒலிவடிவெழுத்து, வரிவடிவெழுத்து என்னு மிரண்டற்கு மிலக்கணம் பிறர் கூறியதுங் காண்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரி
## சே. கிருஷ்ணமாசாரி

**இ–ள்.: மொழி முதல் காரணம் ஆம்**– சொல்லுக்கு முதற்காரணமாகின்ற, **அணு திரள் ஒலி** – அணுக்கூட்டத்தின் காரியமாகிய ஓசை, **எழுத்து** – எழுத்தாகும்; **அது** – அவ்வெழுத்து, **முதல் சார்பு என** – முதலெழுத்தும் சார்பெழுத்தும் என்று, **இரு வகைத்து** – இரண்டு வகையை யுடையது, **எ–று.**

ஆம் என்னும் பெயரெச்சம், ஒலி என்பதனோடு இயையும்; அணுத்திரள் என்றதும் ஒலிக்கு அடைமொழியே. அணுத்திரள் – அணுக்கூட்டம்: அணு என்பது மிகச் சிறியபொருள்; அது கட்புலனாகுமணுவும் செவிப்புலனாகுமணுவும் முதலாகப் பலவகைப்படும்; இங்கு அணுவென்றது செவிப்புலனாம் அணுவை; அது ஒலிநுட்பம். அணுத்திரளொலி – பரமாணுக்களின் இயைபினாலாவதான ஒலி. மொழிக்கு முதற்காரணம் எழுத்தானாற்போல, எழுத்திற்கு முதற்காரணம் அணுத்திர ளென்றபடி; (எழுத்தின் காரியம் மொழியாதல்போல, அணுக்கூட்டத்தின் காரியம் எழுத்தாம். 'அணுத்திரளொலி எழுத்து' என்று மாத்திரம் கூறினால் தும்மல், இருமல், கனைத்தல் முதலியனவும் எழுத்தாமெனக் கொள்ளப்படு மாதலின், அதனை ஒழித்தற்கு 'மொழிமுதற் காரணமாம் என்ற அடைமொழி கொடுத்தார். அணுத்திரள் என்றது – ஒலியின் தன்மையை அறியாதவர்க்கு அது இன்னதென விளக்குதற் பொருட்டு வந்த இயற்கை யடைமொழி; இனம் விலக்க வந்ததன்று.

பிறமதங்களில் உலகத் தோற்றத்துக்குக் காரணமாகச் சொல்லப்படுகின்ற மாயை முதலியவற்றை ஒப்புக் கொள்ளாமல் அணுக்களினாலேயே எல்லாப் பொருள்களும் அமைவன வென்று கூறுகின்ற தமது **ஆருகத** சமயத்தை விளக்குதற் பொருட்டு, 'அணுத்திரள்' என்ற அவசியமில்லாத விசேடணம் கொடுத்தாரெனவும் கொள்ளலாம்; இது பிறிதொடுபடாஅன் **தன்மதங் கொளல்** என்னும் மதம்.

(பிறிதொடுபடாஅன் தன் மதம்கொளல் – பிறர் கொள்கையோடு கலவாமல் தன்மத்தையே தான் கொள்ளுதல்)

சில அணுக்களாவது தம்மிற் கூடினாலொழிய ஒலி செவ்விதாக எழாமையின், அணுத்திரள் என வேண்டிற்று. எழுத்தின் ஒலி வடிவு வரி வடிவு என்ற இரண்டனுள் ஒலி வடிவு சிறப்புடைமையால் அதனை எடுத்து ஓதினார்.

இனி மொழிக்கு முதற்காரணமாகிய அணுத்திரளே ஒலியெழுத்தாம் என்று உரைத்தலும் ஒன்று.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள். மொழி முதற்காரணம் ஆம்** – மொழிக்கு முதற் காரணமாம், **அணுத்திரள் ஒலி** – அணுத்திரளின் காரியமாகிய ஒலி, **எழுத்து** – எழுத்தாம். **அது முதல் சார்பு என இருவகைத்து** – அது முதலெழுத்துஞ் சார்பெழுத்துமென இருவகையினை யுடையதாம், **எ–று.**

அணுத்திரள் – அணுக் கூட்டம். இங்கே அணுவென்றது செவிப்புலனா மணுவை; அது ஒலிநுட்பம். மொழிக்கு முதற்காரணம் எழுத்தானாற் போல, எழுத்திற்கு முதற்காரணம்

அணுக்கூட்டமாம். அணுக்கூட்டத்தின் காரியம் எழுத்தானாற் போல எழுத்தின் காரியம் மொழியாம்.

காரணமாவது காரியத்திற்கு இன்றியமையாதாய் அதற்கு முற்காலத்திருப்பது. முதற்காரணமுந் துணைக்காரணமு மெனக் காரணம் இருவகைப்படும். முதற்காரணமாவது காரியத்தோ டொற்றுமை யுடையது. துணைக்காரண மாவது முதற் காரணத்திற்குத் துணையாய் அது காரியப்படுமளவும் உடனிகழ்வது. குடம் காரியம்; அதற்கு முதற்காரணம் மண்; துணைக்காரணம் திரிகை. மொழி காரியம்; அதனின் வேறாகாது அதனோடு ஒற்றுமை யுடையது எழுத்தாதலால், அதற்கு எழுத்து முதற்காரணம். எழுத்துக் காரியம்; அதனின் வேறாகாது அதனோடு ஒற்றுமையுடையது செவிப்புலனாம் அணுவாதலால், அதற்கு அவ்வணு முதற்காரணம்.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள். மொழி** – சொல்லுக்கு; **முதல் காரணம் ஆம்** – ஆதி காரணமாகி வருகின்ற, **அணுத்திரள்** – அணுத் திரளின் (காரியமாகிய), **ஒலி** – ஒலியாவது, **எழுத்து** – எழுத்தாகும்; **அது** – அவ்வெழுத்து, **முதல்** (என) – முதலெழுத்து என்றும், **சார்பு என** – சார்பெழுத்து என்றும், **இருவகைத்து** – இரண்டு வகையினை யுடையதாம், **எ–று.**

**பொ–ரை.:**

சொல்லுக்கு முதற் காரணமாகிய அணுக்கூட்டத்தாலான ஒலி எழுத்து; அது முதலெழுத்து, சார்பெழுத்து என இரண்டு வகைப்படும்.

அணுத்திரள் என்றது ஒலி நுட்பத்தை, இங்குச் செவிப் புலனாம் ஒலி நுட்பம். மொழி முதற்காரணமாம் ஒலி எழுத்து என்றால், ஙா, ஙீ முதலியவை எழுத்து ஆகா என்றும், அணுத்திரள் ஒலி எழுத்து என்றால், முற்கு, இருமல் முதலியவை எழுத்து ஆம் என்றும் கொள்ள வேண்டுதலால் 'மொழி முதற்காரணமாம் அணுத்திரளொலி எழுத்து' என்றார். ஆம் என்னும் பெயரெச்சம் ஒலி யென்பதனோடு இயையும்.

## கா. நமச்சிவாய முதலியார்

**மொழி முதல் காரணம் ஆம்** – சொல்லுக்கு முதற்காரணமாகி வருகின்ற, **அணுதிரள் ஒலி** – அணுக்கூட்டத்தின் (காரியமாகிய) ஒலி, **எழுத்து** – எழுத்தாம்; **அது** – அவ்வெழுத்து, **முதல்சார்பு என** – முதலெழுத் தென்றும் சார்பெழுத் தென்றும், **இருவகைத்து** – இரண்டு வகையினை யுடையது.

ஆடைக்குக் காரணம் நூலும், அந் நூலுக்குக் காரணம் பஞ்சுமாதல் போல, மொழிக்குக் காரணம் ஒலியும் ஒலிக்குக்

காரணம் அணுத்திரளுமாகும். அவ்வொலியே எழுத்தெனப்படுவது. மொழிக்குக் காரணமாகாத ஒலியுமுள. சங்கொலி, கடலொலி, இருமல், விக்கல் முதலிய ஒலிகள் அணுத்திரளின் காரியமாகிய ஒலியாயினும் மொழிக்குக் காரணமாதலில்லை. ஆகையால், அவ்வொலிகளை யொழித்து, மொழிக்கு முதற்காரணமாகிய ஒலியே எழுத்து என எழுத்தொலியை விளங்கக் கூறினார்.

## மோசசு பொன்னையா

செவிக்குப் புலனாகும் அணுக்களின் அமைப்பினாற் சொல்லுக்கு முதற் காரணம் ஆவதான ஒலியே எழுத்தெனப்படும்; அஃது முதலெழுத்து சார்பெழுத்து என இரு வகைப்படும், எ–று.

எனவே, செவிக்குப் புலனாகும் அணுக்களின் இயைபாலான ஒலிகளாகவே இருப்பினும், முற்கு, வீளை, தும்மல்,இருமல் என்பன சொல்லுக்கு முதற் காரணமா காமையின் எழுத்து எனப்படா என்பது போதரும்.

தமிழ் எழுத்துமுறையின் வளர்ச்சிப் போக்கில் நான்கு நிலைகள் அமைந்திருந்தன என்பர். அவை:

*காணப் பட்ட வுருவ மெல்லா*
*மாணக் காட்டும் வகைமை நாடி*
*வழுவி லோவியன் கைவினை போல*
*வெழுதப் படுவ துருவெழுத் தாகும்.*

என்பதாலும்,

*கொண்டவோர் குறியாற் கொண்ட வதனை*
*யுண்டென் றுணர்வ துணர்வெழுத் தாகும்.*

என்பதாலும்,

*இசைப்படு புள்ளின் எழாஅல் போலச்*
*செவிப்புல னாவ தொலியெழுத் தாகும்.*

என்பதாலும்,

*முதற்கா ரணமுந் துணைக்கார ணமுந்*
*துணைக்கா ரணத்தொடு தொடரிய வுணர்வு*
*மவற்றோடு புணர்ந்த வகத்தெழு வளியின்*
*மிடற்றுப்பிறந் திசைப்பது தன்மை யெழுத்தே.*

என்பதாலும் தெளிவுறுத்தப்பட்டன. அவற்றுள், ஒலி எழுத்தே சிறப்புடையது ஆதலின், 'சிறப்புடைப் பொருளைத் தானெடுத்து மொழிதல்' என்னும் உத்தியால் இவ்வாசிரியர் ஒலி எழுத்தின் இலக்கணமே கூறினார் எனக்கொள்க.

(3)

# முதலெழுத்து

58. உயிரு முடம்புமா முப்பது முதலே.

உயிரும் உடம்பும் ஆம் முப்பது முதலே.

uyirum utampum ām muppatu mutalē.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

**Primary letters**

The Primary letters consist of the thirty Vowels and Consonants.

## ஒப்புமைப் பகுதி

எழுத்தெனப் படுப
அகர முதல் னகர இறுவாய்
முப்பஃ தென்ப

(தொல். எழு. : 1)

உயிரு முடம்புமென முதலிரு வகைத்தவற்
றுயிரீ ராறுமெய் மூவா றென்ப
வம்முப் பானு மதனது விரியே.

(இ.வி. : 4)

முதலெ ழுத்துயிர் ஈராறுடன் மூவாறே

(தொன்.: 5)

அகர முதலுயி ராறிரண் டாகும்.

(மு.வீ.: 6)

ககரமுதன் மூவாறுங் காத்திர மாகும்

(மு.வீ.: 12)

அகராதி ஈராறும் உயிர்ககராதி மூவாறும் உடலிம்
முப்பானும் முதலெழுத்தாம்.....

(சுவா.: 15)

ஆவி முதல் ஆறிரண்டாம் ஆய்தமிடை
மேவுங் ககர முதன் மெய்களாம் – மூவாறும்
கண்ணு முறைமையாற் காட்டியமுப் பத்தொன்று
கண்ணுமுதல் வைப்பாகு நன்கு

(நேமி.: 1)

## மயிலை நாதர்

எ-ன். முதலெழுத்தாவன உணர்த்துதல் நுதலிற்று

இ-ள்.: உயிரென்றும் உடம்பென்றும் சொல்லப்பட்ட முப்பதெழுத்தும் [1]முதலெனப்படும். எ-று.

எனவே முதலெழுத்தெனத் தொகையான் ஒன்றும், உயிரெழுத்து உடம்பெழுத்தென வகையான் இரண்டும், உயிர் பன்னிரண்டும் உடம்பு பதினெட்டுமென்று வகுத்துக் கூட்ட விரியான் முப்பதுமாம் முதலெழுத்து, **எ–று.**

## சங்கர நமச்சிவாயர்

**எ–னின்,** முதலெழுத்தின் விரி **உணர்–ற்று.**

**இ–ள்.:** உயிரும் உடம்புமாகும் முப்பதெழுத்தும் முதலெழுத்தாம், **எ–று.**

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்.:** முதலெழுத்தாயது இன்னதென்று சொல்லியது.

**இ–ள்.: உயிரும்** – உயிர் பன்னிரண்டெழுத்தும், **உடம்பும்** – உடல் பதினெட்டெழுத்தும், **ஆ முப்பதும்** – ஆகிய முப்பதெழுத்தும், **முதலே** – முதலெழுத்தென்று சொல்லப்படும்.

## விசாகப் பெருமாளையர்

**இது,** முதலெழுத்தின் விரியை உணர்த்துகின்றது.

**இ–ள்.: உயிரும்** – ஆவியும், **உடம்பும்** – மெய்யும், **ஆம்** – ஆகும், **முப்பதும்** – முப்பதெழுத்தும், **முதல்** – முதலெழுத்தாகும், **எ–று.**

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

முதலெழுத்து இத்தனை யென்பதும் அதன் வகையுங் கூறுஞ் சூத்திரம் யாது?

உயிரு முடம்புமா முப்பது முதலே.

(உயிரும் உடம்பும் ஆம் முப்பதும் முதல் ஏ)

**இ–ள்.: உயிரும்** – பன்னிரண்டு உயிரெழுத்தும். **உடம்பும்** – பதினெட்டு மெய்யெழுத்தும், **ஆம் முப்பதும்** – ஆகிய முப்பதெழுத்தும், **முதலே** – முதலெழுத்தாம், எ–று. (உடம்பு – மெய்யெழுத்து)

முதலெழுத் தெத்தனைவகைப்படும்?

"உயிரும் உடம்புமாம்" என விரண்டு.

முதலெழுத்தெத்தனை?

"முப்பது முதலே"

## முகவை இராமானுச கவிராயர்

**இது.** முதலெழுத்தின் விரி யுணர்த்துகின்றது.

**இ–ள்.: உயிரும்** – உயிரெழுத்துப் பன்னிரண்டும், **உடம்பும்**–

மெய்யெழுத்துப் பதினெட்டும், **ஆம்** - ஆகிய, **முப்பது முதல்** - முப்பதெழுத்தும் முதலெழுத்தாம், **எ-று.**

> ஊதியத்திற்கு முதற் பணமென்றது காரணங் காட்டியது போலச் சார்பெழுத்திற்கு முதலெழுத்துக் காரணங் காட்டி நின்றது. அதைச் சார்ந்து வருதலாற் சார்பெழுத் தெனப்பட்டது. முப்பது முதலென வரையாது கூறியது **உரைத்து மென்னும்** உத்தி.

## கா . கோபாலாசாரி -தி.கோ.ரங்காசாரி

**உரை :-** முதல் - முதலெழுத்து, **உயிரும் உடம்பும் ஆம் முப்பதும்** - உயிரும் மெய்யுமாகிய முப்பது எழுத்துக்களாம்.

**குறிப்பு :-**

'உயிரும் உடம்பும்' என்றது வகையும், 'முப்பது' என்றது விரியும் எனக் கொள்க.

உயிர்மெய் முதலிய மற்றை யெழுத்துக்களுக் கெல்லாம் காரணமாதல் பற்றி உயிரையும் மெய்யையும் முதலெழுத்து என்றார்.

உயிர் இத்தனை மெய் இத்தனை என்று வரையாது கூறினமையின் இது **உரைத்தும்** என்னும் உத்தி.

## ஆறுமுக நாவலர்

**இ-ள்.: உயிரும்** - உயிரெழுத்துப் பன்னிரண்டும், **உடம்பும்** - மெய்யெழுத்துப் பதினெட்டும், **ஆம் முப்பதும் முதல்** - ஆகிய முப்பதெழுத்தும் முதலெழுத்தாம், **எ-று.**

## வ. குமாரசாமிப் புலவர்

**இ-ள். உயிரும்** - உயிரெழுத்துப் பன்னிரண்டும், **உடம்பும்** - மெய்யெழுத்துப் பதினெட்டும், **ஆம் முப்பது முதல்** - ஆகிய முப்பதெழுத்தும் முதலெழுத்தும், **எ-று.**

> எண்ணிலக்கணமாதலின் முதல் முப்பதுமாம் என்று எண்ணிலே முடிப்பது சிறப்பு. உயிர்மெய்யாய்த மென்னுஞ் சூத்திரத்தையு மிவ்வாறு எண்ணில் முடிப்பது நன்று. உயிர்மெய்யிரட்டு நூற்றெட்டு என்னுஞ் சூத்திரக் கூறுகள் ஒவ்வொன்றும் எண்ணிலே முடிந்திருத்தலையு நோக்கி யுணர்க. ஊதியத்திற்கு முதற்பணம் என்றது காரணங் காட்டியது போலச் சார்பெழுத்திற்கு முதலெழுத்துக் காரணங் காட்டிற்று.

உயிர் இவ்வளவு மெய் இவ்வளவென வரையறுக்க முன் முப்பது முதலெனப் பொதுப்படக் கூறியது உரைத்தும் என்னும் உத்தி.

## வை.மு. சடகோபராமானுசாசாரி
## சே. கிருஷ்ணமாசாரி

**இ–ள்.: உயிரும்** – உயிரெழுத்துப் பன்னிரண்டும், **உடம்பும்**– மெய்யெழுத்துப் பதினெட்டும், **ஆம்** – ஆகிய, **முப்பதும்** – முப்பது எழுத்துக்களும், **முதல்** – முதலெழுத்தாம், **எ–று.**

'முதலெழுத்து' என்றது, தொகை; 'உயிரு முடம்பும்' என்றது, வகை; 'முப்பது' என்றது விரி. உயிர்மெய் முதலிய மற்றை யெழுத்துக்களுக்குக் காரணமாதலால் முதலெழுத்தென்று பெயர். உயிர் இத்தனை, மெய் இத்தனை என்று மேல் வரையறை செய்யப்போவதனால் இங்கு வரையறை செய்யாமல் 'முப்பது முதல்' எனக் கூறியது, **உரைத்து மென்றல்** என்னும் உத்தி; (உரைத்தும் என்றல் – பின்னே விவரித்துச் சொல்வோ மென்பது பற்றி முன்னே சுருக்கிச் சொல்லுதல்)

## பவானந்தம் பிள்ளை

**இ–ள். உயிரும்** – உயிரெழுத்துப் பன்னிரண்டும், **உடம்பும்** – மெய்யெழுத்துப் பதினெட்டும், **ஆம் முப்பதும்** – ஆகிய முப்பதெழுத்தும், **முதல்** – முதலெழுத்தாம், **எ–று.**

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள். உயிரும்** – உயிரெழுத்துப் பன்னிரண்டும், **உடம்பு** –மெய்யெழுத்துப் பதினெட்டும், **ஆம்** – ஆகிய, **முப்பதும்** – முப்பது எழுத்துக்களும், **முதல்** – முதலெழுத்து ஆகும். **எ–று.**

**பொ–ரை.:**

உயிரெழுத்துப் பன்னிரண்டும், மெய்யெழுத்துப் பதினெட்டும் ஆகிய முப்பது எழுத்துக்களும் முதலெழுத்து ஆகும்.

உயிரீராறு என்றும் மெய் மூவாறு என்றும் பின் வரையறை செய்யப் போவதால், இங்கு வரையறை செய்யாமல், முப்பது முதல் எனக் கூறியது, உரைத்தும் என்றல் என்னும் உத்தி. (உரைத்தும் என்றல்–பின்னே பகுத்துச் சொல்வோம் என்பதைக் குறித்து முன்னே சுருக்கிச் சொல்லுதல்.)

முதலெழுத்து–சார்பெழுத்திற்குக் காரணமாக உள்ளதாதலால் முதலெழுத்து என்று ஆயது.

## கா. நமச்சிவாய முதலியார்

**உயிரும்** – உயிரெழுத்துப் பன்னிரண்டும், **உடம்பும்** – மெய்யெழுத்துப்

பதினெட்டும், **ஆம்** – ஆகிய, **முப்பதும்** – முப்பதெழுத்துக்களும், **முதல்** – முதலெழுத்தாகும்.

> உயிரெழுத்தும் மெய்யெழுத்தும், உயிர்மெய் முதலிய சார்பெழுத்துக்களுக்குக் காரணமாதலால் முதலெழுத்து எனப்பட்டன.

## மோசகு பொன்னையா

உயிரெழுத்து, மெய்யெழுத்து எனப்பட்ட முப்பதும் முதலெழுத்துக்கள், எ—று.

> உயிர் பன்னிரண்டு, மெய் பதினெட்டு. எனவே, முதலெழுத்து எனத் தொகையான் ஒன்றும்; உயிர், மெய் என வகையான் இரண்டும்; உயிர் பன்னிரண்டு, மெய் பதினெட்டு என விரியான் முப்பதுமாம் என்றார் என்க.
>
> ஆய்த எழுத்தையும் கூட்டி முதலெழுத்துக்கள் முப்பத்தொன்று என வீரசோழியமும், நேமிநாதமும் சாற்றும்.
>
> "அளபெடை தனியிரன் டல்வழி ஒலி உளதா மொன்றரை தனிமையு மாகும்",

**(4)**

# சார்பெழுத்து

59. **உயிர்மெய் யாய்த முயிரள பொற்றள**
**பஃகிய இஉஐஔ மஃகான் தனிநிலை**
**பத்துஞ் சார்பெழுத் தாகும்.**

**உயிர்மெய் ஆய்தம் உயிர் அளபு ஒற்று அளபு**
**அஃகிய இ உ ஐ ஔ மஃகான்**
**தனிநிலை பத்தும் சார்பெழுத்து ஆகும்.**

uyirmey āyṭam uyir a̱lapu oṟṟu a̱lapu
ak̲h̲kiya i u ai au mak̲h̲kāṉ
ṭaṉinilai paṭṭum sārpeḷuṭṭu ākum.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

### Kinds of Secondary or dependent letters

Of the Secondary letters there are ten kinds: Vowel – consonants : the Guttural: Vowel-prolongations; and Consonant-prolongations; shortened 'i,' shortened 'u,' shortened 'ai,' shortened 'au,' shortened 'm,' and shortened Guttural.

## ஒப்புமைப் பகுதி

..................................................
சார்ந்து வரல் மரபின் மூன்றலங் கடையே
அவை தாம்
குற்றிய லிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்ற
அப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன.

(தொல். எழு. : 1 , 2)

ஒங்குயிர்கள் ஒன்றின்மேல் ஏறி உயிர்மெய்யாய்
ஆங்கிரு நூற்றொருபத் தாறாகும் – பாங்குடைய
வல்லொற்று மெல்லொற்று வர்க்கம் அளபெடைகள்
சொல்லொற்றி நீட்டத் தொகும்.

(நேமி. : 3)

குற்றிய லிகரங் குற்றிய லுகர
மாய்தமொ டுயிர்மெய் ஈரள பையௌ
மஃகான் குறுக்க முள்ளுறுத் தொன்பதுஞ்
சார்பின் பால வென்மனார்.....

(இ.வி. : 5)

........................................
சார்பெ ழுத்து யிர்மெய் தனியாய்தத்தோடு
அஃகிய இஉஐ ஔ மவ் வாய்தம்
உயிரளபு ஒற்றளவு ஒருபஃது என்ப.

(தொன். : 5)

........................................ ஆய்தம்
இகல் குறளின் இஉஐ ஔவே
ஆய்தம் மவ் ஒரொன்றாய் உயிர்மெய்
உயிரளவு ஏழ் ஒற்றின் உகுமளபு
........................ சார்பெழுத்து

(சுவா. : 15)

## மயிலை நாதர்

எனின், சார்பெழுத்தாவன உணர்த்துதல் நுதலிற்று.

**இ—ள்.:** உயிர்மெய்யும், ஆய்தமும், உயிரளபெடையும், ஒற்றளபெடையும், குற்றியலிகரமும், குற்றியலுகரமும், ஐகாரக் குறுக்கமும் ஔகாரக் குறுக்கமும் மகரக்குறுக்கமும், ஆய்தக்குறுக்கமு மென்னும் இப்பத்தும் சார்பெழுத்தாம், எ—று.

என்னை?

*"எழுத்தெனப் படுப,*
*அகரமுதனகர விறுவாய் முப்பஃ தென்ப சார்ந்து வரன்*
*மரபின் மூன்றலங் கடையே"*

என ஆசிரியர் தொல்காப்பியனாரும் [1]இவ்வாறு முதல் சார்பென வகுத்துக் கொண்டாரென்க. அஃதே அவர், சார்பெழுத்தென மூன்றே கொண்டாராலோ வெனின், அஃதே நன்று சொன்னாய். ஒழிந்தவை எப்பாற்படு மென்றார்க்கு மூன்றா வதோர் பகுதி சொல்லலாவ தின்மையானும் முதலெழுத்தாந் தன்மை அவற்றிற் கின்மையானும் சார்பிற் றோன்றுதலானும் இப் பத்தும் சார்பாகவே கொள்ள வேண்டு மென்பது. அஃதே அமைக. ஒற்றளபெடையும் ஐகாரக் குறுக்கமும் ஔகாரக் குறுக்கமும் மகரக் குறுக்கமும் ஆய்தக் குறுக்கமும் யாண்டுப் பெற்றாமோ வெனின்,

*"வன்மையொடு ரஃகான் ழஃகா [2]னொழிந்தாங், [3]கன்மெய்*
*யாய்தமோ டளபெழு மொரோவழி"*

*"அளபெடை தனியிரண் டல்வழி ஐஔ*
*உளதா மொன்றரை தனிமையு மாகும்"*

*"பதினெண் மெய்யு மதுவே மவ்வோ*
*டாய்தமு மளபரை தேய்தலு முரித்தே"*

என்றார் ஆசிரியர் [4]அவிநயனாருமெனக் கொள்க.

## சங்கர நமச்சிவாயர் சிவஞான முனிவர்

எ—னின், சார்பெழுத்தின் விரி உணர்—ற்று.

இ—ள்.: இப் பத்தும் சார்பெழுத்தாம், எ—று.

---

பாட வேறுபாடு :-

1. இவ்வாறு கொண்டாரென்க.
2. ஒழித்தாங்கு
3. அன்மை
4. அவினயனாரும். அவினையினாரும்

அஃகுதல் – சுருங்குதல். தனிநிலை – ஆய்தம்; உயிர்களோடும் மெய்களோடும் கூடியும் கூடாதும் அலி போலத் தனி நிற்றலின் தனிநிலை எனப்படும்.

உயிர்மெய், உயிரும் மெய்யும் கூடிப் பிறத்தலானும் ஆய்தம் உயிர்போல,

*"அற்றால் அளவறிந் துண்க அஃதுடம்பு*
*பெற்றான் நெடிதுய்க்கு மாறு"*

என அலகு பெற்றும்; மெய்போல,

*"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்*
*தோன்றலின் தோன்றாமை நன்று"*

என அலகு பெறாதும் ஒருபுடையொத்து, அவற்றினிடையே சார்ந்து வருதலானும் ஏனைய தத்தம் முதலெழுத்தின் திரிபு விகாரத்தால் பிறத்தலானும் சார்பெழுத்தாயின எனக் கொள்க.

**அவ்வாறன்றி உயிர்மெய் யொழிந்தன, அகரம் முதலியன போல் தனித்தானும், ககரம் முதலியன போல அகரமொடு சிவணியானும் இயங்கும் இயல்பின்றி, ஒரு மொழியைச் சார்ந்து வருதலே தமக்கு இலக்கணமாக உடைமையின் சார்பெழுத் தாயின எனக் கோடலுமாம் என்க. இனி ஆசிரியர் தொல்காப்பியர், செய்கை யொன்றனையும் நோக்கிச் சார்பெழுத்து மூன்று எனக் கருவி செய்தாராகலின், இவ்வாசிரியர் செய்கையும் செய்யுளியலும் நோக்கிச் சார்பெழுத்துப் பத்து எனக் கருவிசெய்தார் என்பதும் உய்த்துணர்க. **

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், சார்பெழுத்தாவது இன்னதென்றது.

**இ–ள்.: உயிர்மெய்** – உயிர்மெய்யெழுத்தும், **ஆய்தம்** – முற்றாய்தமும், **உயிரளபு** – உயிரளபெடையும், **ஒற்றளபு** – ஒற்றளபெடையும், **அஃகிய இ** – குற்றியலிகரமும், **உ** – குற்றியலுகரமும், **ஐ** – ஐகாரக் குறுக்கமும், **ஔ** – ஔகாரக் குறுக்கமும், **மஃகான்** – மகாரக் குறுக்கமும், **தனி நிலை** – ஆய்தக் குறுக்கமும், **பத்தும்** – இப் பத்தெழுத்தும், **சார்பெழுத்தாகும்** – சார்பெழுத்தென்று சொல்லப்படும், **எ–று.**

---

***நன்னூலிற்குச் சிவஞான முனிவர் தனியுரை செய்யவில்லை. சங்கர நமச்சிவாயர் செய்த உரையில் வேண்டுமிடங்களில் விளக்கம் கூறினார். அவ் விளக்கங்கள் * * இக் குறிகளுக்குள் தரப்பெற்றுள்ளன.**

## விசாகப் பெருமாளையர்

இது, சார்பெழுத்தின் விரியை உணர்த்துகின்றது,

**இ—ள்.: உயிர்மெய்** – உயிர்மெய்யும், **ஆய்தம்** – ஆய்தமும், **உயிரளபு** – உயிரளபெடையும், **ஒற்றளபு** – ஒற்றளபெடையும், **அஃகியஇ** – குற்றியலிகரமும், **(அஃகிய) உ**–குற்றியலுகரமும், **(அஃகிய) ஐ** –ஐகாரக்குறுக்கமும், **(அஃகிய) ஔ** – ஔகாரக்குறுக்கமும், **(அஃகிய) மஃகான்** – மகரக் குறுக்கமும், **(அஃகிய) தனிநிலை** – ஆய்தக்குறுக்கமும், **பத்தும்** – ஆகிய பத்தும், **சார்பெழுத்தாகும்** – சார்பெழுத்தாகும், **எ—று.** அஃகுதல் சுருங்குதல்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

சார்பெழுத்தெத்தனை வகைப்படும்?

உயிர்மெய் யாய்த முயிரள பொற்றள
பஃகிய இஉ ஐஔ மஃகான்
றனிநிலை பத்துஞ் சார்பெழுத் தாகும்.
(உயிர்மெய், ஆய்தம், உயிரளபு, ஒற்றளவு
அஃகிய இ, உ, ஐ, ஔ மஃகான்
தனிநிலை பத்தும் சார்பு எழுத்து ஆகும்)

**இ—ள்.: உயிர்மெய்** – உயிர்மெய்யும், **ஆய்தம்** – ஆய்தமும், **உயிரளபு** – உயிரளபெடையும், **ஒற்றளபு** – ஒற்றளபெடையும், (அஃகிய) **இ** – குற்றியலிகரமும், (அஃகிய) **உ**– குற்றியலுகரமும், (அஃகிய) **ஐ** – ஐகாரக் குறுக்கமும், (அஃகிய) **ஔ** – ஔகாரக் குறுக்கமும், (அஃகிய) **மஃகான்** – மகரக் குறுக்கமும், (அஃகிய) **தனிநிலை** – ஆய்தக் குறுக்கமும், பத்துஞ் **சார்பெழுத்து ஆகும்** – ஆகிய பத்துஞ் சார்பெழுத்தாகும், **எ—று.**

அஃகல் – குறுகல்.

## முகவை இராமாநுச கவிராயர்

இது, சார்பெழுத்தின் வகை யுணர்த்துகின்றது.

**இ—ள்.: உயிர்மெய்** – உயிர்மெய் யெழுத்தும், **ஆய்தம்** – அக்கேனமும், **உயிரளபு** – உயிரளபெடையும், **ஒற்றளபு** – ஒற்றளபெடையும், **அஃகிய இ** – குற்றயலிகரமும், **அஃகிய உ** – குற்றியலுகரமும், **அஃகிய ஐ** – ஐகாரக் குறுக்கமும், **அஃகிய ஔ** – ஔகாரக் குறுக்கமும், **அஃகிய மஃகான்** – மகரக் குறுக்கமும், **அஃகிய தனிநிலை** – ஆய்தக் குறுக்கமும், பத்துஞ் **சார்பெழுத்தாகும்** – ஆகிய இப் பத்துஞ் சார்பெழுத்தின் வகையாம், **எ— று.**

அஃகுதல் – சுருங்குதல், குறைதல். ஆய்தம் – உயிரொடும் மெய்யொடுங் கூடாது தனிநிற்றலால், தனிநிலை யெனப்பட்டது.

## கா . கோபாலாசாரி –தி.கோ.ரங்காசாரி

**உரை :–** **உயிர்மெய்** – உயிர்மெய் யெழுத்தும், **ஆய்தம்** – ஆய்த வெழுத்தும், **உயிரளபு** – உயிரளபெடையும், **ஒற்றளபு** – ஒற்றளபெடையும், **அஃகிய இ** – குறுகிய இகரமும் (குற்றியலிகரமும்), (அஃகிய) **உ** – குறுகிய உகரமும் (குற்றியலுகரமும்), (அஃகிய) **ஐ** – குறுகிய ஐகாரமும் (ஐகாரக் குறுக்கமும்), (அஃகிய) **ஔ** – குறுகிய ஔகாரமும் (ஔகாரக் குறுக்கமும்), (அஃகிய) **மஃகான்** – குறுகிய மகரமும் (மகரக் குறுக்கமும்), (அஃகிய) **தனி நிலை** – குறுகிய ஆய்தமும் (ஆய்தக் குறுக்கமும்), **பத்தும்** – ஆகிய பத்தும், **சார்பெழுத்து ஆகும்** – சார்பெழுத்தின் வகையாம்.

**குறிப்பு :–**

'அஃகிய' என்பது மற்றவைகட்கும் கூட்டப்பட்டது. ஆய்தம் உயிரையும் மெய்யையும் ஒருவகை யொத்து உயிருமாகாமல் மெய்யுமாகாமல், தனித்து நிற்றல் பற்றித் 'தனி நிலை' எனப்பட்டது.

உயிர்மெய் – உயிரும் மெய்யுங் கூடிப் பிறத்தலாலும், ஆய்தம் உயிர்மெய்களினிடையில் சார்ந்து வருதலாலும், ஒழிந்த உயிரளபெடை முதலிய எட்டும் தத்தம் முதலெழுத்தின் திரிபு விகாரத்தால் பிறத்தலாலும் சார்பெழுத்தாயின.

இனி, உயிர்மெய் ஒழிந்தவை தனித்தியங்குதலின்றி அகரம் முதலியன போலத் தனித்தாயினும், ககரம் முதலியன போல உயிரோடு கூடியாயினும் ஒரு சொல்லைச் சார்ந்து வருதலே தமக்கிலக்கணமாக உடைமையால் சார்பெழுத்தெனப்பட்டது என்றுங் கூறுவர்.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: உயிர்மெய்** – உயிர்மெய்யும், **ஆய்தம்** – ஆய்தமும், **உயிரளபு** – உயிரளபெடையும், **ஒற்றளபு** – ஒற்றளபெடையும், **அஃகிய இ** – குற்றியலிகரமும் , **(அஃகிய) உ** – குற்றியலுகரமும், **(அஃகிய)** ஐ –ஐகாரக் குறுக்கமும், **(அஃகிய) ஔ** – ஔகாரக் குறுக்கமும், **(அஃகிய) மஃகான்** – மகரக் குறுக்கமும், **(அஃகிய) தனிநிலை** – ஆய்தக் குறுக்கமும், **பத்துஞ் சார்பெழுத்து ஆகும்** – ஆகிய பத்துஞ் சார்பெழுத்தாகும் , எ – **று.**

அஃகுதல் – சுருங்குதல், தனிநிலை – ஆய்தம்.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். உயிர்மெய்** – உயிர்மெய்யும், – **ஆயுதம்** – ஆய்தமும், – **உயிரளபு** – உயிரளபெடையும், – **ஒற்றளபு** – ஒற்றளபெடையும், – **அஃகிய இ** – குற்றியலிகரமும், (அஃகிய) **உ** – குற்றியலுகரமும், (அஃகிய) ஐ – ஐகாரக்குறுக்கமும், (அஃகிய) **ஔ** – ஔகாரக் குறுக்கமும் , (அஃகிய) **மஃகான்**

– மகரக்குறுக்கமும், (அஃகிய) **தனிநிலை** – ஆய்தக்குறுக்கமும், **பத்துஞ் சார்பெழுத்து ஆகும்** – ஆகிய பத்தும் சார்பெழுத்துக்களாம், **எ–று.**

அஃகுதல் – சுருங்குதல்.

தனிநிலை எனினும் ஆய்தம் எனினும் அஃகேன மெனினு, மொக்கும். உயிருமெய்யுங் கலப்புறுமாறுபோல ஓரெழுத்தொடுங் கலப்புறுதலின்றித் தனிநிற்றலால் தனிநிலையெனப்பட்டது.

அஃகிய என்பது இ, உ, ஐ, ஔ, மஃகான், தனிநிலை என்னும் ஆறிற்கும் உரிய அடை மொழியாதலின் பிரித்துச் சேர்த்துரைக்கப் பட்டது.

சார்பெழுத்தின் வகை பத்தில், உயிருமெய்யுஞ் சார்ந் துண்டானமையால் உயிர் மெய் சார்பெழுத்தெனப் பட்டது. ஏனைய ஒன்பது வகையும் மொழியைச் சார்ந்தே உண்டாயின மையாற் சார்பெழுத்தெனப்பட்டன. இவற்றுள்ளும் ஆய்தக் குறுக்கமே சார்பிற் சார்பென்றறிக.

## வை.மு. சடகோபராமானுசாசாரி
## சே. கிருஷ்ணமாசாரி

**இ – ள்.: உயிர்மெய்** – உயிர்மெய்யும், **ஆய்தம்** – முற்றாய்தமும், **உயிரளபு** – உயிரளபெடையும், **ஒற்றளபு** – ஒற்றளபெடையும், **அஃகிய இ** – குறுகிய இகரமும் (குற்றியலிகரமும்), **(அஃகிய) உ** – குற்றியலுகரமும், **(அஃகிய) ஐ** – ஐகாரக் குறுக்கமும், **(அஃகிய) ஔ** – ஔகாரக் குறுக்கமும், **(அஃகிய) மஃகான்** – மகரக் குறுக்கமும், **(அஃகிய) தனிநிலை** – ஆய்தக் குறுக்கமும், **பத்தும்** – ஆகிய பத்தும், **சார்பெழுத்து ஆகும்** – சார்பெழுத்தின் வகையாம்; **எ–று.**

அக்குதல் – சுருங்குதல்; இங்கே, மாத்திரை குறைதல். 'அஃகிய' என்னும் பெயரெச்சத்தை உகரம் முதலியவற்றோடும் கூட்டுக. (மேற்சூத்திரத்தில், 'அஃகும்' என்பதையும் இவ்வாறே கொள்க.) பின்னே, 'அஃகிய தனிநிலை', என ஆய்தக் குறுக்கம் கூறப்படுதலால், முன்னே ஆய்தம் என்றது முற்றாய்தம்.

ஆய்தம் – **"அற்றா லளவறிந் துண்க வஃதுடம்பு"** முதலிய இடங்களில் உயிர்போல அலகு பெற்றும், **"தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்"** முதலிய இடங்களில் மெய்போல அலகு பெறாமலும் உயிர்மெய்களை ஒரு புடையொத்து உயிருமாகாமல் மெய்யுமாகாமல் (அலி போலத்) தனிநிற்றலால், '**தனிநிலை**' எனப்பட்டது. உயிரும் மெய்யும் தம்மிற் கலத்தல்போல ஆய்தம் ஒரெழுத்தோடுங் கலத்தலின்றித் தனிநிற்றலால் தனிநிலை யெனப் பட்டதென்றலு மொன்று.

உயிர்மெய், உயிரும் மெய்யுஞ் சார்ந்து உண்டாதலாலும், ஆய்தம், உயிர் மெய்களினிடையே சார்ந்து வருதலாலும், மற்றை

உயிரளபெடை முதலிய எட்டும் – தம்தம் முதலெழுத்தின் திரிபு விகாரத்தாற் பிறத்தலாலும், இவையெல்லாம் சார்பெழுத் தெனப்பட்டன.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள். உயிர்மெய்** – உயிர்மெய்யும், **ஆய்தம்** – ஆய்தமும், **உயிரளபு** – உயிரளபெடையும், **ஒற்றளவு** – ஒற்றளபெடையும், **அஃகிய இ** – குற்றியலிகரமும், (அஃகிய) **உ** – குற்றியலுகரமும், (அஃகிய) **ஐ** – ஐகாரக் குறுக்கமும், (அஃகிய) **ஔ** – ஔகாரக் குறுக்கமும், (அஃகிய) **மஃகான்** – மகரக் குறுக்கமும், (அஃகிய) **தனிநிலை** – ஆய்தக் குறுக்கமும், **பத்தும்** – ஆகிய பத்தும், **சார்பெழுத்து ஆகும்** – சார்பெழுத்தாகும். **எ–று.**

அஃகுதல் – சுருங்குதல். தனிநிலை – ஆய்தம்; உயிரோடும் மெய்யோடும் கூடாமல் தனியே நிற்றலால் 'தனிநிலை' எனப்பட்டது.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள். உயிர் மெய்** – உயிர் மெய்யும், **ஆய்தம்** – ஆய்தமும், **உயிரளபு** – உயிரளபெடையும், **ஒற்றளபு** – ஒற்றளபெடையும், **அஃகிய இ** – குற்றியலிகரமும், (அஃகிய) **உ** – குற்றியலுகரமும், (அஃகிய) ஐ–ஐகாரக் குறுக்கமும், (அஃகிய) **ஔ** – ஔகாரக் குறுக்கமும், (அஃகிய) **மஃகான்**–மகரக்குறுக்கமும், (அஃகிய) **தனிநிலை** – ஆய்தக் குறுக்கமும், **பத்தும்** – ஆகிய பத்தும், சார்பெழுத்து ஆம்– சார்பெழுத்தாகும்.

**பொ–ரை.:**

உயிர்மெய்யும், முற்றாய்தமும், உயிரளபெடையும், குற்றியலிகரமும், குற்றியலுகரமும், ஐகாரக் குறுக்கமும், ஔகாரக் குறுக்கமும், மகரக்குறுக்கமும் ஆகிய பத்தும் சார்பெழுத்து ஆகும்.

அஃகுதல் –சுருங்குதல்; இங்கு மாத்திரை குறைதல்.

அஃகிய என்னும் பெயரெச்சத்தை உகர முதலியவற்றோடுங் கூட்டுக; பின்னே அஃகிய தனி நிலை என ஆய்தக்குறுக்கம் கூறப்படுதலால் முன்னே ஆய்தம் என்பது முற்றாய்தம் தனிநிலை–ஆய்தம். சார்பெழுத்து–முதலெழுத்தைச் சார்ந்து வருதலால் சார்பெழுத்தென்று ஆயது.

## கா. நமச்சிவாய முதலியார்

**உயிர்மெய்** – உயிர்மெய்யும், **ஆய்தம்** – முற்றாய்தமும், **உயிரளபு** – உயிரளபெடையும், **ஒற்றளபு** – ஒற்றளபெடையும் **அஃகிய இ** – குற்றியலிகரமும், (அஃகிய) **உ** – குற்றியலுகரமும், (அஃகிய) **ஐ** – ஐகாரக்குறுக்கமும், (அஃகிய) **ஔ** – ஔகாரக் குறுக்கமும், (அஃகிய) **மஃகான்** – மகரக் குறுக்கமும், (அஃகிய) **தனிநிலை** – ஆய்தக் குறுக்கமும், **பத்தும்** – (ஆகிய) பத்தும், **சார்பெழுத்து ஆகும்** – சார்பெழுத்து ஆகும்.

**அஃகுதல்** – சுருங்குதல்.

உயிர்மெய் என்றது, உயிரும் மெய்யும் கூடிப் பிறக்கும் எழுத்தினை. ஆய்தம், உயிரோடும் மெய்யோடும் கூடாது தனியே நிற்றலால் தனிநிலை யெனப்பட்டது. அஃகிய என்பதை **முதனிலைத் தீவகமாகக்** கொண்டு உகரம், ஐகாரம், ஒளகான், மஃகான், தனிநிலை என்பவற்றோடுங் கூட்டுக. உயிர்மெய் முதலிய பத்தும் முதலெழுத்தைச் சார்ந்து வருதலால் சார்பெழுத்தெனப்பட்டது.

## மோசகு பொன்னையா

உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஒளகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆயுதக்குறுக்கம் ஆகிய பத்தும் சார்பெழுத்துக்களாம், **எ–று.**

இனமும் வருக்கமும் இல்லாத ஆயுதம் தனிநிலை எனப்பட்டது. இவ்வாசிரியர் ஒலி அளவாலும், வரி வடிவாலும் முதலெழுத்துக்களின் விகாரப்பட்டு இயலும் எழுத்துக்கள் அனைத்தையும் சார்பெழுத்துக்கள் என்றார்.

குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்னும் மூன்றும் யாதானும் ஒரு சொல்லில் வரினல்லது, தனியே ஒலித்து நிற்கும் இயல்பில்லாதனவாய் முதலெழுத்துக்களைச் சார்ந்தே தோன்றும் இயல்பின. அவற்றின் இயல்பை ஆசிரியர் தொல்காப்பியர்,

***சார்ந்துவரி னல்லது தமக்கியல் பிலவெனத்***
***தேர்ந்து வெளிப்படுத்த ஏனை மூன்றும்***
***தத்தம் சார்பிற் பிறப்பொடு சிவணி***
***ஒத்த காட்சியில் தம்மியல் பியலும்.***

என்றோதினார். அம் மூன்றோடு தனித்து நிற்கும் இயல்பினவாய் இரண்டு இணைந்தும், அளவிற் கூடியும், குறைந்தும் பொருள் வேறுபடாது விகாரமாய் வரும் முதலெழுத்துக்களையும் கூட்டி இவ்வாசிரியர் உரைத்தமை, முன்னோர் நூலின் வழியே நூலமைக்கும் அவர் தம் கொள்கைக்கு முரண்பட அமைந்தது எனலாம்.

வீரசோழியமும் நேமிநாதமும் ஆய்தத்தை முதலெழுத்தாகக் கொள்கின்றன. நேமிநாதத்தில், 'வல்லொற்று வர்க்கம்' என்ற ஒன்று இரண்டாம் வைப்பாகிய சார்பெழுத்துக்களுள் இடம் பெறுகின்றது. காகம், பாசம் முதலிய சொற்களில் வரும க், ச் என்பவற்றின் ஒலிகளை அது சுட்டுவதாகலாம்.

# சார்பெழுத்தின் விரி

60. உயிர்மெய் யிரட்டுநூற் றெட்டுய ராய்தம்
எட்டுயி ரளபெழு மூன்றொற் றளபெடை
ஆறே ழஃகு மிம்முப் பானேழ்
உகர மாறா றைகான் மூன்றே
ஔகா னொன்றே மஃகான் மூன்றே
ஆய்த மிரண்டொடு சார்பெழுத் துறுவிரி ஒன்றொழி
முந்நூற் றெழுபா னென்ப.

உயிர்மெய் இரட்டு நூற்று எட்டு உயர் ஆய்தம்
எட்டு உயிர் அளபு எழு மூன்று ஒற்று அளபெடை
ஆறு ஏழ் அஃகும் இம் முப்பான் ஏழ்
உகரம் ஆறு ஐகான் மூன்றே
ஔகான் ஒன்றே மஃகான் மூன்றே
ஆய்தம் இரண்டொடு சார்பெழுத்து உறு விரி
ஒன்று ஒழி முந்நூற்று எழுபான் என்ப.

uyirmey irattu nūṟṟu ettu uyar āyṭam
ettu uyir aḻapu eḻu mūṉṟu oṟṟu aḻapetai
āṟu ēḻ akhkum im muppāṉ ēḻ
ukaram āṟu aikāṉ mūṉṟē
aukāṉ oṉṟē makhkāṉ mūṉṟē
āyṭam iraṇtotu sārpeḻuṭṭu uṟu viri
oṉṟu oḻi munnūṟṟu eḻupāṉ eṉpa.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

### Secondary or dependent letters

There are altogether three hundred and sixty nine Secondary letters, (which are distributed as follows): Vowel consonants, two hudred and sixteen: Perfect gutturals, eight; vowel prolongations, twenty one; Consonant prolongations, forty two; Shortened 'i,' thirty seven: Shortened 'u,' thirty six; Shortened 'ai,' three; shortened 'au,' one; Shortened 'm,' three; and Shortened gutturals, two.

## ஒப்புமைப் பகுதி

................................ அவற்றுள்
உயிர்மெய் யிரட்டு நூற்றெட்டுயி ரளபே
யொற்றளபு பதினொன் றொன்றொன் றேனைய
வாயிரு நூற்றெண் ணைந்து மதன் விரியே.

(இ.வி.: 5)

...................................... ஆய்தம்
இகல் குறளின் இஉஐஔவே ஆய்தம் மவ் ஒரொன்றாய் உயிர்மெய்
நூற்றெணிநட்டு உயிரளவு ஏழ் ஒற்றின்
உகுமளபு பதினொன்றொடு இருநூற்று நாற்பா னொன்று
சார்பெழுத்து.....

(சுவா. : 15)

## மயிலை நாதர்

எ—ன், [1]சார்பெழுத்தின் விரித்தொகை உணர்த்துதல் நுதலிற்று.

**இ—ள்.:** உயிரும் மெய்யுங் கூட்டி உச்சரிக்கப்படாநின்ற எழுத்து இருநூற்றொருபத்தாறும், விகாரப்படாது நின்ற ஆய்தமெட்டும், உயிரளபெடை இருபத்தொன்றும், ஒற்றளபெடை நாற்பத்திரண்டும், குற்றியலிகரம் முப்பத்தேழும், குற்றியலுகரம் முப்பத்தாறும், ஐகாரக்குறுக்கம் மூன்றும், ஔகாரக்குறுக்கம் ஒன்றும், மகரக்குறுக்கம் மூன்றும், ஆய்தக் குறுக்கம் இரண்டும் ஆகச் சார்பெழுத்தின் விரித்தொகை முந்நூற்றறுபத்தொன்பதாம், எ—று.

இக்கூறுபாடுகள் தத்தம் இலக்கணச் [2]சூத்திரத்துள்ளே கண்டு கொள்க. எனவே சார்பெழுத்தெனத் தொகையான் ஒன்றும், வகையாற் பத்தும், விரியான் முந்நூற்றறுபத்தொன்பதுமாம் சார்பெழுத்து, எ—று.

> எனவே இச் சூத்திரங்களாற் போந்த பொருள் எழுத்தெனத் தொகையான் ஒன்றும், [3]முதலெழுத்துச் சார்பெழுத்தென வகையான் இரண்டும், இவ்விரண்டன் விரியும் கூட்ட விரியான் முந்நூற்றுத் தொண்ணூற் றொன்பதூஉமாம் எழுத்தென்பதாயிற்று.
>
> இன்னும் இவற்றைக் குற்றுயிர், நெட்டுயிர், உயிர்மெய்க் குறில், உயிர்மெய் நெடில், வல்லினம், மெல்லினம்,

**பாட வேறுபாடு :-**

1. சார்பெழுத்தினது
2. சூத்திரங்களுள்ளே
3. முதலெழுத்தும் சார்பெழுத்துமென

இடையினமென்பவற்றானும் பிறவற்றானும் பகுப்ப எனைத்தும் பலவாம். அவையும் வேண்டுமேல் அவ்வாறு விரித்துரைத்துக்கொள்க.

அகரமெனத் தொகையானொன்றும், உயிர் அகரமும் உயிர்மெய் அகரமுமென வகையான் இரண்டும், உயிர் அகரமொன்றும், உயிர்மெய் அகரம் பதினெட்டுமென விரியாற் பத்தொன்பதுமாம். அகரமொழிந்தனவும் இவ்வாறே கொள்க.

இனி, தொகை வகை விரியைத் தொகைவகைவிரியா னுறழ்ந்து ஒன்பதாக்கி [2]உரைப்பாருமுளர். இவர் ஈண்டை வழக்கிற்கு வேண்டுமாறே கொண்டாரென்க.

தாமே தமித்து நிற்கையின் [3]முதலெழுத்தென்றாயின. அவையே தம்மொடு தாம் சார்ந்தும் இடஞ் சார்ந்தும் இடமும் பற்றுக்கோடும் சார்ந்தும் விகாரத்தால் வருதலிற் [4]சார்பெழுத் தென்றாயினவெனக் கொள்க. எண் முற்றும்.

## சங்கர நமச்சிவாயர்

**எ—னின்,** இதுவும் அது.

இ—ள்.: உயிர்மெய் இருநூற்றுப் பதினாறு; குறுகாத ஆய்தம் எட்டு; உயிரளபெடை இருபத்தொன்று; ஒற்றளபெடை நாற்பத்திரண்டு; குற்றியலிகரம் முப்பத்தேழு; குற்றியலுகரம் முப்பத்தாறு; ஐகாரக் குறுக்கம் மூன்று; ஔகாரக்குறுக்கம் ஒன்று; மகரக்குறுக்கம் மூன்று; ஆய்தக் குறுக்கம் இரண்டுடனே சார்பெழுத்தினது மிகுந்த விரி முந்நூற்று அறுபத்தொன்பதாம் என்று சொல்லுவர் புலவர், **எ—று.**

இவை இத்துணையவாதல் பிறப்பதிகாரத்தினுள் காண்க. இவ்வாறு உயிர்மெய் ஒழிந்தனவற்றையும் விரித்தல் தொன்னெறி என்பார் என்ப என்றார்.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ—ம்,** சார்பெழுத்தின் விரிந்த தொகை இவ்வளவு என்றது.

**இ—ள்.: உயிர்மெய் இரட்டு நூற்றெட்டு**—உயிர்மெய்யெழுத்து இருநூற்றுப் பதினாறும், **உயராய்தம் எட்டு**—முற்றாய்த எழுத்து எட்டும், **உயிரளவு ஏழு மூன்று**—உயிரளபெடை இருபத்தொன்றும், **ஒற்றளபெடை ஆறேழ்** – ஒற்றளபெடை நாற்பத்திரண்டும், **அஃகும் இம்முப்பானேழ்**—குற்றியலிகரம் முப்பத்தேழும், **உகரம் ஆறு**—குற்றியலுகரம் முப்பத்தாறும், **ஐகான் மூன்றே**—ஐகாரக் குறுக்கம் மூன்றும், **ஔகான் ஒன்றே**—ஔகாரக் குறுக்கம் ஒன்றும், **மஃகான் மூன்றே**—மகரக்குறுக்கம் மூன்றும், **ஆய்தம் இரண்டொடு** – ஆய்தக் குறுக்கம் இரண்டினோடும், **சார்பெழுத்தாறு விரி**—சார்பெழுத்துப் பொருந்தும் விரிவு

தொகை, **ஒன்றொழி முந்நூற்றெழுபான் என்ப**– முந்நூற்றறு பத்து ஒன்பதென்று சொல்லுவார் புலவர்.

## விசாகப்பெருமாளையர்

**இதுவுமது.**

**இ–ள்.: உயிர்மெய்** – உயிர்மெய், **இரட்டுநூற்றெட்டு**– இருநூற்றுப்பதினாறு, **உயராய்தம்**–குறுகாத வாய்தம், **எட்டு**–எட்டு, **உயிரளபு**– உயிரளபெடை, **எழுமூன்று** – இருபத்தொன்று, **ஒற்றளபெடை** – ஒற்றளபெடை, **ஆறேழ்**–நாற்பத்திரண்டு, **அஃகும் இ** – குற்றியலிகரம், **முப்பானேழ்** – முப்பத்தேழு, **(அஃகும்) உகரம்** – குற்றியலுகரம், **ஆறாறு** – முப்பத்தாறு, **(அஃகும்) ஐகான்**–ஐகாரக்குறுக்கம், **மூன்று**–மூன்று, **(அஃகும்) ஔகான்**– ஔகாரக்குறுக்கம், **ஒன்று**–ஒன்று, **(அஃகும்) மஃகான்**–மகரக்குறுக்கம், **மூன்று**–மூன்று, **(அஃகும்) ஆய்தம்**–ஆய்தக்குறுக்கம், **இரண்டொடு**– இரண்டுடனே, **சார்பெழுத்து**–சார்பெழுத்தினது, **உறுவிரி**–மிகுந்தவிரி, **ஒன்றொழி முந்நூற்றெழுபான்**–முந்நூற்றறுபத்தொன்பதாம், **என்ப**–என்று சொல்லுவர் புலவர், **எ–று.**

இவை இத்தனையாதல் அவ்வவற்றின் பிறப்பிலக் கணத்திற் காண்க,

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

சார்பெழுத்தின் விரிகூறுஞ் சூத்திரம் யாது?

உயிர்மெய் யிரட்டுநூற் றெட்டுய ராய்தம்
எட்டுயி ரளபெழு மூன்றொற் றளபெடை
ஆறே ழஃகு மிம்முப் பானேழ்
உகர மாறா றைகான் முன்றே
ஔகா னொன்றே மஃகான் மூன்றே
ஆய்த மிரண்டொடு சார்பெழுத் துறுவிரி
ஒன்றொழி முந்நூற் றெழுபா னென்ப.

(உயிர்மெய் இரட்டு நூற்றெட்டு உயர் ஆய்தம் எட்டு
உயிரளபு எழுமூன்று, ஒற்றளபெடை
ஆறேழ், அஃகும் இ முப்பானேழ்
உகரம் ஆறாறு, ஐகான் மூன்றே
ஔகான் ஒன்றே, மஃகான் மூன்றே
ஆய்தம் இரண்டு ஒடு சார்பெழுத்து உறுவிரி
ஒன்றொழி முந்நூற்று எழுபான் என்ப)

**இ–ள்.: உயிர்மெய் இரட்டு நூற்றெட்டு** – உயிர்மெய் இரு நூற்றுப்பதினாறு, **உயர் ஆய்தம் எட்டு** – முற்றாய்தம் எட்டு, **உயிரளபு எழு மூன்று** – உயிரளபெடை இருபத்தொன்று, **ஒற்றளபெடை ஆறேழ்** – ஒற்றளபெடை நாற்பத்திரண்டு, **அஃகும் இ முப்பானேழ்** – குற்றியலிகரம் முப்பத்தேழு, (அஃகும்) **உகரம் ஆறாறு** – குற்றியலுகரம் முப்பத்தாறு, (அஃகும்) **ஐகான் மூன்று** – ஐகாரக் குறுக்கம் மூன்று, (அஃகும்) **ஔகான் ஒன்று** – ஔகாரக் குறுக்கம் ஒன்று, (அஃகும்) **மஃகான் மூன்று** – மகரக் குறுக்கம் மூன்று, (அஃகும்) **ஆய்தம்**

**இரண்டொடு** – ஆய்தக் குறுக்கம் இரண்டுடனே, **சார்பெழுத்து உறு விரி ஒன்று ஒழி முந்நூற்றெழுபான் என்ப** – சார்பெழுத்தினது மிகுந்த விரி முந்நூற் றறுபத்தொன்பதாம் என்று சொல்லுவர் புலவர், எ–று.

உயிர்மெய் யெழுத்தெத்தனை?

"உயிர்மெய்யிரட்டு நூற்றெட்டு"

முற்றாய்தமெத்தனை?

"உயராய்தமெட்டு"

உயிரளபெடை எத்தனை?

"உயிரளபு எழுமூன்று"

ஒற்றளபெடை எத்தனை?

"ஒற்றளபெடை ஆறேழ்"

குற்றியலிகரமெத்தனை?

"அஃகும் இம்முப்பானேழ்"

குற்றியலுகரமெத்தனை?

"அஃகும் உகரம் ஆறாறு"

ஐகாரக்குறுக்கமெத்தனை?

"அஃகும் ஐகான் மூன்றே"

ஔகாரக் குறுக்க மெத்தனை?

"அஃகும் ஔகான் ஒன்றே"

மகரக் குறுக்கமெத்தனை?

"அஃகும் மஃகான் மூன்றே"

ஆய்தக் குறுக்கமெத்தனை?

"அஃகும் ஆய்தம் இரண்டு"

ஆகச் சார்பெழுத்தெத்தனை?

"சார்பெழுத்துறுவிரி, ஒன்றொழிமுந்நூற் றெழுபா னென்ப"

## முகவை இராமானுச கவிராயர்

**இ–ள்.: உயிர்... றெட்டு** – உயிர்மெய்யெழுத்துகள் இருநூற்றுப்பதினாறு, **உயரா...டு** – குறுகாத ஆய்தம் எட்டு, **உயிரள...ன்று**–உயிரளபெடை இருபத்தொன்று, **ஒற்றள...றேழ்**–ஒற்றளபெடை நாற்பத்திரண்டு, **அஃகுமி**– குற்றியலிகரம், **முப்பானேழ்**–முப்பத்தேழு, **உகரமாறாறு**–குற்றியலுகரம்

முப்பத்தாறு, **ஐகான்மூன்று**–ஐகாரக்குறுக்கம் மூன்று, **ஔகானொன்று** – ஔகாரக்குறுக்கம் ஒன்று, **மஃகான் மூன்று** – மகரக்குறுக்கம் மூன்று, **ஆய்தமிரண்டொடு**–ஆய்தக் குறுக்கம் இரண்டோடு கூட, **சார்பெழுத்துறுவிரி**– சார்பெழுத்தின் மிக்க விரி, **ஒன்றொழி** – ஒன்றுகுறைந்த, **முந்நூற் றெழுபா னென்ப**–முந்நூற்றெழுப தென்று சொல்லுவர் புலவர், **எ.று.**

அஃகு மென்னும் பெயரெச்சத்தை முன்போல உகர முதலியவற்றொடுங் கூட்டிக் கொள்க. எழுத்து வேற்றுமை பற்றி உயிர்மெய் இருநூற்றுப்பதினா றாயின, மற்றவை யெல்லாம் இடவேற்றுமை பற்றிச் சொல்லப்பட்டன. இவற்றுள், உயிரள பெடையும் ஒற்றளபெடையும் எழுத்து வேற்றுமை பற்றின் ஏழும் பதினொன்றுமாம்.

இனி இது எண்ணிலக்கண மாதலால் முதலெழுத்திற்கு முதலென்றது தொகையாகவும், உயிருமுடம்பு மென்றது வகையாகவும், முப்பதென்றது விரியாகவும்; சார்பெழுத்திற்கு – சார்பென்றது தொகையாகவும், தனிநிலை–பத்துமென்றது வகையாகவும், ஒன்றொழி முந்நூற்றெழு பானென்றது விரியாகவும், இவ்விரு திறத்தெழுத்திற்கும் எழுத்தென்றது தொகையாகவும், முதல் சார்பென்றது வகையாகவும், இவ்விருதிறத் தெழுத்தின் விரியுங் கூட்டி ஒன்றொழி நானூறென்பது விரியாகவுங் கண்டு கொள்க. இவை இவ்வாறாதலைத் தத்தம் விதிச் சூத்திரங்களுட் காண்க.

இன்னுமிது தொகைவகை விரிபடச் சொன்ன நூலாதலால் உயிர் முதலிய பன்னிரண்டு வகைக்கும் தனித்தனி தொகை வகை விரியு மிவ்வாறு கண்டு கொள்க.

## கா. கோபாலாசாரி –தி.கோ.ரங்காசாரி

**உரை :–** **உயிர்மெய் இரட்டு நூற்றெட்டு** – உயிர்மெய்யெழுத்துக்கள் இரு நூற்றுப்பதினாறு! **உயராய்தம் எட்டு** – முற்றாய் தம் எட்டு; **உயிரளபு எழுமூன்று** – உயிரளபெடை இருபத்தொன்று; **ஒற்றளபெடை ஆறேழு** – ஒற்றளபெடை நாற்பத்திரண்டு; **அஃகும் இ முப்பானேழ்** – குற்றிய விகரம் முப்பத்தேழு; (அஃகும்) **உகரம் ஆறாறு** – குற்றியலுகரம் முப்பத்தாறு, (அஃகும்) **ஐகான் மூன்று** – ஐகாரக் குறுக்கம் மூன்று ; (அஃகும்) **ஔகான் ஒன்று** – ஔகாரக்குறுக்கம் ஒன்று; (அஃகும்) **மஃகான் மூன்று** – மகரக்குறுக்கம் மூன்று; (அஃகும்) **ஆய்தம் இரண்டொடு** – ஆய்தக் குறுக்கம் இரண்டுடனே, **சார்பெழுத்து உறுவிரி** – சார்பெழுத்தினது மிகுந்த விரி, **ஒன்றுஒழி முந்நூற்றெழுபான்** – ஒன்று குறைந்த முந்நூற்றெழுபது (முந்நூற்றறு பத்தொன்பது), **என்ப** – என்று சொல்லுவர் (புலவர்).

**குறிப்பு :–**

இவை இத்தனை யாதலை அவ்வவற்றின் பிறப்பிலக் கணத்திற் காண்க. எழுத்து வேற்றுமைபற்றி உயிர்மெய்

இருநூற்றுப்பதினாறாயின. மற்றவையெல்லாம் இட வேற்றுமை பற்றிச் சொல்லப்பட்டன. அஃகும் என்பது ஒழிந்தவற்றோடுங் கூட்டப்பட்டது.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.:– உயிர்மெய் இரட்டுநூற்றெட்டு** – உயிர்மெய் இருநூற்றுப் பதினாறு, **உயர் ஆய்தம் எட்டு** – முற்றாய்தம் எட்டு, **உயிரளபு எழுமூன்று** – உயிரளபெடை இருபத்தொன்று, **ஒற்றளபெடை ஆறேழ்** – ஒற்றளபெடை நாற்பத்திரண்டு, **அஃகும் இ முப்பானேழ்** – குற்றியலிகரம் முப்பத்தேழு, **(அஃகும்) உகரம் ஆறாறு** – குற்றியலுகரம் முப்பத்தாறு, **(அஃகும்) ஐகான் மூன்று** – ஐகாரக் குறுக்கம் மூன்று, **அஃகும் ஔகான் ஒன்று** – ஔகாரக் குறுக்கம் ஒன்று, **(அஃகும்) மஃகான் மூன்று** – மகரக் குறுக்கம் மூன்று, **(அஃகும்) ஆய்தம் இரண்டொடு** – ஆய்தக் குறுக்கம் இரண்டுடனே, **சார்பெழுத்து உறு விரி ஒன்று ஒழி முந்நூற்றெழுபான் என்ப** – சார்பெழுத்தினது மிகுந்த விரி முந்நூற்றறுபத்தொன்பதாம் என்று சொல்லுவர் புலவர், **எ–று.**

இவை இத்தனையவாதல் அவ்வவற்றின் பிறப்பிலக் கணத்திற் காண்க.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். உயிர் மெய் இரட்டு நூற்றெட்டு** – உயிர்மெய் இருநூற்றுப் பதினாறு, **உயர் ஆய்தம் எட்டு** – முற்றாய்தம் எட்டு, **உயிரளபு எழுமூன்று** – உயிரளபெடை இருபத்தொன்று, **ஒற்றளபெடை ஆறேழு** – ஒற்றளபெடை நாற்பத்திரண்டு, **அஃகும் இ முப்பானேழு** – குற்றியலிகரம் முப்பத்தேழு, (அஃகும்) **உகரம் ஆறாறு** – குற்றியலுகரம் முப்பத்தாறு, (அஃகும்) **ஐகான் மூன்று** – ஐகாரக்குறுக்கும் மூன்று, (அஃகும்) **ஔகான்** (ஒன்று – ஔகாரக்குறுக்கம் ஒன்று, (அஃகும்) **மஃகான் மூன்று** – மகரக்குறுக்கும் மூன்று, (அஃகும்) **ஆய்தம் இரண்டொடு** – ஆய்தக்குறுக்கம் இரண்டுடனே, **சார்பெழுத்து உறுவிரி** – சார்பெழுத்தினது மிகுந்த விரி, **ஒன்று ஒழி முந்நூற்றெழுபான் என்ப** – முந்நூற்றறுபத்தொன்பதாம் என்று சொல்லுவர் புலவர். எ–று.

அஃகும் என்னும் அடைமொழி இகரமுதலான ஆறுவகைக்கு முரியதாதலிற் பிரித்துக் கூட்டி யுரைக்கப்பட்டது. உயிருமெய்யுங் கலப்புறுதலாற் பெருகிய எழுத்து வேற்றுமை பற்றி உயிர்மெய் இருநூற்றுப் பதினாறாயின. மற்ற ஒன்பது வகையில், உயிரளபெடையும், ஒற்றளபெடையும் ஆய்தக் குறுக்கமுந் தவிர நின்ற அறுவகைச் சார்பெழுத்துக்களுக்கு இடவேற்றுமைப் பற்றி எண்கள் சொல்லப்பட்டன. உயிரளபெடைக்கும் ஒற்றள பெடைக்கும் எழுத்து வேற்றுமை, இடவேற்றுமை என்னு மிரண்டும் பற்றி எண்கள் சொல்லப் பட்டன. ஆய்தக் குறுக்கத்திற்குத் திரிந்த முதலெழுத்துக்கள் பற்றித் தொகை குறிக்கப்பட்டது. இங்கே வேற்றுமை யென்றது வேறுவேறா

யிருக்குந் தன்மை. எண் எனினுந் தொகை எனினுங் கணக்கு எனினுமொக்கும். இவை அவ்வத்தொகையவாதலை அவ்வ வற்றின் பிறப்பிலக்கணங் கூறுமிடங்களிற் காண்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரி

## சே. கிருஷ்ணமாசாரி

இ-ள்.: **உயிர்மெய் இரட்டு நூற்றெட்டு** – உயிர்மெய் இருநூற்றுப்பதினாறும், **உயர் ஆய்தம் எட்டு** – முற்றாய்தம் எட்டும், **உயிரளபு எழு மூன்று**–உயிரளபடை இருபத்தொன்றும், **ஒற்றளபெடை ஆறேழ்** – ஒற்றளபெடை நாற்பத்திரண்டும், **(அஃகும்) இ முப்பானேழ்** – குற்றியலுகரம் முப்பத்தேழும், **(அஃகும்) உகரம் ஆறாறு** – குற்றியலுகரம் முப்பத்தாறும், **(அஃகும்) ஐகான் மூன்றே**–ஐகாரக் குறுக்கம் மூன்றும், **(அஃகும்) ஔகான் ஒன்றே** – ஔகாரக் குறுக்கம் ஒன்றும், **(அஃகும்) மஃகான் மூன்றே** – மகரக் குறுக்கம்மூன்றும், **(அஃகும்) ஆய்தம் இரண்டொடு**–ஆய்தக் குறுக்கம் இரண்டும், **(ஆக) சார்பெழுத்து உறு விரி**–சார்பெழுத்தினது மிக்க விரி, **ஒன்று ஒழி முந்நூறு எழுபான்**–ஒன்று குறைந்த முந்நூற்றெழுபது (முந்நூற்றறு பத்தொன்பது) ஆகும், **என்ப**– என்று சொல்வர்; (அறிவுடையோர்); எ–று.

**உறு விரி**–முழுத்தொகை.

இவை இத்தனையாதலை, அவ்வவற்றின் பிறப்பிலக்கணத்திற் காண்க. எழுத்து வேற்றுமைபற்றி, உயிர்மெய் இருநூற்றுப்பதினாறாயின. உயிரளபெடையும் ஒற்றளபெடையும், எழுத்து வேற்றுமை இட வேற்றுமை என்னுமிரண்டும் பற்றித் தொகையிடப்பட்டன. திரிந்த முதலெழுத்துக்கள் பற்றி, ஆய்தக் குறுக்கத்திற்குத் தொகை குறிக்கப்பட்டது. மற்றவை யெல்லாம், இடவேற்றுமை பற்றிக் கணக்கிடப்பட்டன. உயர் ஆய்தம்– மாத்திரை குறையாமல் நிறைந்த ஆய்தம்; எனவே, முற்றாய்தமாம்.

## பவானந்தம் பிள்ளை

இ-ள். **உயிர் மெய் இரண்டுநூற்றெட்டு** – உயிர்மெய் இருநூற்றுப் பதினாறு, **உயிர் ஆய்தம் எட்டு** – முற்றாய்தம் எட்டு, **உயிரளவு எழுமூன்று** - உயிரளபெடை இருபத்தொன்று, **ஒற்றளபெடை ஆறேழ்** – ஒற்றளபெடை நாற்பத்திரண்டு, **அஃகும் இ முப்பானேழ்** – குற்றியலிகரம் முப்பத்தேழு, (அஃகும் **உகரம் ஆறாறு** – குற்றியலுகரம் முப்பத்தாறு, (அஃகும்) **ஐகான் மூன்று** – ஐகாரச் குறுக்கம் மூன்று, (அஃகும்) **ஔகான் ஒன்று** – ஔகாரக் குறுக்கம் ஒன்று (அஃகும்) **மஃகான் மூன்று** – மகரக் குறுக்கம் மூன்று, (அஃகும்) **ஆய்தப் இரண்டொடு** – ஆய்தக் குறுக்கம் இரண்டுடனே, **சார்பெழுத்து உறு விரி** - சார்பெழுத்தினது மிகுந்த விரி, **ஒன்று ஒழி முந்நூற்றெழுபான் என்ப** - முந்நூற்றறுபத்தொன்பதாம் என்று சொல்லுவர் புலவர். எ–று.

இவை இத்தனையவாதலை அவ்வவற்றின் பிறப்பிலக் கணத்திற் காண்க.

### கா. நமச்சிவாய முதலியார்

**உயிர்மெய் இரட்டு நூற்றெட்டு** – உயிர்மெய் இருநூற்றுப் பதினாறு, **உயர் ஆய்தம் எட்டு** – முற்றாய்தம் எட்டு, **உயிரளபு எழுமூன்று** – உயிரளபெடை இருபத்தொன்று, **ஒற்றளபெடை ஆறேழ்** – ஒற்றளபெடை நாற்பத்திரண்டு, **அஃகும் இ முப்பானேழ்** – குற்றியலிகரம் முப்பத்தேழு, (அஃகும்) **உகரம் ஆறாறு**. (குற்றியலுகரம் முப்பத்தாறு, (அஃகும்) **ஐகான் மூன்று** – ஐகாரக்குறுக்கம் மூன்று, (அஃகும்) **ஔகான் ஒன்று** – ஔகாரக்குறுக்கம் ஒன்று, (அஃகும்) **மஃகான் மூன்று** – மகரக்குறுக்கம் மூன்று (அஃகும்) **ஆய்தம் இரண்டொடு** – ஆய்தக்குறுக்கம் இரண்டுடனே, **சார்பெழுத்து உறு விரி** – சார்பெழுத்தினது மிக்க விரி, **ஒன்றொழி முந்நூற் றெழுபான்** – ஒன்று ஒழிந்த முந்நூற்றெழுபது (முந்நூற்றறுபத்தொன்பது), **என்ப** – என்று சொல்லுவர். (புலவர்).

இவற்றின் விரிவை சிறப்புச் சூத்திரங்களிற் காண்க.

அஃகிய என்பதனை ஈண்டும் **முதனிலைத் தீவகமாகக்** கொண்டு ஏனையவற்றோடுங் கூட்டி முடிக்க.

## மோசகு பொன்னையா

உயிர்மெய் இருநூற்றுப் பதினாறும், முற்றாய்தம் எட்டும், உயிரளபெடை இருபத்தொன்றும், ஒற்றளபெடை நாற்பத்திரண்டும், குற்றியலிகரம் முப்பத்தேழும், குற்றியலுகரம் முப்பத்தாறும், ஐகாரக் குறுக்கம் மூன்றும், ஔகாரக் குறுக்கம் ஒன்றும், மகரக் குறுக்கம் மூன்றும், ஆய்தக் குறுக்கம் இரண்டுமாகச் சார்பெழுத்துக்களின் விரிந்த தொகை முந்நூற்றறுபத்தொன்பது ஆகும் என்பர், எ–று.

எனவே, இவ்வாசிரியர் சார்பெழுத்து, தொகையான் ஒன்றும், வகையாற் பத்தும், விரியான் முந்நூற்றறுபத்தொன்பதும் எனக் கொண்டார் என்க. சார்பெழுத்துக்களின் முழுத்தொகை (உறுவிரி) கூறுவது உறுபயனின்றிப் பொழுதழி முயற்சியேயாம். பிற இலக்கண ஆசிரியரும் தத்தமக்கு வேண்டியவாறே சார்பெழுத்தின் வகை விரி பற்றிக் கூறினர். இலக்கண விளக்க ஆசிரியர், 'உயிர்மெய் யொழித்து ஏனையவெல்லாம் இடவேற்றுமையன்றி எழுத்து வேற்றுமையான் அங்ஙனம் பல்காமையின், சார்பெழுத்து முந்நூற்றறுபத்தொன்பதாம் என்றல் நிரம்பாது எனவும் மறுக்க. இன்னும், இடையொற்றுக்கள் டகர றகரங்களோடு தொடராமைக்கு அவர் (நன்னூலார்) மெய்மயக்கங் கூறிய சூத்திரங்களே கரியாகலின், குற்றிகரக் குற்றுகரங்கட்கு அவ்விட வேற்றுமையும் சாலாமை அறிக.' என மறுத்துக் கூறியுள்ளது மனங் கொள்ளற்குரியதாம்.

# பெயர்களின் பொதுவிலக்கணம்

## 61. இடுகுறி காரணப் பெயர்பொதுச் சிறப்பின.

**இடுகுறி காரணப் பெயர் பொதுச் சிறப்பின.**

iṭukuṛi kāraṇap peyar poṭus siṛappiṉa.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

**Names or Nouns: Arbitrary and Appellative: Common and Proper**

Arbitrary and Appellative Names are both Generic and Specific.

## மயிலை நாதர்

**எ—ன்,** நிறுத்தமுறையானே பெயராமாறு உணர்த்துவா னெடுத்துக் [1]கொண்டார், அவற்றுள், இத் தலைச்சூத்திரம் பெயர்க்கெல்லாம் பொதுவாய தோரிலக்கண முணர்த்துதல் நுதலிற்று.

**இ—ள்.:** இடுகுறியானும் காரணத்தினானுமாகும் பெயர்கள், பொதுவைப் பற்றியும் சிறப்பைப் பற்றியும் வருவனவாம், **எ—று.**

இஃது என்னை [2]சொன்னவாறெனின், இடுகுறிப் பொதுப்பெயரும், இடுகுறிச் சிறப்புப்பெயரும் காரணப் பொதுப்பெயரும், காரணச் சிறப்புப் பெயருமென யாவகைப்பெயரும் நால்வகைப் படுவனவாம், **எ—று.**

எனவே, உலகத்துப் பெயர்களெல்லாம் இவ்விரு திறத்தானுமன்றி வாராமை [3]வழக்கிடத்தும் செய்யுளிடத்தும் யாண்டும் ஆராய்ந்து கொள்க. ஆவி, உயிர், மெய், உடம்பு என்பன இடுகுறிப் பொதுப்பெயர். அவற்றுள், அ,ஆ; க,ங என்றற் றொடக்கத்தன இடுகுறிச் சிறப்புப்பெயர். குறில், நெடில், வல்லினம், மெல்லினம், இடையினமென்றற் றொடக்கத்தன காரணப் பொதுப்பெயர்.

---

பாட **வேறுபாடு :-**

**1. கொண்டார் இச் சூத்திரம்**

**2. சொன்னவாறோ.**

**3. செய்யுளிடத்தன்றியும்வழக்கிடத்தும் யாண்டும்.**

[1]குற்றிகரம், குற்றுகரம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கமென்றற் றொடக்கத்தன காரணச் சிறப்புப்பெயர். இவ்வாறே பிறவும் ஆராய்ந்தறிக.

## சங்கர நமச்சிவாயர்

எ–னின், நிறுத்தமுறையானே எழுத்தின் பெயராமாறு உணர்த்துவான் தொடங்கிப் பெயர்க்கெல்லாம் பொதுவிலக்கணம் **உணர்–ற்று.**

**இ–ள்.:** இடுகுறிப்பெயரும் காரணப் பெயருமாகிய இரண்டும், பல பொருட்குப் பொதுப்பெயராயும் ஒரு பொருட்குச் சிறப்புப் பெயராயும் வருவனவாம், **எ–று.**

ஒரு பொருளைக் குறித்தற்குக் கடவுளானும் அறிவுடையோரானும் இட்ட குறியாகிய பெயர் இடுகுறிப்பெயர். காரணத்தான் வரும்பெயர் காரணப் பெயர்.

**உ–ம்.:**

மரம் என்பது இடுகுறிப்பொதுப்பெயர். பனை என்பது இடுகுறிச் சிறப்புப் பெயர். அணி என்பது காரணப்பொதுப்பெயர். முடி என்பது காரணச் சிறப்புப்பெயர். இனி, **இரட்டுறமொழிதல்** என்னும் உத்தியான், இச் சூத்திரத்திற்கு இடுகுறி என்றும் காரணம் என்றும் சொல்லப்படும் இலக்கணங்களை யுடைய பெயர்கள், இடுகுறி காரணம் என்னும் இரண்டற்கும் பொது வாயும், இடுகுறிக்கே சிறப்பாயும் காரணத்திற்கே சிறப்பாயும் வருவனாம் என்றும் பொருள் உரைத்துக் கொள்க.

**உ–ம்.:**

பரம் என்பது இடுகுறிப்பெயர். பரமன் என்பது காரணப்பெயர்.

முக்கணன், அந்தணன், மறவன், முள்ளி, கறங்கு, மொழி, சொல் என்பன காரண இடுகுறிப்பெயர். இவை காரண விடுகுறியாவது என்னை யெனின்:–

இவற்றுள் முக்கணன் என்னும் பெயர், யானைமுகக்கடவுள் முதலியோர்க்கு மூன்றுகண் உளவாகலின் காரணம் கருதியவழி மூன்றுகண்ணினையுடையோர் பலர்க்கும் சேறலானும், காரணம் கருதாதவழி இடுகுறிமாத்திரையேயாய்ப் பரமனுக்கே சேறலானும், காரண விடுகுறியாயிற்று. ஏனைப் பெயர்கட்கும் இவ்வாறே காண்க.

இவ்வாறே, வடநூலார் இடுகுறியை **ரூடி** என்றும், காரணத்தை **யோகம்** என்றும், காரணவிடுகுறியை **யோகரூடி** என்றும் வழங்குப. இவ் விலக்கணத்தான் எழுத்தினது பெயரும் பிறபெயரும் வருமாறு காண்க.

---

**பாட வேறுபாடு :–**

1. **குற்றுகரம், குற்றிகரம்**

## கூழங்கைத் தம்பிரான்

**சூ—ம்,** பெயர்க்கு இலக்கணம் சொல்லியது.

**இ—ள்.: இடுகுறி** — இடுகுறியான் வந்த இடுகுறிப்பெயரும், **காரணப் பெயர்**—காரணத்தான் வந்த காரணப் பெயரும், **பொது** — இடுகுறிப்பொதுப் பெயரென்றும் காரணப் பொதுப் பெயரென்றும், **சிறப்பின** — இடுகுறிச் சிறப்புப் பெயரென்றும் காரணச் சிறப்புப் பெயரென்றும் நான்காம்.

ஆவி, உயிர், மெய், உடம்பு என்பன இடுகுறிப் பொதுப்பெயர். அவற்றுள் அ,ஆ,க,ங என்றற் றொடக்கத்தன இடுகுறிச் சிறப்புப் பெயர். குறில், நெடில், வல்லினம், மெல்லினம், இடையினம் என்றற் றொடக்கத்தன காரணப் பொதுப் பெயர். குற்றிகரம், குற்றுகரம், மகரக்குறுக்கம் என்றற் றொடக்கத்தன காரணச் சிறப்புப் பெயர்.

## விசாகப்பெருமாளையர்

**இது,** நிறுத்தமுறையால் எழுத்தின் பெயரை, அறிவிக்கும்படியாகத், தொடங்கிப் பெயர்க்கெல்லாம் பொதுவிலக்கண முணர்த்துகின்றது.

**இ—ள்.: இடுகுறி காரணப்பெயர்**—இடுகுறிப்பெயருங் காரணப் பெயருமாகியவிரண்டும்,**பொதுச்சிறப்பின**—பல பொருளுக்குப் பொதுப் பெயராகியும் ஒரு பொருளுக்குச் சிறப்புப் பெயராகியும் வருவனவாம், **எ—று.**

**உ—ம்.:**

மரம் — இடுகுறிப்பொதுப்பெயர், பனை — இடுகுறிச் சிறப்புப்பெயர், அணி — காரணப்பொதுப்பெயர், முடி — காரணச் சிறப்புப்பெயர்.

இனி **இரட்டுறமொழிதலென்னு** முத்தியால் இச் சூத்திரத்திற்கு, இடுகுறிகாரணப்பெயர் இடுகுறியென்றுங் காரணமென்றுஞ் சொல்லப்படு மிலக்கணங்களை யுடைய பெயர்கள், பொது—இடுகுறி காரணமென்னு மிரண்டற்கும் பொதுவாகியும், சிறப்பின—இடுகுறிக்கே சிறப்பாகியுங் காரணத்திற்கே சிறப்பாகியும் வருவனவாம், என்றும் பொருளுரைத்துக் கொள்க.

**உ—ம்.:**

பரம் — இடுகுறிப்பெயர், பரமன்—காரணப்பெயர், முக்கணன் அந்தணன்—காரணவிடுகுறிப்பெயர், முக்கணனென்பது—காரணங் கருதிய வழி மூன்று கண்ணையுடைய விநாயகமூர்த்தி முதலாகிய பலர்க்குஞ் செல்லுதலாலும், காரணங் கருதாதவழி இடுகுறியளவேயாய்ப் பரமசிவனுக்குச் செல்லுதலாலுங் காரண விடுகுறியாயிற்று.

அந்தணனென்பதும், அப்படியே அழகிய தன்மையை யுடைய பலர்க்கும் பார்ப்பாருக்குஞ் செல்லுதல் காண்க.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

பெயர்வகை கூறுஞ் சூத்திரம் யாது?

இடுகுறி காரணப் பெயர் பொதுச் சிறப்பின.

(இச்சூத்திரம் பெயரியலிலெடுத்து வினாவி விளக்கப்படும்)

## முகவை இராமானுச கவிராயர்

இனி, எழுத்தின் பெயரிலக்கணஞ் சொல்லத் தொடங்கினதினாலே, இச் சூத்திரம் பெயர்க்கெல்லாம் பொதுவிலக்கண முணர்த்துகின்றது.

**இ—ள்.: இடுகுறி காரணப் பெயர்**—இடுகுறிப் பெயருங் காரணப் பெயருமாகிய இரண்டும், **பொதுச் சிறப்பின**—பல பொருட்குப் பொதுவாகியும், ஒரு பொருட்கே சிறப்பாகியும் வருவனவாம், **எ—று.**

**உதாரணம்.:**

மரம்—இடுகுறிப் பொதுப்பெயர், பனை—இடுகுறிச் சிறப்புப் பெயர்.

அணி—காரணப் பொதுப்பெயர், முடி—காரணச் சிறப்புப்பெயர், அணியப்படுதலாலும், முடியின் மேல் வைக்கப் படுதலாலு மெனக் காரணங் காண்க. முடி என்றது தலை, இனி **இரட்டுறமொழித லென்னும்** உத்தியால் இச்சூத்திரத்திற்கு இடுகுறிகாரணமென்ற இரண்டும், அவ்விரண்டிற்கும் பொதுவாகியும் இடுகுறிக்கே சிறப்பாகியுங் காரணத்திற்கே சிறப்பாகியும் வருவனவா மென்றும் பொருளுரைத்துக் கொள்க.

**உ—ம்.:**

பரம் என்பது, இடுகுறிச்சிறப்பு. பரமன் என்பது காரணச்சிறப்பு.

முக்கணன், மறவன், பங்கயம், முள்ளி என்றாற் போல்வன இடுகுறி காரண மிரண்டிற்கும் பொது. இவை இரண்டிற்கும் பொதுவாயின தெவ்வாறெனின் இவற்றுள் முக்கண னென்பது, காரணம் பற்றிப் பார்க்கும்போது மூன்று கண்ணுடைய விநாயகர் முதலியோர்க் கெல்லாம் பொதுவாகியும்; காரணம் பற்றாதபோது இடுகுறி மாத்திரையாய்ச் சிவனுக்கே சிறப்பாகியுஞ் சென்று வருதலால் இரண்டிற்கும் பொதுவாயிற்று.

மறவன் என்பது மறமுடையோர்க் கெல்லாங் பொதுவாயினு மொரு சாதியானுக்கே சிறப்பாயிற்று.

பங்கயம் சேற்றிலே பிறந்தனவெல்லாம் பங்கய மெனப் பொதுவாயினுந் தாமரை யொன்றிற்கே சிறப்பாயிற்று.

முள்ளி என்பது முள்ளுடையவைக் கெல்லாம் பொதுவாயினு மொரு சாதிச் செடிக்கே சிறப்பாயிற்று. ஆதலாலிவை போல்வன வெல்லாங் காரண விடுகுறிப் பெயரெனக் காண்க.

இவ்வாறே வடநூலார் இடுகுறியை ரூடி யென்றும், காரணத்தை யோக மென்றும், காரணவிடுகுறியை யோகரூடி யென்றும் வழங்குவர். இவ் விலக்கணத்தால் எழுத்துக்களின் பெயர் வருதல் காண்க.

## கா . கோபாலாசாரி -தி.கோ.ரங்காசாரி

**உரை :-** **இடுகுறி காரணப் பெயர்** – இடுகுறிப் பெயரும் காரணப் பெயருமாகிய இரண்டும், **பொது சிறப்பின** – பல பொருளுக்குப் பொதுப் பெயராயும் ஒரு பொருளுக்கே சிறப்புப் பெயராயும் வருவனவாம்.

**குறிப்பு :-**

எனவே, பெயர் இடுகுறிப் பொது, இடுகுறிச் சிறப்பு, காரணப் பொது, காரணச்சிறப்பு என நால்வகைப்படும் என்றதாயிற்று, ஒரு பொருளுக்கு ஒரு காரணமுமில்லாமல் இட்ட குறியாகிய பெயர் இடு குறிப் பெயர்; காரணத்தால் வரும் பெயர் காரணப் பெயர்.

**உதாரணம் :**

மரம் – இடுகுறிப் பொதுப்பெயர்பனை – இடுகுறிச் சிறப்புப்பெயர்
அணி – காரணப் பொதுப்பெயர்
முடி – காரணச் சிறப்புப் பெயர்

இனி **இரட்டுறமொழிதல்** என்னு முத்தியால் இச்சூத்திரத்திற்கு வேறொரு பொருளும் உரைக்கப்படும். அது வருமாறு – இடுகுறி காரணப் பெயர் – இடுகுறியென்றுங் காரணமென்றுஞ் சொல்லப்படும் இலக்கணங்களையுடைய பெயர்கள், பொது – இடுகுறி காரணமென்னு மிரண்டற்கும் பொதுவாயும், சிறப்பின – இடுகுறிக்கே சிறப்பாயும் காரணத்திற்கே சிறப்பாயும் வருவனவாம். எனவே, இடுகுறிபெயர், காரணப் பெயர், காரண விடுகுறிப்பெயர் என மூன்றாகும். இடுகுறியை ரூடியென்றும், காரணத்தை யோகமென்றும், காரணவிடுகுறியை யோகரூடமென்றும் கூறுவர் வடநூலார்.

**உதாரணம் :**

பரம்–இடுகுறிப்பெயர். பரமன் – காரணப்பெயர்.

முக்கணன், அந்தணன், முள்ளி – காரணவிடுகுறிப் பெயர். 'முக்கணன்' என்பது காரணம் கருதியவழி மூன்று கண்களையுடைய விநாயகமூர்த்தி முதலிய பலர்க்கும் செல்லுதலாலும், காரணம் கருதாதவழி இடுகுறியளவாய்ப் பரமசிவனுக்கே செல்லுதலாலும், 'அந்தணன்' என்பது காரணம் கருதியவழி அழகிய தண்மையுடைய பலர்க்கும் செல்லுதலாலும்,

காரணம் கருதாதவழி இடுகுறியளவாய்ப் பிராமணருக்கே செல்லுதலாலும் காரணவிடுகுறிப் பெயராயின. பங்கயம், முள்ளி, மறவன், கறங்கு முதலியனவும் காரணவிடுகுறி யாமாறு காண்க.

மேல் எழுத்துக்களின் பெயர் இடுகுறியாகவும், காரணமாகவும், காராணவிடுகுறியாகவும் வருதலால், அவ் வெழுத்துக்களின் பெயர் கூறத் தொடங்கினவர், பெயரின் இலக்கணத்தை முன்னே கூறினார்.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.:** **இடுகுறி காரணப்பெயர்**–இடுகுறிப்பெயருங் காரணப் பெயருமாகிய இரண்டும், **பொதுச் சிறப்பின**–பல பொருளுக்குப் பொதுப்பெயராயும் ஒவ்வொரு பொருளுக்கே சிறப்புப் பெயராயும் வருவனவாம், **எ–று.**

இடுகுறிப்பெயராவது ஒருகாரணமும் பற்றாது வழங்கி வரும் பெயர். காரணப் பெயராவது யாதேனுமொரு காரணம் பற்றி வழங்கி வரும் பெயர்.

**உதாரணம்.:**

மரமென்பது, ஒரு காரணமும் பற்றாது வழங்கும் பெயராய், மா,பலா,முதலிய பல பொருள்களுக்கும் பொதுவாய் நிற்கையால், இடுகுறிப் பொதுப்பெயர்.

மா,பலா,என்பன, ஒரு காரணமும் பற்றாது வழங்கும் பெயராய், ஒவ்வொரு பொருளுக்கே சிறப்பாய் நிற்கையால், இடுகுறிச்சிறப்புப்பெயர்.

அணியென்பது, அணியப்படுதலாகிய காரணம் பற்றி வழங்கும் பெயராய், இடுவன தொடுவன கட்டுவன கவிப்பன முதலிய ஆபரணங்கள் பலவற்றிற்கும் பொதுவாய் நிற்கையாற், காரணப்பொதுப்பெயர்.

முடி, கழல் என்பன, முடியிற் கவிக்கப்படுவதுங் கழலிற் கட்டப்படுவதுமாகிய காரணம் பற்றி வழங்கும் பெயராய், ஒவ்வொரு பொருளுக்கே சிறப்பாய் நிற்கையாற், காரணச் சிறப்புப் பெயர்.

இனி **இரட்டுற மொழிதலென்னு** முத்தியால் இச்சூத்திரத்திற்கு வேறுமொருபொருள் உரைக்கப்படும். அது வருமாறு;– இடுகுறி காரணப்பெயர்– இடுகுறியென்றுங் காரணமென்றுஞ் சொல்லப்படும் இலக்கணங்களையுடைய பெயர்கள், பொது–இடுகுறி, காரணமென்னும் இரண்டற்கு பொதுவாயும், சிறப்பின – இடுகுறிக்கே சிறப்பாயுங் காரணத்திற்கே சிறப்பாயும் வருவனவாம், **எ–று.**

எனவே, இடுகுறிப்பெயர் காரணப்பெயர் காரணவிடுகுறிப் பெயர் எனப் பெயர் மூவகைப்படு மென்றாராயிற்று.

காரண இடுகுறிப்பெயராவது,காரணங் கருதியபொழுது அக்காரணங்களை யுடைய பல பொருள்களுக்குஞ் செல்வ தாயும், காரணங் கருதாதபொழுது இடுகுறியளவாய் நின்று ஒவ்வொரு பொருட்கே செல்வதாயும் உள்ள பெயராம்.

**உதாரணம்.:**

பொன் என்பது இடுகுறிப்பெயர், பொன்னன் என்பது காரணப்பெயர். முக்கணன், அந்தணன்,முள்ளி, கறங்கு என்பன காரணவிடுகுறிப்பெயர். முக்கணன் என்பது, காரணங் கருதியபொழுது விநாயக்கடவுள் முதலிய பலர்க்குஞ் செல்லுதலாலும், காரணங் கருதாத பொழுது இடுகுறியளவாய்ச் சிவபெருமானுக்குச் செல்லுதலாலும், காரண விடுகுறிப்பெயராயிற்று. மற்றைப் பெயர்களுக்கும் இப்படியே காண்க.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ—ள். இடுகுறி காரணப்பெயர்** – இடுகுறிப்பெயரும் காரணப்பெயருமாகிய இரண்டும், – **பொதுச்சிறப்பின** – பலபொருளுக்குப் பொதுப்பெயராயும் ஒவ்வொரு பொருளுக்கே சிறப்புப்பெயராயும் வருவனவாம். எ—று.

இடுகுறிப்பெயராவது ஒருகாரணமும் பற்றாது வழங்கிவரும் பெயர். காரணப்பெயராவது யாதாயினுமொரு காரணம்பற்றி வழங்கிவரும் பெயர். பொதுவாவது பலபொருளுக்கு முரியதாய்ச் செல்லுவதாமொரு தன்மை. சிறப்பாவது ஒரு பொருளுக் குரியதாய் நிற்குந் தன்மை. பொது எனினும் சாமானிய மெனினும் ஒக்கும். சிறப்பு எனினும் விசேட மெனினும் ஒக்கும். பெயர்களை ஆராய்ந்து பார்க்குங்கால், இடுகுறிகாரண மென்னு மிரண்டனுள் ஒன்றாயும், பொது சிறப்பென்னு மிரண்டனு ளொன்றாயுமிருக்கும்.

**உ—ம்.**

மரம் என்பது ஒருகாரணமும் பற்றாது வழங்கு பெயராய், பனை, பலா, மா, முதலிய பல வருக்கப் பொருளுக்கும் பொதுவாதலால் இடுகுறிப் பொதுப்பெயர். பனை என்பது ஒருகாரணமும் பற்றாது வழங்கும் பெயராய் ஒரு வருக்கப் பொருளுக்கே சிறப்பாய் நிற்கையால் இடுகுறிச் சிறப்புப் பெயர். பலா, மா என்பனவும் அப்படியே இடுகுறிச் சிறப்புப் பெயர்களாம்.

அணி என்பது அணியப்படுதலாகிய காரணம் பற்றி வழங்கும் பெயராய் இடுவன தொடுவன கட்டுவன கவிப்பன முதலிய ஆபரணங்கள் பலவற்றிற்கும் பொதுவாதலால், காரணப்பொதுப்பெயர்.

முடி, கழல் என்பன முடியிற் கவிக்கப்படுவதும், கழலிற் கட்டப்படுவதுமாகிய காரணம் பற்றி வழங்கும் பெயராய் ஒவ்வொரு பொருளுக்கே சிறப்பாய் நிற்கையால் காரணச் சிறப்புப் பெயர்கள். முடி – தலை. கழல் – கால்.

இனி இரட்டுறமொழிதலென்னும் உத்தியால் இச் சூத்திரத்திற்கு இடுகுறி காரணம் என்ற இரண்டும் அவ் விரண்டிற்கும் பொதுவாகியும், இடுகுறிக்கே சிறப்பாகியும், காரணத்திற்கே சிறப்பாகியும் வருவனவாமென்றும் பொருளுரைத்துக் கொள்க.

**உ–ம்.**

பரம் என்பது இடுகுறிச்சிறப்பு. பரமன் என்பது காரணச் சிறப்பு. முக்கணன், மறவன், அந்தணன், பங்கயம், முள்ளி என்றாற் போல்வன இடுகுறி காரணமிரண்டற்கும் பொது. இவை யிரண்டற்கும் பொதுவாயின வாறென்னெனின், இவற்றுள் முக்கணன் என்பது காரணம் பற்றிப் பார்க்கும் போது மூன்று கண்ணுடைய விநாயகர் முதலியோர்க் கெல்லாம் பொதுவாகியும், காரணம் பற்றாதபோது இடுகுறி மாத்திரையாய்ச் சிவனுக்கே சிறப்பாகியுஞ் சென்று வருதலால் காரணம் இடுகுறி என்னுமவ் விரண்டிற்கும் பொதுவாயிற்று. மறவன் என்பது மறத்தன்மையுடையோர்க் கெல்லாம் பொதுவாயினும், ஒரு சாதியானுக்கே சிறப்பாயிற்று. அந்தணன் என்பது அந்தண்மை யுடையோர்க்கெல்லாம் பொதுவாயினும், ஆதி வருணத்தார்க்குச் சிறப்பாயிற்று. பங்கயம் சேற்றிலே தோன்றின வெல்லாம் பங்கய மென்னும்படி பொதுவாயினும், தாமரை யொன்றிற்கே சிறப்பாயிற்று.

முள்ளி என்பது முள்ளுடையனவற்றிற் கெல்லாம் பொதுவாயினும், ஒரு வருக்கச் செடிக்கே சிறப்பாயிற்று, ஆதலால் இவை போல்வன வெல்லாங் காரண விடு குறிப்பெயரெனக் காண்க.

வடநூலார் இடுகுறியை ரூடி என்றும், காரணத்தை யோகம் என்றும், காரணவிடுகுறியை யோகரூடி என்றும் வழங்குவர். இவ்விலக்கணத்தால் எழுத்துக்களின் பெயர் வருதல் காண்க.

**காரணவிடுகுறிக்கு வேறோர் இலக்கணம்; –**

காரணப்பொதுவாக வழங்கத்தகுந் தன்மையுடைய பெயர் ஏற்புடைய அப் பலபொருளுக்கும் பெருவழக்காய் வழங்காமல் அப் பலபொருள்களுள் ஒரு பொருளுக்குப் பெருவழக்காய் வழங்குமாயின் அது காரணவிடுகுறி யாமென்றுணர்க. எவ்வாறெனின், முள்ளி என்பது முள்ளையுடைய தென்னும் பொருளையுடைய தாதலின், இலந்தை, காரை, மாதுளை, வில்வம் முதலான முள்ளுடைய செடிகளுக்கெல்லாம் பொதுவாக வழங்குதற்குத் தகுந் தன்மையுடைய பெயராம். இப்பெயர்

அப்பொருள்களுகெல்லாம் பெருவழக்காய்ச் சேறலின்றி அவற்றுள் ஒரு வருக்கச் செடிக்கே பெருவழக்காய் வழங்குதலறிக.

பங்கயம் என்பது பங்க + சம் = சேற்றிற் றோன்றுவது என்னும் பொருளது ஆதலால், தாமரை, (குவளை, ஆம்பல், நெய்தல், முதலான) சேற்றிற் றோன்றுவனவற்றிற் கெல்லாம் பொதுவாகச் செல்லத் தகும் தன்மையுடைய பெயராயினும் அவற்றுள் மற்றவகைளுக்குப் பெருவழக்காய் வழங்குதலின்றித் தாமரைக்கே பெருவழக்காய் வழங்குதலறிக. ஏனையவு மிவ்வாறே யுய்த்துணர்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரி

## சே. கிருஷ்ணமாசாரி

இ–ள்.:– **இடுகுறி காரணம் பெயர்** – இடுகுறிப்பெயரும் காரணப் பெயருமாகிய இரண்டும், **பொது சிறப்பின** – பலபொருளுக்குப் பொதுப் பெயராகியும் ஒவ்வொரு பொருளுக்கே சிறப்புப்பெயராகியும் வருவனவாம்; எ–று.

எனவே, இடுகுறிப்பொதுப்பெயர், இடுகுறிச்சிறப்புப்பெயர், காரணப் பொதுப்பெயர், காரணச்சிறப்புப்பெயர் எனப் பெயர் நால்வகைப்படு மென்றதாயிற்று. ஒருகாரணமும் பற்றாமல் ஒருபொருளுக்குக் கடவுளாலும் அறிவுடையோராலும் இட்டகுறியாகிய பெயர், இடுகுறிப்பெயர். காரணத்தால் வரும் பெயர், காரணப்பெயர்.

**உதாரணம்.:**

மரம் – இடுகுறிப் பொதுப்பெயர்.

பனை,பலா–இடுகுறிச் சிறப்புப்பெயர். அணி–காரணப் பொதுப்பெயர். வளை,சிலம்பு–காரணச்சிறப்புப்பெயர்.

(அணி–அணியப்படுவன; ஆபரணங்கள். வளை–வளைவாகவுள்ளது; ஒருவகையணி. சிலம்பு–ஒலிப்பது; ஒருவகைக் காலணி.)

இனி, **இரட்டுறமொழிதல்** என்னும் உத்தியால், இச் சூத்திரத்திற்கு வேறொரு பொருளும் உரைக்கப்படும்; (இரண்டு உற மொழிதல் – இரண்டு பொருள் ஒருங்கே அமையும்படி சொல்லுதல்.) அது வருமாறு;–

பெயர்–பெயர்கள், இடுகுறி காரணம்பொது–இடுகுறி காரணம் என்னும் இரண்டு இலக்கணங்களுக்கும் பொதுவாகியும், சிறப்பின–இடுகுறிக்கே சிறப்பாகியும் காரணத்திற்கே சிறப்பாகியும் வருவனவாம்; எ–று.

எனவே, காரணவிடுகுறிப்பெயர், இடுகுறிப்பெயர், காரணப்பெயர் எனப்பெயர் மூவகைப்படு மென்றதாயிற்று. (வடநூலார் இடுகுறியை ரூடமென்றும், காரணத்தை யோகமென்றும், காரணவிடுகுறியை யோகரூட மென்றும் வழங்குவர்.) காரண இடுகுறிப்பெயராவது–காரணத்தை நோக்குமிடத்து அக் காரணத்தையுடைய பலவற்றிற்கும் பெயராக வழங்கக்கூடிய தாயினும், அங்ஙனம் வழங்காமல் அக் காரணத்தையுடைய ஒன்றற்கே உரியதாக இடப்பட்ட குறியாய் வழங்குஞ் சொல்.

**உ–ம்.:**

பரம், பொன்–இடுகுறிப்பெயர்

பரமன், பொன்னன்–காரணப்பெயர்.

முக்கணன், அந்தணர், முள்ளி–காரணவிடுகுறிப்பெயர்.

(பரம்–மேன்மை, பரமன்–மேலானவன். பொன்னன்–பொன்னை யுடையவன்.) முக்கணனென்பது – காரணங் கருதியபொழுது மூன்று கண்களையுடைய விநாயகமூர்த்தி முதலிய பலர்க்குஞ் செல்லுமாயினும் இடுகுறி யளவாய்ச் சிவபிரானுக்கே பெயராதலாலும், அந்தணரென்பது–அழகிய தண்மையை (குளிர்ந்த அருளை) யுடைய பலர்க்குஞ் செல்லுமாயினும் பிராமணர்க்கே பெயராதலாலும், முள்ளி யென்பது– முள்ளுடையன பலவற்றிற்குஞ் செல்லுமாயினும் ஒருவகைச் செடிக்கே பெயராதலாலும், காரணவிடுகுறிப் பெயராயின.

எழுத்துக்குப் பெயர் கூறத் தொடங்கியவர், பெயரினிலக் கணத்தை முதலில் தெரிவித்தார். இவ்வாறே மேல் எழுத்துக் களின் பெயர் வருதல் காண்க.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள்.:– இடுகுறி காரணப்பெயர்** – இடுகுறிப்பெயருங் காரணப் பெயருமாகிய இரண்டும், **பொதுச் சிறப்பின** – பல பொருளுக்குப் பொதுப் பெயராயும் ஒவ்வொரு பொருளுக்கே சிறப்புப் பெயராயும் வருவனவாம். எ–று.

இடுகுறிப்பெயராவது ஒரு காரணமும் பற்றாது வழங்கி வரும் பெயர். காரணப் பெயராவது யாதேனு மொரு காரணம்பற்றி வழங்கி வரும் பெயர்.

**உதாரணம் :**

மரம் என்பது, ஒரு காரணமும் பற்றாது வழங்கும் பெயராய் மா பலா முதலிய பல பொருள்களுக்கும் பொதுவாய் நிற்கையால், இடுகுறிப் பொதுப்பெயர். மா பலா என்பன, ஒரு காரணமும் பற்றாது வழங்கும் பெயராய், ஒவ்வொரு பொருளுக்கே சிறப்பாய் நிற்கையால், இடுகுறிச் சிறப்புப்பெயர்.

அணி என்பது, அணியப்படுதலாகிய காரணம் பற்றி வழங்கும் பெயராய், இடுவன தொடுவன கட்டுவன கவிப்பன முதலிய ஆபரணங்கள் பலவற்றிற்கும் பொதுவாய் நிற்கையால், காரணப் பொதுப்பெயர். முடி கழல் என்பன, முடியிற் கவிக்கப்படுவதும் கழலிற் கட்டப்படுவதுமாகிய காரணம் பற்றி வழங்கும் பெயராய், ஒவ்வொரு பொருளுக்கே சிறப்பாய் நிற்கையால், காரணச் சிறப்புப் பெயர்.

இனி 'இரட்டுறமொழிதல்' என்னும் உத்தியால் இச்சூத்திரத்திற்கு வேறும் ஒருபொருள் உரைக்கப்படும்; அது வருமாறு :

இடுகுறி காரணப் பெயர் – இடுகுறியென்றும் காரணமென்றும் சொல்லப்படும் இலக்கணங்களையுடைய பெயர்கள், பொது – இடுகுறி காரணமென்னும் இரண்டற்கும் பொதுவாயும், சிறப்பின – இடுகுறிக்கே சிறப்பாயுங் காரணத்திற்கே சிறப்பாயும் வருவனவாம். எ–று.

எனவே, இடுகுறிப்பெயர் காரணப்பெயர் காரணவிடுகுறிப்பெயர் எனப் பெயர் மூவகைப்படும் என்றாராயிற்று.

காரண விடுகுறிப் பெயராவது, காரணங் கருதியபொழுது அக் காரணங்களையுடைய பல பொருளகளுக்கும் செல்வதாயும், காரணங் கருதாதபொழுது இடுகுறியளவாய் நின்று ஒவ்வொரு பொருட்கே செல்வதாயும் உள்ள பெயராம்.

**உதாரணம் :**

பொன் என்பது இடுகுறிப்பெயர். பொன்னன் என்பது காரணப் பெயர். முக்கணன் அந்தணர் முள்ளி என்பன, காரண விடுகுறிப் பெயர். முக்கணன் என்பது, காரணங் கருதியபொழுது விநாயகக் கடவுள் முதலிய பலர்க்கும் செல்லுதலாலும், காரணங் கருதாதபொழுது இடுகுறியளவாய்ச் சிவபெருமானுக்குச் செல்லுதலாலும், காரண விடுகுறிப்பெயராயிற்று. இப்படியே, காரணம் கருதியபொழுது, 'அந்தணர்' என்பது அழகிய தண்மை உடையார் பலர்க்கும் செல்லினும் காரணம் கருதாதபொழுது ஒரு சாதியாரையே குறிப்பதும், 'முள்ளி' என்பது காரணம் கருதிய பொழுது முள்ளுடையன அனைத்துக்கும் செல்லினும் காரணம் கருதாதபொழுது ஒரு செடியையே குறிப்பதும் காண்க.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள். இடுகுறி காரணப்பெயர்**–இடுகுறிப் பெயரும் காரணப் பெயருமாகிய இரண்டும், **பொதுச் சிறப்பின** – பல பொருள்களுக்குப் பொதுப் பெயராகியும், ஒரு பொருளுக்கே சிறப்புப் பெயராகியும் வருவனவாம். எ–று.

**பொ–ரை.:**

இடுகுறிப் பெயரும், காரணப் பெயருமாகிய இரண்டும், (பலபொருளுக்குப்) பொதுப் பெயராகியும், (ஒரு பொருளுக்கே

சிறப்புப்பெயராகியும் வருவனவாகும்.

**உதாரணம்**

மரம்–இடுகுறிப் பொதுப்பெயர்.
பனை–இடுகுறிச் சிறப்புப்பெயர்.
அணி – காரணப் பொதுப் பெயர்.
(அணியப்படுவன; ஆபரணங்கள்.)
முடி–காரணச் சிறப்புப் பெயர்.
(முடிக்கப்படுவது; சிரசிற் சூடும் ஒருவகை அணி.)

இனி, இரட்டுற மொழிதல் என்னும் உத்தியால் இச் சூத்திரத்திற்கு வேறொரு பொருளும் உரைக்கப்படும். (இரண்டு உற மொழிதல்– ஒரு வாக்கியத்தில் இரண்டு பொருள்படச் சொல்லுதல்.) அஃதாவது, இடுகுறி காரணப்பெயர் – இடுகுறி என்றும் காரணமென்றும் சொல்லப்படும் இலக்கணங்களை யுடைய பெயர்கள், பொது–இடுகுறி காரணம் என்னும் இரண்டற்கும் பொதுவாகியும் சிறப்பின–இடுகுறிக்கே சிறப்பாகியும் காரணத்திற்கே சிறப்பாகியும் வருவனவாம் என்பது.

**உ–ம்.**

பரம்–இடுகுறிப் பெயர். (மேன்மை)
பரமன்–காரணப் பெயர். (மேலானவன்.)
• முக்கண்ணன் அந்தணன் – காரண இடுகுறிப் பெயர்.

முக்கண்ணன் என்பது காரணம் கருதியவழி மூன்று கண்களை யுடைய விநாயகமூர்த்தி முதலிய பலர்க்கும் செல்லுதலாலும், காரணம் கருதாதவழி. இடுகுறி அளவேயாய்ப் பரம சிவனுக்குச் செல்லுதலாலும் காரணவிடுகுறிப் பெய ராயிற்று. அந்தணன் என்பதும் அப்படியே, அழகிய தண்மையை யுடைய பலர்க்கும், பார்ப்பாருக்கும் செல்லுதலால் காரணவிடுகுறிப் பெயராயிற்று. மற்றைப் பெயர்களுக்கும் இப்படியே காண்க. எழுத்திற்குப் பெயர் கூறத் தொடங்கியவர் பெயரின் இலக்கணத்தை முதலில் தெரிவித்தார். இப்படியே மேல் எழுத்துக்களின் பெயர் வருதல் காண்க என்றதனால்; இடுகுறிப் பொதுப்பெயர், இடுகுறிச் சிறப்புப்பெயர், காரணப் பொதுப்பெயர், காரணச் சிறப்புப்பெயர் எனப் பெயர் நால் வகைப்படும் என்றதாயிற்று. இது தமிழ்நூல் வழக்கு.

இடுகுறிப் பெயர் – ஒரு காரணமும் கருதாமல் ஒரு பொருளுக்குக் கடவுளாலும், அறிவுடையோராலும் இட்ட குறியாகிய பெயர். காரணப் பெயர்–காரணத்தால் வரும் பெயர்.

இனி, இடுகுறிப் பெயர், காரணப் பெயர், காரணவிடுகுறிப் பெயர் என்பது வடநூல் வழக்கு. வடநூலார் இடுகுறியை ரூடமென்றும், காரணத்தை யோகமென்றும், காரணவிடுகுறியை யோகரூடம் என்றும் கூறுவர்.

## கா. நமச்சிவாய முதலியார்

**இடுகுறி** (ப் பெயர்) – இடுகுறிப் பெயரும், **காரணப் பெயர்** – காரணப் பெயரும் (ஆகிய இரண்டும்), **பொது** – பல பொருளுக்குப் பொதுப் பெயராகியும், **சிறப்பின**– ஒரு பொருளுக்கே சிறப்புப் பெயராகியும் வருவனவாம்.

இடுகுறிப் பெயராவது, ஒரு காரணமும் பற்றாது, இட்டகுறியாக வழங்கி வரும் பெயர்.

காரணப் பெயராவது, ஏதேனும் ஒரு காரணம் பற்றி வழங்கி வரும் பெயர்.

**உதாரணம்**

மரம் – இடுகுறிப் பொதுப்பெயர்.

மரம் என்பது ஒரு காரணமும் பற்றி வாராமையால் இடுகுறியாயிற்று; அது பலவகை மரங்களுக்கும் பொதுவான பெயராதலால் பொதுப்பெயராயிற்று. ஆகவே, மரம் என்பது இடுகுறிப் பொதுப் பெயராதல் காண்க.

பனை – இடுகுறிச் சிறப்புப் பெயர்.

பனை என்பது ஒரு காரணமும் பற்றி வாராமையால் இடுகுறியாயிற்று; அஃது ஒருவகை மரத்தையே குறித்தலால் சிறப்புப் பெயராயிற்று. ஆகவே, பனை யென்பது இடுகுறிச் சிறப்புப் பெயராதல் காண்க.

அணி – காரணப் பொதுப்பெயர்.

அணி என்பது அணியப்படுவது என்று பொருள் தருதலால் காரணமாயிற்று; அஃது அணிகளுக்கெல்லாம் பொதுவாதலால் பொதுப்பெயராயிற்று. ஆகவே, அணி யென்பது காரணப் பொதுப் பெயராதல் காண்க.

முடி – காரணச் சிறப்புப் பெயர்.

முடி என்பது முடிக்கப்படுவது என்னும் பொருள் தருதலால் காரணப்பெயராயிற்று; அது தலையில் முடிக்கப்படும் மகுடத்திற்கே சிறப்பாக வருதலால் சிறப்புப் பெயராயிற்று. ஆகவே, முடி யென்பது காரணச் சிறப்புப் பெயராதல் காண்க.

இனி, **இரட்டுறமொழிதல்** என்னும் உத்தியால், இச்சூத்திரத்திற்கு வேறொரு பொருளும் உரைக்கப்படும்.

அதாவது: **இடுகுறி காரணப்பெயர்** – இடுகுறியென்றும் காரணமென்றும் சொல்லப்படும் இலக்கணங்களையுடைய பெயர்கள், **பொது** – இடுகுறி காரணம் என்னும் இரண்டற்கும் பொதுவாகியும், **சிறப்பின** – இடுகுறிக்கே சிறப்பாகியும் காரணத்திற்கே சிறப்பாகியும் வருவனவாம்.

காரண விடுகுறிப்பெயராவ்து, காரணம் கருதியவழி அக் காரணங்களையுடைய பல பொருள்களுக்கும் செல்வதாயும்,

காரணங் கருதாவழி இடுகுறியளவேயாய் நின்று ஒரு பொருளுக்கே செல்வதாயும் வரும் பெயராம்.

**உதாரணம்**

பொன் – இடுகுறிப்பெயர்

பொன்னன் – காரணப்பெயர்

நாற்காலி, முள்ளி – காரண விடுகுறிப்பெயர்கள்

நாற்காலி யென்பது, காரணங் கருதியவழி நான்கு கால்களை யுடைய கட்டில் முதலிய பல பொருட்குஞ் செல்லுதலாலும், காரணங் கருதாவழி இடுகுறி யளவேயாய் நாற்காலி யென்னும் ஒரே பொருளுக்குச் செல்லுதலாலுங் காரணவிடுகுறிப் பெயராயிற்று. முள்ளி என்பது காரணங் கருதியவழி முள்ளை யுடைய பல பொருட்குஞ் செல்லுதலாலும், காரணங் கருதாதவழி இடுகுறி யளவேயாய் முள்ளிச்செடி என்னும் ஒரே பொருளுக்குச் செல்லுதலாலும் காரணவிடுகுறிப் பெயராயிற்று.

வடநூலார் இடுகுறியை ரூடி என்றும், காரணத்தை யோகம் என்றும், காரண விடுகுறியை யோகரூடி யென்றும் வழங்குவர்.

## மோசகு பொன்னையா

இடுகுறிப்பெயரும் காரணப்பெயருமாகிய இரண்டும் பொதுப் பெயராகவும் சிறப்புப் பெயராகவும் வருவனவாம்.

எனவே, எழுத்துக்கள் இடுகுறிப் பொதுப்பெயர், இடுகுறிச் சிறப்புப்பெயர், காரணப் பொதுப்பெயர், காரணச் சிறப்புப்பெயர் என நான்கு வகையில் பெயர்பெறும் என்பது போதரும்.

எ–டு.:–

1. ஆவி, உயிர், மெய், உடம்பு – இடுகுறிப் பொதுப்பெயர்.

2. அ, ஆ, க, ங முதலியன – இடுகுறிச் சிறப்புப்பெயர்.

3. குறில், நெடில், வல்லினம், மெல்லினம், இடையினம், சுட்டு, வினா – காரணப் பொதுப்பெயர்.

4. குற்றியலிகரம், குற்றியலுகரம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் முதலியன – காரணச் சிறப்புப்பெயர்.

எனவே, 'எழுத்து' என்னுஞ் சொல்லின் ஈற்றெழுத்து இடுகுறிப் பொதுப்பெயரால் உயிர்மெய், இடுகுறிச் சிறப்புப் பெயரால் 'து', காரணப் பொதுப்பெயரால் குற்றெழுத்து, காரணச் சிறப்புப்பெயரால் குற்றியலுகரம் எனக் கோடல் வேண்டும்.

முன் உரைகாரர் பலர் இந்நூற்பா பெயர்க்கெல்லாம் பொது இலக்கணம் உணர்த்திற்று என்று உரைத்து, மரம் முதலிய சொற்கள் இடுகுறிப் பொதுப்பெயர்; பனை முதலிய சொற்கள் இடுகுறிச் சிறப்புப்பெயர்; அணி முதலிய சொற்கள் காரணப்

பொதுப்பெயர்; சிலம்பு முதலிய சொற்கள் காரணச் சிறப்புப்பெயர் என எடுத்துக்காட்டியும்; இரட்டுற மொழிதலால் இடுகுறிக்கும் காரணத்திற்கும் பொதுவாகவும் சிறப்பாகவும் பெயர்கள் அமையும் என உரைத்து, முள்ளி முதலிய சொற்கள் காரண இடுகுறிப்பெயர்; பொன் முதலிய சொற்கள் இடுகுறிப்பெயர்; பொன்னன் முதலிய சொற்கள் காரணப்பெயர் என எடுத்துக்காட்டியும் சென்றனர்.

பெயரியலில் பெயரின் பொது இலக்கணம் கூறுங்கால் 'இடுகுறி காரண மரபோ டாக்கந் தொடர்ந்து' அமையும் தன்மையை ஆசிரியர் தெளிவுறுத்துவதனாலும், ஈண்டு எழுத்துக்களின் பெயர் கூறுவதே அதிகாரப்பட்டு நிற்றலாலும் இந் நூற்பாவால் எழுத்துக்களின் பெயர் அமையும் முறையே கூறப்பட்டது என்பதே பொருத்தமாதலை அறிக.

(7)

## எழுத்தின் பெயர்

62. **அம்முத லீரா றாவி கம்முதல்
மெய்ம்மூ வாறென விளம்பினர் புலவர்.**

**அம் முதல் ஈர் ஆறு ஆவி கம் முதல்
மெய்ம் மூஆறு என விளம்பினர் புலவர்.**

am muṭal īr āṛu āvi kam muṭal
meym mūāṛu eṉa viḻampiṉar pulavar.

### இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

**Vowels and Consonants**

The learned say that the ***twelve*** letters beginning with 'A' are Vowels, and the ***eighteen*** beginning with 'K' are Consonants.

### மயிலை நாதர்

எ—ன், ஒருசார் பொதுப்பெயராமாறுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்.: அகர முதலாக நின்ற பன்னிரண்டினையும் உயிரென்றும், ககர முதலா நின்ற பதினெட்டினையும் உடம்பென்றும் பெயரிட்டு

வழங்கினார்கள், [1]முற்காலத்துக் கற்றுவல்லோர், **எ–று.**

'விளம்பினர் புலவர்' என்ற விதப்பினானேயும், பாயிரத்திற் பெறுவதே யன்றி நூலுள்ளும் இஃது எதிர்நூலல்ல வென்பது பெற்றா மெனக் கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

கடவுளால் ஆவி மெய் என்றமைத்த பெயர்க்காரணம் உயிர்களான் முற்றும் உணர்தற்கு அருமையும், கடவுள் நூல் உணர்ந்தோர்வழிச் செல்லும் தமது பெருமையும் தோன்ற 'விளம்பினர் புலவர்' என்றார்.

ஆவியும் மெய்யும் போறலின், இவ்விருவகை எழுத்திற்கும், ஆவி மெய் என்பன உவமவாகுபெயராய்க் காரணப் பொதுப்பெயராயின. ஏனையவும் இவ்வாறே காண்க.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்,** முதலெழுத்துக்குப் பொதுவாகப் பெயர் கூறியது.

**இ–ள்.: அம் முதல் ஈராறு ஆவி** – அகர முதலாய் ஔகாரம் ஈறாக நின்ற பன்னிரண்டு எழுத்தையும் உயிரென்றும், **கம் முதல் மெய் மூவாறென** – ககர முதலாக னகர ஈறாக நின்ற பதினெட்டு எழுத்தையும் உடலென்றும், **விளம்பினர் புலவர்** – கூறினர் புலவர், **எ–று.**

## விசாகப் பெருமாளையர்

**இது** ஒரு சாரெழுத்தினது பெயராமாறு உணர்த்துகின்றது.

**இ–ள்.: அம்முதல்**–அகர முதலாகிய, **ஈராறு**–பன்னிரண்டனையும், **ஆவி (யென)** – ஆவி யென்றும், **கம் முதல்**–ககர முதலாகிய, **மூவாறு**–பதினெட்டனையும், **மெய்யென**–மெய்யென்றும், **விளம்பினர்**–சொன்னார், **புலவர்** – அறிவுடையோர், **எ–று.**

**உ–ம்.:**

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ – **உயிர்.**

க்,ங்,ச்,ஞ்,ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் – **மெய்.**

ஆவியு மெய்யும் போல விருக்கையால் இவ்விரு வகை யெழுத்திற்கும் ஆவி மெய் யென உவமவாகு பெயராய்க் காரணப் பொதுப் பெயராயின. பிறவெழுத்துகளு மிவ்வாறே வருதல் காண்க.

---

**பாட வேறுபாடு.:**

**1. மேற்காலத்து**

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

*இதுமுதல் இத்தனை உயிரென்றும், இதுமுதல் இத்தனை மெய்யென்றுங் கூறுஞ் சூத்திரம் யாது?*

அம்முத லீரா றாவி கம்முதன்

மெய்ம்மூ வாறென விளம்பினர் புலவர்.

(அ முதல் ஈராறு ஆவி, க முதல் மெய் மூவாறு என விளம்பினர் புலவர்)

**இ–ள்.: அம்முதல் ஈராறு ஆவி** (என) – நெடுங்கணக்கினுள் அகரமுதலிய பன்னிரண்டனையும் உயிரெழுத்தென்றும், **கம்முதல் மூவாறுமெய் என** – ககர முதலிய பதினெட்டனையும் மெய்யெழுத்தென்றும், **விளம்பினர் புலவர்** – சொன்னார் அறிவுடையோர்.

*உயிரெழுத்தெவை?*

“அம்முதலீராறு ஆவி” (ஆவி – உயிரெழுத்து)

*மெய்யெழுத்தெவை?*

“கம்முதன் மெய்ம்மூவாறு”

## முகவை இராமானுச கவிராயர்

**இது,** ஒருசார் எழுத்தினது பெயர் பிறபெயராமாறு உணர்த்துகின்றது.

**இ–ள்.: அம்முதலீராறு** – அகர முதலிய பன்னிரண்டையும், **ஆவி**– உயிரெழுத்தென்றும், **கம் முதன் மூவாறு**–ககர முதலிய பதினெட்டையும், **மெய்யென** – மெய்யெழுத்தென்றும், **விளம்பினர்** புலவர்– சொன்னார் புலவர், **எ–று.**

ஆவி, மெய் எனப் பிறபொருட்கு வரும் பெயர், இவ்விரு வகை யெழுத்திற்கும் உவமையாகு பெயராய் வந்தன. இவை காரணப் பொதுப்பெயர், பிறவு மிவ்வாறு வருதல் காண்க.

## கா . கோபாலாசாரி

## தி.கோ.ரங்காசாரி

**உரை :– அ முதம் ஈராறு** – அகர முதலிய பன்னிரண்டையும், **ஆவி** (என) – உயிரெழுத்தென்றும், **க முதல் மூஅறு** – ககர முதல் பதினெட்டையும், **மெய் என** – மெய்யெழுத்தென்றும், **விளம்பினர் புலவர்** – அறிவுடையோர் சொன்னார்.

குறிப்பு :–

**உயிர்:** அ–ஆ, இ–ஈ, உ–ஊ, எ–ஏ, ஐ, ஒ–ஓ, ஔ.

**மெய்:** க்–ங், ச்–ஞ், ட்–ண், த்–ந், ப்–ம், ய், ர், ல், வ், ழ், ள், ற்–ன்.

உயிர் போலத் தனித்தியங்கும் வன்மை யுடைமையின், அகர முதலியவற்றை 'உயிர்' எனவும், மெய் போல உயிரோடு கூடியல்லது தனித் தியங்கும் வன்மை இன்மையின் ககர முதலியவற்றை 'மெய்' எனவும் கூறினர். உயிர் ஆவி என்பனவும், மெய் உடல் உடம்பு உறுப்பு ஒற்று புள்ளி என்பனவும் ஒரு பொருளன.

உயிரை – **'அச்சு' 'ஸ்வரம்'** எனவும், மெய்யை – **'ஹல்'** எனவும் கூறுவர் வடநூலார்.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: அம்முதல் ஈராறு ஆவி (என)** – நெடுங்கணக்கினுள் அகர முதலிய பன்னிரண்டனையும் உயிரெழுத் தென்றும், **கம்முதல் மூவாறு மெய் என** – ககர முதலிய பதினெட்டனையும் மெய்யெழுத் தென்றும், **விளம்பினர் புலவர்**– சொன்னார் அறிவுடையோர். **எ–று.**

அகர முதலிய பன்னிரண்டும் உயிர் போலத் தனித்தியங்கும் வன்மை யுடைமையால் உயிரெனவும், ககர முதலிய பதினெட்டும் உயிரோடு கூடியல்லது இயங்கும் வன்மையில்லாத மெய் போல அகரத்தோடு கூடியல்லது இயங்கும் வன்மை யில்லாமையால் மெய்யெனவும் பெயர் பெற்றன. இவை உவம வாகுபெயராய்க் காரணப் பொதுப்பெயராயின.

பிறவும் இப்படியே வருதல் காண்க.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். அ முதல் ஈராறு ஆவி** (என) – (நெடுங்கணக்கினுள்) அகர முதலிய பன்னிரண்டையும் உயிரெழுத்தென்றும், **க முதல் மூவாறு மெய் என** – ககர முதலிய பதினெட்டனையும் மெய்யெழுத்தென்றும், **விளம்பினர் புலவர்** – சொன்னார் அறிவுடையோர் – **எ – று.**

அகர முதலிய பன்னிரண்டும் உயிர்போலத் தனித்தியங்கும் வன்மையு உடைமையால் உயிரெனவும், ககர முதலிய பதினெட்டும் உயிரொடு சார்ந்தன்றி இயங்கும் வன்மை யின்மையால் மெய்யெனவும் பெயர் பெற்றன.

ஆவி, மெய் எனப் பிறபொருட்கு வரும் பெயர் இவ்விரு வகையெழுத்திற்கும் உவமவாகு பெயராய் வந்தன. இவை காரணப் பொதுப்பெயர். உயிரெழுத்திற்கும் மெய்யெழுத்திற்கும் இடையிலே ஆய்தவெழுத்தை நெடுங்கணக்கில் வைத்தது ஆய்தம் சிலவிடத்து உயிர்போல அலகு பெற்றும், சிலவிடத்து மெய்போல அலகு பெறாமலும் செய்யுளில் வந்து வழங்குதல் பற்றியாம்.

**வரலாறு; –**

உயிர்போல,

**"அற்றா லனவறிந் துண்க வஃதுடம்பு,**

**பெற்றா னெடிதுய்க்கு மாறு"**

எனவும், மெய்போல

**"தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்,**

**தோன்றலிற் றோன்றாமை நன்று"**

எனவும் வருதல் காண்க.

## வை.மு. சடகோபராமாநுசாசாரி சே. கிருஷ்ணமாசாரி

**இ—ள்.: அ முதல் ஈராறு** – அகரம் முதலிய பன்னிரண்டும், **ஆவி**– உயிரெழுத்து; **க முதல் மூவாறு**—ககரம் முதலிய பதினெட்டும், **மெய்**—மெய்யெழுத்து, **என** – என்று, **விளம்பினர் புலவர்** – சொன்னார் அறிவுடையோர்; **எ—று.**

வடமொழியில் உயிர் 'அச்' எனவும், மெய் 'ஹல்' எனவும்படும்.

**உ—ம்.:**

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ –

**உயிர் – 12.**

க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன் –

**மெய் – 18.**

அகரம் முதலிய பன்னிரண்டும் உயிர்போலத் தனித்து இயங்குவன வாதலால் 'உயிர்' எனவும், ககரம் முதலிய பதினெட்டும் உடம்பு போல உயிரோடு கூடியல்லது இயங்காவாதலால் 'மெய்' எனவும் பெயர்பெற்றன. உயிர் ஆவி என்பனவும், மெய் உடல் உடம்பு உறுப்பு ஒற்று புள்ளி என்பனவும் ஒரு பொருளன.

## பவானந்தம் பிள்ளை

**இ —ள் அம்முதல் ஈராறு ஆவி** (என) – அகர முதலிய பன்னி ரண்டனையும் உயிரெழுத் தென்றும, **கம் முதல் மூவாறு மெய் என** – ககர முதலிய பதினெட்டனையும் மெய்யெழுத்தென்றும், **விளம்பினர் புலவர்** – சொன்னார் அறிவுடையோர். **எ—று.**

அகர முதலிய பன்னிரண்டும் உயிர் போலத் தனித்தியங்கும் வன்மை யுடைமையால் உயிரெனவும், ககர முதலிய பதினெட்டும் உயிரோடு கூடியல்லது இயங்கும் வன்மை யில்லாத மெய் போல அகர முதலிய உயிரெழுத்துக்களோடு கூடியல்லது இயங்கும்

வன்மை யில்லாமையால் மெய்யெனவும் பெயர் பெற்றன. இவை உவமவாகுபெயராய்க் காரணப் பொதுப்பெயராயின. பிறவும் இப்படியே வருதல் காண்க.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள். அ முதல் ஈராறு** – அகர முதலிய பன்னிரண்டையும், **ஆவி** (என) – உயிரெழுத்தென்றும், **க முதல் மூவாறு** – ககர முதலிய பதினெட்டையும், **மெய் என**–மெய்யெழுத் தென்றும், **விளம்பினர்**–சொன்னார், **புலவர்**–அறிவுடையோர். **எ–று.**

**பொ–ரை.:**

அகர முதலிய பன்னிரண்டையும் உயிரெழுத்தென்றும், ககர முதலிய பதினெட்டையும் மெய்யெழுத் தென்றும் சொன்னார் அறிவுடையோர்.

அ ஆ முதலிய பன்னிரண்டும், உயிர் போலத் தனித்து இயங்குவ ஆதலால் உயிர் எனவும், க் ங் முதலிய பதினெட்டும் உயிரோடு கூடியல்லது இயங்காது ஆதலால் மெய் எனவும் பெயர் பெற்றன. இவை உவமை யாகு பெயராய்க் காரணப் பொதுப்பெயர் ஆயின. பிற எழுத்துக்களும் இவ்வாறே வருதல் காண்க.உயிர், ஆவி என்பனவும்; மெய், உடல், உடம்பு, உறுப்பு, ஒற்று, புள்ளி என்பனவும் ஒரு பொருளன.

## கா. நமச்சிவாய முதலியார்

**அ முதல் ஈராறு** – அகரமுதலாகிய பன்னிரண்டனையும், **ஆவி** (என) – உயிரெழுத்தென்றும், **க முதல் மூவாறு** – ககர முதலாகிய பதினெட்டனையும், **மெய் என** – மெய்யெழுத்தென்றும், புலவர் **விளம்பினர்** – அறிவுடையோர் சொல்லினர்.

**உதாரணம்**

உயிர் – அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ

மெய் – க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன்.

உயிரும் உடலும் போல் இருக்கையால், இவ் விருவகை யெழுத்திற்கும் ஆவி மெய் யென்னும் குறியீடு உவமை யாகுபெயர் ஆயின. உயிர்மெய் முதலிய பிறவெழுத்துக்களும் இவ்வாறே பெயர் பெறுதல் காண்க.

## மோசசு பொன்னையா

முதலெழுத்துக்கள் முப்பதில் அகரமுதல் பன்னிரண்டையும் ஆவி எனவும்,

ககரம் முதல் பன்னிரண்டையும் மெய் எனவும் புலன்வல்லார் பெயரிட்டு வழங்கினர், எ—று.

எ—டு.

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ – உயிர்
க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன் – மெய்

தனித்து இயங்க வல்லனவாயும், அவ்வாறு இயங்கும் ஆற்றலில்லா மெய்களை இயக்க வல்லனவாயும் விளங்கும் எழுத்துக்களை ஆவி எனவும், அவற்றால் இயக்கப்படும் எழுத்துக்களை மெய் எனவும், உண்மை இயல்பு உணர்ந்து பழந்தமிழர் இட்டு வழங்கிய வழக்கே முறையான வழக்கு என்பார் விளம்பினர் புலவர் என்றார். ஆவி, மெய் என்பன இக்காலை காரணப்பெயர் எனப்படா; இடுகுறிப்பெயரே. ஒரு காரணம் பற்றி அமையும் பெயரும் இடுகுறிப்பெயரின் திரிபே யாகலானும், காலப்போக்கில் அதுவும் பொருட்காரணம் மறக்கப்பட்டு இடுகுறியாகவே வழங்கும் என்பதனாலும், ஆவி, மெய் என்பவற்றை இடுகுறிப் பெயர்கள் எனக் கோடலே ஏற்புடைத்தாகும். உயிர் ஆவி என்றும்; மெய் உடல், உடம்பு, ஒற்று, புள்ளி எனவும் வழங்கும்.

(8)

## குறில்

63. **அவற்றுள்,**
**அஇ உஎ ஒக்குறி லைந்தே.**

**அவற்றுள்,**
**அ இ உ எ ஒக் குறில் ஐந்தே.**

avaṛṛuḷ
a i u e ok kuṛil aintē.

**இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )**

**Short vowels**

Of these, the short-vowels are ***five***, viz.

## ஒப்புமைப் பகுதி

அவற்றுள்
அஇஉ
எஒ வென்னும் அப்பால் ஐந்தும்
ஓரள பிசைக்குங் குற்றெழுத் தென்ப.

(தொல். எழு. : 3)

அஇஉ எஒ இவை குறிய

(அவி.: )

ஈராறி லைந்து குறில்

(வீர. : 2)

ஆன்றவுயிர் ஈராறுங் ஐங்குறில்

(நேமி. : 2)

அகர முதலவீ ராறுமுயி ரவற்றுள்
அஇ உஎ ஒக்குறில்......

(இ.வி. : 6: 1–2)

அம்முதல் ஈராறு உயிர் கம்முதல் மூவாறு உடல்
குறில் அஇஉஎ ஒவ் ஐந்தே .....

(தொன்.: 8)

அஇ உஎ ஒக்குறி லாகும்

(மு.வீ.: 8)

## மயிலை நாதர்

இதுவுமது.

இ–ள்.: ஆவி யென்றும் மெய் யென்றும் மேற் கூறப்பட்டனவற்றுள், அ இ உ எ ஒ [1]என்னுமைந்தும் குற்றெழுத்தென்னும் குறியவாம், எ–று.

அ இ உ எ ஒ என இவற்றை உச்சரித்து அன்னவாதல் கண்டுகொள்க. *'அவற்றுள்'* [2]என்பதனைப் பெயரதிகார முற்றுமளவும் வருவித்துக்கொள்க.

## சங்கரநமச்சிவாயர்

எ–னின் இதுவும் அது.

---

பாட வேறுபாடு :–

1. என்று சொல்லப்படும் ஐந்தெழுத்தும்
2. என்பதனை இவ்வதிகார முற்றும்

**இ-ள்.:** ஆவி மெய் என்றவற்றுள் இவ்வைந்தும் குற்றெழுத்தாம் **எ-று.**

## கூழங்கைத் தம்பிரான்

**சூ-ம்,** இதுவுமது.

**இ-ள்.: அவற்றுள்**-மேற்கூறிய முதலெழுத்துள், **அ இ உ எ ஒக் குறிலைந்தே** - இவ்வைந்தெழுத்தும் குற்றெழுத்தாம், **எ-று.**

## விசாகப் பெருமாளையர்

**இதுவுமது.**

**இ-ள்.: அவற்றுள்** - ஆவி மெய்யென்றவற்றுள், **அ இ உ எ ஒ** - அ இ உ எ-ஒ என்கிற, **ஐந்து** - ஐந்தும், **குறில்** - குற்றெழுத்தாம், எ-று.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

அவற்றுட், குற்றெழுத்திவை யெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

அவற்றுள்,

அ இ உ எ ஒக்குறி லைந்தே.

(அவற்றுள், அ இ உ எ ஒக்குறில் ஐந்து எ)

**இ-ள்.: அவற்றுள்** - ஆவியு மெய்யு மென்றவற்றுள், **அ இ உ எ ஒ ஐந்து குறில்** - அ இ உ எ ஒ என்னும் ஐந்துங் குற்றெழுத்தாம்.

*குற்றெழுத்தெவை?*

"அ இ உ எ ஒக்குறில்"

*குற்றெழுத்தெத்தனை?*

"குறில் ஐந்தே"

## முகவை இராமானுச கவிராயர்

**இது,** ஒருசாரெழுத்திற்குப் பெயர் கூறுகின்றது.

**இ-ள்.: அவற்றுள்**-மேல் ஆவி பன்னிரண்டென்றவற்றுள், **அ இ உ எ ஒ ஐந்தும்**- இவ்வைந்தும், **குறில்** - குற்றெழுத்தெனப்பெயர் பெறும், **எ-று.**

## கா . கோபாலாசாரி - தி.கோ.ரங்காசாரி

**உரை :- அவற்றுள்** - 'ஆவி மெய்' என்றவற்றுள், **அ இ உ எ ஒ ஐந்து** - அ முதலிய இவ்வைந்தும், **குறில்** - குற்றெழுத்தாம்.

**குறிப்பு :-**

**குறில்** - குறுகிய அளவுள்ளது. இதனை **'ஹ்ருஸ்வம்'** என்பர் வடநூலார்.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.:** **அவற்றுள்**–ஆவியு மெய்யு மென்றவற்றுள், **அ இ உ எ ஒ ஐந்து குறில்** – அ இ உ எ ஒ என்னும் ஐந்துங் குற்றெழுத்தாம், **எ+று.**

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். அவற்றுள்** – ஆவி மெய் யென்றவற்றுள், **அ இ உ எ ஒ ஐந்து குறில்** – அ இ உ எ ஒ என்னும் ஐந்துங் குற்றெழுத்துக்களாம். **எ–று .**

## வை.மு. சடகோப ராமானுசாசாரி
## சே. கிருஷ்ணமாசாரி

**இ–ள்.: அவற்றுள்**–(உயிர் மெய் என்ற) அவற்றள், **அ இ உ எ ஒ ஐந்து**– இவ்வைந்தும், **குறில்** – குற்றெழுத்தாம்; **எ–று,**

குறில்–குறுகிய அளவுள்ளது; (ஹ்ரஸ்வம்.)

## பவானந்தம் பிள்ளை

**இ–ள். அவற்றுள்** – ஆவியு மெய்யு மென்றவற்றுள், **அ இ உ எ ஒ ஐந்து குறில்** – அ இ உ எ ஒ என்னும் ஐந்தும் குற்றெழுத்தாம். **எ–று.**

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள். அவற்றுள்** – ஆவியும் மெய்யும் என்ற அவற்றுள், **அ இ உ எ ஒ ஐந்து** – அ இ உ எ ஒ என்கிற ஐந்தும், **குறில்** – குற்றெழுத்தாம். **எ–று.**

**பொ–ரை.:**

அகர முதலிய ஐந்தும் குற்றெழுத்தாம்.

குறில் – குறுகிய அளவுள்ளது. (குறுமை + இல் = குறில்.)

## கா. நமச்சிவாய முதலியார்

**அவற்றுள்** – (ஆவியும் மெய்யுமென்றே) அவற்றுள், **அஇ உஎஒ** – அஇஉஎஒ என்னும், **ஐந்து** – ஐந்தும், **குறில்** – குற்றெழுத்தாம்.

## மோசசு பொன்னையா

முதலெழுத்துக்களுள், அ இ உ எ ஒ என்னும் ஐந்தும் குற்றெழுத்துக்கள்; **எ–று.**

தொல்காப்பியர் குற்றெழுத்து, நெட்டெழுத்து, எனவும் குறியது, நெடியது, எனவும் உயிர், உயிர்மெய்க் குறில், நெடில்களுக்குப் பொதுவாகக் குறியிட்டாண்டார். இவ்வாசிரியர் குற்றுயிர் நெட்டுயிர் என்பவற்றையே முறையே உயிரும் உயிர்மெய்யுமாகிய குறில் நெடில்களைக் குறிக்கும் பொதுப் பெயராகக் குறியிட்டு வழங்குகின்றார் என்பது அறியத் தக்கது.

# நெடில்

64. ஆஈ ஊஏ ஐஓ ஔநெடில்.

ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ நெடில்.

ā ī ū ē ai ō au netil.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

**Long vowels**

The Long-vowels are seven, viz., a, i, e, u, ai,o,au.

## ஒப்புமைப் பகுதி

ஆஈ ஊஏஐ
ஓஔ என்னும் அப்பால் ஏழும்
ஈரள பிசைக்கும் நெட்டெழுத் தென்ப.

(தொல். எழு.: 4)

................................ மற்றை
யேழ் நெட் டெழுந்தா நேரப் படுமே

(அவிநயம்)

................ நெடில் ஏழ்

(வீர.: 2)

................... ஏழ் நெடிலாம்

(நேமி.: 2)

..........................நெடில்
ஆஈ ஊஏ ஐஓ ஔ ஏழே

(தொன்.: 8)

ஆஈ ஊஏ ஐஓ ஔநெடில்

(மு.வீ.: 10)

## மயிலை நாதர்

இதுவுமது.

இ–ள்.: இச்சொல்லப்பட்ட ஏழும் நெட்டெழுத்தென்னும் பெயரவாம், எ–று.

ஆஈ ஊஏ ஐஓ ஔ என உச்சரித்து அன்னவாதல் கண்டு கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

எ–னின், இதுவும் அது.

இ–ள்.: இவ்வேழும் நெட்டெழுத்தாம், எ–று.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்,** இதுவுமது.

**இ–ள்.: ஆஈ ஊஏ ஐஓ ஒள நெடில்**–இவ்வேழ் எழுத்தும் நெட்டெழுத்து என்று பெயராம்.

## விசாகப்பெருமாளையர்

**இதுவுமது.**

**இ–ள்.: ஆஈ ஊஏ ஐஓ ஒள –** ஆஈ ஊஏ ஐஓ ஒள என்கிறவேழும், **நெடில்–** நெட்டெழுத்தாம், **எ–று.**

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

நெட்டெழுத்தெவை?

**ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஒள நெடில்.**

(ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஒள நெடில்)

**இ–ள்.: ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஒள –** ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஒள என்னும் ஏழும், **நெடில் –** நெட்டெழுத்தாம், **எ–று.**

*நெட்டெழுத்து இத்தனையென வரையறுக்கப்படாததெது பற்றி?*

ஐயும் ஒளவும் சிலவிடத்தன்றி யாண்டு நெடிலாகாமையின்.

## முகவை இராமாநுச கவிராயர்

**இதுவுமது.**

**இ–ள்.:** இவ்வேழும் நெட்டெழுத்தெனப்பெயர் பெறும், **எ–று.**

## கா . கோபாலாசாரி

## தி.கோ.ரங்காசாரி

**உரை :– ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஒள–**ஆ முதலிய இவ்வேழும், **நெடில் –** நெட்டெழுத்தாம்.

குறிப்பு :–

**நெடில் –** நீண்ட அளவுள்ளது. இதனை **'தீர்க்கம்'** என்பர் வடநூலார்.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: ஆஈ ஊஏ ஐஓ ஒள நெடில் –**ஆஈ ஊஏ ஐஓ ஒள என்னும் ஏழும் நெட்டெழுத்தாம், **எ–று.**

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள்.:** ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும் ஏழும் நெட்டெழுத்தாம்.

ஏழென்று தொகை கொடாது நெடிலென்றார். அவற்றுள் குறில் ஐந்தேயென்று தொகை கொடுத்தமையால், நெடில் ஏழென்று **வரகோட்டி நியாயத்தாற்** பெறப்படுமாதலின், அந்நியாயம் இன்னதென்பது முன் கூறுப்பட்டது.

## வை.மு. சடகோபராமானுசாசாரி

## சே. கிருஷ்ணமாசாரி

**இ–ள்.: ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ** – இவ்வேழும், **நெடில்**– நெட்டெழுத்தாம்; **எ–று,**

நெடில் –நீண்ட அளவுள்ளது; **(தீர்க்கம்.)**

'குறில் ஐந்து' என்றாற் போல 'நெடில் ஏழு' எனத் தொகை கொடாமல் 'நெடில்' என்றவளவொடு நிறுத்தியது, ஐயும் ஔவும் சிலவிடத்தன்றி எங்கும் நெடிலாகாமையைக் குறிப்பித்தற்கு என்பர்.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள்.** ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும் ஏழும் நெட்டெழுத்தாம். **எ–று.**

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள். ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ** – ஆ ஓ ஊ ஏ ஐ ஓ ஔ என்கிற ஏழும், **நெடில்** – நெட்டெழுத்தாம். **எ–று.**

**பொ–ரை.:**

ஆகார முதலிய ஏழும் நெட்டெழுத்தாம்.
நெடில் - நீண்ட அளவுள்ளது. (நெடுமை+இல்=நெடில்.)

## கா. நமச்சிவாய முதலியார்

**ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ** – ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும் ஏழும், **நெடில்**– நெட்டெழுத்தாம்.

## மோசகு பொன்னையா

ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும் ஏழும் நெட்டெழுத்துக்கள், **எ–று.**

**(10)**

## சுட்டெழுத்துக்கள்

**65. அஇ உம்முதற் றனிவரிற் சுட்டே.**

**அ இ உம் முதல் தனி வரின் சுட்டே.**

a i um muṭal ṭaṉi variṉ suttē.

### இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

**Demonstrative letters**

When 'a,' 'i,' and 'u,' are employed (by themselves significantly) in the beginning (of a word) they are called Demonstrative letters.

### ஒப்புமைப் பகுதி

அஇஉ அம் மூன்றுஞ் சுட்டு.

(தொல். எழு.: 31)

........................ அஇ உச் சுட்டாம்

(வீர.:3)

................................. அஇ
உ இவை மொழிமுதல் வரிற்சுட்டு.........

(இ.வி.: 6:3–4)

அஇ உச்சுட் டாமென மொழிப

(மு.வீ.:26)

### மயிலை நாதர்

எ–ன், அவ்வுயிர்க்கே இன்னும் ஒருவகையாற் பெயரிடுதல் நுதலிற்று.

இ–ள்.: அ இ உ என்னும் இம் மூன்றும் மொழிமுதற்கண்ணே தனித்து நிற்பிற் சுட்டென்னும் குறியவாம், எ–று.

'வரலாறு.: அக்கொற்றன், இக்கொற்றன், உக்கொற்றனெனக் கண்டு கொள்க.

---

பாட வேறுபாடு :–

1. உதாரணம்.

## சங்கர நமச்சிவாயர்

**எ–னின்,** இதுவும் அது.

**இ–ள்.:** இம் மூன்றெழுத்தும், மொழிக்குப் புறத்தும் அகத்தும் முதற்கண் தனித்துச் சுட்டுப்பொருள் உணர்த்த வரின் சுட்டெழுத்தாம், **எ–று.**

முதல் எனப் பொதுப்படக் கூறினமையின் புறத்தும் அகத்தும் என்பது பெற்றாம்.

**உ–ம்.:**

அக்கொற்றன் இக்கொற்றன் உக்கொற்றன் எனவும், அவன் இவன் உவன் எனவும் வரும்.

அவன் என்பதன்கண் அகரம், அறம் என்பதன்கண் அகரம்போலப் பின்னெழுத்துக்களோடு தொடர்ந்து நின்று ஒரு பொருளை உணர்த்தாது, மலையன் என்பதன்கண் பகுதி போல வேறுநின்று சுட்டுப்பொருள் உணர்த்தலின், அகத்து வரும் இதனையும் தனிவரின் என்றார். இவ்வுரை வினாவிற்கும் கொள்க.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்,** அந்த உயிர்க்கு இன்னுமொரு வகையாற் பெயர் கூறியது.

**இ–ள்.: அ இ உ** –அ, இ,உ என்னும் மூன்றெழுத்தும், **முதல்**–மொழிக்கு முதற்கண்ணும், **தனி** –மொழிக்குத் தனித்தும், **வரில்**–சுட்டுப் பொருள் உணர்த்தி வரில், **சுட்டே**–சுட்டெழுத்து என்னும் பெயரவாம், **எ–று.**

**உதாரணம்.:**

அவன், இவன், உவன், அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம் என்பது மொழிக்குறுப்பாய் முதற்கண் வந்த சுட்டாம்.

அக்கொற்றன், இக் கொற்றன், உக் கொற்றன், மொழிக்குத் தனித்து வந்த சுட்டாம் என்க.

அம்பலவன், அறம் என்பன மொழிக்குறுப்பாய் அகரம் நின்றும் சுட்டுப் பொருள் உணர்த்தாமையின் சுட்டெழுத்து அன்றென்க. சுட்டுப் பொருள் உணர்த்தி வரினே சுட்டெழுத்தாம்.

## விசாகப் பெருமாளையர்

இதுவுமது.

**இ–ள்.: அ இ உ** – அ இ உ என்கிற மூன்றும் சுட்டு, **முதல்**– சொல்லுக்கு முதலில், **தனி**–தனித்து, **வரின்** – சுட்டுப்பொருளைக் காட்ட வந்தால், **சுட்டு** – சுட்டெழுத்தாம், **எ– று.**

முதலெனப் பொதுப்படச் சொன்னதனால் புறத்தும் அகத்தும் வருமெனக்கொள்க.

**உ–ம்.:**

அக்கொற்றன், இக்கொற்றன், உக்கொற்றன்,–புறத்து வந்தன,

அவன், இவன், உவன் – அகத்து வந்தன.

அகரம் தூரத்திலிருக்கிற பொருளையும், இகரம் சமீபத்திலிருக்கிற பொருளையுஞ் சுட்டுதற்கு வரும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

*சுட்டெழுத்துகள் எவை?*

அ இ உம்முதற் றனிவரிற் சுட்டே.

' (அ இ உம்முதல் தனிவரில் சுட்டே)

**இ–ள்.: அ இ உ** – அ இ உ என்னும் மூன்றும், **முதல் தனிவரின் சுட்டே** – மொழிக்கு முதலிலே தனித்துச் சுட்டுப் பொருளைக் காட்டவரிற் சுட்டெழுத்தாம், **எ–று.**

*சுட்டெழுத்து எவ்வெவ்விடத்துப் பொருளையுணர்த்தும்?*

அகரம் தூரத்தேயுள்ள பொருளையும், இகரம் சமீபத்துள்ள பொருளையும், உகரம் நடுவிலுள்ள பொருளையுஞ் சுட்டும்.

அகர விகர வுகரம் முறையே

சேய்மை அண்மை இடைமைச் சுட்டே. (இஃதுரைச் சூத்திரம்)

*முதலென்று பொதுப்படச் சொன்னதினாற் கொள்ளக்கிடப்பது யாது?*

சுட்டெழுத்து மொழி முதலிலே புறத்தும் அகத்தும் வருமென்பது.

அகச்சுட்டுச் சொல்லின் வேறாகாது நின்று சுட்டுதல்.

**உ–ம்.**

அவன், அவள், இவன், உது.

புறச்சுட்டுச் சொல்லின் புறத்தே நின்று சுட்டுதல்.

**உ–ம்.**

அக்கொற்றன்

## முகவை இராமானுச கவிராயர்

**இதுவுமது.**

**இ–ள்.: அ இ உ** – இம்மூன்றும், **முதல்**–ஒருமொழிக்குமுன்னே, **தனிவரின்**–தனித்து ஒருபொருளைச் சுட்டி வருமாயின், **சுட்டு**–சுட்டெழுத்தெனவும் பெயர்பெறும், **எ–று.**

முதலெனப் பொதுப்படச் சொன்னதினாலே, மொழியின் அகம்புறமென்னு மிரண்டிடமு முதலெனக் கொள்க.

**உதாரணம்.:** அவன்–இவன்–உவன் என அகத்தும், அக்கொற்றன் – இக்கொற்றன் – உக்கொற்றன் – எனப் புறத்தும் வந்தன. மற்றப் பால்களிலும் இவ்வாறே யொட்டிக்கொள்க.

அகரந் தூரப் பொருளையும், இகரஞ் சமீபப்பொருளையும், உகரம் – எதிர்முகமின்றிப் பின்னிற்கும் பொருளையுஞ் சுட்டுமெனக் காண்க. உகரம் அவ்வாறு சுட்டி நிற்பதை ''ஊழையு முப்பக்கங் காண்ப' 'ரென்றதற்குப் பின்பக்கமாய் முதுகு காட்டக் காண்பரெனப் பொருள் கூறுதலாற் காண்க.

## கா . கோபாலாசாரி -தி.கோ.ரங்காசாரி

**உரை :– அ இ உ** – அ முதலிய இம்மூன்றும், **முதல்** – (மொழிக்கு) முதலில், **தனிவரின்** – தனித்து (சுட்டுப்பொருளை யுணர்த்தி) வந்தால், **சுட்டு** – சுட்டெழுத்தாம்.

**குறிப்பு :–**

சுட்டு – காலம் இடம் குணம் முதலியவற்றைப் பற்றிப் பொருளைக் குறித்துக் காட்டுவது. 'முதல்' எனப் பொதுப்படச் சொன்னதால் அகத்தும் புறத்தும் வருமெனக் கொள்க. அகத்துறுப்பாகிய சுட்டு சொல்லுக்கு உள்ளேயிருந்து பொருளைக் குறிப்பது. புறத்துறுப்பாகிய சுட்டு சொல்லுக்கு வெளியேயிருந்து பொருளைக் குறிப்பது.

**உ–ம்:–**

**அவன், இவன், உவன்** – அகத்துறுப்பாய் வந்தன.

**அம்மனிதன், இவ்வீடு, உவ்விடம்** – புறத்துறுப்பாய் வந்தன.

அகரம் தூரத்திலுள்ள பொருளையும், இகரம் சமீபத்திலுள்ள பொருளையும், உகரம் நடுவிலுள்ள பொருளையும் பின்னிற்கும் பொருளையும் மேல் நிற்கும் பொருளையும் சுட்டும்.

**உ–ம்:–**

"அவனிவனுவன்", "மறைந்துவராய் வந்து நின்றார்", "ஊழையு முப்பக்கங் காண்பர்", "உம்பர்" என்பவற்றில் காண்க.

அகர இகர உகரங்கள் அடை, இடை, உடை என்பவற்றில் போலல்லாமல் அவன், இவன், உவன் என்பவற்றில் சுட்டுப்பொருள் குறித்தமை காண்க. இதனை வினாவிற்குங் கொள்க.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: அ இ உ** – அ இ உ என்னு மூன்றும், **முதல் தனிவரின் சுட்டு**–

மொழிக்கு முதலிலே தனித்துச் சுட்டுப்பொருளைக் காட்ட வரிற் சுட்டெழுத்தாம், **எ–று.**

முதலெனப் பொதுப்படச் சொன்னதினாலே, புறத்தும் அகத்தும் வருமெனக்கொள்க.

**உ–ம்.:**

அக்கொற்றன், இக்கொற்றன், உக்கொற்றன் – புறத்து வந்தன.

அவன், இவன், உவன் – அகத்து வந்தன.

அகரந் தூரத்தினுள்ள பொருளையும், இகரஞ் சமீபத்தினுள்ள பொருளையும், உகரம் நடுவினுள்ள பொருளையுஞ் சுட்டுதற்கு வரும்.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். அஇஉ – அஇஉ** என்னும் மூன்றும், **முதல் தனி வரின் சுட்டு** – மொழிக்கு முதலிலே தனித்துச் சுட்டுப்பொருளைக் காட்ட வரிற் சுட்டெழுத்தாம். **எ–று.**

முதலெனப் பொதுப்படச் சொன்னதினாலே, புறத்தும் அகத்தும் வருமெனக் கொள்க.

**உ–ம்**

அக்கொற்றான், இக்கொற்றன், உக்கொற்றன் – புறத்து வந்தன.

அவன், இவன், உவன் – அகத்து வந்தான.

ஒரு மொழிக்குள் உறுப்பாய் நிற்குஞ் சுட்டெழுத்து அகச்சுட்டெனப்படும். அப்படி நில்லாமற் புறத்தே பிறிதொரு மொழியாய் நிற்குஞ் சுட்டுப் புறச்சுட்டெனப்படும். மேற்காட்டிய உதாரணத்தில் அவன் என்னுஞ் சொல்லுக்குள் அகரச்சுட்டு உறுப்பாய் அமைந்தது காண்க. அக்கொற்றன் என்பதில் கொற்றன் என்னுஞ் சொற்குள் உறுப்பாயடங்காது. அகரச்சுட்டுப் பிறிதொருமொழியும் நிற்றல் காண்க. இப்படியே அகச்சுட்டுப் புறச்சுட்டுக் களனைத்தையும் நோக்கி வேறுபாடுணர்க.

நுட்பமாய் நோக்கின் அகரந் தூரத்திலுள்ள பொருளையும், இகரஞ் சமீபத்திலுள்ள பொருளையும், உகரம் நடுவிலுள்ள பொருளையுஞ் சுட்டுதற்கு வருமென்றறிக. சுட்டுப் பொருளுணர்த்தாதபோது சுட்டெழுத்தெனப்படா.

**உ–ம்.** அவல், அடுப்பு எனவும். இனம், இஞ்சி எனவும் உரல், உணவு எனவும் வரும் இச்சொற்களின் முதலில் வந்த அகர இகர உகரங்கள்சுட்டுப் பொருளுணர்த்தாமை யறிக.

## வை.மு. சடகோபராமானுசாசாரி
## சே. கிருஷ்ணமாசாரி

**இ—ள்.: அ இ உ—** இம் மூன்றும், **முதல்** —(மொழிக்கு) முதலில், **தனிவரின்—** தனித்து (சுட்டுப்பொருளைக் காட்டி) வந்தால், **சுட்டு—**சுட்டெழுத்தாம்; **எ—று.**

சுட்டு—குறித்துக் காட்டுதற்பொருளை உணர்த்துவது.

'முதல்' எனப்பொதுப்படச் சொன்னதனால், மொழிக்கு அகத்தும் புறத்தும் வருமெனக் கொள்க. அகத்து உறுப்பு—பதத்தினுள்ளாகவே சுட்டெழுத்து நிற்பது. புறத்து உறுப்பு—பதத்திற்கு வெளியாகச் சுட்டெழுத்து நிற்பது.

**உ—ம்.:**

அவன்
இவன் **அகச்சுட்டு**
உவன்

அக்கொற்றன்
இம்மனிதன் புறச்சுட்டு
உவ்வீடு

அகரம்—தூரத்திலுள்ள பொருளையும், இகரம்—சமீபத்திலுள்ள பொருளையும், உகரம்—நடுவிலுள்ள பொருளையும், பின் நிற்கும் பொருளையும், மேல் நிற்கும் பொருளையும் சுட்டுதற்கு வரும் 'அவ னிவ னுவன்,' 'உப்பக்கம்', 'உம்பர்' என்பன காண்க. (உப்பக்கம் – பின்பக்கம்; உம்பர் – மேலிடம்.)

அவன் இவன் உவன் என்பவற்றிலுள்ள அகர இகர உகரங்கள்,அடை இடை உடை என்பனவற்றின் முதலெழுத்துக்கள் போலப் பின்னெழுத்துக்களோடு தொடர்ந்து நின்று ஒரு பொருளை உணர்த்தாமல், பொன்னன் முதலிய சொற்களின் பகுதி போல வேறுநின்று சுட்டுப்பொருளை யுணர்த்துதலால், அகத்துறப்பும் 'தனிவரின்' என்றதில் அடங்கிற்று. இதனை வினாவிற்குங் கொள்க.

## பவானந்தம் பிள்ளை

**இ—ள். அ இ உ –** அ இ உ என்னும் மூன்றும், முதல் தனிவரின் சுட்டு – மொழிக்கு முதலிலே தனித்துச் சுட்டுப்பொருளைக் காட்டவரின் சுடடெழுத்தாம். எ—று.

முதலெனப் பொதுப்படச் சொன்னதினாலே, புறத்தும் அகத்தும் வருமெனக் கொள்க.

**உ—ம்.**

அக்கொற்றன்
இக்கொற்றன்

உக்கொற்றன் – புறச்சுட்டு

அவன்

இவன்

உவன் – அகச்சுட்டு

அகரம் தூரத்திலுள்ள பொருளையும், இகரம் சமீபத்திலுள்ள பொருளையும், உகரம் நடுவிலுள்ள அல்லது பின்னுள்ள பொருளையும் சுட்டுதற்கு வரும்.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள். அ இ உ** – என்ற மூன்றும், **முதல்** – சொல்லுக்கு முதலில், **தனிவரின்** – தனித்து (ச் சுட்டுப்பொருளைக் காட்ட) வந்தால், **சுட்டு** – சுட்டெழுத்தாம். **எ–று.**

**பொ–ரை.:** அ இ உ என்ற மூன்றும் சொல்லுக்கு முதலில் புறத்தும் அகத்தும் சுட்டுப் பொருளைக் காட்ட வந்தால் சுட்டெழுத்தாம்.

சுட்டு–குறித்துக் காட்டுதற் பொருளை உணர்த்துவது. முதல் எனப் பொதுப்படச் சொன்னதனால் புறத்தும் அகத்தும் வரும் எனக் கொள்க.

சொல்லுக்குப் புறத்தே முதலெனவும் சொல்லினிடத்தே முதலெனவும் ஆம்.

**எ–ம்.:** அக் கொற்றன், இக் கொற்றன், உக் கொற்றன் – புறத்து வந்தன. அவன், இவன், உவன்–அகத்து வந்தன.

அகரம் தூரத்திலுள்ள பொருளையும், இகரம் சமீபத்தில் இருக்கிற பொருளையும், உகரம் எதிர் முகமின்றிப் பின்னிற்கும் பொருளையும் சுட்டுதற்கு வரும்.

அவன் என்பதில் இருக்கிற அகரம், மலையன் என்பதில் உள்ள மலையாகிய பகுதிபோல, வேறு நின்று சுட்டுப்பொருளைத் தருகின்ற தாதலால், 'தனிவரின்' என்றார். இது வினாவிற்கும் பொருந்தும்.

## கா. நமச்சிவாய முதலியார்

**அஇஉ** – அஇஉ என்னும் மூன்றும், **முதல்** – சொல்லுக்கு முதலில், **தனிவரின்** – தனித்து (சுட்டுப்பொருளைக் காட்ட) வந்தால், **சுட்டு** – சுட்டெழுத்தாம்.

முதலெனப் பொதுப்படச் சொன்னதனால் சுட்டு சொல்லின் புறத்தும் அகத்தும் வருமெனக் கொள்க.

அகம் – உள்; புறம் – வெளி.

**உதாரணம்**

அம் மனிதன் இம் மனிதன் உம் மனிதன்

இங்கு அ, இ, உ என்னும் சுட்டுக்கள் புறத்து வந்தன.

அவன் இவன் உவன்

இங்கு அ, இ, உ என்னும் சுட்டுக்கள் அகத்து வந்தன. அகரம் தூரத்திலுள்ள பொருளையும், இகரம் அருகிலுள்ள பொருளையும், உகரம் இடையிலுள்ள பொருளையுஞ் சுட்டுதற்கு வரும். இம்மூன்று சுட்டும் அந்த, இந்த, உந்த என மரூஉவாயும் வழங்கும்.

## மோசகூ பொன்னையா

அ இ உ என்னும் மூன்றும் முதற்கண் தனித்துப் பொருள் தந்து நிற்பின் சுட்டெனப்படும், **எ—று.**

**எ—டு.**

அக்கொற்றன், இக்கொற்றன், உக்கொற்றன்.

அகரம் சேய்மையையும், இகரம் அண்மையையும், உகரம் நடு, என், மேல் என்னும் இடங்களையும் சுட்டி நிற்கும்.

அக்கொற்றன், இக்கொற்றன், உக்கொற்றன் என்னும் இவற்றிற் போல், அவன், இவன், உவன் என்ற சொற்களில் சுட்டும், சுட்டப்படும் பொருளும் வேறு நில்லாமல் ஒரு பெயர்ப்பட்டு நிற்கின்றன. தொல்காப்பியர் அ இ உ என்பவற்றைச் சுட்டு என்றும், அவையடியாகப் பிறந்த பெயர்களைச் சுட்டுப் பெயர்கள் என்றும் தெளிவாகக் கூறியுள்ளார். அவ்வேறுபாட்டைப் புலப்படுத்தவே இவ்வாசிரியரும் தனிவரின் எனக் கூறித் தனித்து நின்று சுட்டுப்பொருள் உணர்த்துவதே சுட்டு என வலியுறுத்தியுள்ளமை காண்க.

குறில், நெடில்களின் இலக்கணங் கூறிய முறைப்படியே சுட்டிலக் கணங் கூறிச் சுட்டும் எழுத்தெனக் கொள்ளுமாறு வைத்தாரேனும்,

> தன்னை உணர்த்தின் எழுத்தாம் பிறபொருளைச்
> சுட்டுதற் கண்ணேயாஞ் சொல்.

என்பதனால், இம்மூன்றும் இடைச் சொற்கள் எனவே கொள்க. ஈங்கு,அவன் இவன் உவன் என்ற சொற்களில் அ முதலியன பகுதிகளாய் நின்றன. அக்கொற்றன் முதலியவற்றில் அ முதலியன பெயரின் முன்னர் இடைச்சொல்லாய் நின்றன. வினாவுக்கும் இஃது ஒக்கும். சுட்டின் வடிவு பற்றி 163ஆம் நூற்பாவின் உரையில் விளக்கப்படும்.

# வினாவெழுத்துக்கள்

66. எயா முதலும் ஆஓ வீற்றும்
ஏயிரு வழியும் வினாவா கும்மே.

எ யா முதலும் ஆ ஓ ஈற்றும்
ஏ இரு வழியும் வினா ஆகும்மே.

e yā mutalum ā o īṟṟum
ē iru vaḻiyum viṉā ākummē.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

### Interrogative letters

When 'e,' and 'yà' are used (by themselves significantly) in the beginning (of a word), 'a,' and 'o,' at the end, and 'e,' in both the position, they are called Interrogative letters.

## ஒப்புமைப் பகுதி

ஆ ஏ ஓ அம் மூன்றும் வினா

(தொல். எழு.: 32)

.....................ஆஏஓ வினாவந்தமாம்

(வீர.:3)

...................................... எய்யா
முதலு மாஓ விறுதியு மேயிரு
வழியும் வினாவென வழங்கு மென்ப

(இ.வி.: 6: 4–6)

## மயிலை நாதர்

[1]இதுவுமது.

இ—ள்.: எகரமும் யாவும் மொழிமுதற்கண்ணே நின்று [2]வினாவாம்; ஆகாரமும் ஓகாரமும் ஈற்றின்கண்ணே நின்று [3]வினாவாம்; ஏகாரம் இவ்விரண்டிடத்தும் நின்று [4]வினாவாம், எ—று.

---

பாட வேறுபாடு :–

1. எ— ன் இதுவுமது 2. முதல் வினாவெனும் பெயரவாம்
3. ஈற்று வினாவென்னும் பெயரவாம் 4இருவழி வினாவென்னும் பெயர்த்தாம்

உயிர் வினாவுடனே யா வினா வுரைத்தமை மயங்கக் கூறலென்னுங் குற்றமாம் பிறவெனின், இது தொகைவகை விரிபடச் செய்கின்ற நூலாதலானும் முதல்வினா வென்னும் பொருளொப்பு மையானும் குற்றமாகா தெனக் கொள்க.

**வ—று.:**

எவன், எவள், எவர், எது, எவை; யாவன், யாவள், யாவர், யாது, யாவை என எ யா முதற்கண் வினாவாய் வந்தன. "உண்கா, உண்கோ? கொற்றா! (சாத்தா, தேவா, பூதா) என ஆகாரமும் ஓகாரமும் ஈற்றின்கண் வினாவாய் வந்தன. ஏவன், ஏவள், ஏவர், ஏது, ஏவை; உண்கே? கொற்றா என ஏகாரம் முதலினும் ஈற்றினும் நின்று வினாவாயிற்று.

## சங்கர நமச்சிவாயர்

**எ—னின்,** இதுவும் அது.

**இ—ள்.:** புறத்தும் அகத்தும் மொழிமுதற்கண் எகரமும் யாவும், ஈற்றின்கண் ஆகாரமும் ஓகாரமும், இவ்விரண்டிடத்தினும் ஏகாரமும் தனித்து வினாப்பொருள் உணர்த்தவரின் வினாவெழுத்தாம், **எ—று.**

மேல் தனிவரின் என்றதனை ஈண்டும் கூட்டுக. இவை புறத்தும் அகத்தும் வருதல் ஏற்றபெற்றி கொள்க. **ஒன்றின முடித்தல் தன்னினமுடித்தல்** என்னும்உத்தியான் யா வினாவையும் உடன் கூறினார்.

**உ—ம்.:**

எக்கொற்றன் எனவும், எவன் எனவும், யாவன் எனவும் முதற்கண் வந்தன. கொற்றனா, கொற்றனோ என ஈற்றின்கண் வந்தன. ஏவன், கொற்றனே என ஈரிடத்தும் வந்தது. ஏனைப் பெயர் வினைகளோடும் ஏற்றபெற்றி ஒட்டிக் கொள்க.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ—ம்,** இதுவுமது.

**இ—ள்.: எ யா** – எகரமும் யாவும், **முதலும்** – மொழிக்கு முதற்கண்ணே நின்று வினாவெழுத்தாம், **ஆ ஓ** – ஆகாரமும் ஓகாரமும், **ஈற்றும்** – மொழிக்கு ஈற்றின்கண்ணே நின்று வினாவெழுத்தாம், **ஏ யிரு வழியும்** – ஏகாரம் மொழி முதற்கண்ணும் மொழிக்கு ஈற்றின்கண்ணும் நின்று, **வினாவாகும்மே** – வினா எழுத்தாகும் **எ – று.**

**உ—ம்.:**

எவன், எப்படை எனவும், யாவன், யா உளது எனவும், சாத்தனா, சாத்தனோ எனவும்; ஏது, ஏவன் எனவும் ; சாத்தனே எனவும் வரும்.

## விசாகப்பெருமாளையர்

**இதுவுமது.**

**இ—ள்.: எ யா**—எகரமும் யாவும், **முதலும்** – சொல்லுக்கு முதலிலும், **ஆ ஓ**

– ஆகாரமும், ஓகாரமும், **ஈற்றும்** – சொல்லுக்கு ஈற்றிலும், **ஏ** – ஏகாரம், **இருவழியும்** – அவ்விரண்டிடத்திலும், (தனிவரின்) தனித்து வினாப் பொருளைக் காட்ட வந்தால், **வினாவாகும்** – வினாவெழுத்தாகும், **எ—று.**

முன்சூத்திரத்தில் தனிவரி னென்றது இதற்கும் கூட்டப்பட்டது.

**ஒன்றினமுடித்த றன்னின முடித்தலெ**ன்னு முத்தியால் உயிர் மெய்யாகிற யா வினாவு முடன் கூறப்பட்டது, இவை புறத்தும் அகத்தும் வருதல் ஏற்றபடி கொள்க.

**உ—ம்.:**

எக்கொற்றன், எவன், யாங்ஙனம், யாவன் – எகரமும் யாவும், முதலிலே புறத்தும் அகத்தும் வந்தன.

கொற்றா கொற்றனோ – ஆகாரமும் ஓகாரமும் ஈற்றிலே புறத்து வந்தன.

ஏவன், கொற்றனே – ஏகாரம் முதலிலகத்தும் ஈற்றிற் புறத்தும் வந்தது.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

*வினாவெழுத்தெவை?*

எ யா முதலும் ஆ ஓ வீற்றும்
ஏ யிரு வழியும் வினாவா கும்மே
(எ யா முதலும் ஆ ஓ ஈற்றும்
ஏ இரு வழியும் வினாவாகும் ஏ)

**இ—ள்.: எ யா முதலும்** – எ யா என்னுமிரண்டும் மொழிக்கு முதலிலும், **ஆ ஓ ஈற்றும்** – ஆ. ஓ என்னுமிரண்டும் மொழிக் கடையிலும், ஏ **இருவழியும் வினா ஆகும்** – ஏகாரம் இவ்விரண்டிடத்திலும் தனித்து வினாபொருளைக் காட்டவரின் வினாவெழுத்தாம், **எ—று.**

*மொழி முதலில் வரும் வினாவெழுத்தெவை?*

"எ யா முதல் (வினாவாகும்மே)"

**உ—ம்.:**

எக்கொற்றன்? யாங்ஙனம்? எவன்? யாவன்?

*மொழியீற்றில் வரும் வினாவெழுத்தவை?*

"ஆ ஓ வீற்றும் (வினாவாகும்மே)

**உ—ம்.:** கொற்றானா? கொற்றனோ?

*மொழிமுதலீறென்னு மிரண்டிடத்தும் வரும் வினாவெழுத்தெது?*

"ஏயிருவழியும் வினாவாகும்மே"

**உ—ம்.:**

ஏவன்? கொற்றனே?

*யாவாகிய வுயிர்மெய்யை உயிரோடு சேர்த்துக் கூறியதென்னை?*

"ஒன்றின முடித்த றன்னின் முடித்தல்" என்னுமுத்தியாற் சேர்த்துக் கூறப்பட்டது.

## முகவை இராமனுச கவிராயர்

**இதுவுமது.**

**இ—ள்.: எ யா முதலும்** — எகரமும், **யாவும்** — மொழி முதலிலும், **ஆ ஓ ஈற்றும்** — ஆகாரமும், **ஓகாரமும்** — மொழி யிறுதியிலும், **ஏ இருவழியும்** —ஏகாரம் இவ்விரண்டிடத்திலும், **வினாவாகும்** — (வினாப்பொருளை யுணர்த்தித் தனிவருமாயின் ) வினாவெழுத் தெனப் பெயர்பெறும், **எ—று.**

**ஒன்றினமுடித்தலென்னும்** உத்தியால், யா வினாவுமுடன் கூறப்பட்டது. மேலைச்சூத்திரத்தில் தனிவரினென்றதை இச்சூத்திரத்திற்குங் கூட்டிக் கொள்க.

**உ—ம்.:**

எவன், யாவன்—என அகத்தும், எக்கொற்றன், யாங்ஙனம் — எனப் புறத்தும்,எகரமும் யாவும் மொழிமுதல் வினாவாய் வந்தன.

கொற்றனா கொற்றனோ—என ஆகார ஓகாரங்கள் புறத்து மொழியிறுதி வினாவாய் வந்தன.

ஏவன், கொற்றனே — என ஏகாரம் அகத்தும் புறத்தும் மொழி முதலிலும் இறுதியிலும் வந்தது, மற்றப் பெயர் வினைகளோடு மிவ்வாறே யொட்டிக் கொள்க.

## கா . கோபாலாசாரி
## தி.கோ.ரங்காசாரி

**உரை :— எ யா முதலும்** — எகரமும் யாவும் சொல்லின் முதலிலும், **ஆ ஓ ஈற்றும் —** ஆகார ஓகாரங்கள் சொல்லின் இறுதியிலும், **ஏ இருவழியும்** — ஏகாரம் முதலிலும் இறுதியிலும், (தனிவரின்) **வினாவாகும் –** (தனித்து வினாப்பொருளைக் காட்ட வந்தால்) வினாவெழுத்தாகும்.

**குறிப்பு :—**

வினா — கேள்வி. முன் சூத்திரத்தில் தனிவரின் என்றது இதற்குங் கூட்டப்பட்டது.

**(உதாரணம்)**

எவன்? யாவன்? — **எ, யா** முதலில் அகத்து வந்தன)

எம்மனிதன்? யாங்ஙனம்? — **(எ, யா** முதலில் புறத்துவந்தன)

மனிதனா? மனிதனோ? –(**ஆ, ஓ,** ஈற்றில் புறத்துவந்தன)

ஏவன்? மனிதனே?– (**ஏ** முதலில் அகத்தும், ஈற்றில் புறத்தும் வந்தது)

உயிர்மெய்யாகிய **யா** வினாவையும் உடன் கூறியது **ஒன்றினமுடித்தல் தன்னின முடித்தல்** என்னும் உத்தி.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: எ யா முதலும்** – எகரமும் யாவும் மொழிக்கு முதலிலும், **ஆ ஓ ஈற்றும்** – ஆகாரமும் ஓகாரமும் மொழிக்கிறுதியிலும், **ஏ இருவழியும்** – ஏகாரம் இவ்விரண்டிடத்திலும், **(தனிவரின்) வினா ஆகும்** – தனித்து வினாப்பொருளைக் காட்டவரின் வினாவெழுத்தாம், **எ–று.**

மேலைச் சூத்திரத்திலே 'தனிவரின்' என்றது இதற்குங் கூட்டப்பட்டது. **ஒன்றின முடித்த றன்னின முடித்தலென்**னு முத்தியால் உயிர்மெய்யாகிய யா வினாவும் உடன் கூறப்பட்டது. இவை புறத்தும் அகத்தும் வருதல் ஏற்றபடி கொள்க.

**உ–ம்.:**

எக்கொற்றன், யாங்ஙனம் என எகரமும் யாவும் முதலிலே புறத்து வந்தன. எவன், யாவன் என எகரமும் யாவும் முதலிலே அகத்து வந்தன.

கொற்றனா கொற்றனோ என ஆகாரமும் ஓகாரமும் ஈற்றிலே புறத்து வந்தன.

ஏவன், கொற்றனே என ஏகாரம் முதலில் அகத்தும் ஈற்றிற் புறத்தும் வந்தது.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். எயா முதலும்** – எகரமும் யா என்பதும் மொழிக்கு முதலிலும், **ஆஓ ஈற்றும்** – ஆகாரமும் ஓகாரமும் மொழிக் கிறுதியிலும், **இருவழியும்** – ஏகாரம் இவ்விரண்டிடத்திலும், (தனிவரின்) தனித்து வினாப் பொருளைக் காட்டவரின், **வினா வாகும்** – வினாவெழுத்தாம். **எ–று.**

மேலைச் சூத்திரத்திலே "தனிவரின்" என்றது இதற்குள் கூட்டப்பட்டது.

ஒன்றின முடித்த றன்னின முடித்த லென்னும் உத்தியால் உயிர் மெய்யாகிய யா வினாவும் உடன் கூறப்பட்டது. இவை அகவினா, புறவினா வென இருவகைப்படும். சொல்லினகத்து உறுப்பாய் வரும் வினாவெழுத்து அகவினா வெனப்படும்; சொல்லின் புறத்தே வரும் வினாவெழுத்துப் புறவினா வெனப்படும்.

**உ–ம்.**

எக்கொற்றன், யாங்ஙனம் என எகரமும், யாவும் முதலிலே புறவினாவாய் வந்தன. எவன், யாவன் என எகரமும் யாவும் முதலிலே அகவினாவாய் வந்தன.

கொற்றனா, கொற்றனோ என ஆகாரமும், ஓகாரமும் ஈற்றிலே புறவினாவாய் வந்தன.

ஏவன், கொற்றனே என ஏகாரம் முதலில் அகத்தும் ஈற்றிற் புறத்தும் வினாவாய் வந்தது.

ஈற்றிலே அகவினா வரமாட்டாது. ஈற்றில் வந்த வினாவெல்லாம் புறவினாவாயிருக்கும்; முதலிலே அகவினாவுமுண்டு புறவினாவுமுண்டு.

ஏகாரம் முதலில் வரும்போது அகவினாவாமன்றிப் புறவினாவாக மாட்டாது.

இவ்வைந்தனுள் யா என்பது அஃறிணைப்பன்மை வினா. அது ஐம் பால் விகுதியுந் தனித்தனி பெற்று ஐம்பாலுக்கும் வருவதாம்.

**உ—ம்.**

யாவன், யாவள், யாவர், யாது, யாவை என வரும்.

***"யாவென் வினாவே யஃறிணைப் பன்மை***

***விகுதி பெறுங்காலம் பாலினும் வினாவாம்"*** என்பது அகத்தியம். எனவே விகுதி பெறாமலும் விகுதி பெற்றும் அஃறிணைப் பன்மைக்கு யா வினா வருமென்றவாறாயிற்று.

## வை.மு. சடகோபராமானுசாசாரி

## சே. கிருஷ்ணமாசாரி

**இ—ள்.: எ யா முதலும்** — எகரமும் யாவும் (மொழிக்கு) முதலிலும், **ஆ ஓ ஈற்றும்** — ஆகாரமும் ஓகாரமும் (மொழிக்கு) இறுதியிலும், **ஏ இருவழியும்** —ஏகாரம் இரண்டு இடத்திலும் (மொழிக்கு முதலிலும் இறுதியிலும்), **(தனிவரின்) வினா ஆகும்** — தனித்து (வினாப்பொருளைக் காட்டி) வந்தால் வினாவெழுத்தாம்; எ—று.

வினா — கேள்விப்பொருளை உணர்த்துவது. முன் சூத்திரத்தில் 'தனிவரின்' என்றது, இங்குங் கூட்டப் பட்டது.

**ஒன்றினமுடித்தல் தன்னினமுடித்தல்** என்னும் உத்தியால், உயிர்மெய்யாகிய யா வினாவும் உடன் கூறப்பட்டது.

ஒன்று இனம் முடித்தல் தன் இனம் முடித்தல் — ஒத்த இலக்கணமுடையவற்றை ஒருங்கு கூட்டிக் கூறுதல்.

**உ—ம்.:**

எவன், யாவன் — எ,யா— முதலிலே அகத்து வந்தன. (அகவினா)

எக்கடவுள், யாங்ஙனம் — எ,யா—முதலிலே புறத்து வந்தன. (புறவினா)

பொன்னனா , பொன்னனோ — ஆ, ஓ — ஈற்றிலே புறத்து வந்தன. (ஈற்றுவினா, புறத்து மாத்திரமே வரும்)

ஏவன், பொன்னனே — ஏ—முதலில் அகத்தும், ஈற்றிற் புறத்தும் வந்தது.

## பவானந்தம் பிள்ளை

**இ—ள். எ யா முதலும்** — எகரமும் யாவும் மொழிக்கு முதலிலும், **ஆ ஓ ஈற்றும்** — ஆகாரமும் ஓகாரமும் மொழிக்கிறுதியிலும், **ஏ இருவழியும்** — ஏகாரம்

இவ் விரண்டிடத்திலும், (தனிவரின்) **வினா ஆகும்** – தனித்து (வினாப்பொருளைக் காட்ட) வரின் வினாவெழுத்தாம், **எ–று.**

மேலைச் சூத்திரத்திலே 'தனி வரின்' என்றது இதற்குங் கூட்டப்பட்டது. 'ஒன்றின முடித்தல் தன்னின முடித்தல்' என்னும் உத்தியால் உயிர்மெய்யாகிய யா வினாவும் உடன் கூறப்பட்டது. இவை புறத்தும் அகத்தும் வருதல் ஏற்றபடி கொள்க.

**உ–ம்.**

**எ–யா**

எக்கொற்றன், யாங்ஙனம் – புறவினாவாக முதலில் வந்தன

எவன் ,யாவன் – அகவினாவாக முதலில் வந்தன.

**ஆ–ஓ**

கொற்றனா,கொற்றனோ – புறவினாவாக ஈற்றில் வந்தன.

**ஏ**

ஏவன் – அகவினாவாக முதலில் வந்தது.

கொற்றனே – புறவினாவாக ஈற்றில் வந்தது.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள். எ யா முதலும்** – எகரமும் யாவும் சொல்லுக்கு முதலிலும், **ஆ ஓ ஈற்றும்** – ஆகாரமும் ஓகாரமும் சொல்லுக்கு ஈற்றிலும், **ஏ இருவழியும்** – ஏகாரம் அவ் விரண்டிடத்திலும், (தனிவரின்) **வினாவாகும்** – தனித்து வினாப்பொருளைக் காட்ட வந்தால் வினாவெழுத்தாகும். **எ–று.**

**பொ–ரை.:**

எ கரம் யா ஆகிய இரண்டும் சொல்லுக்கு முதலிலும், ஆகாரம் ஓகாரமாகிய இரண்டும் சொல்லுக்கு இறுதியிலும், ஏகாரம் அவ் விரண்டிடத்திலும் (தனித்து) வினாப்பொருளைக் காட்ட வந்தால் வினாவெழுத்தாம்.

வினா – கேள்விப்பொருளை உணர்த்துவது, முன் சூத்திரத்தில் தனிவரின் என்றது இதற்குங் கூட்டப்பட்டது.

ஒன்றின முடித்தல் தன்னின முடித்தல் என்னும் உத்தியால் உயிர்மெய்யாகிய யாவினாவும் உடன் கூறப்பட்டது. (ஒன்றின முடித்தல் தன்னின முடித்தல்–ஒன்றைச் சொல்லுமிடத்தில் அதற்கு இனமாகிய மற்றொன்றையும் விரியாதிருக்கவேண்டி அதனுடன் முடித்தல்; எனவே ஒத்த இலக்கண முடையவற்றை ஒருங்கு கூட்டிக் கூறுதலாம்.)

இவை புறத்தும் அகத்தும் வருதல் ஏற்றபடி கொள்க.

**உ–ம்.**

எக் கொற்றன், யாங் ஙனம், எவன், யாவன், கொற்றனா, கொற்றானோ, ஏவன், கொற்றனே

எ, யா முதலிலே, புறத்து வந்தன, எ, யா முதலிலே, அகத்து வந்தன. ஆ, ஒ ஈற்றிலே புறத்துவந்தன. ஏ முதலி அகத்தும் ஈற்றில் புறத்தும் வந்தது.புறவினா, அகவினா, ஈற்றுவினா. இது புறத்து மாத்திரமே வரும்.

## கா. நமச்சிவாய முதலியார்

**எ யா முதலும்** – எ யா என்னும் இரண்டெழுத்துக்களும் சொல்லுதற்கு முதலிலும், **ஆ ஓ ஈற்றும் –** ஆ ஒ இவ்விரண்டும் சொல்லுக்கு ஈற்றிலும், ஏ **இருவழியும்** – ஏகாரம் ஒன்றும் அவ்விரண்டிங்களிலும், (தனிவரின்) **வினாவாகும்** – (தனித்து வினாப் பொருளைக் காட்ட வந்தால்) வினாவெழுத்தாகும்.

முன் சூத்திரத்தில், **"தனிவரின்"** என்றது இதற்கும் கூட்டப்பட்டது. **ஒன்றினமுடித்தல் தன்னின முடித்தல்** என்னும் உத்தியால் உயிர்மெய்யாகிய யா வினாவும் உடன் கூறப்பட்டது.

**உதாரணம்**

எம் மனிதன், யாங் ஙனம்

இங்கு எ, யா, மொழிக்கு முதலில் புறத்துறுப்பாக வந்தன.

எவன், யாவன்

இங்கு எ, யா மொழிக்கு முதலில் அகத்துறுப்பாக வந்தன.

பசுவா, பசுவோ

இங்கு ஆ, ஒ, மொழிக்குப் புறத்துறுப்பாக வந்தன.

ஏவன்,அவனே

இங்கு ஏ மொழிக்கு முதலில் அகத்துறுப்பாகவும், ஈற்றில் புறத்துறுப்பாகவும் வந்தது.

இவற்றுள் எகர வினா எந்த என மரூஉவாயும் வழங்கும்.

## மோசகு பொன்னையா

எ, யா என்பன சொல்லின் முதலிலும், ஆ, ஓ, என்பன சொல்லின் இறுதியிலும், ஏ அவ்விரு இடங்களிலும் நின்று வினாப் பொருள் உணர்த்தும் இடைச்சொற்களாம், **எ–று.**

**எ–டு.**: எவன், எக்கொற்றன், யாவன், யாங்ஙனம், ஏவன், ஏது – எ, யா, ஏ சொல்லின் முதலில் நின்று வினாப்பொருள் உணர்த்தின.

அவனா, பொன்னனா, அவனோ, பொன்னனோ, அவனே, பொன்னனே – ஆ, ஓ, ஏ சொல்லின் ஈற்றில் நின்று வினாப் பொருள் உணர்த்தின.

எருது, யானை, ஏடு என்பவற்றின் முதலெழுத்துக்கள் வினாப்பொருளை உணர்த்திச் சொல்லின் முதலில் நில்லாமல், பின் எழுத்துக்களோடு தொடர்ந்து நின்று பொருளுணர்த்து கின்றன. அவை, வினாப் பொருளுணர்த்தும் ஓரெழுத்தொரு மொழிகளான இடைச் சொற்களன்மையின் வினா அல்லவாயின.

தொல்காப்பியர்,

*ஆ ஏ ஓ அம்மூன்றும் வினா*

என்று கூறி, ஆ ஏ ஓ என்பனவே வினாவை உணர்த்துவன என்றார். அவை, இருதிணை ஐம்பால் மூவிடத்தும் சொல்லின் ஈற்றில் நின்று வினாப்பொருளைத் தரவல்லன. அவற்றுள்ளும், ஆகார வினாவினைத்

*தன்றொழி லுரைக்கும் வினாவின் கிளவி*

என்றதனால், அது தன்மை இடத்தில் மட்டும் அக்காலத்தில் வழங்கிற்று என்பது புலனாகின்றது. தம் காலத்தில் சொன்னிலைப்பட்டு நின்று யாவன், யாவள், யாவர் எனவும்; யாது, யா, யாவை எனவும் வழங்கிய உயர்திணை, அஃறிணை வினாப்பெயர்களையும் யார் என்றும், எவன் என்றும் வழங்கிய உயர்திணை அஃறிணை வினா வினைக்குறிப்புக்களையும், எவ்வயின், எதோளி என வழங்கிய வினா இடைச்சொற்களையும் அவர் குறிப்பிட்டுச் சொல்லிலக்கணஞ் செய்துள்ளார்.

அவன் முதலிய சுட்டுப்பெயர்களின் பகுதிகளாக அகரம் முதலியன நின்று, விகுதி ஏற்று ஒரு சொல்லாய் நிற்பதே போல், யகர ஆகாரமும், ஏகரமும் விகுதி ஏற்று வினாப்பெயர்களாகவும், வினா வினைக்குறிப்புக் களாகவும், வினா இடைச்சொற்களாகவும் ஒட்டி ஒருசொல் நீர்மைப்பட்டு நிற்றலின், அவற்றைப் புணர்ச்சிக்கட் படும் ஈற்று வினாவாகி இருதிணை ஐம்பால் மூவிடத்தும் வினாப்பொருள் உணர்த்தி வரும் ஆ ஏ ஓ என்ற மூன்றனுடனும் ஒருங்கு வைத்து அவர் கூறாராயினார்.

எனினும், எப்பெயர், எப்பொருள், எவ்வயின், எத்திணை, என உடம்பொடு புணர்த்தல் என்னும் உத்தியால் எகர வினாவையும்; யாவென்வினா, யாவினா முதலிய, யாவினா மொழி என யா வினாவையும் அமைத்து அவர் தழுவிக்கொண்டார் எனலாம். வீரசோழிய ஆசிரியர்,

*ஆ ஏ ஓ வினாவந் தமாம்*

எனவும்,

*ஏயாஎச் சொன்முன் வினா*

எனவும் பிரித்தோதினார். இவ்வாசிரியர் அவரைத் தழுவி இவ்வாறு நூற்பா அமைத்தார் எனலாம்.

தொல்காப்பியர் காலத்திற்குப் பின் யாது, யாவை என்பன எது, எவை எனவும்; யாவன், யாவள், யாவர் என்பன எவன், எவள், எவர் எனவும்; எவன் என்னும் அஃறிணை வினா வினைக்குறிப்பு என், என்னை எனவும் திரிந்து வழங்கின. எகரம் வினாப்பொருள் தருவதன்றெனவும், எவன், எவள், ஏவன், ஏவள், முதலியன

யாவன், யாவள் முதலியவற்றின் திரிபுகளே எனவும் அரசஞ்சண்முகனார் கருதுகின்றார். பிற்காலத்தார் கொண்ட யா வினா தொல்காப்பியர் காலத்து ஏவினாவே யன்றி வேறன்று என்பது வேங்கடராகலு ரெட்டியாரின் கோள்.

எனினும், 'எவ் என்பதே வினாவின் அடிச்சொல்லாக இருந்து, ஏ எனவும் யா எனவும் நீண்டு வழங்கி யிருக்க வேண்டும்; எவன், எவள் முதலான வினாப்பெயர்களும் இவ்வாறே அமைந்திருக்க வேண்டும்' என டாக்டர் மு.வ. ஆய்ந்து கூறுகின்றார். 163–ஆம் நூற்பா உரையால் அது விளங்கும்.

எக்கொற்றன் என்பது மொழியின் புறத்தே வினா பெற்ற சொல் எனவும், அவனா பொன்னனா என்பன மொழியின் அகத்தே இறுதிக்கண் வினா பெற்ற சொற்கள் எனவும் கோடலே நேரிது. வினா இடைச்சொல்லாதலின், சொல்லின் அகத்தும் புறத்தும் வருதல் இயல்பே. அதனால், வினாவையே அகவினா புறவினா எனப் பகுத்துரைப்பதன் பொருந்தாமையை அறிக. சுட்டுக்கும் அவ்வாறே.

ஒன்றின முடித்தல் தன்னின முடித்தலால், உயிர்மெய் யாகிய யாவினாவும் உடன் கூறப்பட்டது என்க.

(12)

## வல்லினம்

67. **வல்லினங் கசட தபறவென வாறே.**

**வல்லினம் கசட தபற என ஆறே.**

vallin̠am kasaṭa tapaṟa en̠a āṟē.

### இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

**Strong or Hard Consonants (Surds)**

The Hard Consonants are six, viz. k,c,t,t,p,r.

### ஒப்புமைப் பகுதி

**வல்லெழுத் தென்ப கசட தபற**

(தொல். எழு. : 19)

**............................... பெயர்த்திடையா**
**முறிந்தன யம்முத லாறும் ஙஞண நமனவென்று**
**செறிந்தன மெல்லினம் செப்பாத வல்லினம் தேமொழியே.**

(வீ. : 1)

.............................. பெயர்த்திடையா
முறிந்தன யம்முத லாறும் நஞண நமனவென்று
செறிந்தன மெல்லினம் செப்பாத வல்லினம் தேமொழியே.

(வீ. : 1)

வலி கசட தபற......

(தொன். : 9)

அவற்றுள்
வல்லெழுத் தென்மனார் கசட தபற

( மு. வீ. : 14)

## மயிலை நாதர்

**எ–ன்,** மேல் மெய்யென்று குறிப்பிடப்பட்டவற்றுள், ஒரு சாரனவற்றிற்கு இன்னும் ஒருவகையாற் பெயரிடுதல் நுதலிற்று.

**இ–ள்.:–** கசடதபற வென்னும் ஆறெழுத்தும் வல்லினமென்னும் குறியவாம், எ–று.

## சங்கர நமச்சிவாயர்

**எ–னின்,** இதுவும் அது.

**இ–ள்.:–** இவ்வாறும் வல்லினமாம், **எ–று.**

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்,** உடலெழுத்துக்குப் பெயர் கூறியது.

**இ–ள்.:– வல்லினம் கசடதபற வெனவாறே** – க ச ட த ப ற வென்னும் ஆறெழுத்தும் வல்லினமென்னும் பெயரவாம், **எ–று.**

## விசாகப்பெருமாளையர்

**இதுவுமது.**

**இ–ள்.:– க ச ட த ப ற வென** – க ச ட த ப ற வென்று, **ஆறு**–ஆறும், **வல்லினம்**–வல்லினமாம், **எ–று.**

இது வன்கண மெனவும் பெயர்பெறும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

*வல்லெழுத்தெவை?*

வல்லினங் க ச ட த ப ற வென வாறே.

(வல்லினம் க ச ட த ப ற எ னஆறு ஏ)

**இ–ள்.:– க ச ட த ப ற என ஆறு வல்லினம்** – க ச ட த ப ற என்று ஆறும் வல்லெழுத்தாம், **எ–று.**

## முகவை இராமாநுச கவிராயர்

இதுவுமது.

இ—ள்.:— இவ்வாறும் வல்லினமெனப் பெயர் பெறும்.

## கா . கோபாலாசாரி - தி.கோ.ரங்காசாரி

உரை :— க ச ட த ப ற என ஆறும் வல்லெழுத்துக்களாம்.

குறிப்பு :—

வல்லினம் — வன்மையாக ஒலிக்கும் எழுத்துக்கள். இவை வலி, வன்மை, வன்கணம் எனவும்படும்.

## ஆறுமுக நாவலர்

இ—ள்.:— க ச ட த ப ற என ஆறு வல்லினம் — க ச ட த ப ற என்று ஆறும் வல்லெழுத்தாம், எ—று. இவை வன்கண மெனவும் பெயர்பெறும்.

## வ. குமாரசாமிப் புலவர்

இ—ள்.:— க ச ட த ப ற என ஆறுவல்லினம் — க ச ட த ப ற என்று ஆறும் வல்லெழுத்தாம். எ—று.

இவை வன்கணமெனவும், வலி எனவும், வன்மை எனவும் பெயர்பெறும்.

## வை.மு. சடகோபராமாநுசாசாரி
## சே. கிருஷ்ணமாசாரி

இ—ள்.:— க ச ட த ப ற என ஆறு — இவ்வாறும், வல்லினம்— வல்லெழுத்தாம்; எ—று.

வல் இனம் — வன்மையாக ஒலிக்கின்ற வருக்கம். இவை வலி, வன்மை, வன்கணம் எனவும் பெயர்பெறும்.

## பவானந்தம் பிள்ளை

இ—ள்.:— க ச ட த ப ற என ஆறு வல்லினம் — க ச ட த ப ற என்று ஆறும் வல்லெழுத்தாம். எ—று.

இவை வலி எனவும், வன்மை எனவும், வன்கணமெனவும் பெயர் பெறும்.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ—ள்.:— க ச ட த ப ற என ஆறு — க ச ட த ப ற என்கின்ற ஆறும், வல்லினம். வல்லினமாம். எ—று.

பொ—ரை.:—

க ச ட த ப ற என்கின்ற ஆறும் வல்லினமாம்.

வல் இனம்–வன்மையாக ஒலிக்கின்ற கூட்டம். இவை வலி, வன்மை, வன்கணம் எனவும் பெயர் பெறும்.

## கா. நமச்சிவாய முதலியார்

வல்லினம் கசடத பறவென ஆறே.

**க ச ட த ப ற என ஆறு** – க ச ட த ப ற என்கிற ஆறும், **வல்லினம்** – வல்லினமாம்.

இவை **வன்கணம்** எனவும் பெயர் பெறும்.

## மோசசு பொன்னையா★

க் ச் ட் த் ப் ற் என்னும் ஆறும் வல்லினம்; ங் ஞ் ண் ந் ம் ன் என்னும் ஆறும் மெல்லினம்; ய் ர் ல் வ் ழ் ள் என்னும் ஆறும் இடையினம், எ–று.

வல்லெழுத்து வலி, வன்மை, வன்கணம் எனவும் மெல்லெழுத்து, மெலி, மென்மை, மென்கணம் எனவும் இடையெழுத்து இடை, இடைமை, இடைக்கணம் எனவும் வழங்கும்.

வல்லென்ற ஒலியுடைமையின் வன்கணம் எனவும், அதனினும் மெல்லென்ற ஒலியுடைமையின் மென்கணம் எனவும் வலி பிறக்கும் மார்பிற்கும் மெலி பிறக்கும் மூக்கிற்கும் இடைப்பட்ட கழுத்தில் பிறத்தலாலும், ஏனை மெய்களுக்கும் உயிருக்கும் இடைப்பட்ட ஒலியமைப்பைப் பெற்றதனாலும் இடைக்கணம் எனவும் பெயர் பெற்றன என்பது மரபுவழிப்பட்ட விளக்கமாகும்.

பக்கம், அச்சம், பட்டம், நத்தம், கப்பல் என்னுஞ் சொற்களில் அமையும் க், ச், ட், த், ப் ஆயவற்றின் ஒலியை வல்லொலி என்றும் நகம், வசம், படம், பதம், கபம் என்னுஞ் சொற்களிலும்; பங்கம், வஞ்சம், பண்டம், பந்தம், கம்பம் என்னுஞ் சொற்களிலும் அமையும் க், ச், ட், த், ப், ஆயவற்றின் ஒலியை மெல்லொலி என்றும் ங், ஞ், ண், ந், ம், ன் ஆயவற்றின் ஒலியை மூக்கொலி என்றும் குறிப்பிடுவது மொழியியலார் கோளாகும்.

(13)

★ இவ்வுரையாசிரியர், பொருள் இயைபு எளிமை கருதி அடுத்து வரும் இரு நூற்பாக்களுக்கான விளக்கத்தினையும் ஈங்குக் கூறியுள்ளார்.

# மெல்லினம்

68. மெல்லினம் ஙஞண நமனவென வாறே.

மெல் இனம் ங ஞ ண ந ம ன என ஆறே.
mel in̲am ṅa ña ṇa na ma n̲a en̲a āṟē.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

**Soft or weak consonants**

The soft consonants are six, viz., n‘,n~,n,n,m,n.

## ஒப்புமைப் பகுதி

மெல்லெழுத்து என்ப ஙஞண நமன

(தொல். எழு. : 20)

.................................. ஙஞண நமனவென்று
செறிந்தன மெல்லினம்..............

(வீ. : 1)

......... மெலி ஙஞண நமன

(தொன்.: 9)

மெல்லெழுத் தென்மனார் ஙஞண நமன

(மு. வீ. : 15)

## மயிலை நாதர்

இதுவுமது.

இ—ள்.: ங ஞ ண ந ம ன வென்னும் ஆறெழுத்தும் மெல்லினமென்னும் குறியவாம், எ—று.

## சங்கர நமச்சிவாயர்

எ—னின், இதுவும் அது,

இ—ள்.: இவ்வாறும் மெல்லினமாம், எ—று.

## கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், இதுவுமது.

இ—ள்.: மெல்லினம் ங ஞ ண ந ம ன வெனவாறே – ங ஞ ண ந ம ன வென்னும் ஆறெழுத்தும் மெல்லினமென்னும் பெயரவாம் எ—று.

## விசாகப்பெருமாளையர்

இதுவுமது.

இ—ள்.: ங ஞ ண ந ம ன வென – ங ஞ ண ந ம ன வென்று, ஆறு– ஆறும், மெல்லினம்–மெல்லினமாம், எ—று.

மென்கண மெனவும் பெயர்பெறும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

*மெல்லெழுத்தெவை?*

மெல்லினம் ங ஞ ண ந ம ன வென வாறே.

(மெல்லினம் ங ஞ ண ந ம ன என ஆறு ஏ)

**இ–ள்.: ங ஞ ண ந ம ன என ஆறு மெல்லினம் –** ங ஞ ண ந ம ன என்று ஆறும் மெல்லெழுத்தாம், **எ–று.**

## முகவை இராமானுசக் கவிராயர்

**இதுவுமது.**

**இ–ள்.:** இவ்வாறும் மெல்லினமெனப் பெயர்பெறும், **எ–று.**

## கா . கோபாலாசாரி -தி.கோ.ரங்காசாரி

**உரை :–** ங ஞ ண ந ம ன என ஆறும் மெல்லெழுத்துக்களாம்.

குறிப்பு :–
மெல்லினம் மெண்மையாக ஒலிக்கும் எழுத்துக்கள். இவை மெலி, மென்மை, மென்கணம் எனவும்படும்.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: ங ஞ ண ந ம ன என ஆறு மெல்லினம் –** ங ஞ ண ந ம ன என்று ஆறும் மெல்லெழுத்தாம், **எ–று.** இவை மென்கண மெனவும் பெயர்பெறும்.

## வ. குமாரசாமிப்புலவர்

**இ – ள். ங ஞ ண ந ம ன என ஆறு மெல்லினம் –** ங ஞ ண ந ம ன என்று ஆறும் மெல்லெழுத்தாம். எ–று.

இவை மென்கணமெனவும், மெலி எனவும், மென்மை எனவும் பெயர்பெறும்.

## வை.மு. சடகோபராமானுசாசாரி
## சே. கிருஷ்ணமாசாரி

**இ–ள்.: ங ஞ ண ந ம ன என ஆறு–** இவ்வாறும், **மெல்லினம் –** மெல்லெழுத்தாம்; **எ–று.**

மெல் இனம்–மென்மையாக ஒலிக்கிற வருக்கம். இவை மெலி, மென்மை, மென்கணம் எனவும் பெயர் பெறும்.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள். ங ஞ ண ந ம ன என ஆறு மெல்லினம் –** ங ஞ ண ந ம ன என்று ஆறும் மெல்லெழுத்தாம். எ–று.

இவை, மெலி எனவும், மென்மை எனவும், மென்கணமெனவும், பெயர் பெறும.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ—ள் ங ஞ ண ந ம ன என ஆறு — ங ஞ ண ந ம ன என்கின்ற ஆறும், **மெல்லினம்** — மெல்லினமாம். எ—று.

பொ—ரை.:—

ங ஞ ண ந ம ன என்கின்ற ஆறும்,— மெல்லினமாம். .

மெல் இனம்—மென்மையாக ஒலிக்கின்ற கூட்டம். இவை மெலி, மென்மை, மென்கணம் எனவும் பெயர் பெறும்.

## கா. நமச்சிவாய முதலியார்

ங ஞ ண ந ம ன என ஆறு – ங ஞ ண ந ம ன என்கிற ஆறும், **மெல்லினம்** – மெல்லினமாம்.

இவை **மென்கணம்** எனவும் பெயர் பெறும்.

**(14)**

# இடையினம்

69. **இடையினம் யரல வழளவென வாறே.**

**இடை இனம் ய ர ல வ ழ ள என ஆறே.**

itai inam ya ra la va ḷa ḻa eṉa āṟē.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

**Medial or Middle Consonants (Liquids)**

The medial consonants are six, viz., y,r,l,v,l,l,.

## ஒப்புமைப் பகுதி

**இடையெழுத் தென்ப யரல வழள**

(தொல். எழு. : 21)

.................................. பெயர்த்திடையா
முறிந்த யம்முத லாறும்................

( வீ. : 1)

.............................................

இடைய யரல வழள என மூவினமே

(தொன். : 9)

இடையெழுத் தென்மனார் யரல வழள

(மு. வீ. : 18)

## மயிலை நாதர்

**இதுவுமது.**

**இ–ள்.:** ய ர ல வ ழ ள வென்னும் ஆறெழுத்தும் இடையினமென்னும் குறியவாம், **எ–று.**

இம் மூவினமும் அன்னவாமாறு உச்சரித்துச் செவிகருவியாக [1]ஓர்ந்து கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ–னின்,** இதுவும் அது.

**இ–ள்.:** இவ்வாறும் இடையினமாம்.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்,** இதுவுமது.

**இ–ள்.: இடையினம் ய ர ல வ ழ ள வெனவாறே–** ய ர ல வ ழ ள வென்னும் ஆறெழுத்தும் இடையினமென்னும் பெயரவாம், **எ–று.**

## விசாகப்பெருமாளையர்

**இதுவுமது.**

**இ–ள்.: ய ர ல வ ழ ள வென–** ய ர ல வ ழ ள வென்று, **ஆறு–**ஆறும், **இடையினம்–**இடையினமாம், **எ–று.**

இடைக்கண மெனவும் பெயர்பெறும்.

## ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

இடையெழுத்தெவை?

இடையினம் ய ர ல வ ழ ள வென வாறே.

(இடையினம் ய ர ல வ ழ ள என ஆறு ஏ)

**இ–ள்.: ய ர ல வ ழ ள என ஆறு இடையினம் –** ய ர ல வ ழ ள என்று ஆறும் இடையெழுத்தாம், **எ–று.**

ஆக மெய்யெழுத்து எத்தனை வகைப்படும்?

வல்லினம், மெல்லினம், இடையினமென மூன்றாம்.

வல்லினம் – கடின ஓசை யுடைய இனம்.

மெல்லினம் – மென்மையான ஓசை யுடைய இனம்.

இடையினம் – கடினமுமாகாது மென்மையுமாகாது இடைப்பட்ட ஓசையுடைய வினம்.

இதுகாறும் எழுத்தினது எண்ணும் பெயருங் கூறப்பட்டன. இனி முறை கூறப்படும்.

## முகவை இராமானுச க்விராயர்

**இதுவுமது.**

**இ—ள்.:** இவ்வாறும் இடையினமெனப் பெயர்பெறும், எ—று.

இன்னும் இம் மூவகை யெழுத்துகளும் வலி மெலி இடை எனவும், வன்கணம், மென்கணம், இடைக்கணம் எனவும், வல்லெழுத்து, மெல்லெழுத்து, இடையெழுத்து எனவும், வன்மை, மென்மை, இடைமை, எனவும் பெயர்பெறுதல் **உரையிற்கோடலென்னும்** உத்தியாற் கொள்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :–** ய ர ல வ ழ ள என ஆறும் இடையெழுத்துக்களாம்.

**குறிப்பு :–**

**இடையினம்** – நடுத்தரமாக ஒலிக்கும் எழுத்துக்கள். இவை இடை, இடைமை, இடைக்கணம் எனவும்படும்.

## ஆறுமுக நாவலர்

**இ—ள்.:** ய ர ல வ ழ ள என ஆறு **இடையினம்**— ய ர ல வ ழ ள என்று ஆறும் இடையெழுத்தாம், **எ—று.**

இவை இடைக்கண மெனவும் பெயர் பெறும்.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ—ள். ய ர ல வ ழ ள என ஆறு இடையினம்** – ய ர ல வ ழ ள என்று ஆறும் இடையெழுத்தாம். **எ—று.**

இவை இடைக்கண மெனவும், இடை எனவும், இடைமை எனவும் பெயர் பெறும்.

## வை.மு. சடகோபராமானுசாசாரி
## சே. கிருஷ்ணமாசாரி

**இ–ள்.: ய ர ல வ ழ ள என ஆறு** – இவ்வாறும், **இடையினம்**– இடையெழுத்தாம்; எ–று.

**இடை இனம்** – வல்லின, மெல்லினங்கட்கு நடுத்தரமாக ஒலிக்கின்ற வருக்கம், வல்லினம் பிறக்கு மிடமாகிய மார்பிற்கும் மெல்லினம் பிறக்கு மிடமாகிய மூக்கிற்கும் இடையிடமாகிய கழுத்தினின்று பிறத்தல் பற்றி இடையெழுத்தெனப் பெயர்வந்த தென்றலும் உண்டு.

இவை – இடை, இடைமை, இடைக்கணம் எனவும் பெயர் பெறும்.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள். ய ர ல வ ழ ள என ஆறு இடையினம்** – ய ர ல வ ழ ள என்று ஆறும் இடையெழுத்தாம், எ–று.இவை இடை எனவும், இடைமை எனவும், இடைக்கண மெனவும் பெயர்பெறும்.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள் ய ர ல வ ழ ள என ஆறு** – ய ர ல வ ழள என்கின்ற ஆறும், இடையினம் – இடையினமாம், எ–று.

**பொ–ரை.:**

ய ர ல வ ழ ள என்கின்ற ஆறும் இடையினமாம்.

இடை இனம் – வல்லினம் மெல்லினங்கட்கு நடுத்தரமாக ஒலிக்கின்ற கூட்டம். இவை இடை, இடைமை, இடைக்கணம் எனவும் பெயர் பெறும்.

## கா. நமச்சிவாய முதலியார்

ய ர ல வ ழ ள என ஆறு – ய ர ல வ ழ ள என்கிற ஆறும், இடையினம் – இடையினமாம்.

இவை **இடைக்கணம்** எனவும் பெயர்பெறும்.

**(15)**

## இனவெழுத்து

70. ஐஔ இஉச் செறிய முதலெழுத்
திவ்விரண் டோரின மாய் [1]வரு முறையே.

ஐ ஔ இ உச் செறிய முதல் எழுத்து
இவ் இரண்டு ஓர் இனம் ஆய் வரும் முறையே.

ai au i us seṟiya mutal eḻuttu
iv iraṇṭu ōr iṉam āy varum muṟaiyē.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

**Relationships of letters**

With the exception of 'ai' and 'u' which take 'i' and 'u' as their kindred, the Primary letters taken in regular pairs are usually regarded as (groups of) Related letters.

## ஒப்புமைப் பகுதி

அவற்றுள்
இஉ ஐஔக் கினமென மொழிப (மு. வீ. : 21)

## மயிலை நாதர்

எ—ன், நிறுத்தமுறையானே முறையாமாறு உணர்த்துவா னெடுத்துக் கொண்டார்; அவற்றுள், இச்சூத்திரம் முதலெழுத்தை இனமடைத்தல் நுதலிற்று.

இ—ள்.: ஐகாரத்தை இகரத்தோடும், ஔகாரத்தை உகரத்தோடும் சேர்க்க, அகர முதலான முதலெழுத்தெல்லாம் முறையே இவ்விரண் டெழுத்துத் தம்முள் இனமாம், எ—று.

வ—று.:

அ ஆ, [2]இ ஈ ஐ, உ ஊ ஔ ; எ ஏ, ஒ ஓ, க ங, ச ஞ, ட ண, த ந, ப ம, ய ர, ல வ, ழ ள, ற ன எனவரும்.

---

பாட வேறுபாடு :–

1. ஓர்ந்துணர்க

2. இ ஈ, உ ஊ, எஏ, இஐ, ஒஓ, உஔ.

## சங்கர நமச்சிவாயர்

**எ–னின், இதுவும் அது**

**இ–ள்.:** இன மில்லாத ஐகார ஔகாரங்கள், ஈகார ஊகாரங்கட்கு இனமாகிய இகர உகரங்களைத் தமக்கும் இனமாகப் பொருந்த முதலெழுத்துன்னய் இவ்விரண்டு ஓரினமாய் வருதல் முறை; ஆதலால், அவை இனவெழுத்தென்றும் பெயரவாம், **எ–று.**

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்,** இனமில்லாத எழுத்துக்கு இனமடைத்தது.

**இ–ள்.: ஐ ஔ இ உ–** ஐகாரத்திற்கு இகரமும் ஔகாரத்துக்கு உகரமும், **செறிய–**இனமாகச் சேர்க்க, **முதலெழுத்து–**அகரமுதல் னகரவீறாயுள்ள முதலெழுத்து எல்லாம், **இவ்விரண்டு ஓரினமாய்–**இரண்டு இரண்டாய் ஓரினமாக, **வரன் முறையே** – வருதல் முறைமையாம் என்றவாறு. அ, ஆ, இ, ஈ, உ ஊ, இஐ, உஔ, எஏ, ஒஓ, கங, சஞ, டண, தந, பம, யர, லவ, ழள, றன என வரும்.

## விசாகப்பெருமாளையர்

இதுவுமது.

**இ–ள்.: ஐ ஔ–**இனமில்லாத ஐகார ஔகாரங்கள், **இஉ–**ஈகார ஊகாரங்களுக்கு இனமாகிய இகர உகரங்களை, **செறிய–**தமக்கு இனமாகப் பொருந்த, **முதலெழுத்து–**முதலெழுத்துகளானவை, **இவ்விரண்டு–**இரண்டிரண்டு. **ஓரினமாய்–**ஓரினமாகி, **வரல்–**வருதல், **முறை–**முறையாதலால் அவை இனவெழுத்தெனப் பெயர் பெறும், **எ–று.** ஏகாரம்–ஈற்றசை.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

*முறையாவது யாது?*

சிறப்பினு மினத்தினுஞ் செறிந்தீண் டம்முதல்

நடத்த றானே முறையா கும்மே.

(சிறப்பினும் இனத்தினும் செறிந்து ஈண்டு அ முதல் நடத்தல் தானே முறை ஆகும் ஏ)

**இ–ள்.: சிறப்பினும் இனத்தினுஞ் செறிந்து** – சிறப்பினாலும் இனத்தினாலும் பொருந்தி, **ஈண்டு அம்முதல் நடத்தல்தானே முறையாகும்மே** – இவ்வுலகத்திலே அகரமுதலாக வழங்குதலே எழுத்துக்களது முறையாம், **எ–று.**

*இம்முறையாக வருவதற்கு காரணம் யாது?*

எல்லாவெழுத்தின்கண்ணுங் கலந்துநிற்குஞ் சிறப்பு நோக்கி எல்லாவெழுத்திற்கும் முன்னர் அகரமும், அதற்கின மாதலின் அதன்பின்னர் ஆகாரமும், பிறப்புஞ் செய்கையுஞ் சுட்டுப்

பொருட்டாதலும் அகரத்தோடு அளவும் ஒத்தலின் அவற்றின் பின்னர் இகரமும், அதற்கினமாதலின் அதன்பின்னர் ஈகாரமும், இடமுஞ் செய்கையுஞ் சுட்டுப் பொருட்டாதலும் இகரத்தோடு அளவும் ஒத்தலின் அவற்றின்பின்னர் உகரமும் அதற்கின மாதலின் அதன் பின்னர் ஊகாரமும், இடமுஞ் செய்கையும் உகரத்தோடு அளவும் ஒத்தலின் அவற்றின் பின்னர் எகரமும், அதற்கினமாதலின் அதன்பின்னர் ஏகாரமும், பிறப்புஞ் செய்கையும் ஏகாரத்தோடு அளவும் ஒத்தலிற் றனக்கினமாகிய குற்றெழுத்தின்றேனும் அவற்றின் பின்னர் ஐகாரமும், இடனுஞ் செய்கையும் ஒத்தலின் அதன்பின்னர் ஒகரமும், அதற்கின மாதலின் அதன் பின்னர் ஓகாரமும், பிறப்புஞ் செய்கையும் வடிவும் ஒகாரத்தோடு அளவும் ஒத்தலிற் றனக்கினமாகிய குற்றெழுத்தின்றேனும் அவற்றின் பின்னர் ஔகாரமும் தம்முள் இயைய வைக்கப்பட்டன.

முதல் நாவும் முதலண்ணமும் உறப் பிறத்தலான் மெய்களின் முன்னர்க் ககரமும், அதற்கினமாதலின் அதன் பின்னர் ஙகரமும், இடை நாவும் இடை யண்ணமும் உறப் பிறத்தலானும் அளவானுங் ககரத்தோடு இடமொத்தலானும் அவற்றின் பின்னர்ச் சகரமும், அதற்கினமாதலின் அதன் பின்னர் ஞகரமும், நுனி நாவும் நுனி யண்ணமும் உறப் பிறத்தலானும் அளவானுஞ் சகரத்தோடு இடமொத்தலானும் அவற்றின் பின்னர் டகரமும், அதற்கினமாதலின் அதன் பின்னர் ணகரமும், நுனி நாவும் அண்பன் முதலும் உறப் பிறத்தலானும் அளவானும் டகரத்தோடு இடமொத்தலானும் அவற்றின் பின்னர்த் தகரமும், அதற்கினமாதலின் அதன் பின்னர் நகரமும், இதழ் இயையப் பிறத்தலானும் அளவானுந் தகரத்தோடு இடமொத்தலானும் அவற்றின் பின்னர்ப் பகரமும், அதற்கினமாதலின் அதன் பின்னர் மகரமும் தம்முள் இயைய வைக்கப்பட்டன.

வல்லெழுத்துக்களை முன்னாகக் கூறி, அவற்றிற் கினமொத்த மெல்லெழுத்துக்களை அவற்றின் பின்னாகக் கூறி, இடையெழுத் தாறனையும் அவற்றின் பின்னாகக் கூறினார், வல்லெழுத்துகள் நான்கும், மெல்லெழுத்துண் மூன்றும், இடையெழுத்துகள் இரண்டும், மொழிக்கு முதலாதல் நோக்கி யென்றுணர்க.

## முகவை இராமானுச கவிராயர்

இதுவுமது.

**இ-ள்.: ஐ ஔ இ உச் செறிய** – இனமில்லாத ஐகார ஔகாரங்களை இகர உகரங்கள் அடுத்து நிற்க, **முதலெழுத்து**–மற்ற முதலெழுத்துகளெல்லாம், **இவ்விரண்டு**–இரண்டு இரண்டு கூடி, **ஓரினமாய் வரல்**–ஒவ்வோரினமாகி வருவது, **முறை** – நெடுங்கணக்கின் முறையாதலால், ஐகார ஔகாரங்களுக்கும் இகர உகரங்கள் இனவெழுத் தெனப் பெயர் பெறும், **எ–று.**

இரண்டிரண்டோ ரினமாய் வருதற்கு உதாரணம்:–

அ ஆ+ இ ஈ, உ ஊ, எ ஏ, ஐ இ, ஒ ஓ, ஔ உ எனவும்,

க ங, ச ஞ, ட ண, த ந, ப ம, ய ர, ல வ, ழ ள, ற ன எனவும் காண்க.

முறை மேற் கூறப்படுதலால், இங்கே முறை யென்றது, நெடுங்கணக்கின் ஒழுங்கு. இச்சூத்திரத்தை வரல் முறையென முடித்து அதை யேதுவாக்கி இகர வுகரங்கள் இனவெழுத் தென்று பெயர் பெறுமென்று முடித்துக் கொள்க; என்னெனின், இது பெயரிலக்கணமாதலினென்க.

## கா . கோபாலாசாரி -தி.கோ.ரங்காசாரி

**உரை :– ஐ ஔ –** (இனமில்லாத) ஐகார ஔகாரங்கள், **இ உ** – (ஈகார ஊகாரங்களுக்கு இனமாகிய) இகர உகரங்களே, **செறிய** – (தமக்கும் இனமாகப்) பொருந்த, **முதல் எழுத்து** – முதலெழுத்துக்கள், **இவ்விரண்டு –** இரண்டு இரண்டு, **ஓர் இனம் ஆய் வரல் –** ஓரினமாகி வருதல், **முறை** – கிரமம்; (ஆகையால் அவை இனவெழுத்தெனப் பெயர் பெறும்).

**உ–ம் :–**

அ–ஆ, இ–ஈ, உ–ஊ, எ–ஏ, ஒ–ஓ, இ–ஐ, உ – ஔ எனவும்;
க–ங, ச–ஞ, ட–ண, த–ந, ப–ம, ற–ன எனவும் வரும்.
இடையெழுத்தாறும் ஓரினம்.

**குறிப்பு;–**

**சுருங்கச் சொல்லல்** என்னும் **அழகுபற்றி,** 'முதலெழுத்து' எனப் பொதுப்படக்கூறினாரேனும் **ஏற்புழிக்கோடல்** என்பதனால் விரண்டோரினமாய்வரல்' என்றதை இடையின மொழிந்த மற்றவைகளுக்கே கொள்க.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: ஐ ஔ இ உச் செறிய –** இனமில்லாத ஐகார ஔகாரங்கள் ஈகார ஊகாரங்களுக்கு இனமாகிய இகர உகரங்களைத் தமக்கும் இனமாகப் பொருந்த, **முதலெழுத்து இவ்விரண்டு ஓரினம் ஆய்வரல் முறை** – முதலெழுத்துக்கள் இவ் விரண்டோரினமாய் வருதன் முறை; ஆதலால், அவை இனவெழுத்தெனப் பெயர் பெறும். **எ–று.**

**சுருங்கச் சொல்ல** லென்னும் அழகு பற்றி முதலெழுத்தெனப் பொதுப்படக் கூறினார். **ஏற்புழிக் கோட லென்பத**னால், இவ்விரண் டோரினமாய் வருதல் இடையின மொழிந்த மற்றவைகளுக்கே கொள்க.

**உ–ம்.:**

அ ஆ; இ ஈ; உ ஊ; எ ஏ; ஐ இ; ஒ ஓ; ஔ உ எனவும்,

க ங; ச ஞ; ட ண; த ந; ப ம; ற ன எனவும், இவ் விரண்டு ஓரினமாய் வந்தமை காண்க.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ—ள். ஐ ஔ இ உச் செறிய** – (ஒத்தஇனமில்லாத) ஐகார ஔகாரங்கள் ஈகார ஊகாரங்களுக் கினமாகிய இகர உகரங்களைத் தமக்கும் இனமாகப் பொருந்த **முதலெழுத்து** – முதலெழுத்துக்கள், **முறை** – முறையாக, **இவ்விரண்டு ஆய் வரல்** – இவ்விரண்டாக வருதல், **ஓரினம்** – ஓரின வெழுத்துக்களாம். **எ—று.**

> ஓரினம் எனினும், நெருங்கிய இனம் எனினும், ஸஜாதி எனினும், ஒத்த இனம் எனினும், நேரினமெனினும் பொருந்தும்.
>
> சுருங்கச்சொல்ல லென்னுமழகு பற்றி முதலெழுத்தெனப் பொதுப்படக் கூறினாரேனும், இவ்விரண்டோரினமாதல் இடையினம் ஒழிந்த மற்ற முதலெழுத்துகளுக்கே கொள்க.

**உ—ம்.:–** அ ஆ; இ ஈ; உ ஊ; எ ஏ; இ ஐ; ஒ ஓ; உ ஔ;

க ங; ச ஞ; ட ண; த ந; ப ம; ற ன என வரும்.

**வேறுமொருரை:**

**ஐ ஔ இ உச்செறிய** – (நேரினமில்லாத) ஐகார ஔகாரங்கள் (ஈகார ஊகாரங்களுக்கு நேரினமாகிய) இகர வுகரங்களைத் தமக்கும் இனமாகப் பொருந்த, **முதலெழுத்து** – முதலெழுத்துக்கள், **இவ்விரண்டு ஓரினமாய் வரல்** – இவ்விரண்டு ஓரினமாகி வருதல், **முறை** – முறையாம், ஆதலின் அவை இனவெழுத்தெனப் பெயர்பெறும், **எ—று.**

> எழுத்துக்களது பெயர் கூறும் பாகமாதலின் இங்கே முறை யென்றது 'எண் பெயர் முறை' என்னுஞ் சூத்திரங் கூறிய வரிசையை யன்று. அது பின் 'சிறப்பினுமினத்தினும்' என்னுஞ் சூத்திரத்தாற் கூறப்படும்.
>
> வரன்முறையே இவ்விரண்டு ஓரினம் ஆய் – வரிசைப்படியே இவ்விரண்டு (அடுத்து) ஓரினமாம் என்று உணர்க என்று பொருளுரைப்பினும் பொருந்தும். இடப்பொருளில் ஆய் என்று கூறியது இடையினங்கள் இவ்விரண்டோரினமாய் வருதலில்லை என்பதை ஆய்ந்துணர்தற்கென்று கொள்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரி

## சே. கிருஷ்ணமாசாரி

**இ—ள்.: ஐ ஔ** – (ஒத்த இனமில்லாத) ஐகார ஔகாரங்கள், **இ உ செறிய** – (ஈகார ஊகாரங்கட்கு இனமாகிய) இகர உகரங்களையே (தமக்கும் இனமாகப்) பொருந்த, **முதல் எழுத்து**–முதலெழுத்துக்கள், **இவ்விரண்டு**– இரண்டிரண்டு, **ஓர் இனம் ஆய் வரல்**–ஓரினமாகி வருதல், **முறை**–தொன்று தொட்டு வரும் முறைமையாம்; **எ—று.** ஆதலால், அவை 'இனவெழுத்து' எனப் பெயர் பெறும். **முறை**–வரன் முறை.

**சுருங்கச் சொல்லல்** என்னும் அழகு பற்றி, 'முதலெழுத்து' எனப் பொதுப்படக் கூறினாராயினும், **ஏற்புழிக்கோடல்** என்னும் உத்தியால், இவ்விரண்டு ஓரினமாய் வருதலை இடையினம் ஒழிந்த மற்றவற்றிற்கே கொள்க. (சுருங்கச் சொல்லல் – சொற்கள் விரியாதபடி சொல்லுதல், ஏற்புஉழிக்கோடல் – கூறிய இலக்கணத்தை ஏற்ற இடத்திற்கு மாத்திரமே கொள்ளுதல்). இதனை 'முறை' என்ற மிகையாற் கொள்ளுதலும் ஒன்று.

**உ–ம்.:–** அ–ஆ, இ–ஈ, உ–ஊ, எ–ஏ, (இ)–ஐ, ஒ–ஓ, (உ)–ஔ எனவும், க–ங, ச–ஞ, ட–ண, த–ந, ப–ம, ற–ன எனவும் வரும். இடையெழுத்து ஆறும் ஏழரினம்.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள். ஐ ஔ இ உச் செறிய –** (இனமில்லாத) ஐகார ஔகாரங்கள் (ஈகார ஊகாரங்களுக்கு இனமாகிய ) இகர உகரங்களைத் தமக்கும் இனமாகப் பொருந்த, **முதலெழுத்து இவ்விரண்டு ஓரினம் ஆய் வரல் முறை** – முதலெழுக்கள் இவ்விரண்டு ஓரினமாய் வருதல் முறை, **எ–று.**

ஆதலால், அவை இனவெழுத்தெனப் பெயர் பெறும்.

'சுருங்கச் சொல்லல்' என்னும் அழகு பற்றி முதலெழுத்தெனப் பொதுப்படக் கூறினார்; 'ஏற்புழிக்கோடல்' என்னும் உத்தியால், இவ்விரண்டு ஓரினமாய் வருதல் இடையின மொழிந்த மற்றவைகளுக்கே கொள்க.

**உ–ம்.**

அ ஆ; இ ஈ; உ ஊ; எ ஏ; ஐ (இ) ஒ ஓ; ஔ (உ);

க ங; ச ஞ; ட ண; த ந; ப ம; ற ன.

நூலுக்கு அழகு எனப்படுபவை பத்து. அவற்றை 13–வது சூத்திரத்தால் அறிக.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள். ஐ ஔ** – (இனமில்லாத) ஐகார ஔகாரங்கள், **இ உ செறிய** – (ஈகார ஊகாரங்களுக்கு இனமாகிய) இகர உகரங்கள் (தமக்கு இனமாகப்) பொருந்த, **முதலெழுத்து** – முதலெழுத்துக்களானவை, **இவ்விரண்டு** – இரண்டிரண்டு, **ஓர் இனம் ஆய் வரல்** – ஓர் இனமாகி வருதல், **முறை** – முறை; ஆதலால், (அவை இனவெழுத்தெனப் பெயர் பெறும்). **எ–று.**

ஏகாரம் – ஈற்றசை.

**பொ–ரை.:**

(இனமில்லாத) ஐகாரம் ஔகாரம் என்பவை (ஈகார ஊகாரங்களுக்கு இனமாகிய) இகர உகரங்களைத் தமக்கும்

இனமாகப் பொருந்த, முதலெழுத்துக்கள் இரண்டிரண்டு ஓரினமாய் வருதல் முறை; ஆதலால், அவை இனவெழுத்து எனப்படும்.

**எ—ம்:—** அ—ஆ, இ—ஈ, உ—ஊ, எ—ஏ, ஐ—இ, ஒ—ஓ, ஔ—உ எனவும், க—ங, ச—ஞ, ட—ண, த—ந, ப—ம, ற—ன எனவும் இரண்டிரண்டு ஓரினமாய் வந்தமை காண்க. அவற்றுள் என்பதை இச் சூத்திரங்காறும் கூட்டுக. இங்கே முறை என்றது நெடுங்கணக்கின் ஒழுங்கை.

இடையெழுத்தாறும் இடப்பிறப்பால் ஒத்து முயற்சிப் பிறப்பால் வேறுபடுதலால் எல்லாம் ஓரினமாம்.

சுருங்கச் சொல்லல் என்னும் அழகுபற்றி முதல் எழுத்து எனப் பொதுப்படக் கூறினார்; ஏற்புழிக்கோடல் என்னும் உத்தியால், இவ்விரண்டு ஓரினமாய் வருதல் இடையினம் ஒழிந்த மற்றவைகளுக்கே கொள்க. (சுருங்கச் சொல்லல்—சொற்கள் வீணாக விரியாமல் சுருங்கி நிற்கச் சொல்லுதல். ஏற்புழிக்கோடல்—கூறிய இலக்கணத்தை ஏற்ற இடத்துக்கு மாத்திரமே கொள்ளுதல்.) இதனை, 'முறை' என்ற மிகையாற் கொள்தலும் ஒன்று.

இனி, ய ர ல வ ழ ள இவ்வாறும், உயிர்க்கணம் தமக்குள்ளே ஓரினமாதல் போலத் தாமும் ஓரினமாம்.

## கா. நமச்சிவாய முதலியார்

ஐ ஔ — **(இனமில்லாத) ஐகார ஔகாரங்கள்,** இ உ செறிய — **(ஈகார ஊகாரங்களுக்கு இனமாகிய) இகர உகரங்கள் (தமக்கு இனமாகப்)** பொருந்த, முதலெழுத்து — **முதலெழுத்துக்களானவை,** இவ்விரண்டு — **இரண்டிரண்டு,** ஓர் இனம் ஆய்வரல் — **ஓர் இனமாகி வருதல்,** முறை — **முறையாகும்.**

**சுருங்கச் சொல்லல்** என்னும் அழகுபற்றி, முதலெழுத்தெனக் கூறினாரேனும், **ஏற்புழிக் கோடல்** என்னும் உத்தியால், இவ்விரண்டு ஓரினமாய் வருதல் இடையினம் ஒழிந்த மற்றவைகளுக்கே கொள்க.

சார்பெழுத்துக்களுக்கு அவ்வவற்றின் முதலெழுத்துக்களின் பெயர்களே பெயர்களா யடங்கலால், அவற்றுக்குப் பெயர் சொல்லாது விட்டார்.

## மோசகு பொன்னையா

ஐகார ஔகாரங்கள் முறையே இகர உகரங்களோடு பொருந்த, முதலெழுத்துக்கள் இரண்டிரண்டு ஓரினமாகி வருதல் முறையாகும், **எ—று.**

ஏற்புழிக் கோடலால் வல்லொலிக்கினமான மெல்லொலியை அதனதன் இனமாகக் கொள்வதுடன், இடையினம் ஆறையும் ஓரினம் எனக் கொள்க.

எ—டு.

| உயிர் | மெய் |
|---|---|
| அ – ஆ | க் – ங் |
| இ – ஈ – ஐ | ச் – ஞ் |
| உ – ஊ – ஔ | ட் – ண் |
| எ – ஏ | த் – ந் |
| ஒ – ஓ | ற் – ன் |
| | ய் – ர் – ல் – வ் – ழ் – ள் |

(16)

## இனமென்றதற்குக் காரணம்

71. **தான முயற்சி யளவு பொருள்வடி**
**வானவொன் றாதியோர் புடையொப் பினமே.**

**தானம் முயற்சி அளவு பொருள்வடிவு**
**ஆனஒன்று ஆதிஓர் புடைஒப்பு இனமே**

ṭā̱nam muyaṟsi a̱ḻavu poruḻ vativu
ā̱na onṟu āṭi ōr putai oppu ināmē

**இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )**

### Reason for the relationship

Relationship consists in the resemblance (of letters) with regard to one or more of the following particulars: Origin (of letter-sounds), action (of the organs employed in pronouncing), quantity (of sound), signification and form.

# ஒப்புமைப் பகுதி

.......................................................

**புகலுமிடம் முயற்சி பொருள் அளவு உரு ஏற்பனவே**
**பொருந்தும் இனஞ்சிறப்பாலவ வாதி முறையணுமே.**

(சுவாமி. : 15)

## மயிலை நாதர்

**எ — ன்,** மேல் இவ்வெழுத்து, 'இவ்விரண் டோரினமாய் வரும்' என்றார், அவை அப்படி வருவதற்குக் காரணமாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**இ—ள்.:** எழுத்துக்கள் தம் பிறப்பிடமே முயற்சியே [1]மாத்திரையே பொருளே வடிவே யென்றிவற்றுள் ஒன்றானும் பலவானும் [2]ஒரு புடையொப்பனவாயின், இனமாம், **எ — று.**

அ ஆக்கள் இடத்தானும் முயற்சியானும், அறாயிரம், ஆறாயிர மென்னும் பொருளானும், வடிவானும் ஒருபுடை யொத்து இனமாயின. இ ஈக்கள் இடத்தானும் முயற்சி யானும், இராயிரம், ஈராயிர மென்னும் பொருளானும் ஒருபுடை யொத்து இனமாயின; ஐகாரம் இவற்றுள் இடத்தானும் முயற்சியானும் ஒத்து இகரத்தோடு கூடி இனமாயிற்று. உ ஊக்கள் இடத்தானும் முயற்சியானும், உங்கு, ஊங்கு என்னும் பொருளானும் வடிவானும் ஒருபுடை யொத்து இனமாயின. ஔகாரம் இவற்றுள் இடத்தானும் முயற்சியானும் உகரத்தோடு கூடி இனமாயிற்று. எ ஏக்கள் இடத்தானும் முயற்சியானும், எழாயிரம் ஏழாயிர மென்னும் பொருளானும் வடிவானும் ஒருபுடை யொத்து இனமாயின. ஒ ஓக்கள், இடத்தானும் முயற்சியானும், ஒராயிரம், ஓராயிரமென்னும் பொருளானும், வடிவானும் ஒருபுடை யொத்து இனமாயின.

க ங க்கள், முயற்சியானும் மாத்திரையானும், குளக்கரை, குளங்கரை யென்னும் பொருளானும் ஒருபுடை யொத்து இனமாயின: ச ஞக்கள், முயற்சியானும் மாத்திரையானும், மச்சிகன், மஞ்சிகனென்னும் பொருளானும் ஒருபுடை யொத்து இனமாயின. ட ணக்கள், முயற்சியானும் மாத்திரை யானும், மட்குடம், மண்குட மென்னும் பொருளானும் ஒருபுடை யொத்து இனமாயின. த நக்கள் முயற்சியானும் மாத்திரையானும், பாழ்த்தூறு, பாழ்ந்தூறு என்னும் பொருளானும் ஒருபுடை

---

**பாட வேறுபாடு :—**

1. அளவானே

2. ஒருபுடையான்

யொத்து இனமாயின. ப மக்கள், முயற்சியானும் மாத்திரையானும், வேய்ப்புறம், வேய்ம்புற மென்னும் பொருளானும் ஒருபுடை யொத்து இனமாயின. ய ரக்கள் இடத்தானும் மாத்திரையானும், வேயல், வேரலென்னும் பொருளானும் ஒருபுடை யொத்து இனமாயின. ல வக்கள் இடத்தானும் மாத்திரையானும், எல்லா வகை, எவ்வகை யென்னும் பொருளானும் ஒருபுடை யொத்து இனமாயின. ழ ளக்கள் இடத்தானும் மாத்திரை யானும், காழக வுடையான், காளகவுடையா னென்னும் பொருளானும் ஒருபுடை யொத்து இனமாயின. ற னக்கள், முயற்சியானும் மாத்திரை யானும், நற்கு நன்கு என்னும் பொருளானும் ஒருபுடை யொத்து இனமாயின.

## சங்கர நமச்சிவாயர்

**எ—னின்**, மேல் இனம் என்றதற்குக் காரணம் **உணா் – ற்று.**

**இ—ள்.:** தானம் முதலியவாய இவற்றுள் ஒன்று முதலாக ஒருபுடை யொத்தலால் இனமாம், **எ—று.**

தானம் – உரம் முதலியன. முயற்சி – இதழ் முயற்சி முதலியன. அளவு –மாத்திரை. பொருள் – பாலன் விருத்தனானாற் போலக் குறிலினது விகாரமே நெடிலாதலின், இரண்டற்கும் பொருள் ஒன்று என்று முதல் நூலான் நியமிக்கப்பட்ட பொருள், வடிவு – ஒலிவடிவு, வரிவடிவு. இவற்றுள், ஒன்றும் பலவும் ஒத்து இனமாய் வருதல் கண்டு கொள்க.

சார்பெழுத்திற்குப் பெயர் கூறாதொழிந்தார், ஆய்தம் தனி நிலை ஆதலானும், ஏனைச் சார்பெழுத்திற்குச் சுட்டு வினா என்று விதந்து ஓதினவை யொழிந்த முதலெழுத்தின் பெயரே பெயராய் அடங்குதலானும் என்க.

இச்சூத்திரம் **ஏதுவின் முடித்தல்** என்னும் உத்தி.

## கூழங்கைத் தம்பிரான்*

**சூ—ம்**, இனமாதற்குக் காரணம் உரைத்தது.

**இ – ள்.: தானம்** – எழுத்துக்கள் தம் பிறப்புத் தானத்தினாலும், **முயற்சி** – எழுத்துக்கள் பிறக்கும் முயற்சியினாலும், **அளவு** – எழுத்துக்கள் தம் கால அளவினாலும், **பொருள்** – பொருள் ஒப்புமையானும், **வடிவு** – எழுத்துக்கள் தம் வடிவினாலும், **ஆன வொன்றாதி** – இவற்றுள் ஒன்று முதலாகப் பலவினாலும், **ஓர் புடையொப்பு** – ஒரு சார் ஒத்து வந்ததாயின், **இனமே** – ஆதலின் இனமாம், **எ—று.**

அ ஆக்கள் இடத்தானும் முயற்சியானும், அறாயிரம், ஆறாயிர

---

★ **இந் நூற்பாவின் இவர்தம் உரை மூல நூலில் சிதைந்து உள்ளது.**

மென்னும் பொருளானும் வடிவானும், இ ஈக்கள் இடத்தானும் முயற்சியானும், இராயிரம், ஈராயிர மென்னும் பொருளானும், ஐகாரம் இவற்றுடன் இடத்தானும் முயற்சியானும், உ ஊக்கள் இடத்தானும் முயற்சியானும், உங்கு, ஊங்கென்னும் பொருளானும் வடிவானும், இவற்றுடன் ஔகாரம் இடத்தானும் முயற்சியானும், எ ஏக்கள் இடமுயற்சிகளானும், எழாயிரம், ஏழாயிர மென்னும் பொருளானும் வடிவானும், ஒ ஓக்கள் இடத்தானும் முயற்சியானும், ஒராயிரம், ஓராயிர மென்னும் பொருளானும் வடிவானும், க ஙக்கள் முயற்சியானும் மாத்திரையானும் குளக்கரை, குளங்கரை யென்னும் பொருளானும், சஞக்கள் முயற்சியானும் மாத்திரையானும், மச்சிகன் மஞ்சிகன் என்னும் பொருளானும்,ட ணக்கள் முயற்சியானும் மாத்திரையானும்,மட்குடம்,மண்குடமென்னும் பொருளானும், த நக்கள் முயற்சியானும் மாத்திரையானும், பாழ்த்தூறு, பாழ்ந்தூறு என்னும் பொருளானும், ப மக்கள் முயற்சியானும் மாத்திரையானும், வேய்ப்புறம், வேய்ம்புறமென்னும் பொருளானும், ய ரக்கள் இடமாத்திரையானும், வேயல், வேரலென்னும் பொருளானும், ல வக்கள் இட மாத்திரைகளானும், எல்லா வகை எவ்வகை யென்னும் பொருளானும், ழ ளக்கள் இடமாத்திரையானும், காழக வுடையன், காளகவுடையன் என்னும் பொருளானும், ற னக்கள் முயற்சியானும் மாத்திரையானும், நற்குணம் நன்குண மென்னும் பொருளானும் இவை ஓதவே . . . . . . . . .

## விசாகப் பெருமாளையர்

இது, இனமென்றதற்குக் காரணம் உணர்த்துகின்றது.

இ—ள்.: **தானம்** – பிறப்பிடமும், **முயற்சி** – தொழிலும், **அளவு** – மாத்திரையும், **பொருள்** – பொருளும், **வடிவு** – உருவமும், **ஆன** –ஆகியவிவற்றுள், **ஒன்றாதி** – ஒன்று முதலாக, **ஓர்புடையொப்பு** – ஒருபுடை யொத்தலால், **இனம்** – இனமாம், **எ – று.**

ஆய்தம் தனிநிலை யாகலாலும், மற்றைச் சார்பெழுத்துகளுக்கு அவ்வவற்றின் முதலெழுத்துகளின் பெயர்களே பெயர்களா யடங்கலாலும், சார்பெழுத்து களுக்குப் பெயர் சொல்லாது விட்டார்.

## ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

*இனமாவது யாது?*

தான முயற்சி யளவு பொருள்வடி

வானவொன் றாதியோர் புடையொப் பினமே.

(தானம் முயற்சி அளவு பொருள் வடிவு ஆன ஒன்று ஆதி ஓர்புடை ஒப்பு

இனமே)

**இ—ள்.: தானம்** – பிறப்பிடமும், **முயற்சி** – தொழிலும், **அளவு** – மாத்திரையும், **பொருள்** – பொருளும், **வடிவு** – உருவமும், **ஆன ஒன்று ஆதி** – ஆகிய இவற்றுள் ஒன்று முதலாக, **ஓர் புடை ஒப்பு இனம்** – ஒருபுடை யொத்தல் இனமாம், **எ—று.**

## முகவை இராமானுச கவிராயர்

**இது,** மேல் இன மென்றதற்குக் காரண முணர்த்துகின்றது.

**இ—ள்.: தானம்** – நால்வகைப் பிறப்பிடமும், **முயற்சி** – நால்வகைத் தொழிலும், **அளவு** – மாத்திரையும், **பொருள்** (குறிலினது விகாரமே நெடிலாதலால் அவை யிரண்டிற்கும் பொருள் ஒன்றென்று முதனூலாலே நியமிக்கப்பட்ட) பொருளும், அல்வழி வேற்றுமையிற்படுஞ் செய்கைகளும், **வடிவு** – உருவமும், **ஆன** – ஆயின இவற்றுள், **ஒன்றாதி–** ஒன்று முதலாக, **ஓர்புடை யொப்பு** – ஒருசிறை யொத்திருத்தல், (சிலவொத்திருத்தல்) **இனம்** – 'ஒரெழுத்து இனமாதற்குக் காரணமாம், எ – **று.**

எல்லாம் பொருளாய் அடங்குதலால் இங்கே செய்கையையும் பொருளென்று கூறினார்.

வடிவு, ஒலிவடிவு வரிவடி விரண்டுமெனக் கொள்க.

**வரலாறு.:**

அ ஆ என்பன இரண்டிற்குந் தானம் கண்டம், முயற்சி அங்காத்தல், பொருள் அங்கு ஆங்கு, பலாவரிது பலாவானது, குரங்கரிது குரங்கானது, எனவும், வடிவு அ ஆ எனவும், மாத்திரை யொழிந்தன ஒத்திருத்தலால், இனமாயிற்றெனவும்; க ங இரண்டிற்கும் முயற்சி அடி நா வடியண்ணஞ் சேர்தல், அளவு தனித்தனி அரை மாத்திரை, பொருள் மரங்கரிந்தது, மரங்காய்ந்தது – எனத் தானமும் வடிவுமொழிந்தன ஒத்திருத்தலால் இனமாயிற்றெனவுங் காண்க. ஒழிந்தனவு மிவ்வாறே யொத்து இனமாதல் காண்க.

இச் சூத்திரம், **ஏதுவின் முடித்த லென்னும்** உத்தி: என்னெனின், சார்பெழுத்திற்குப் பெயர் கூறாதொழிந்தார், ஆய்தந்தனி நிலையாதலாலும் – ஒழிந்த சார்பெழுத்திற்குச் – சுட்டுவினாவென் றெடுத்துச் சொல்லியவை யொழித்து – ஒழிந்த முதலெழுத்தின் பெயரே பெயராயடங்குதலாலு மென்க. இதனுள் உத்தி யாது? முடித்தது யாதெனின் இங்கே காட்டிய காரணங்களாற் சார்பெழுத்திற்கும் பெயர் கூறினாரென்பதுதான். இதனுள், ஆதற்குக் காரணமென்பது குறைந்து நின்றது. ஒப்பு – இனமாதற்குக் காரண மென முடித்துக்கொள்க. பெயரிலக்கண முற்றிற்று.

## கா . கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :– தானம்** – பிறப்பிடமும், **முயற்சி** – தொழிலும், **அளவு** – மாத்திரையும், **பொருள் –** அர்த்தமும், **வடிவு** – உருவமும், **ஆன ஒன்று ஆதி** – ஆகிய இவற்றுள் ஒன்று முதலாக, **ஓர்புடை ஒப்பு** – சில ஒத்திருத்தல், **இனம்** – இனமாதற்குக் காரணமாம்.

**குறிப்பு :–**

இங்கு 'பொருள்' என்றது, குறிலின் விகாரமே நெடிலாதலால் அவை யிரண்டிற்கும் பொருள் ஒன்றென்று முதனூலால் நியமிக்கப்பட்ட பொருள் என்றறிக.

வடிவம் ஒலிவடிவம், வரிவடிவுமாம். தானத்தாலும் முயற்சியாலும் ஒத்து வருவன உயிரினமெல்லாம். முயற்சியாலும் அளவாலும் ஒத்து வருவன மெய்யினமெல்லாம். பொருளால் ஒத்து வருவன எ ஏ, ஒ ஓ, ட ண, ப ம முதலியன. சில பொருள் ஒத்து வருவன எது, ஏது; ஒடு, ஓடு; அப்பு, அம்பு; படம், பணம் என்பவற்றிற் காண்க. வடிவரில் ஒத்து வருவன அ, ஆ; உ,ஊ; எ,ஏ; ஒ,ஓ என்பன.

ஆய்தம் தனிநிலையாதலாலும், மற்றைய சார்பெழுத்துக்களுக்கு அவ்வவற்றின் முதலெழுத்துக்களின் பெயர்களே பெயர்களாய், அடங்குதலாலும், சார்பெழுத்துக்களுக்குப் பெயர் சொல்லாது விட்டார்.

இச்சூத்திரம் **ஏதுவின் முடித்தல்** என்னும் உத்தி.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: தானம்** – பிறப்பிடமும், **முயற்சி** – தொழிலும், **அளவு** – மாத்திரையும், **பொருள்–** பொருளும், **வடிவு** – உருவமும், **ஆன ஒன்று ஆதி ஓர்புடை ஒப்பு** – ஆகிய இவற்றுள் ஒன்று முதலாக ஒரு புடை யொத்தலால், **இனம்** – இனமாம், எ – **று.**

முன் காரணம் விளங்காமற் கூறப்பட்ட இனமென்றதை இங்கே காரணங் காட்டி முடிவு செய்தலால், இச்சூத்திரம் **ஏதுவின் முடித்தலென்னு** முத்தி.

ஆய்தந் தனிநிலை யாதலாலும், மற்றைச் சார்பெழுத்துக் களுக்கு அவ்வவற்றின் முதலெழுத்துக் களின் பெயர்களே பெயர்களாய் அடங்குதலாலும் சார்பெழுத்துக்களுக்குப் பெயர் சொல்லாது விட்டார்.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். தானம்** – பிறப்பிடமும், – **முயற்சி** – தொழிலும், – **அளவு** – மாத்திரையும், – **பொருள்** – பொருளும், – **வடிவு** – உருவமும், – **ஆன ஒன்று ஆதி** – ஆகிய இவற்றுள் ஒன்றுமுதலாக, – **ஓர் புடை ஒப்பு** – ஒருபுடை ஒத்தலால், – **இனம் –** இனமாம். **எ–று.**

முன் காரணம் விளங்காமற் கூறப்பட்ட இனமென்றதை இங்கே

காரணங்காட்டி முடிவு செய்தலால், இச்சூத்திரம் ஏதுவின் முடித்தல் என்னும் உத்தி.

ஆய்தம் தனிநிலை யாதலாலும், மற்றைச் சார்பெழுத்துக்களுக்கு அவ்வற்றின் முதலெழுத்துக்களின் பெயர்களே சார்ந்து பெயர்களா யடங்குதலாலும் சார்பெழுத்துக்களுக்குப் பெயர் கூறாது விட்டார்.

**வரலாறு:–**

உயிருமெய்யுங் கலப்புற்ற எழுத்துக்களுக்கு உயிர்மெய் என்று பெயர். ஆய்தம் தனிநிலை, உயிரளபெடை; ஒற்றளபெடை; குற்றியலிகரம்; குற்றியலுகரம்; ஐகாரக் குறுக்கம்; ஔகாரக் குறுக்கம்; மகரக் குறுக்கம்; ஆய்தக் குறுக்கம் என்று பெயராம். அளபெடை என்பதனோடு உயிரென்னு முதலெழுத்தின் பெயர் சார்ந்து உயிரளபெடை யென்றானது காண்க. மற்றவற்றின் பெயர்களையும் பகுத்துக் கூட்டியுணர்க. ஆய்தக் குறுக்கம் சார்பிற் சார்பாதலின் அதற்கு முதலாயிருப்பது முற்றாய்த மென்றுணர்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரி
## சே. கிருஷ்ணமாசாரி

**இ–ள்.: தானம்** – பிறப்பிடமும், **முயற்சி** – பிரயத்தனமும், **அளவு** – மாத்திரையும், **பொருள்** – அர்த்தமும், **வடிவு** – உருவமும், **ஆன**–ஆகிய இவற்றுள், **ஒன்றுஆதி** – ஒன்று முதலாக, **ஓர் புடை ஒப்பு** – ஒருபுடை (சில) ஒத்திருத்தல், **இனம்** – இனமாதற்குக் காரணம்; **எ – று.**

இங்கு, வடிவு – வரிவடிவம்.

தானத்தாலும் முயற்சியாலும் ஒத்து வருவன – உயிரினை மெல்லாம். முயற்சியாலும் அளவாலும் ஒத்து வருவன – இடையினம் ஒழிந்த மெய்கள்.

**பொருளால் ஒத்துவருவன –**

அ ஆ, இ ஈ, உ ஊ, எ ஏ, ஒ ஓ, க ங, ச ஞ, ட ண, த ந, ப ம, ற ன முதலியன. அது, ஆது; இங்கு, ஈங்கு; உங்கு, ஊங்கு; எது, ஏது; ஒடு, ஓடு; குளக்கரை, குளங்கரை; தடச்சோலை, தடஞ்சோலை; படம், பணம்; பாழ்த்தூறு, பாழ்ந்தூறு; அப்பு, அம்பு; நற்கு, நன்கு எனச் சில பொருள் ஒத்து வருதல் காண்க.

**வடிவால் ஒத்து வருவன:–**

இ ஈ; ஐ இ, ஔ உ ஒழிந்த மற்றை உயிர்கள். முன்பு காரணம் விளங்காமற் கூறப்பட்ட இனமென்றதை இங்கே காரணங்காட்டி முடிவுசெய்தலால் இச்சூத்திரம், **ஏதுவின் முடித்தல்** என்னும் உத்தி.

(ஏதுவின் முடித்தல் – காரணங்காட்டி முடிவு செய்தல்.)

## பவானந்தம் பிள்ளை

**இ—ள். தானம் —** பிறப்பிடமும், **முயற்சி** — தொழிலும், **அளவு** — மாத்திரையும், **பொருள்** — பொருளும், **வடிவு** — உருவமும், **ஆன ஒன்று ஆதி ஓர்புடை ஒப்பு** — ஆகிய இவற்றுள் ஒன்று முதலாக ஒரு புடையொத்தலால், **இனம்** — இனமாம். **எ—று.**

முன் காரணம் விளங்காமற் கூறப்பட்ட இனமென்றதை இங்கே காரணங் காட்டி முடிவு செய்தலால், இச்சூத்திரம் '**ஏதுவின் முடித்தல்**' என்னும் உத்தி.

ஆய்தம் தனிநிலையாதலாலும், மற்றைச் சார்பெழுத்துக்களுக்கு அவ்வவற்றின் முதலெழுத்துக்களின் பெயர்களே பெயர்களாய் அடங்குதலாலும், சார்பெழுத்துக்களுக்குப் பெயர் சொல்லாது விட்டார்.

## கா. நமச்சிவாய முதலியார்

**இனம்** — இனமாவது, **தானம் —** பிறப்பிடமும், **முயற்சி** — தொழிலும், **அளவு** — மாத்திரையும், **பொருள்** — பொருளும், **வடிவு** — உருவமும், **ஆன** — ஆகிய இவற்றுள், **ஒன்று ஆதி** — ஒன்று முதலாக, **ஓர்புடை ஒப்பு** — (எவ்வகையேனும்) ஒரு வகையில் ஒத்திருப்பதாகும்.

**வடிவு** — ஒலிவடிவு, வரிவடிவு இரண்டுமெனக் கொள்க. இனமென்றற்கு ஏதுக் (காரணம்) கூறுதலால் இச்சூத்திரம் **ஏதுவின் முடித்தல்** என்னும் உத்தி.

## மோசசு பொன்னையா

பிறப்பிடம், பிறப்பு முயற்சி, மாத்திரை யளவு, பொருள், உரு என்னும் இவற்றுள் ஒன்றும் பலவும் ஓராற்றான் ஒத்திருத்தல் இனமாதற்குத் தகுதியாம், **எ—று.**

இவற்றுள், பிறப்பிடம் உரம், கண்டம், உச்சி, மூக்கு, என்பன. பிறப்பு முயற்சியாவது இதழ், நா, பல், அண்ணம், என்பவற்றின் தொழிலாகும். மாத்திரை 'மூன்றுயி ரளபு' என்ற அளவாகும். பொருள் என்பது அறாயிரம், ஆறாயிரம்; இராயிரம், ஈராயிரம்; குளக்கரை, குளங்கரை; மச்சிகன், மஞ்சிகன் என இவ்வாறு வரும் பொருள் ஒப்புமையாகும். உரு என்பது ஒலிவடிவும் வரி வடிவுமாகும். இவற்றில் ஒன்றும் பலவும் ஒருபுடை ஒத்து வருவனவே இனவெழுத்துக்கள் என்க.

# 3. எழுத்தின் முறை

72. **சிறப்பினு மினத்தினுஞ் செறிந்தீண் டம்முதல்**
**நடத்த றானே முறையா கும்மே.**

**சிறப்பினும் இனத்தினும் செறிந்து ஈண்டு அம் முதல்**
**நடத்தல் தானே முறை ஆகும்மே.**

sirappinum inattinum serintu īntu am mutal
natattal tānē murai ākummē.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

### ORDER

**The way how the alphabet is arranged**

The arrangement of the Alphabet, with 'A' for its first letter, is, in this world, based upon relative importance and relationship.

## மயிலை நாதர்

**எ–ன்,** நிறுத்தமுறையானே முறையாமா றுணர்த்துதல் நுதலிற்று.

**இ–ள்.:** சிறப்பைப் பற்றியும் இனத்தைப் பற்றியும் ஒன்றன்பின் ஒன்று சென்று தொன்றுதொட்டு அகர முதலாக உலகத்து [1]நடக்கின்ற கிடக்கை முறைதானே நூலுள்ளும் முறையாவது, **எ – று.**

அகரம் தானே நடந்தும் நடவா உடம்பை நண்ணியும் நடத்தலானும், அரன் அரி அயன் அருகனென்னும் பரமர் திருநாமத்திற்கு ஒரு முதலாயும், அறம் பொருளின்ப மென்னும் முப்பொருளின் முதற்பொருட்கும், அருள் அன்பு அணி அழகு முதலாயின நற்பொருட்கும் முதலாயும் வருதலானும் முன் வைக்கப்பட்டது.

இடம் முயற்சி பொருள் வடிவுகள் ஒருபுடை யொப்புமையின் அகரத்தின் பின் ஆகாரம் வைக்கப்பட்டது. இடம் முயற்சி பொருள்கள் ஒருபுடை யொப்புமையின் இகரத்தின் பின் ஈகாரம் வைக்கப்பட்டது. இவ்வாறே ஒழிந்த எழுத்துக்கள் தம் கிடக்கை முறைக் காரணம் அறிந்துகொள்க.

முறை முற்றும்.

# சங்கர நமச்சிவாயர் – சிவஞான முனிவர்

**எ–னின்,** நிறுத்த முறையானே முறையாமாறு உணர்–ற்று.

**இ–ள்.:** சிறப்பினானும் இனத்தினானும் பொருந்தி, இவ்வுலகத்து அகரம் முதலாக வழங்குதல்தானே, எழுத்தினது முறையாம், எ–று.

குறிலினது விகாரமே நெடிலாதலான் குறில் முன்னிற்றலின் சிறப்பின் என்றும்,

நெடில் இனமாய்ப் பின்னிற்றலின் இனத்தின் என்றும்,

நாதமாத்திரை யாய் எல்லா எழுத்திற்கும் காரணமாய் முன்னிற்றலின் அம் முதல் என்றும்,

எல்லா எழுத்திற்கும் வைத்த முறைக்காரணம் உயிர்களான் முற்றும் உணர்தலாகா மையின் நடத்தல்தானே என்றும் கூறினார்.

*அங்ஙனமாயினும், நெடுங்கணக்கினுள் அகரமுதல் னகர இறுவாய்க் கிடக்கை முறையாதற்குக் காரணமும் ஒருவாறு காட்டுதும்:–*

*அகரம் முதலிய பன்னீருயிரும் தனித்தியங்கும் ஆற்றல் உடைமையானும், ககரம் முதலிய பதினெட்டு மெய்யும் அகரத்தோடு கூடியல்லது இயங்கும் ஆற்றல் இன்மையானும், அச்சிறப்பும் சிறப்பின்மையும் நோக்கி, உயிர் முன்னும் மெய் பின்னுமாக வைக்கப்பட்டன.*

*இனி, உயிர்களுள் அ இ உ என்பன, முறையே அங்காந்து கூறு முயற்சியானும், அவ்வங்காப்போடு அண்பல்லடி நாவிளிம்புறக் கூறு முயற்சியானும், அவ்வங்காப்போடு இதழ் குவித்துக் கூறும் முயற்சியானும் பிறத்தலான், அப் பிறப்பிடத்து முறையே முறையாக வைக்கப்பட்டன. ஆகார ஈகார ஊகாரங்கள், அகர முதலியவற்றிற்கு இனம் ஆதலின் அவற்றைச் சார வைக்கப்பட்டன.*

*இனி, எகரமாவது அகரக் கூறும் இகரக் கூறும் தம்முள் ஒத்து இசைத்து நரமடங்கல் போல் நிற்பதொன்றாகலானும், ஒகரமாவது அகரக் கூறும் உகரக் கூறும் தம்முள் ஒத்து இசைத்து அவ்வாறு நிற்பதொன்றாகலானும், அவை அவற்றின் பின் முறையே வைக்கப்பட்டன. ஏகார ஓகாரங்கள் இனமாதலின் அவற்றின் பின் முறையே வைக்கப்பட்டன. அகரமும் யகரமும் இகரமும் தம்முள் ஒத்து இசைத்து நிற்பதொன்றாகலின் எகர ஏகாரங்களின் பின்னர் ஐகாரமும், அகரமும் வகரமும் உரகமும் தம்முளொத்து இசைத்து நிற்பதொன்றாகலின் ஒகர ஓகாரங்களின் பின்னர் ஔகாரமும் வைக்கப்பட்டன. இவ்வாறாதல் பற்றி ஏ ஓ ஐ ஔ என்னும் நான்கனையும் வடநூலார் சந்தியக்கரம் என்பர்; கையடனார் நரமடங்கல் போல என்று உவமையும் கூறினார். இக் கருத்தே பற்றி ஆசிரியர்,*

"அம்முன் இகரம் யகரம் என்றிவை
எய்தின் ஐயொத் திசைக்கும் அவ்வோ(டு)
உவ்வும் வவ்வும் ஔவோ ரன்ன"

என்றார். இவ்வாறே ஆசிரியர் தொல்காப்பியனாரும்,

"அகர இகரம் ஐகாரம் ஆகும்"

"அகர உகரம் ஔகாரம் ஆகும்"

எனக் கூறி, ஐ என்னும் நெட்டெழுத்தின் வடிவு புலப்படுத்தற்கு அகர இகரங்களே யன்றி அவற்றிடையே யகரமும் ஒத்திசைக்கும் என்பார்,

"அகரத் திம்பர் யகரப் புள்ளியும்
ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்"

என்றும், 'மெய்ப்பெற' என்ற இலேசானே, ஔ என்னும் நெட்டெழுத்தின் வடிவு புலப்படுத்தற்கு அகர உகரங்களே யன்றி அவற்றிடையே வகரமும் ஒத்திசைக்கும் என்றும், இம்பர் உம்பர் என்றாற் போல்வன காலவகை இட வகைகளான் மயங்குமாகலின், இவற்றின் முதற்கண் நிற்பது யாதோ இறுதிக்கண் நிற்பது யாதோ என்னும் ஐயம் நீங்குதற்கு,

"இகரமும் யகரமும் இறுதி விரவும்"

என்றும் கூறினார். மொழிந்த பொருளோடொன்ற அவ்வயின் மொழியாததனையும் முட்டின்று முடித்தல் என்னும் உத்தியான், எகர ஏகாரங்கள் ஒகர ஓகாரங்கள் அவ்வாறா தலும் கொள்ள வைத்தார். மாபாடியத்துள், ஊகாரத்தின் பின்னின்ற வடவெழுத்து நான்குயிர்க்கும் இடையே ரகர லகரக் கூறுகள் ஒத்து நிற்கும் என ஆசிரியர் பதஞ்சலி யார்க்கு, ஐ ஔ என்புழியும் இடையே யகர வகரக் கூறுகள் விரவி நிற்கும் என்பது உடன்பாடாதல் பெற்றாம். எகர முதலியவற்றுள் அகரக் கூறு குறைவும் இகர உகரக் கூறுகள் மிகுதியுமாம் எனவும் உணர்க. இதுவும் மாபாடியத்தில் கண்டது. ஈண்டுக் கூறியவாற்றானே, அகரம் உயிரெழுத்துக்களினும் கலந்து நிற்குமாறு அறிக.

இனி, மெய்களுள் வலியாரை முன் வைத்து மெலியாரைப் பின் வைத்தல் மரபு ஆகலின், அச்சிறப்பு நோக்கி வல்லெழுத்துக்கள் முன்னும், அவ்வவற்றிற்கு இனமொத்த மெல்லெழுத்துக்கள் அவ்வவற்றின் பின்னுமாக வைக்கப்பட்டன. அவ்விரண்டும் நோக்கி யல்லது இடை நிகரனவாய் ஒலித்தல் அறியப்படாமையின், அதுபற்றி இடையெழுத்துக் கள் அவ்விரு கூற்றிற்கும் பின் வைக்கப்பட்டன. ஒருவாற்றான் ஒத்தலும் ஒருவாற்றான் வேறாதலும் உடைமை பற்றியன்றே இனம் என்று வழங்கப்படுவது; அவற்றுள் இடையெழுத்து ஆறும்

*இடப்பிறப்பான் ஒத்தலும், முயற்சிப்பிறப்பான் வேறாதலும் உடைமையின் இடைக்கணம் என ஓரினமாயின.*

*உயிர்க்கணம், வன்கணம், மென்கணம் என்பவற்றிற்கும் இஃது ஒக்கும்.*

*இனி, க நக்களும், ச ஞக்களும், ட ணக்களும், த நக்களும், ப மக்களும், அடிநா வண்ணம் இடைநாவண்ணம் நுனிநாவண்ணம் அண்பல்லடி இதழ் என்னும் இவற்றின் முயற்சியால் பிறத்தலான், அப்பிறப்பிடத்து முறையே முறையாக வைக்கப்பட்டன.*

*ய ர ல வக்கள் நான்கும் முறையே அடியண்ணமும், இடையண்ணமும், அண்பல் முதலும், இதழும் என்னும் இவற்றின் முயற்சியால் பிறத்தலான், அப்பிறப்பிடத்து முறையே முறையாக வைக்கப்பட்டன.*

*ழகார றகார னகாரங்கள் மூன்றும் தமிழெழுத்து என்பது அறிவித்தற்கு இறுதிக்கண் வைக்கப்பட்டன. அவற்றுள்ளும் ழகாரம் இடையெழுத்தாகலின் அதுபற்றி இடையெழுத்தோடு சார்த்தி, அவற்றிறுதிக்கண் வைக்கப்பட்டது.*

*வடமொழியின் லகரம் ளகரமாகவும் உச்சரிக்கப்படுவதன்றித் தனியே ஓரெழுத்து அன்மையின், அச்சிறப்பின்மை பற்றி இடையெழுத்தாகிய ளகரம் ழகாரத்திற்கும் பின் வைக்கப்பட்டது. இவ்வாறே, உயிருள்ளும் எகர ஒகரங்கள் ஒருவாற்றான் சிறப்பெழுத்தாயினும், பிராகிருதமொழியில் பயின்று வருதலானும், சாமவேதம் உடையாருள் ஒருசாரார் இசைபற்றிக் குழூஉக்குறி போலக் கொண்டு ஓதுபவாகலானும், இறுதிக்கண் வையாது முறைபற்றி ஏகார ஓகாரங்களின் முன் வைக்கப்பட்டன. ஆகையால், முறையாமாறு இவையென உய்த்து உணர்ந்து கொள்க.*

*இவ்வாறு உலகத்தும் பிறப்பொத்தல் பற்றியே இனம் என்று வழங்குபவாகலின், ஈண்டு இனத்தினும் என்றதற்குப் பிற காரணங்களும் உளவேனும், பெரும்பான்மையும் பிறப்பு ஒத்தலே இனம் என்று கொள்க.*

## கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், முறை இலக்கணம் கூறியது.

**இ—ள்.: சிறப்பினும்** – எழுத்துக்கள் தானே ஒன்றுக்கொன்று உயர்ந்த சிறப்பினாலும், **இனத்தினும்** – ஒன்றோடொன்று சேர்ந்த இனத்தானும், **செறிந்து** – ஒன்றன் பின்னே ஒன்று சென்று தொன்றுதொட்டு, **ஈண்டு** – இவ்வுலகின்கண்ணே, **அம்முதல் நடத்தறானே** – அகர முதலாக நடக்கின்ற கிடக்கை முறைதானே, **முறையாகும்மே** – நூலுள்ளும் முறையாம் **எ – று.**

விகாரமின்றி இயல்பிற் பிறத்தலானும் அவ்வுடம்பை நண்ணி அவையிற்றின் தன்மையாய் நிற்றலானும் அகரம் முன்

விகாரமின்றி வைக்கப்பட்டது. அதற்கு இனமாதலின் அகரத்தின் பின் ஆகாரம் வைக்கப்பட்டது.

இடமும் செய்கையும் சுட்டுப் பொருட்டாதலும் நோக்கி அதன்பின் இகரமும் அதற்கு இனமாதலின் அதன்பின் ஈகாரமும் வைக்கப்பட்டது.

இவ்வாறே ஒழிந்த எழுத்துக்கள் தம் கிடக்கை முறை காரணம் அறிந்து கொள்க. முதல் நா முதலண்ணமுறப் பிறத்தலான் மெய்களுட் ககரம் முன் வைக்கப்பட்டது.

தமிழ் எழுத்தென்பது அறிவித்தற்கு றகர னகரங்களை இறுதிக்கண் வைத்தார். உயிர் உடல் போலாகாமையின் அதற்கிடையே ஆய்தம் வைக்கப்பட்டது.

## விசாகப் பெருமாளையர்

**இது,** நிறுத்தமுறையால் எழுத்துகளின் முறையாமாறு உணர்த்துகின்றது.

**இ–ள்.: சிறப்பினும்** – சிறப்பினாலும், **இனத்தினும்** – இனத்தினாலும், **செறிந்து** – பொருந்தி, **ஈண்டு** – இவ்வுலகத்தில், **அம்முதல்** – அகர முதலாக, **நடத்தறானே** – வழங்குதலே, **முறையாகும்** – எழுத்துகளது முறையாம், **எ – று.**

குறிலினது விகாரமே நெடிலாதலாற் குறில் முன்னிற்றல் பற்றிச் சிறப்பினுமென்றார், அம் முறையை நெடுங்கணக் கிலே காண்க.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

*முதலெழுத்துக்கள் வருவதன் முறை யாது?*

ஐ ஔ இஉச் செறிய முதலெழுத்

திவ்விரண் டோரின மாய்வரன் முறையே

(ஐ ஔ இ உச் செறி அ; முதல் எழுத்து இவ்விரண்டு ஓர் இனமாய் வரல் முறையே)

**இ–ள்.: ஐ ஔ இ உச்செறி அ** – ஐகார ஔகாரங்கள் முறையே இகர உகரங்களைத் தழுவிய அகரமாம். ஆக, **முதல் எழுத்து இவ்விரண்டு ஓர்இனமாய் வரல்முறையே** – ஒழிந்த முதலெழுத்தெல்லாம் இவ்விரண்டோரினமாய் வருதன் முறையாம், **எ–று.**

அ இ = ஐ, அ உ = ஔ.

ஐகாரமும் ஔகாரமும் சந்தியக்கரங்களாதலின் அவையொழித் தொழிந்த முதலெழுத்தெல்லாம், பிறப்பிடம், தொழில், அளவு, பொருள், வடிவு என்னும் காரணங்கள் ஒன்றும் பலவும் ஒத்தல் பற்றி இவ்விரண்டோரினமாய் வருமெனக் கொள்க. இடையினமு மவ்வியல்பினவோ வெனின், உயிர்கள் போல மிடற்றுப் பிறந்த வாயு கண்ணுற்றடையப் பிறத்தலான் இடையெழுத்துக்களுள் முன்னர் யகரமும், அதற்கினமாதலின் அதன்பின்னர் ரகரமும்,

இடமும் அளவும் ஒத்தலானுஞ் சந்தவின்பத்திற்கு இடைபுடைமை யானும் அவற்றின்பின்னர் லகரமும், அதற்கினமாதலின் அதன்பின்னர் வகரமும், இடமும் அளவும் வகரத்தோடு முயற்சியும் ஒத்தலானும் சந்தவின்பத்திற்கு இயைபுடைமையானும் அவற்றின்பின்னர் ழகரமும், அதற்கின மாதலின் அதன்பின்னர் ளகரமுமாக வருதலின் அவையும் இவ்விரண்டோரினமாம் என்க.

## முகவை இராமானுச கவிராயர்

**இது**–நிறுத்தமுறையே எழுத்தினது முறையிலக்கமுணர்த்துகின்றது.

**இ–ள்.: சிறப்பினும்** – சிறப்பினாலும், **இனத்தினும்** – மேற்சொல்லிய இனத்தினாலும், **செறிந்து** – ஒன்றின் பின் னொன்று வந்து, **ஈண்டு** – இங்கே, **அம்முதனடத்தறானே** – அகர முதலாக நடந்து வருவதே, **முறையாகும்** – எழுத்துக்களின் (கிடக்கை) முறையாம், **எ – று.**

உயிருள், குறிலினது விகாரமே நெடிலாதலாற் குறில் முன் நிற்பதினாலும், மெய்யுள் வலியோர் மெலியோர்க்கு முன்னிற்றல்போல, வல்லெழுத்து முன்னிற்பதினாலுஞ் சிறப்பினுமென்றும், நெடிலும், மெல்லெழுத்தும் இனமாய் அவற்றின் பின்னிற்றலால் இனத்தினு மென்றும், குறிலைந் தினுள் அகரமானது, சைதந்நியமாத்திர மாய்த் தனித்தும், எல்லா வுயிர்கட்குங் காரணனாகி அவற்றொடு கலந்து மவற்றின் முன்னிற்கும் ஆதிபகவனே போல, நாதமாத்திரையாய்த் தனித்தும், எல்லாவெழுத்திற்குங் காரணமாய் அவற்றொடு கலந்தும், அவற்றின் முன் நிற்றலால் அம்முதலென்றும், எல்லா வெழுத்திற்கும் வைத்த முறைக்காரணம் உயிர்களாலே முற்றும் உணரலாகாமையால், நடத்தறானே யென்றுங்கூறினார். ஆயினும், மெய்களுள் முதல்நா முதலண்ண முறப்பிறக்குஞ் சிறப்புப்பற்றிக் கம்முதலென்றும், வலிமெலி யுணர்ந்தாலல்லது இடைமை யுணரலாகாமையால் அச்சிறப்பின்மைபற்றி அவற்றின்பின் இடையெழுத்தாறும், னகரம் வீடுபெறுதற்கு உரிய ஆண்மகனை யுணர்த்தலால் அச்சிறப்பு நோக்கி இறுதியிலும், அதற்கு இனமாயினும் – றகரம் வல்லெழுத்தாதலால் அதன் முன்னும் வைக்கப்பட்டன வென உய்த்துணர்ந்துகொள்க. முறையிலக்கண முற்றிற்று.

## கா . கோபாலாசாரி –தி.கோ.ரங்காசாரி

**உரை :– சிறப்பினும்** – சிறப்பினாலும், **இனத்திலும்** – இனத்தினாலும், **செறிந்து** – (ஒன்றின்பின் ஒன்றாக) வந்து, **ஈண்டு** – இவ்வுலகத்தில், **நடத்தல் தானே** – அகரமுதலாக வழங்கி) வருதலே, **முறை ஆகும்** – எழுத்துக்கள் நிற்கும் முறையாம்.

**குறிப்பு** :–உயிர் பன்னிரண்டும் தனித்தியங்கும்

வன்மையுடைமையின் அவ்வன்மையில்லாத மெய்யெழுத்துக் களுக்கு முன்னும், உயிரெழுத்துக் களுள்ளும், குறிலைந்தும் மற்றொன்றின் விகாரமல்லா மையின் தமது விகாரமாகிய நெடில்களுக்கு முன்னும், மெய்களுள், வல்லினமாறும் மெல்லின இடையினங்களினும் வன்மையாக ஒலித்தலின் வலியோர் மெலியார் முன் நிற்றல்போல அம்மெல்லின இடை யினங்களின் முன்னும் நிற்பது சிறப்பினால் என அறிக. நெட்டெழுத்துக்கள் தத்தமக்கின மொத்த குற்றெழுத்துக் களின் பின்னும், மெல்லெழுத்துக்கள் தத்தமக்கின மொத்த வல்லெழுத்துக்களின் பின்னும் நிற்பது இனத்தினாலெனக் கொள்க. வலி மெலி உணர்ந்தாலல்லது இடைமை உணரலா காமையின் அது அவ்வன்மை மென்மைகளின் பின்வைக்கப் பட்டது. கரம் வீடு பெறற்குரிய ஆண்மகனையுணர்த்தும் சிறப்புப்பற்றி இறுதியில் வைக்கப்பட்டது. அகரம், சைதன்னியமாத்திரையாய்த் தனித்தும், எல்லா உயிர்கட்கும் காரணமாகி அவற்றோடு கலந்தும், அவற்றின் முன்னிற்கும் ஆதிபகவனே போல, எல்லா வெழுத்திற்குங் காரணமாய் அவற்றோடு கலந்து அவற்றின் முன்னிற்றலால் 'அம்முதல்' என்றார். மற்றவைகளின் முறைக்காரண விவரங்களை விருத்தி யுரையிற் கண்டுணர்க. இங்கு எழுதின் விரியும்.

## ஆறுமுக நாவலர்

**இ—ள்.: சிறப்பினும் இனத்தினும் செறிந்து** – சிறப்பினாலும் இனத்தினாலும் பொருந்தி, **ஈண்டு அம்முதல் நடத்தல் தானே** – இவ்வுலகத்தில் அகர முதலாக வழங்குதலே, **முறை ஆகும்** – எழுத்துக்களது முறையாம், **எ — று.**

தனித்தியங்கும் வன்மையுடைய உயிரெழுத்துக்கள் அவ் வன்மையில்லாத மெய்யெழுத்துக்களுக்கு முன் நிற்பதும், குறிலினது விகாரமே நெடிலாதலாற் குற்றெழுத்துக்கள் நெட்டெழுத்துக்களுக்கு முன் நிற்பதும், வலியவர் மெலியவருக்கு முன்நிற்றல் போல வல்லெழுத்துக்கள் மெல்லெழுத்துக்களுக்கு முன் நிற்பதுஞ் சிறப்பினால் எனவும், குற்றெழுத்துக்களுக்குப் பின் அவ்வவற்றிற்கு இனமொத்த நெட்டெழுத்துக்கள் நிற்பதும், வல்லெழுத்துக்களுக்குப் பின் அவ்வவற்றிற்கு இனமொத்த மெல்லெழுத்துக்கள் நிற்பதும் இனத்தினால் எனவுங் கொள்க.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ—ள். சிறப்பினும் இனத்தினும் செறிந்து** – சிறப்பினாலும் இனத்தினாலும் பொருந்தி, **ஈண்டு** – இவ்வுலகத்தில், **அ முதல் நடத்தல் தானே** – அகரமுதலாக வழங்குதலே, **முறை ஆகும்** – எழுத்துக்களது முறையாம்.

**எழுத்துக்களின் முறை: –**

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ ஃ

க ங ச ஞ ட ண த ந ப ம ய ர ல வ ழ ள ற ன. இந்நெடுங்கணக்கு வரிசையே முறையாம்.

தனித்தியங்கும் ஆற்றல் உடைய உயிரெழுத்துக்கள் அவ்வாற்றலில்லாத மெய்யெழுத்துக்களுக்கு முன் நிற்றலும், குறிலினது விகாரமே நெடிலாதலாற் குற்றெழுத்துக்கள் நெட்டெழுத்துகளுக்கு முன் நிற்றலும், வலியவர் மெலியவருக்கு முன் நிற்றல் போல் வல்லெழுத்துக்கள் மெல்லெழுத்துக்களுக்கு முன் நிற்றலுஞ் சிறப்பினால் எனவும்; குற்றெழுத்துக்களுக்குப் பின் அவ்வவற்றிற்கு இனமொத்த நெட்டெழுத்துக்கள் நிற்றலும், வல்லெழுத்துக்களுக்குப் பின் அவ்வவற்றிற்கு இனமொத்த மெல்லெழுத்துக்கள் நிற்றலும் இனத்தினால் எனவுங் கொள்க. வலி மெலிகளை உணர்ந்தாலல்லது இடைமை உணரலாகாமையால் அச் சிறப்பின்மை பற்றி இடையெழுத்தாறும் அவற்றின் பின் வைக்கப்பட்டன.

*னஃகா னொற்றே யாடூஉ வறிசொல்*

என்பது தொல்காப்பியமாதலின் னகரம் வீடுபேற்றிற் குரிய மக்கட் பிறப்பிற் சிறந்த ஆடவனை யுணர்த்துதலால் அச்சிறப்பு நோக்கி இறுதியிலும், அதனினமாகிய றகரம் வல்லெழுத்தாதலால் அதன் முன்னும் வைக்கப்பட்டன. வைத்த முறைக்காரணம் உயிர்களாலே முற்று முணரலாகாமையால் நடத்தறானே யென்றுங் கூறினார். ஆற்றல் – வல்லபம்.

## வை.மு. சடகோபராமானுசாசாரி

## சே. கிருஷ்ணமாசாரி

**இ–ள்.: சிறப்பினும்** – சிறப்பினாலும், **இனத்தினும்** – இனத்தினாலும், **செறிந்து** – (ஒன்றன்பின் ஒன்று) பொருந்தி, **ஈண்டு** – இவ்வுலகத்தில், **அ முதல் நடத்தல் தானே** – அகரம் முதலாகத் தொன்றுதொட்டு வழங்குதலே, **முறை ஆகும்** – (எழுத்துக்கள் நிற்கும்) முறையாம்; **எ – று.**

தனித்து இயங்கும் ஆற்றலுடைய உயிரெழுத்துக்கள் அவ்வுயிர்களோடு கூடியல்லது இயங்கும் ஆற்றலில்லாத மெய்யெழுத்துக்கட்கு முன்நிற்பதும், குற்றெழுத்துக்கள் தமது விகாரங்களாகிய நெட்டெழுத்துக்கட்கு முன் நிற்பதும், வலியார் மெலியார்க்கு முன் நிற்றல் போல வல்லெழுத்துக்கள் மெல்லெழுத்துக்கட்கு முன் நிற்பதும் சிறப்பினால் எனவும்,

குற்றெழுத்துக்கட்குப் பின் அவ்வவற்றின் இனமொத்த நெட்டெழுத்துக்கள் நிற்பதும், வல்லெழுத்துக்கட்குப் பின் அவ்வவற்றின் இனமொத்த மெல்லெழுத்துக்கள் நிற்பதும் இனத்தினால் எனவும் கொள்க.

அகரம் முதல் னகர மீறாகப் பொருந்திய முறைமைக்குக் காரணம்

## பவானந்தம் பிள்ளை

**இ—ள். சிறப்பினும் இனத்தினும் செறிந்து** – சிறப்பினாலும் இனத்தினாலும் பொருந்தி, **ஈண்டு அம்முதல் நடத்தல் தானே** – இங்கே அகரமுதலாக வழங்குதலே, **முறை ஆகும்** – எழுத்துக்களது கிடக்கை முறையாம். எ—று.

> தனித்தியங்கும் வன்மையுடைய உயிலெபத்துக்கள் அவ்வன்மையில்லாத மெய்யெழுத்துக்களுக்கு முன் நிற்பதும், குறிலினது விகாரமே நெடிலாதலாற் குற்றெழுத்துக்கள் நெட்டெழுத்துக்களுக்கு முன் நிற்பதும், வலியவர் மெலியவருக்கு முன் நிற்றல்போல வல்லெழுத்துக்கள் மெல்லெழுத்துக்களுக்கு முன் நிற்பதும் கிறப்பினால் எனவும்; குற்றெழுத்துக்களுக்குப் பின் அவ்வவற்றிற்கு இன மொத்த நெட்டெழுத்துக்கள் நிற்பதும், வல்லெழுத்துக்களுக்குப் பின் அவ்வவற்றிற்கு இனமொத்த மெல்லெழுத்துக்கள் நிற்பதும் இனத்தினால் எனவும் கொள்க.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ—ள். சிறப்பினும்** – சிறப்பினாலும், **இனத்தினும்** – இனத்தினாலும், **செறிந்து** – (ஒன்றின்பினொன்று) பொருந்தி, **ஈண்டு** – இவ்வுலகத்தில், **அ முதல்** – அகர முதலாக, **நடத்தல் தானே** – வழங்குதலே, **முறை ஆகும்** – (எழுத்துக்களது) முறையாம், **எ—று.**

**பொ—ரை.:**

> சிறப்பினாலும், இனத்தினாலும் (ஒன்றின்பினொன்று) பொருந்தி, இவ் வுலகத்தில் அகர முதலாக வழங்குதலே எழுத்துக்களது கிடக்கைமுறையாம்.
>
> தனித்தியங்கும் ஆற்றலுடைய பன்னிரண்டு உயிர்களும் அவ்வுயிர்களோடு கூடியல்லது இயங்கும் ஆற்றலில்லாத பதினெட்டு மெய்களுக்கு முன் நிற்பதும், குற்றெழுத்துக்கள் தமது விகாரங்களாகிய நெட்டெழுத்துக்களின் முன் நிற்பதும், வலியோர் மெலியோர்க்கு முன் நிற்றல் போல, வல்லெழுத்துக்கள் மெல்லெழுத்துக்களுக்கு முன் நிற்பதும் சிறப்பினால் எனவும், குற்றெழுத்துக் களுக்குப் பின் அவ்வவற்றின் இனமொத்த நெட்டெழுத்துக்கள் நிற்பதும், வல்லெழுத்துக்குப் பின் அவ்வவற்றின் இனமொத்த மெல்லெழுத்துக்கள் நிற்பதும் இனத்தினா லெனவுங் கொள்க. முறையின் விரிவை விரித்தியுட் காண்க.

## கா. நமச்சிவாய முதலியார்

**சிறப்பின் இனத்தினும்** – சிறப்பினாலும் இனத்தினாலும், **செறிந்து** – (ஒன்றன்பினொன்று) பொருந்தி, **ஈண்டு** – இங்கு, **அ முதல் நடத்தல் தானே** – அகரமுதலாக வழங்குதலே, **முறையாகும்** – (எழுத்துக்களது) முறையாம்.

> குறிலினது விகாரமே நெடிலாதலால் குறில்முன்னிற்றல் பற்றிச் **"சிறப்பினும்"** என்றார். அம் முறையை நெடுங்கணக்கில் காண்க.

## மோசகு பொன்னையா

சிறப்பாலும் இனத்தாலும் பொருந்தி அகர முதலாக வழங்குதலே நெடுங்கணக்கு முறையாகும், **எ–று.**

> அகரக் கூறு எல்லா உயிர்களிலும் அமைந்துள்ளதாலும், அகரம் பெற்றே மெய்கள் இயங்குவதாலும், அகரம் சிறப்பால் நெடுங்கணக்கின் முதலெழுத் தாயிற்று. தனித்து இயங்கவல்ல சிறப்பாலும், அஃதின்மையாலும் உயிரெழுத்துக் கள் முன்னும் மெய்யெழுத்துக்கள் பின்னுமாக அமைத்துக் கொள்ளப்பட்டன.
>
> உயிரெழுத்துக்களுள், அ, இ, உ என்னும் மூன்றுமே அடிப்படை உயிர்கள் என்ப. அவற்றுள் அகரம் நா அடியில் பதிந்திருக்கும் நிலையிலும், இகரம் நா முன்னண்ணம் நோக்கி மேல் எழும் நிலையிலும், உகரம் நா உண்ணாக்கை நோக்கி மேல் எழும் நிலையிலும் பிறத்தலான், அச் சிறப்பு நோக்கி அகரமும் அதன் இன எழுத்தான ஆகாரமும் முதலிலும், இகரமும் அதன் இன எழுத்தான ஈகாரமும் அவற்றை அடுத்தும், உகரமும் அதன் இன எழுத்தான ஊகாரமும் அவற்றை அடுத்தும் முதல்வைப்பாக வைக்கப்பட்டன.அகர இகரங்களின் பிறப்பிடங்களுக்கு இடைப்பட்ட நிலையில் எகரம் பிறப்பதால் எகரமும் அதன் இன எழுத்தான ஏகாரமும், அகரக் கூறும் இகரக் கூறும் பொருந்திய ஐகாரமும் இரண்டாம் வைப்பாக ஊகாரத்தை அடுத்து முறையே வைக்கப்பட்டன. அகர உகரங்களின் பிறப்பிடங்களுக்கு இடைப்பட்ட நிலையில் ஒகரம் பிறப்பதால், ஒகரமும் அதன் இன எழுத்தான ஓகாரமும் அகரக் கூறும் உகரக் கூறும் பொருந்திய ஔகாரமும் மூன்றாம் வைப்பாக ஐகாரத்தை அடுத்து முறையே வைக்கப்பட்டன.
>
> வலியார் முன்னும் மெலியார் பின்னும் நிற்றல் முறையாதலின், அம் முறையே பின்னண்ணத் தொடங்கி இதழ் வரை முன்னோக்கி அமைந்த பிறப்பிடம் நோக்கி, க் ங் (பின்னண்ணம்); ச் ஞ் (இடையண்ணம்); ட் ண் (இடையண்ண நாமடி); த் ந் (பல்); ப் ம் (இதழ்) என்ற மெய்யெழுத்துக்கள் முறையே இடம் பெற்றன. நுனியண்ண வல், மெல் ஒலிகளான ற் ன் என்பன

கலப்பொலிகளாக அமைந்துள்ள சிறப்பின்மையால் உயிருக்கும் மெய்களுக்கும் இடையான தன்மை பெற்று ஓரினமாக அமைந்த ஆறு இடை யினங்களுக்கும் முன்னர் இடமளித்து இறுதியில் நின்றன.

ஒலிப்புப் பெற்று மெய்ச் சிறப்பிழந்த இடையின மெய்களை இரண்டாம் வைப்பாக வைக்கத் தொடங்கி, முதன் முயற்சியால், இடை யண்ணத்தில் பிறக்கும் ய், முன்னண்ணத்திற் பிறக்கும் ர், அண்பல்லிடத்துப் பிறக்கும் ல், பல்லிதழிடத்துப் பிறக்கும் வ், இவற்றை முறையே முன்வைத்து, முதன் முயற்சியோடு துணை முயற்சியும் பெற்றுப் பிறக்கும் இடையின வளைநா மெய்கள் இரண்டினுள் நடு அண்ணத்திற் பிறக்கும் ழ், முன்னும், முன்னண்ணத்திற் பிறக்கும் ன், பின்னுமாக வைத்து முடிக்கப்பட்டன.

இவ்வாறு சிறப்பாலும் இனத்தாலும் முறைமை யெய்தி அமைந்து கிடக்கும் தமிழ் நெடுங்கணக்கு மிகப் பழங்காலத்தில் பினீசியருடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்த காலத்தில் அமைத்துக் கொள்ளப்பட்டதாகலாம் என்று டாக்டர் பர்ணல் கருதுகிறார்.

ஆசிரியர் 'நடத்தல் தானே முறையாகும்' என்றதால் அதன் பழமையையும், முற்றிலும் உணர்த்தலாகா முறைமையையும் குறிப்பிட்டமைந்தார் என்க.

(18)

## 4. எழுத்தின் பிறப்பு

**73. நிறையுயிர் முயற்சியி னுள்வளி துரப்ப**
**எழுந்தணுத் திரளுரங் கண்ட முச்சி**
**மூக்குற் [1]றிதழ்நாப் பல்லணத் தொழிலின்**
**வெவ்வே றெழுத்தொலி யாய்வரல் பிறப்பே.**

**நிறை உயிர் முயற்சியின் உள் வளி துரப்ப**
**எழுந்த அணுத் திரள் உரன் கண்டம் உச்சி**
**மூக்கு உற்று இதழ் நாப் பல் அணத் தொழிலின்**
**வெவ்வேறு எழுத்து ஒலி ஆய் வரல் பிறப்பே.**

---

பாட வேறுபாடு :–

1. றிதணா

nịrai uyir muyaṛsiyi̲n uḻ vaḻi
ṭurappa
eḷunṭa aṇuṭ ṭiraḻ ura̲n kaṇtam
ussi
mūkku uṛṛu iṭaḷ nāp pal aṇaṭ
ṭoḷili̲n
vevvēṛu eḷuṭṭu oli āy varal
piṛappē.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

### PRODUCTION

### The production of letter-sounds

The various letters are produced by the articulate sounds, which, on being aroused by the winds within a perfect organism, proceed from the chest, throat, head and nose, and become ultimately modified by the several actions of the lips, tongue, teeth and palate.

## ஒப்புமைப் பகுதி

உந்தி முதலா முந்துவளி தோன்றி
தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇ
பல்லும் இதழும் நாவும் மூக்கும்
அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான்
உறுப்பு உற்று அமைய நெற்றிப்பட நாடி
எல்லா எழுத்தும் சொல்லுங் காலை
பிறப்பின் ஆக்கம் வேறுவேறு இயல
திறப்படத் தெரியும் காட்சியான

(தொல். எழு. : 83)

உந்தியிற் றோன்றும் உதான வளிப்பிறந்து
கந்தமலி நெஞ்சுதலை கண்டத்து – வந்தபின்
ஆசினா அண்ணம் இதழெயிறு மூக்கெனப்
பேசும் எழுத்தின் பிறப்பு

(நேமி. : 6)

உந்தி முதலெழுங் காற்றுப் பிறந்துர முஞ்சிரமும்

---

பாட வேறுபாடு :-

**பந்த மலி கண்டமுமூக்கும் உற்றண்ணம் பல்லுடனே**
**முந்து மிதழ்நா மொழியுறுப் பாகு முயற்சியினால்**
**வந்து நிகழு மெழுத்தென்று சொல்லுவர் வாணுதலே.**

( வீ. : 6)

## மயிலை நாதர்

எ – ன், நிறுத்தமுறையானே எழுத்துக்களது [1]பிறப்பு வேறுபாடு உணர்த்துவா னெடுத்துக் கொண்டார். அவற்றுள், இச்சூத்திரம் அதன் பொதுவிதி யுணர்த்துத னுதலிற்று.

இ–ள்.:–விகாரப்படாது தன்னியல்பினின்ற உயிர், மொழிவலென்னு முள்ளந்தோற்றி முயல உண்ணின்ற வளி கடாவ ஆண்டு நின்ற ஒளியணு வீட்டம் விசைத்தெழுந்து நெஞ்சே மிடறே உச்சியே மூக்கே யென்றிந் நான்கிடத்தையும் முதலடைந்து இதழே நாவே பல்லே அண்ணமே என்றிந் நாலிடத்தையும் பின்பு அடைய இவற்றது முயற்சி விகற்பத்தாற் பல்வேறு வகைப்பட்ட எழுத்தொலியாய்ப் புலப்படல் எழுத்துக்களது பிறப்பாம், **எ – று.**

என்னை?
**“ஆற்ற லுடையுயிர்**
**[1]முயற்சியி னணுவியைந்**
**தேற்றன வொலியாய்த் தோற்றுதல் பிறப்பே”**
என்றார் ஆசிரியர் அவிநயனாருமெனக் கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ–னின்,** நிறுத்தமுறையானே பிறப்பாமாறு உணர்த்துவான் தொடங்கி அதன் பொதுவிதி **உணர்–ற்று.**

**இ–ள்.:** ஒலியெழுத்தாகிய காரியத்திற்கு வேண்டும் காரணங்களில் ஒருவாற்றானும் குறைவின்றி நிறைந்த உயிரினது முயற்சியால் உள்நின்ற வளியெழுப்ப எழும் செவிப்புலனாம் அணுத்திரள், உரம் முதலிய நான்கு இடத்தையும் பொருந்தி இதழ் முதலிய நான்கின் தொழில்களால் வெவ்வேறு எழுத்தாகிய ஒலிகளாய்த் தோன்றுதல் அவற்றின் பிறப்பாம், **எ – று.**

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்,** எழுத்துக்களது பிறப்பு இன்னதெனக் கூறியது.

**இ–ள்.: நிறையுயிர்** – விகாரப்படாமல் தன்னியல்பில் நின்ற உயிர், **முயற்சியில்** – மொழிவேனென்னும் உள்ளம் தோன்றிய முயற்சியினாலே, **உள் வளி துரப்ப** – உள்ளே நின்ற வாயுக்கள் எழுப்ப, **எழும் அணுத்திரள்** – ஆண்டு நின்ற

---

**பாட வேறுபாடு :–**

**1. பிறவி வேறுபாடு**

**2. முயற்சியான்**

ஒலியணுக் கூட்டங்கள் விசைத்து எழுந்து, **உரம் கண்டம் உச்சி மூக்குற்று** – நெஞ்சும் மிடறும் தலையும் மூக்குமென்னும் இந்நான்கு இடத்தையும் முதலடைந்து, **இதழ் நாப் பல்லணத் தொழிலின்** – இதழும் நாவும் பல்லும் அண்ணமுமென்னும் இந்நான்கிடத்தையும் பின் அடைந்து இவற்றது முயற்சி விகற்பத்தால், **வெவ்வேறு எழுத்தொலியாய்** – பல வேறு வகைப்பட்ட எழுத்தொலியாய், **வரல் பிறப்பே** – புலப்படல் எழுத்துக்களது பிறப்பாம், **எ–று.**

## விசாகப் பெருமாளையர்

**இது**, நிறுத்தமுறையால் எழுத்துகளின் பிறப்பாமாறு அறிவிக்கத் தொடங்கி அப் பிறப்பின் பொதுவிதி உணர்த்துகின்றது.

**இ–ள்.: நிறை** – ஒலியெழுத்திற்கு வேண்டுங் காரணங்களிற் குறைவின்றி நிறைந்த, **உயிர்** – உயிரினது, **முயற்சியின்** – முயற்சியால், **உள்** – உள்ளே நின்ற, **வளி** – காற்றானது, **துரப்ப** – எழுப்ப, **எழும்** – எழுகின்ற, **அணுத்திரள்** – செவிப்புலனாமணுக் கூட்டம், **உரம்**–மார்பும், **கண்டம்** – கழுத்தும், **உச்சி** – தலையும், **மூக்கு** – நாசியும் ஆகிய நான்கிடத்தையும், **உற்று** – பொருந்தி, **இதழ்** – உதடும், **நா** – நாக்கும், **பல்** – பல்லும், **அணம்** – மேல்வாயும் ஆகிய நான்கனுடைய, **தொழிலின்** – முயற்சிகளால், **வெவ்வேறு** – வேறு வேறு, **எழுத்து** – எழுத்தாகிய, **ஒலியாய்** – ஓசைகளாய், **வரல்** – தோன்றுதல், **பிறப்பு** – அவற்றின் பிறப்பாம், **எ – று.**

## ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

*எழுத்துக்களின் பிறப்பாவது யாது?*

நிறையுயிர் முயற்சிய னுள்வளி துரப்ப
எழுமணுத் திரளுரங் கண்ட முச்சி
மூக்குற் றிதழ்நாப் பல்லணத் தொழிலின்
வெவ்வே றெழுத்தொலி யாய்வரல் பிறப்பே.

(நிறை உயிர் முயற்சியின் உள்வளி துரப்ப
எழும் அணுத்திரள்; உரம் கண்டம் உச்சி
மூக்கு, உற்று, இதழ் நா பல் அணத் தொழிலின்
வெவ்வேறு எழுத்து ஒலியாய் வரல் பிறப்பு ஏ)

**இ–ள்.: நிறை உயிர் முயற்சியின்** – ஒலியெழுத்தாகிய காரியத்திற்கு வேண்டும் காரணங்களிற் குறைவின்றி நிறைந்த உயிரினது முயற்சியால், **உள்வளி** – உள்ளே நின்ற உதானன் என்னுங் காற்றானது, **துரப்ப** – எழுப்ப, **எழும்** – எழுகின்ற, **அணுத்திரள்** – செவிப்புலனா மணுக்கூட்டம், உரம் கண்டம் உச்சி மூக்கு மார்புங் கழுத்துந் தலையும் நாசியுமாகிய நான்கிடத்தையும், **உற்று** – பொருந்தி, **இதழ் நா பல் அணத்தொழிலின்** – உதடும் நாக்கும் பல்லும் மேல்வாயுமாகிய நான்கனுடைய முயற்சிகளால், **வெவ்வேறு எழுத்தொலியாய் வரல் பிறப்பு** – வேறு வேறு எழுத்தாகிய ஓசைகளாய்த் தோன்றுதல் அவற்றின் பிறப்பாம், **எ–று.**

*எழுத்துக்களின் பிறப்பிடங்களெவை?*

"உரங்கண்ட முச்சிமூக்கு"

*எவ்வுறுப்புக்களது தொழிலா லெழுத்துக்கள் பிறப்பன?*

"இதழ்நாப்பல்லணத் தொழிலின்"

*உதானன் என்னும் உள்வளி எதனாற் றொழிற்படும்?*

"நிறையுயிர் முயற்சியின்"

*அணுத்திரள் எதனாற் றொழிற் படுவன?*

'உள்வளிதுரப்ப எழும் அணுத்திரள்"

## முகவை இராமானுச கவிராயர்

**இ**து, நிறுத்தமுறையே யெழுத்துக்களின் பிறப்பிலக்கண முணர்த்தத் தொடங்கி அதன் பொதுவிலக்கண முணர்த்துகின்றது.

**இ–ள்.: நிறையுயிர்** – (ஒலியெழுத்தாகிய காரியத்திற்கு வேண்டுங் காரணங்கள்) நிறைந்த வுயிரினது, **முயற்சியின்**–தொழிலினாலே, **உள்வளி** – உள்ளே நின்ற உதானனென்னுங் காற்றானது, **துரப்ப** – எழுப்ப, **எழும்** – எழாநின்ற, **அணுத்திரள்** – (செவிக்கு விடையமாகிய) நாதமானது, **உரம்** – மார்பும், **கண்டம்** – கழுத்தும், **உச்சி** – தலையும், **மூக்கு** – நாசியுமாகிய இந்த நான்கிடத்தையும், **உற்று**–பொருந்தி, **இதழ்** – உதடும், **நா** – நாக்கும், **பல்** – தந்தமும், **அண்ணத்தொழிலின்** – கீழ்வாயுமாகிய இந்தநான்கு அவயவங்களினுடைய முயற்சியினாலே, **வெவ்வேறு** – வேறுவேறு வகைப்பட்ட, **எழுத்தொலியாய் வரல்** – எழுத்தோசைகளாய் வருவது, **பிறப்பு** – அவ் வெழுத்துக்களின் பிறப்பாம், **எ – று.**

## கா . கோபாலாசாரி –தி.கோ.ரங்காசாரி

**உரை :– நிறை** – (ஒலியெழுத்திற்கு வேண்டுங் காரணங்களிற் குறைவின்றி) நிறைந்த, **உயிர்** – உயிரினது, **முயற்சியின்** – பிரயத்தினத்தால், **உள்வளிதுரப்ப** – உள்ளேநின்ற உதானவாயுவானது எழுப்ப, **எழும்** – கிளம்புகின்ற, **அணுதிரள்** – (செவியாலறியப்படும்) அணுக் கூட்டம், **உரம்** – மார்பும், **கண்டம்** – கழுத்தும், **உச்சி** – தலையும், **மூக்கு** – மூக்கும் (ஆகிய இந்நான்கிடத்தையும்), **உற்று** – பொருந்தி, **இதழ்** – உதடும், **நா** – நாக்கும், **பல்** – பல்லும், **அணம்** – வாயும் (ஆகிய இந்நான்கின்), **தொழிலின்** – முயற்சியால், **வெவ்வேறு** – வெவ்வேறு வகைப்பட்ட, **எழுத்து ஒலி ஆய்வரல்** – எழுத்தோசைகளாய் வருவது, பிறப்பு – எழுத்துக்களின் பிறப்பாம்.

குறிப்பு :– அணம் என்றது மேல்வாய் கீழ்வாய்களை

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: நிறை உயிர் முயற்சியின்** – ஒலியெழுத்தாகிய காரியத்திற்கு

வேண்டுங் காரணங்களிற் குறை வின்றி நிறைந்த உயிரினது முயற்சியால், **உள் வளி துரப்ப எழும் அணுத்திரள்**—உள்ளே நின்ற உதானன் என்னும் காற்றானது எழுப்ப எழுகின்ற செவிப்புலனாம் அணுக்கூட்டம், **உரம் கண்டம் உச்சி மூக்கு உற்று** – மார்புங் கழுத்துந் தலையும் நாசியுமாகிய நான்கிடத்தையும் பொருந்தி, **இதழ் நாப் பல் அணத்தொழிலின்** – உதடும் நாக்கும் பல்லும் மேல் வாயுமாகிய நான்கனுடைய முயற்சிகளால், **வெவ்வேறு எழுத்து ஒலி ஆய் வரல்** – வேறு வேறு எழுத்தாகிய ஓசைகளாய்த் தோன்றுதல், **பிறப்பு** – அவற்றின் பிறப்பாம், எ – று.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ—ள். நிறை உயிர் முயற்சியின்** – (ஒலியெழுத்தாகிய காரியத்திற்கு வேண்டுங்காரணங்களிற் குறைவின்றி) நிறைந்த உயிரினது முயற்சியால், – **உள் வளி துரப்ப எழும் அணுத்திரள்** – உள்ளே நின்ற (உதானன் என்னுங்) காற்றானது எழுப்ப எழுகின்ற செவிப்புலனாம் நாதமானது, **உரம் கண்டம் உச்சி மூக்கு உற்று** – மார்புங் கழுத்துந் தலையும் நாசியுமாகிய நான்கிடத்தையும் பொருந்தி, – **இதழ் நாப் பல் அண்ணத் தொழிலின்** – உதடும் நாக்கும் பல்லும் மேல்வாயுமாகிய நான்கன் முயற்சிகளால், – **வெவ்வேறு எழுத்து ஒலியாய் வரல்** – வேறு வேறு எழுத்தோசைகளாய்த் தோன்றுதல் – **பிறப்பு** – அவற்றின் பிறப்பாம். எ—று.

எழுத்துக்கள் பிறக்கும் முயற்சி அகமுயற்சி எனவும் புறமுயற்சி எனவும் இருவகைப்படும்.

உரம், கண்டம், உச்சி, மூக்கு என்னு நான்கும் அகமுயற்சிக் குரியன.

இதழ், நா, பல், அண்ணம் என்னும் நான்கும் புறமுயற்சிக்குரியன.

அகம் எனினும் உள் எனினும் ஒக்கும்.

புறம் எனினும் வெளி எனினும் ஒக்கும்.

முயற்சி எனினும் யத்தனம் எனினும் ஒக்கும்.

## வை.மு. சடகோபராமானுசாசாரி

## சே. கிருஷ்ணமாசாரி

**இ—ள்.: நிறை** – (ஒலியெழுத்திற்கு வேண்டுங் காரணங்களிற் குறைவின்றி) நிறைந்த, **உயிர்** – உயிரினது, **முயற்சியின்** – (உச்சரிக்க வேண்டுமென்னும்) முயற்சியால், **உள் வளி துரப்ப** – உள்ளேநின்ற காற்றானது எழுப்ப, **எழும்** – எழுகின்ற, **அணு திரள்** – (செவிப்புலனாம்) அணுக்கூட்டம், **உரம் கண்டம் உச்சி மூக்கு** – மார்பும் கழுத்தும் தலையும் மூக்கும் ஆகிய நான்கிடத்தையும், **உற்று** – (முதலிற்) பொருந்தி, (பின்பு), **இதழ் நா பல் அணம்**—உதடும் நாக்கும் பல்லும் வாயும் ஆகிய நான்கினுடைய, **தொழிலின்** – முயற்சி வேறுபாட்டினால், **வெவ்வேறு எழுத்து ஒலி ஆய்**—வேறு வேறுவகைப்பட்ட எழுத்தாகிய ஓசைகளாய், **வரல்**— தோன்றுதல், **பிறப்பு** – (அவற்றின்) பிறப்பாம்; எ – று, அணம் – அண்ணம்; மேல்வாயும் கீழ்வாயும்.

## பவானந்தம் பிள்ளை

**இ—ள். நிறை உயிர் முயற்சியின்** – (ஒலியெழுத்தாகிய காரியத்திற்கு

வேண்டுங் காரணங்கள்) நிறைந்த உயிரினது முயற்சியால், **உள் வளி துரப்ப** – உள்ளே நின்ற (உதானன் என்னும்) காற்றானது எழுப்ப, **எழும் அணுத்திரள்** – எழுகின்ற செவிப்புலனாம் அணுக்கூட்டம், **உரம் கண்டம் உச்சி மூக்கு உற்று** – மார்புங் கழுத்துந் தலையும் நாசியுமாகிய நான்கிடத்தையும் பொருந்தி, **இதழ் நாப் பல் அணத்தொழிலின்** – உதடும் நாக்கும் பல்லும் மேல்வாயுமாகிய நான்கினுடைய முயற்சிகளால், **வெவ்வேறு எழுத்து ஒலி ஆய் வரல்** – வேறு வேறு எழுத்தாகிய ஓசைகளாய்த் தோன்றுதல், **பிறப்பு** – அவற்றின் பிறப்பாம், **எ—று.**

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ—ள். புள்ளிவிட்டு** (மெய்) புள்ளியை **விட்டு, அவ்வொடு** – அகரத்தோடு கூடியவழி, **முன் உரு ஆகியும்** – அவ் விட்ட உருவே உருவாகியும், **ஏனை உயிரோடு** – அது நீங்கலாகிய உயிர்களோடு கூடியவழி, **உருவு திரிந்தும்** – உருவு வேறுபட்டும், **உயிர் அளவு ஆய்** – (தன்மாத்திரை தோன்றாது) உயிர் மாத்திரையே மாத்திரையாய், **அதன் வடிவு ஒழித்து** – (தன் வரிவடிவின் விகார வடிவே வடிவாய்) உயிர் வடிவை ஒழித்து, **இருவயின் பெயரொடும்** – (உயிரும் மெய்யும் ஆகிய) இரண்டிடத்தும் பிறந்த (உயிர்மெய்யென்னும்) பெயருடனே, **உற்று முன் ஆய்** – ஒற்றொலி முன்னும் உயிரொலி பின்னுமாகி, **உயிர்மெய் வரும்** – உயிர்மெய் யெழுத்து வரும். **எ—று.**

**பொ—ரை.:**

மெய் புள்ளியை விட்டு அகரத்தோடு கூடுங்கால் புள்ளி நீங்கிய மெய்யெழுத்தின் வடிவமே தன் வடிவமாகியும், அகரம் அல்லாத மற்ற உயிர்களோடு கூடும்போது வடிவு வேறுபட்டும் உயிரினது மாத்திரையே தனக்கு மாத்திரையாய் (தத்தன் வரி வடிவின் விகார வடிவே வடிவாய்) உயிர் வடிவை ஒழித்து, உயிர்மெய் என்னும் பெயருடனே, ஒற்றொலி முன்னும் உயிரொலி பின்னுமாகி உயிர்மெய் யெழுத்து வரும்.

**உ—ம்.**

க்+அ= க, க்+ஆ= கா, க்+இ= கி, க்+ஈ= கீ, க்+உ= கு, க்+ஊ= கூ, க்+எ= கெ, க் + ஏ= கே, க்+ஐ= கை, க்+ ஒ= கொ, க்+ஓ= கோ, க்+ஔ =கௌ. இப்படியே மற்றை மெய்களின் மேலும் பன்னிரண்டுயிர்களும் ஏறி வர, உயிர்மெய் இருநூற்றுப் பதினாறாதல் காண்க.

'உயிரளவாய்' என்றதனால் உயிர்மெய்க் குற்றெழுத்துக்கு ஒரு மாத்திரையும், உயிர்மெய் நெட்டெழுத்துக்கு இரண்டு மாத்திரையும் ஆம் என்க.

சார்பெழுத்திற்குச் சார்ந்து வருதலே பிறப்பாதலால் பிறப்பிலக்கணத்தோடு சார வைத்தார். உயிர்மெய் – உயிரும் மெய்யும் கூடிப் பிறக்கும் எழுத்து.

## கா. நமச்சிவாய முதலியார்

**நிறை உயிர்** – (ஒலியெழுத்திற்கு வேண்டுங் காரணங்களிற் குறைவின்றி) நிறைந்த உயிரினது, **முயற்சியின்** – முயற்சியால், **உள் வளி துரப்ப** – உள்ளே நின்ற (காற்றானது எழுப்ப, **எழும் அணுத்திரள்** – எழுகின்ற (செவிப்புலனும்) அணுக்கூட்டம், **உரம் கண்டம் உச்சி மூக்கு** – மார்பும் கழுத்தும் தலையும் மூக்கும் (ஆகிய நான் கிடத்தையும்), **உற்று** – பொருந்தி, **இதழ் நா பல் அணம்** – உதடும் நாக்கும் பல்லும் மேல்வாயும் (ஆகிய நான்கனுடைய) – **தொழிலின்** – முயற்சிகளால், வெவ்வேறு எழுத்து ஒலி ஆய் – வெவ்வேறு எழுத்தாகிய ஓசைகளாய், **வரல்** – தோன்றுதல், **பிறப்பு** – (அவற்றின்) பிறப்பாம்.

## மோசகூ பொன்னையா

உடல் நலத்தோடு ஒலி உறுப்புக்களைக் குறைவறப் பெற்ற ஒருவரது உச்சரிப்பு முயற்சியால், உள்ளே நின்ற காற்று கடாவ, ஆண்டு நின்ற ஒலியணுவின் ஈட்டம் விசைத்தெழுந்து மார்பு, கழுத்து, தலை, மூக்கு என்னும் நான்கு இடங்களிற் பொருந்தி, நாக்கு, மேல்வாய், பல், உதடு எனுமவற்றின் முயற்சி வேறுபாட்டால் வெவ்வேறு எழுத்தொலிகளாய்ப் புலப்படலே எழுத்துக்களின் பிறப்பாம், எ–று.

உள்வளி என்றது, ***உந்தியிற் றோன்றும் உதான வளி*** யை, தொல்காப்பியர் அதனை, *'உந்தி ... வளி* என்றார்.

தொல்காப்பியரும் நேமிநாத முடையாரும் மூக்கை உறுப்பாகக் கொண்டனர். இவ்வாசிரியர் அதனை இடமாகக் கொண்டார். மூச்சினை வெளிவிடுங்கால், நுரையீரல் இரண்டிலிருந்தும் வெளிப்பட்ட காற்று, மிடற்றின் வழியாக மூக்கினை அடைந்து வெளியே செல்லுதலும், வாய் வழியாக வெளியே செல்லுதலு மாகிய இயல்பினை உடையது எனவும், அவ்வாறு வெளியாகும் காற்றொலி குரல்வளை இதழ்கள், அண்ணம், நா, பல், வாயிதழ் என்னும் ஒலி உறுப்புக்களோடு பொருந்திச் செய்கை செய்யப்படின், எழுத்தொலிகளாக அமையும் எனவும் உடல் நூலாரும், ஒலி நூலாரும் கூறுவர்.

***நிலையும் வளியும் முயற்சியும் மூன்றும்***
***இயல நடப்பது எழுத்தெனப் படுமே***

என்றார் ஒரு புலவர்.

இவ்வாசிரியர் உள்ளிருந்து எழும் காற்றால் எழுப்பப்படும் செவிப்புலனாம் அணுத்திரளே எழுத்திற்கு முதற் காரணம் என்ற கொள்கையினர்.

***உந்தியிற் றோன்றும் உதான வளிப்பிறந்து***
***கந்தமலி நெஞ்சுதலை கண்டத்து – வந்தபின்***
***ஆசில் அண்ணம் இதழெயிறு மூக்கெனப்***
***பேசும் எழுத்தின் பிறப்பு***

என்ற நேமிநாதவெண்பா எழுத்துக்களின் பிறப்புப் பொது இலக்கணத்தை எளிமையும்படச் சாற்றுகின்றது.

(19)

## முதலெழுத்துக்களின் இடப் பிறப்பு

74. **அவ்வழி,**
**ஆவி யிடைமை யிடமிட றாகும்**
**மேவு மென்மைமூக் குரம்பெறும் வன்மை.**

அவ் வழி
ஆவி இடைமை இடம் மிடறு ஆகும்
மேவு மென்மை மூக்கு உரம் பெறும் வன்மை.

av vaḷi
āvi itaimai itam mitaṟu ākum
mēvu meṉmai mūkku uram peṟum vaṉmai.

### இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

**The production of primary letters**

Being thus produced, the sounds of Vowels and Medials proceed from the throat; those of Nasals (or Soft consonants) from the nose; and those of Tenues (or Hard Consonants) from the chest.

### ஒப்புமைப் பகுதி

அவ்வழி
பன்னீர் உயிரும் தம் நிலை திரியா
மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்

(தொல். எழு. : 84)

அண்ணஞ் சேர்ந்த மிடற்றெழு வளியிசை
கண்ணுற் றுடைய யகாரம் பிறக்கும்

(தொல். எழு. : 99)

மெல்லெழுத் தாறும் பிறப்பின் ஆக்கஞ்
சொல்லிய பள்ளி நிலையின வாயினும்
மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும்

(தொல். எழு. : 100)

**உயிர் இடையினம்மிடறு உரம்வலி உச்சிமெலி இயை**
**முதல் இடமாய்.......................**

(தொன். : 3)

**உரியிடை யின மிடறுரம் வலியுச்சி**
**மெலியிட மாமென வேண்டப் படுமே**

(மு.வீ. : 43)

**அணுவினான் மூலவிந்தில் எழுநாதம் இலஞ்சிக்**
**காய் உதானத்தொடு நெஞ்சணுகி வெளிவாக்காற்**
**பணியு மிடறு உச்சி மூக்கு ஒலித்து நாவண்ணம்**
**பல்லிதழின் வினையால் வெவ்வேறெழுத்தாம் அவற்றுள்**
**நணுகு மிடற்று உயிர் இடை யுச்சியின் வன்மை மென்மை**
**நாசியில் உண்டாம்......**

(சுவாமி. : 16)

## மயிலை நாதர்

**எ – ன்,** முதலெழுத்துக்கட்கு இடமா மாறுணர்த்துதல் நுதலிற்று.

**இ–ள்.:** மேற்கூறிய நெறியாற் பிறக்குமிடத்துப் பன்னீருயிருக்கும் இடையினம் ஆறிற்கும் இடம் மிடறாகும்; மெல்லினமாறும் மூக்கை இடமாகப் பொருந்தும்; வல்லினமாறும் நெஞ்சை இடமாகப் பெறும், **எ – று.**

## சங்கர நமச்சிவாயர்

**எ–னின்,** முதலெழுத்துக்கட்கு இடம் **வகுத்துணர்–ற்று.**

**இ –ள்.:** மேற்கூறிய நெறியான் பிறக்குங்கால், ஆவி இடையினம் என்னும் இருவகை எழுத்தினது இடம் மிடறாகும்; மெல்லினம் மூக்கை இடமாகப் பொருந்தும், வல்லினம் நெஞ்சை இடமாகப் பெறும், **எ – று.**

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்,** முதலெழுத்துக்கட்கு இடம் கூறியது.

**இ–ள்.: அவ்வழி** – மேற்கூறிய நெறியாற் பிறக்குமிடத்து, **ஆவி இடைமை** – உயிரெழுத்துப் பன்னிரண்டுக்கும் இடையினம் ஆறுக்கும், **இடம் மிடறாகும்** – இடம் மிடறாகப் பொருந்தும், **மேவுமென்மை மூக்கு** – மெல்லினம் ஆறும் மூக்கை இடமாகப் பொருந்தும், **உரம் பெறும் வன்மை** – வல்லினம் ஆறும் நெஞ்சை இடமாகப் பொருந்தும், **எ–று.**

## விசாகப் பெருமாளையர்

**இது,** முதலெழுத்துகளுக்கு இடஞ் சொல்லுகின்றது.

**இ–ள்.: அவ்வழி** – முன்சொன்ன வழியாற் பிறக்குமிடத்து, **ஆவி–** உயிரெழுத்துகளுக்கும், **இடைமை** – இடையினத்திற்கும், **இடம்** – இடம்,

**மிடறாகும்** – கழுத்தாகும், **மென்மை** – மெல்லினம், **மூக்கு** – நாசியை, **மேவும்** – இடமாகப் பொருந்தும், **வன்மை** – வல்லினம், **உரம்**–மார்பை, **பெறும்**–இடமாகப் பெறும், எ– று.

## ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

*முதலெழுத்துக்கள் எங்கே பிறப்பன?*

அவ்வழி

ஆவி யிடைமை யிடமிடறா கும்

மேவு மென்மைமூக் குரம்பெறும் வன்மை.

(அவ்வழி, ஆவி இடைமை இடம் மிடறு ஆகும்; மேவும் மென்மை மூக்கு; உரம்பெறும் வன்மை)

**இ–ள்.: அவ்வழி** – முன்சொன்ன வழியாற் பிறக்குமிடத்து, **ஆவி இடைமை இடம் மிடறு ஆகும்** – உயிரெழுத்துக்களுக்கும் இடையினத்திற்கும் இடம் கழுத்தாகும், **மென்மை மூக்கு மேவும்** – மெல்லினம் நாசியை இடமாகப் பொருந்தும், **வன்மை உரம்பெறும்** – வல்லினம் மார்பை இடமாகப் பெறும், எ–று.

*அவற்றுள் உயிரெழுத்தும் இடையெழுத்து மெங்கே பிறப்பன?*

"அவ்வழி, ஆவி இடைமை இடம் மிடறாகும்"

*மெல்லெழுத்தெங்கே பிறப்பன?*

"மேவு மென்மை மூக்கு"

*வல்லெழுத்தெங்கே பிறப்பன?*

"உரம்பெறும் வன்மை"

## முகவை இராமாநுச கவிராயர்

**இது,** முதலெழுத்துகட்கு இடங் கூறுகின்றது.

**இ–ள்.: அவ்வழி** – முன்சொல்லிய நெறியே, **ஆவி யிடைமை யிடம்** – உயிரெழுத்தும் இடையெழுத்துமாகிய இருவகை யெழுத்துகட்கும் இடம், **மிடறாகும்** – கண்டமாகும், **மென்மை மூக்குமேவும்** – மெல்லெழுத்துகள் மூக்கை இடமாகப் பொருந்தும், **உரம்பெறும் வன்மை** – வல்லெழுத்துகள் மார்பை இடமாகப் பெறும், எ – று.

இச் சூத்திரத்தில், அவ்வழி என்றதும், வருஞ் சூத்திரத்தில் அவற்றுள் என்பதும் கூன், என்னெனின்,

*பொருளோ டிமு தனிற்ப துகூன்*

என்றாராகலி னென்க. இடம் – மிடறு, மென்மை மேவும், வன்மை பெறும் – என இச் சூத்திரத்தை மூன்று முடிபாக முடித்துக் கொள்க.

## கா . கோபாலாசாரி - தி.கோ.ரங்காசாரி

**உரை :-** **அவ்வழி** – முன்சொன்ன வழியிற் பிறக்குமிடத்து, **ஆவி இடைமை இடம்** – உயிரெழுத்துக்களுக்கும் இடையினத்திற்கும் இடம், **மிடறு ஆகும்** – கழுத்தாகும்; **மென்மை** – மெல்லினம், **மூக்குமேவும்** – நாசியை (இடமாகப்) பொருந்தும்; **வன்மை உரம்பெறும்** – வல்லினம் மார்பை (இடமாகப்) பெறும்.

**குறிப்பு :-**

இடம் மிடறு; மென்மை மேவும்; வன்மை பெறும் என மூன்று முடிபாக முடித்துக் கொள்க.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: அவ்வழி** – முன் சொன்ன வழியாற் பிறக்குமிடத்து, **ஆவி இடைமை இடம் மிடறு ஆகும்** – உயிரெழுத்துக்களுக்கும் இடையினத்திற்கும் இடங் கழுத்தாகும், **மென்மை மூக்கு மேவும்** – மெல்லினம் நாசியை இடமாகப் பொருந்தும், **வன்மை உரம் பெறும்** – வல்லினம் மார்பை இடமாகப்பெறும், எ – று.

## வ. குமாரசாமிப்புலவர்

**இ–ள். அவ்வழி** – முன்சொன்ன வழியாய் பிறக்கும்போது, – **ஆவி இடைமை இடம்** – உயிரெழுத்துக்களுக்கும் இடையின வெழுத்துக்களுக்கும் இடம், – **மிடறு ஆகும்** – கழுத்தாகும், – **மென்மை மூக்கு மேவும்** – மெல்லினவெழுத்து நாசியை இடமாகப் பொருந்தும், – **வன்மை உரம் பெறும்** – வல்லினவெழுத்து மார்பை இடமாகப் பொருந்தும். எ–று.

வல்லெழுத்தாறுந் தலையை யிடமாகக் கொண்டு பிறக்குமென்றார் இலக்கண விளக்க நூலுடையார். ககாரம் மிடற்றிடம் பிறக்கு, மென்று வடமொழி வியாகாரணங் கூறுகின்றது. பிறப்பிலக்கணம் இன்னும் தமிழிலக்கண நூல் கூறியது போலன்றிப் பெரும்பாலும் வேறுபடவும், சிறுபான்மை ஒற்றுமைப்படவும் வடமொழி வியாகாரணங் கூறுகின்றது.

## வை.மு. சடகோபராமானுசாசாரி
## சே. கிருஷ்ணமாசாரி

**இ–ள்.: அவழி** – முன்சொன்ன வழியாற் பிறக்குமிடத்து, **ஆவிஇடைமை இடம்**–உயிரெழுத்துக்கட்கும் இடையினத்திற்கும் இடம், **மிடறு ஆகும்** - கழுத்தாகும்; **மென்மை**–மெல்லினம், **மூக்கு மேவும்** – மூக்கை (இடமாக)ப் பொருந்தும்; **வன்மை**–வல்லினம், **உரம் பெறும்** – மார்பை (இடமாக)ப் பெறும். எ – று.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள். அவ்வழி** – முன் சொன்ன வழியாற் பிறக்குமிடத்து, **ஆவி**

**இடைமை அடம் மிடறு ஆகும்** – உயிரெழுத்துக்களுக்கும் இடையினத்திற்கும் இடம் கழுத்தாகும். **மென்மை மூக்கு மேவும்** – மெல்லினம் நாசியை அடமாகப் பெருந்தும். **வன்மை உரம் பெறும்** – வல்லினம் மார்பை இடமாகப் பெறும், எ–று.

## கா. நமச்சிவாய முதலியார்

அவ்வழி – முன்சொன்ன வழியாற் பிறக்குமிடத்து, **ஆவி இடைமை இடம்** – உயிரெழுத்துக்களுக்கும் இடையினத்திற்கும் இடம், **மிடறு ஆகும்** – கண்டமாகும்; **மென்மை** – மெல்லினம், **மூக்குமேவும்** – மூக்கை இடமாகப் பொருந்தும், **வன்மை உரம்பெறும்** – வல்லினம் மார்பை இடமாகப் பெறும்.

## மோசசு பொன்னையா

மேற்சொன்ன பிறப்பு முறைமைப்படி, உயிரும் இடையினமும் கழுத்தையும், மெல்லினம் மூக்கையும், வல்லினம் மார்பையும் பிறப்பிடமாகக் கொள்ளும், **எ–று.**

**(20)**

# முதலெழுத்துக்களின் முயற்சிப் பிறப்பு

75. **அவற்றுள்**
**முயற்சியுள் அஆ வங்காப் புடைய.**

**அவற்றுள்**
**முயற்சியுள் அஆ அங்காப்பு உடைய.**

avaṟṟuḷ
muyaṟsiyuḷ a ā aṅkāppu utaiya.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

**By the mere opening of the mouth**

Of these, a and à are produced by the (mere) opening of the mouth.

## ஒப்புமைப் பகுதி

**அவற்றுள்**
**அ ஆ ஆயிரண்டு அங்காந்து இயலும்**

(தொல். எழு.: 85)

அவற்றுள்
அ ஆ வங்காப் பொடுவரு மென்ப

(மு. வீ.: 44)

........ அவற்றுள் அ ஆ வாங்காப்பாம்.

(சுவாமி.: 16: 4)

## மயிலை நாதர்

எ–ன், அகர ஆகாரங்கட்கு முயற்சியாமாறுணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: மேல் இடம் வகுக்கப்பட்ட முதலெழுத்துக்களுள், அகரமும் ஆகாரமும் அங்காந்து சொல்லுதலை முயற்சியாக வுடையவாம், எ–று.

அ ஆ என உச்சரித்துக் கண்டு கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

எ – னின், முதலெழுத்துள் சிலவற்றிற்கு முயற்சி வகையால் பிறப்பு உணர் – ற்று.

இ – ள்.: மேல் இடம் வகுக்கப்பட்ட முதலெழுத்துக்களுள் அகர ஆகாரங்கள், நால்வகை முயற்சியுள் அண்ணத்தின் தொழிலாகிய அங்காத்தலை யுடையவாய்ப் பிறக்கும், எ – று.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், எழுத்துக்கள் முயற்சியாற் பிறக்கும் முறைமை கூறியது.

இ–ள்.: அவற்றுள் – மேல் இடம் வகுக்கப்பட்ட முதலெழுத்துகளுள், முயற்சியுள் – முயற்சிப் படுமிடத்து, அ ஆ அங்காப்புடைய – அகரமும் ஆகாரமும் அங்காத்தல் முயற்சியை உடையவாம், எ–று.

## விசாகப் பெருமாளையர்

இது, முதலெழுத்தினுட் சிலவெழுத்திற்கு முயற்சி வகையாற் பிறப்பு உணர்த்துகின்றது.

இ–ள்.: அவற்றுள் – மேலிடம்வகுத்த முதலெழுத்துகளுள், அஆ–அஆ இரண்டும், அங்காப்புடைய – அண்ணத்தின் றொழிலாகிய அங்காத்தலை யுடையனவாய்ப் பிறக்கும், எ – று.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

*அங்காத்தன் முயற்சியாற் பிறக்கும் எழுத்துக்கள் யாவை?*

அவற்றுள்,
முயற்சியுள், அ ஆ வங்காப் புடைய

(அவற்றுள்

முயற்சியுள் அ ஆ அங்காப்பு உடைய)

**இ–ள்.: அவற்றுள்** – மேலே இடம் வகுக்கப்பட்ட முதலெழுத்துக்களுள், **அ ஆ** – அ ஆ இரண்டும், **முயற்சியுள்** – நால்வகை முயற்சியுள், **அங்காப்பு உடைய** – அண்ணத்தின் றொழிலாகிய அங்காத்தலை யுடையனவாய்ப் பிறக்கும், **எ–று.**

## முகவை இராமானுச கவிராயர்

**இது,** சில வெழுத்திற்கு முயற்சி வகையாற் பிறப்புணர்த்துகின்றது.

**இ–ள்.: அவற்றுள்** – மேல் இடம் வகுக்கப்பட்ட முதலெழுத்துக்களுள், **அ ஆ** – அகர ஆகாரங்களிரண்டும், **முயற்சியுள்** – நால்வகை முயற்சியுள், **அங்காப்புடைய** – அண்ண முயற்சியாகிய அங்காத்தல் முயற்சியை யுடையனவாம், **எ – று.**

அம் முயற்சியாற் பிறக்கு மெனக் கொள்க. அங்காத்தல் – வாயைத் திறத்தல், அங்காப்பு – என்பதும் அது.

## கா . கோபாலாசாரி –தி.கோ.ரங்காசாரி

**உரை :– அவற்றுள்** – (மேல் இடம் வகுக்கப்பட்ட) முதலெழுத்துக்களுள், **அஆ**–அ ஆ இரண்டும், **முயற்சியுள்** – (நால்வகை) முயற்சியுள், **அங்காப்பு உடைய** – (அண்ணத்தின் தொழிலாகிய) அங்காத்தலையுடையனவாய்ப் பிறக்கும்.

குறிப்பு :–

அங்காப்பு – வாய்திறத்தல்.நால்வகை முயற்சி – இதழ் நா, பல், அணம் இவற்றின் தொழில்.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: அவற்றுள்** – மேலிடம் வகுக்கப்பட்ட முதலெழுத்துக்களுள், **அஆ முயற்சியுள் அங்காப்பு உடைய** – அஆ இரண்டும் நால்வகை முயற்சியுள் அண்ணத்தின் றொழிலாகிய அங்காத்தலை யுடையனவாய்ப் பிறக்கும், **எ – று.**

அங்காத்தல் – வாயைத் திறத்தல்

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். அவற்றுள்** – மேல் இடம் வகுக்கப்பட்ட முதலெழுத்துக்களுள், **அ ஆ** – அ ஆ இரண்டும், **முயற்சியுள் அங்காப்பு உடைய** – (இதழ், நா, பல், அண்ணம் என்னும் நான்குறுப்பின்) முயற்சிகளுள் அண்ணத்தின் றொழிலாகிய அங்காத்தலை யுடையனவாய்ப் பிறக்கும், **எ–று.**

அங்காப்பு எனினும் அங்காத்தல் எனினும் வாய்திறத்தல் எனினும் ஒக்கும்.

## வை.மு. சடகோபராமானுசாசாரி
## சே. கிருஷ்ணமாசாரி

**இ—ள்.: அவற்றுள் —** (மேல் இடம் வகுக்கப்பட்ட) முதலெழுத்துக்களுள்; **அ ஆ —** அ ஆ இரண்டும், **முயற்சியுள் —** (முன்சொன்ன நால்வகை) முயற்சிகளுள், **அங்காப்பு உடைய**—(அண்ணத்தின் தொழிலாகிய) அங்காத்தலை யுடையனவாய்ப் பிறக்கும்; **எ—று.**

அங்காத்தல் — வாய்திறத்தல்.

அ ஆ என உச்சரித்துக் கண்டு கொள்க. பிறவும் இவ்வாறே.

## பவானந்தம் பிள்ளை

**இ—ள். அவற்றுள் —** மேல் இடம் வகுக்கப்பட்ட முதலெழுத்துக்களுள், **அ ஆ முயற்சியுள் அங்காப்பு உடைய —** அ ஆ இரண்டும் (இதழ், நா, பல், அண்ணம் இவற்றால் உண்டாகும் நால்வகை) முயற்சியுள் (அண்ணத்தின் தொழிலாகிய) அங்காத்தலையுடையனவாய்ப் பிறக்கும். **எ—று.**

அங்காத்தல் — வாயைத் திறத்தல்

## கா. நமச்சிவாய முதலியார்

**அவற்றுள் —** (மேல் இடம் வகுத்த) முதலெழுத்துக்களுள், **அ ஆ அங்காப்புடனே உடைய —** அ ஆ இரண்டும் (அண்ணத்தின் தொழிலாகிய அங்காத்தலை யுடையனவாய்ப் பிறக்கும். **அங்காத்தல் —** வாய்திறத்தல்

## மோசகு பொன்னையா★

அம் முதலெழுத்துக்களுள் அஆ என்னும் இரண்டும் வாய் திறப்பு முயற்சியாலும், இ ஈ எ ஏ ஐ என்னும் ஐந்தும் அதனோடு நாவடியின் ஓரம் மேவாய்ப் பல்லைப் பொருந்துவதாலும், உ ஊ ஒ ஓ ஔ என்னும் ஐந்தும் வாயிதழைக் குவித்தலாலும் பிறக்கும், **எ—று.**

> நுரையீரலிலிருந்து காற்றுக் குழாய் மூலம் உதாணன் குரல் வளையை அடைகிறது. குரல்வளை காற்றுக்குழாயின் மேல் எல்லையில் அமைந்துள்ளது. அதனை ***ஆதாமின் ஆப்பிள்*** என்பர். அஃது ஊடாகத் திறந்து மூடும் தன்மையது. அத்திறப்பின் அடிப்பகுதியில் இரு புறங்களிலும் இரு குருத்தெலும்புகளும், மேற்பகுதியில் இரு இதழ்களும் உண்டு. குரத்தெலும்போடு குருத்தெலும்பும், இதழோடு இதழும் நன்கு ஒட்டி இணைந்தால் மூச்சுக்காற்று வெளிப்பட இடமில்லாமல்

★ **இவ்வுரையாசிரியர், உயிரெழுத்துகளின் முயற்சிப் பிறப்பினைக் கூறும் அடுத்து வரும் இரு நூற்பாக்களின் விளக்கங்களையும் ஒருங்கே வைத்து ஈங்கே விளக்கிச் செல்கிறார்**

முற்றிலும் தடைப்படும். குரல் இதழ்களும் குருத்தெலும்புப் பகுதிகளும் இணையாது திறந்து அமையும் நிலையில் மூச்சுக் காற்றுத் தங்குதடையின்றி உள்ளும் வெளியும் இயங்குகின்றது.

குரல் இதழ்கள் ஒட்டியும் ஒட்டாமலும் நின்று ஊடாக மூச்சுக் காற்றை வெளிச்செல்ல விட்டுக் குரல் இதழ்களை வினாடிக்குச் சுமார் எண்பது முதல் ஆயிரம் சுழற்சிகள் ஈறாக அதிரச் செய்வதால் அந்தச் சுழற்சி வேகத்திற்கு ஏற்ப இசைத்திறன் பெற்ற குரல் இசைப்பு பிறந்த மூச்சுக் காற்றோடு கலக்கின்றது. உயிர்மை ஒலிகள் அனைத்தின் பிறப்புக்கும் குரல் இசைப்புப் பெற்ற ஒலியே அடிமூலமாக அமைகின்றது. நன்னூலார், ***'ஆவியிடை மை யிடமிட றாகும்'*** என்றது அதனாலேயேயாகும். அதன் காரணமாகவே பேச்சு ஒலிகளைக் குரல் இசைப்புப் பெற்றவை, குரல்இசைப்புப் பெறாதவை என இரண்டாகப் பகுப்பார்.

குரல் இசைப்புப் பெற்ற ஒலி குரல்வளையிலிருந்து வாயறையுள் புகுந்த பின்னர் அங்கிருந்து வெளிப்படும் முன்னர் வெவ்வேறு உயிர் ஒலிகளாக உருப் பெறுவதற்கான முயற்சிகள் வாய் அறையில் நடக்கின்றன. வாய் அறையில் அண்ணம், பல் (மேல்வாய்ப் பல்) என்னும் அசையா உச்சரிப்பு உறுப்புக்களும், நா, வாயிதழ்கள் என்னும் அசையும் உச்சரிப்பு உறுப்புக்களும் உள்ளன.

வாயின் மேற்பகுதியில் முன்வாய் மேற்பல் வரிசையின் அடியிலிருந்து உள்நா வரை கூரை போல் அமைந்துள்ள மேல்வாய்ப் பகுதி அண்ணம் எனப்படும். அண்ணத்தின் பிற்பகுதி தசையுஞ் சவ்வுமாக அமைந்து மென்மைத் தன்மையதாக இருப்பதால் அதனை மெல்லண்ணம் என்பர். ஒலியியலார் அதனை விலம் என்றும் குறிப்பிடுவர். அஃது ஏறி இறங்கும் தன்மையது. அதன் ஏறிய நிலையில் காற்று மூக்கு அறையுள் செல்லாமல் தடைப்படும். அதன் இறங்கிய நிலையில் காற்று மூக்கு அறையுள்ளும் செல்லத்தக்க அளவில் இடைவெளி உண்டாகும். காற்று மூக்கு அறையுள் செல்லின், அக்காலை வாய் அறையில் உச்சரிக்கப்படும் ஒலியில் மூக்கொலிப்புச் சேரும். தமிழ் ங், ஞ், ண், ந், ம், ன் ஆகியவை அவ்வறே உச்சரிக்கப்படுகின்றன.

அண்ணத்தின் இடைப்பகுதியையே பொதுவாக அண்ணம் எனக் குறிப்பிடல் மரபாகும். அது வல்லென்று இருப்பதால் அதனை வல்லண்ணம் எனவும் குறிப்பிடுவர். அண்ணத்தின் முற்பகுதி முன்னண்ணம் எனப்படும். முன்னண்ணத்தை அண்பல் எனக் குறிப்பிடலும் உண்டு.

இதழ் ஒலிகள் நீங்கலாக ஏனை ஒலிவடிவங்கள் அனைத்தும் நாவின் முயற்சியாலேயே அமைகின்றன. நாவின் ஒவ்வொரு

பகுதியும் ஒவ்வொரு வித ஒலியின் தோற்றத்திற்குக் காரணமாவதால், அதன் பகுதிகளை முதல் நா, இடை நா, கடை நா எனவும் அதன் குவிந்த நுனியை நாநுனி என்றும் பகுத்துக் குறிப்பிடுதல் மரபாகும். நாவின் எழுச்சி அடிப்படையில் அமெரிக்க ஒலியியலார் ஏழுநிலைகளைக் குறிப்பிடுவர். அவை உயர், கீழ்உயர், மேல்இடை, இடை, கீழ்இடை, மேல்கீழ், கீழ் நிலைகளாம். உயர், கீழ்உயர் நிலைகளில் பிறக்கும் உயிர்களை மூடு உயிர்கள் அல்லது இருள் உயிர்கள் என்றும், மேல்இடை, இடை நிலைகளில் பிறக்கும் உயிர்களை அரை மூடு உயிர்கள் என்றும், கீழ்இடை, நிலையிற் பிறக்கும் உயிர்களை அரைத் திறப்பு உயிர்கள் என்றும், கீழ்நிலைகளில் பிறக்கும் உயிர்களைத் திறப்பு உயிர்கள் அல்லது ஒளி உயிர்கள் என்றும் குறிப்பிடுவது மொழி நூலார் போக்காகும்.

இவ்வாறு மூடு அல்லது திறப்பு உயிர்கள் என உயிர்களைப் பகுத்தாலும், அண்ணத்திற்கும் நாவிற்கும் இடையில் உயிர் ஒலிகள் பிறக்குங்கால் இடைவெளி இருந்தே யாகல் வேண்டும். இடைவெளி இல்லாமல் அமைந்தால் மெய்யொலிகளே பிறக்கும். நன்னூலார் உயிர் ஒலிகளின் பிறப்புப் பற்றிக் கூறுங்கால், அவ்விடை வெளியையே *'அங்காப்பு'* எனக் குறிப்பிட்டு அதனை எல்லா உயிர்களுக்குங் கொள்ள வைத்துள்ளார் என்பது மனங் கொளற்குரியது. தமிழில் இ, ஈ; உ, ஊ என்பவை, உயர் நிலையில் பிறக்கும் மூடு உயிர்கள்; எ, ஏ; ஒ, ஓ என்பவை, மேல் இடைநிலையில் பிறக்கும் அரை மூடு உயிர்கள்; அ, ஆ என்பவை கீழ்நிலையிற் பிறக்கும் திறப்பு உயிர்கள். ஐகார ஔகாரங்கள் நா கீழ்நிலையில் பதிந்திருக்குங்கால் பிறக்கத் தொடங்கி,அது உயர் நிலையை அடையும் நிலைக்குள் அமையும் நாவின் வீச்சில் பிறக்கும் இணை உயிர் ஒலிகள்; அவற்றையும் மூடு உயிர்கள் எனவே கொள்ளுதல் சாலும்.

நாவின் முன், பின் இயக்க அடிப்படையிலும் மொழியியலார் உயிர்களை மூவகையினவாகப் பகுப்பர். நா கீழ் நிலையில் பதிந்து படுக்கையில் இருக்குங்கால் அதன் நடுப்பகுதியே உயிரொலி யமைப்பிற்குச் சிறப்பான இடம் எனக்கொண்டு அக்காலை பிறக்கும் உயிர்களை நடு உயிர்கள் என்பர். தமிழில் அ, ஆ என்னும் இரண்டும் நடு உயிர்கள் எனப்படும். முதல்நா முன் அண்ணத்தை நோக்கி எழுங்கால் பிறக்கும் உயிர்களை; முன்னுயிர்கள் என்றும், கடைநா பின்னண்ணத்தை நோக்கி எழுங்கால் பிறக்கும் உயிர்களைப் பின்னுயிர்கள் என்றும் குறிப்பிடுவர். தமிழில், இ, ஈ, எ, ஏ, ஐ என்பன முன்னுயிர்கள் என்றும், உ, ஊ, ஒ, ஓ, ஔ என்பன பின்னுயிர்கள் என்றும் கொள்ளப்படும்.

உயிர் ஒலிகள் வெளிப்படுங்கால் வாய் இதழ்கள் குவிந்தும்,

குவியாமலும் இருக்கும். அவை குவிந்து இருக்குங்கால் பிறக்கும் உயிர்களை இதழ் குவி உயிர்கள் என்றும், அவை குவியாது இருக்குங்கால் பிறக்கும் உயிர்களை இதழ் குவியா உயிர்கள் என்றும் குறிப்பிடுவது மரபு. தமிழில் உ, ஊ, ஒ, ஓ, ஔ என்னும் ஐந்தும் இதழ் குவி உயிர்கள்; ஏனைய இதழ் குவியா உயிர்கள் எனக் கொள்க.

உலக உச்சரிப்புக் கழகத்தார் நாவின் ஏழுநிலைகளிலும் மூன்று இயக்க இடங்களிலும் பிறக்கும் உயிர் ஒலிகளும் இதழ் குவிவு பெற்றும் பெறாமலும் அமையக்கூடும். ஆதலால், 42 உயிர் ஒலிகளே உள்ளன எனக் கொண்டு அவற்றிற்கு ஒலிக்குறியீடுகள் அமைத்துள்ளனர்.

உயிர்களில் நெட்டொலிகளை உச்சரிக்குங்கால் தசைகள் விறைப்புடன் அமைவதாலும், குறில் ஒலிகளை உச்சரிக்குங்கால் தசைகள் விறைப்பின்றி நெகிழ்ந்து அமைவதாலும் அவை முறையே விறைப்பு, நெகிழ் உயிர்கள் எனப்படும்.

குரல் இசைப்பைப் பெற்று அமையும் உயிர் ஒலிகள் இசைத்திறன், துலக்கம் ஆயவற்றைப் பெற்று அமையும். இவ்விரு இயல்புகளையும் உயிர்களின் உயிர்த்திறனாக மதிப்பிடுவர். ஒலிப்பு முனைக்கும் (அண்ணத்திற்கும்), ஒலிப்பு உறுப்புக்கும் (நாவிற்கும்) இடைப்பட்ட இடைவெளி மிகுதியாக உள்ள நிலையில் அமையும் நெகிழிசைப்பு அறை பெரிதாக அமைவதால், காற்று அதிகமாக வெளிச் செல்லவும், குரல் இதழ்களின் அதிர்வுகளின் எண்ணிக்கை அதிகப்படவும், அதனால் நெகிழிசைப்புச் சுழற்சிகள் மிகுதியாகவும் அதன் காரணமாக இசைப்புத் துணுக்குகள் செறிவுந் திரட்சியும் பெற்று வெளிப்படவும் ஏது உண்டாவதால், திறப்பு உயிர்கள் ஏனை உயிர்களை விட அதிகத் துலக்கமும் இசைத் திறனும் பெற்று உயிர்த்திறன் மிக்கு விளங்குகின்றன.அதே காரணத்தாலும், குறைந்த இடைவெளியில் காற்றுச் செல்லுங்கால் உண்டாகும் ஓரளவு ஓசை இயல்பாலும் மூடு உயிர்கள் மிகக் குறைந்த உயிர்திறனைப் பெற்றுள்ளன. அரை மூடு உயிர்கள் அரை திறப்பு உயிர்களை விடக் குறைந்த உயிர்த்திறன் பெற்றவை. அவை திறப்பு உயிர்களை விடக் குறைவாகவும், மூடு உயிர்களை விட அதிகமாகவும் உயிர்த்திறன் பெற்றவை. இசைத் துணுக்குகளின் திரட்சி பின்னுயிர்களை விட முன்னுயிர்களை ஒலிக்குங்கால் அதிகமாக அமைவதால் அவை துலக்க இயல்பை மிகுதியாகப் பெற்று உயிர்த்திறன் வரிசையில் முன்னிடம் பெறுகின்றன. கூட்டுயிர் ஒலிகள் அவற்றின் துலக்கமிக்க உயிரின் திறனையே பெறுவனவாம்.

நெகிழிசைப்புப் பெற்ற மெய்யொலிகளும் ஓரளவு உயிர்த்திறன் பெற்றவையாகவே மொழியியலாரால் கொள்ளப்படினும், மிகக்

குறைந்த உயிர்த்திறன் பெற்ற உயிர் ஒலியுங் கூட, மிக அதிக உயிர்த்திறன் பெற்ற மெய்யொலியினும் மிக்க உயிர்த் திறன் உடையதாகவே அமைகின்றது.

(21)

76. **இஈ எஏ ஐயங் காப்போ**
**டண்பன் முதனா விளிம்புற வருமே.**

**இ ஈ எ ஏ ஐ அங்காப்போடு**
**அண்பல் முதல் நா விளிம்பு உற வருமே.**

i ī e ē ai aṅkāppōtu
aṇpal mutal nā viḻimpu uṟa varumē.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

### How Pronounced

The letters i.í,e,è, and ai are pronounced by opening the mouth, and bringing the edge of the lower part of the tongue in contact with the front palate (or teeth).

## ஒப்புமைப் பகுதி

**இ ஈ எ ஏ ஐ என இசைக்கும்**
**அப்பால் ஐந்தும் அவற்று ஓரன்ன**
**அவைதாம்**
**அண்பல் முதல்நா விளிம்பு உறல் உடைய**

(தொல். எழு. : 86)

**இ ஈ எஏ ஐயங் காப்பொடு**
**மேல்வாய்ப் பல்லடி நாவிளிம் புறவரும்**

(மு. வீ. : 45)

..........................................................
**இஈ எஏ ஐ அண்பல் அடிநாப்பற்றொடும்**
..........................................

(சுவாமி. : 16 : 4)

## மயிலை நாதர்

**எ—ன்,** இவ் வைந்தெழுத்துக்கும் முயற்சி யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**இ—ள்.:** இக்கூறப்பட்ட ஐந்தெழுத்தும் அங்காப்புடனே அண்பல்லை முதனா விளிம்பு உறும் முயற்சியாற் பிறக்கும், எ — று.

இ ஈ எ ஏ ஐ என உச்சரித்துக் கண்டு கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ – னின்,** இதுவும் அது:

**இ – ள்.:** இவ் ஐந்தெழுத்தும், அங்காப்புடனே அண்பல்லை அடி நா விளிம்பு பொருந்தப் பிறக்கும், **எ – று.**

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்,** இதுவுமது.

**இ–ள்.: இ ஈ எ ஏ ஐ** – இ ஈ எ ஏ ஐ என்னும் இவ்வைந் தெழுத்தும், **அங்காப்போடு** – அங்காத்தல் முயற்சியோடுங்கூட, **அண்பல்** – **அண்ணத்தையும்** பல்லையும், **முதல் நா விளிம்புற வருமே** – அடி நா விளிம்பு தொடுமுயற்சியாற் பிறக்கும் **எ– று.**

## விசாகப் பெருமாளையர்

இதுவுமது.

**இ–ள்.: இ ஈ எ ஏ ஐ** – இ ஈ எ ஏ ஐ ஐந்தும், **அங்காப்போடு** – அங்காப்புடனே, **அண்பல்** – அண்பல்லை, **நாமுதல்** – நாக்கடியினது, **விளிம்பு** – ஓரமானது, **உற** – பொருந்த, **வரும்** – பிறக்கும், **எ – று.**

## ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

*இ ஈ எ ஏ ஐ எம்முயற்சியாற் பிறக்கும்?*

இ ஈ எ ஏ ஐ அங் காப்போ
டண்பன் முதனா விளிம்புற வருமே.

(இ ஈ எ ஏ ஐ அங்காப்பு ஓடு
அண்பல் முதல்நா விளிம்பு உற வருமே)

**இ–ள்.: இ ஈ எ ஏ ஐ** – இ ஈ எ ஏ ஐ ஐந்தும், **அங்காப்போடு** – அங்காப்புடனே, **அண்பல் முதல்நா விளிம்பு உற வருமே** – மேல் வாய்ப்பல்லை நாக்கடியினது ஓரமானது பொருந்தப் பிறக்கும், **எ–று.**

## முகவை இராமானுச கவிராயர்

இதுவுமது.

**இ–ள்.: இ ஈ எ ஏ ஐ** – இந்த ஐந்தும், **அங்காப்போடு** – மேற்கூறிய அங்காத்தல் முயற்சியோடு கூட, **அண்பல்** – முன்னம் பல்லை, **அடிநா விளிம்புற** – அடிநாவினது விளிம்பு பொருந்த, **வரும்** – பிறக்கும், எ – **று.**

அண்பல் – நா விளிம்பு அணுகுதற்குக் காரணமாகிய
பல்லெனக் கொண்டு முன்னம் பல்லெனக் காண்க.
அங்காப்போடென்பதை இப் பிறப்பிலக்கண முடியு

மளவும் வருஞ் சூத்திரந்தோறுங் கூட்டுக. ஐந்தும் வரும் என முடித்துக் கொள்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :–** **இ ஈ எ ஏ ஐ** – இ ஈ எ ஏ ஐ ஐந்தும், **அங்காப்போடு** – வாய் திறத்தலுடனே, **அண்பல்** – மேல்வாய்ப் பல்லை, **நாமுதல் விளிம்பு** – நாக்கடியினது ஓரமானது, **உற** – பொருந்த, **வரும்** – பிறக்கும்.

**குறிப்பு** :–அண்பல் – நாவிளிம்பால் அணுகப்படும் பல். ‘அங்காப்போடு’ என்பதை இப்பிறப்பிலக்கண முடியுமளவும் வருஞ் சூத்திரந்தோறும் கூட்டுக.

## ஆறுமுக நாவலர்

**இ – ள்.: இ ஈ எ ஏ ஐ** – இ ஈ எ ஏ ஐ ஐந்தும், **அங்காப்போடு** – அங்காப்புடனே, **அண்பல் நாமுதல் விளிம்பு உற வரும்** – மேல்வாய்ப் பல்லை நாக்கடியினது ஓரமானது பொருந்தப் பிறக்கும், **எ – று.**

அண்பல் – நா விளிம்பால் அணுகப்படும் பல்.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். இ ஈ** எ ஏ ஐ – இ ஈ எ ஏ ஐ ஐந்தும், – அங்காப்போடு – அங்காப்புடனே, – **அண் பல் நாமுதல் விளிம்பு உற** – மேல்வாய்ப்பல்லை நாக்கடியினது ஓரங்கள் பொருந்த, – **வரும்** – பிறக்கும். **எ–று.**

## வை.மு. சடகோபராமானுசாசாரி
## சே. கிருஷ்ணமாசாரி

**இ–ள்.: இ ஈ** எ ஏ ஐ–இந்த ஐந்தும், **அங்காப்போடு** – வாய் திறத்தலுடனே, **அண் பல்** – மேல்வாய்ப் பல்லை, **நா முதல் விளிம்பு**–அடிநாக்கினது ஓரமானது, **உற** – பொருந்த, **வரும்** – பிறக்கும்; **எ–று.**

**அண் பல்** – (நாவின் ஓரத்தால்) அணுகப்படும் பல்; வினைத்தொகை.‘அங்காப்போடு’ என்பதை, இப் பிறப்பிலக்கணம் முடியுமளவும் வருஞ் சூத்திரந் தோறும் கூட்டுக.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள். அவற்றுள்** – மேல் இடம் வகுக்கப்பட்ட முதலெழுத்துக்களுள், **அ ஆ முயற்சியுள் அங்காப்பு உடைய** – அ ஆ இரண்டும் (இதழ், நா, பல், அண்ணம் இவற்றால் உண்டாகும் நால்வகை) முயற்சியுள் (அண்ணத்தின் தொழிலாகிய) அங்காத்தலையுடையனவாய்ப் பிறக்கும். **எ–று.**

அங்காத்தல் – வாயைத் திறத்தல் .

**கா. நமச்சிவாய முதலியார்**

**இ ஈ எ ஏ ஐ** – இ ஈ எ ஏ ஐ ஐந்தும், **அங்காப்போடு** – அங்காப்புடனே, **அண் பல்** – முன்னம்பல்லை, **நாமுதல் விளிம்பு** – நாக்கடியின் ஓரமானது, **உற** – பொருந்த, **வரும்** – பிறக்கும்.

**(23)**

77. **உஊ ஒஓ ஔவிதழ் குவிவே.**

**உ ஊ ஒ ஓ ஔ இதழ் குவிவே.**

u ū o ō au iṭaḷ kuvivē.

**இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )**

**By the lips**

The circular contraction of the lips produces the sounds of u,ú, o and au.

**ஒப்புமைப் பகுதி**

**உஊ ஒஓ ஔ என இசைக்கும்**
**அப் பாலைந்தும் இதழ் குவிந்தியலும்**

(தொல். எழு. : 87)

**உஊ ஒஓ ஔ இதழ் குவிவே**

(மு. வீ. : 46)

**உஊஒ ஓஔ இதழ்குவிமாம் அணங்கே**

(சுவாமி. : 16: 4)

**மயிலை நாதர்**

**எ – ன்,** இவ்வைந்துயிருக்கும் முயற்சியாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**இ – ள்.:** [1]இக்கூறப்பட்ட ஐந்தெழுத்தும் இதழைக் குவித்துச் சொல்லு முயற்சியாற் பிறக்கும், **எ – று.**

---

**பாட வேறுபாடு :–**

1. இக் கூற்றைந்தெழுத்தும்

உ ஊ ஒ ஓ ஔ என உச்சரித்துக் கண்டுகொள்க.

## சங்கர நமச்சிவாயர்

எ – **னின்,** இதுவும் அது.

இ – ள்: இவ் ஐந்தெழுத்தும் பிறத்தற்கு ஏதுவாகிய முயற்சி இதழ்குவிவாம், **எ – று.**

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்,** இதுவுமது.

**இ–ள்.: உ ஊ ஒ ஓ ஔ** – உ ஊ ஒ ஓ ஔ என்னும் இவ்வைந்தெழுத்து, **இதழ் குவிவே –** இதழைக் குவித்துச் சொல்லும் முயற்சியாற் பிறக்கும், **எ–று.**
விசாகப் பெருமாளையர்

## விசாகப் பெருமாளையர்

இதுவுமது.

**இ–ள்.: உ ஊ ஒ ஓ ஔ –** உ ஊ ஒ ஓ ஔ ஐந்தும் பிறத்தற் கேதுவாகிய முயற்சி, **இதழ்குவிவு** – உதடுகளின் குவிதலாம், **எ – று.**

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

*உ ஊ ஒ ஓ ஔகாரங்கள் பிறத்தற்கு முயற்சி யாது?*

உ ஊ ஒ ஓ ஔவிதழ் குவிவே.

(உ ஊ ஒ ஓ ஔ இதழ் குவிவு ஏ)

**இ–ள்.: உ ஊ ஒ ஓ ஔ –** உ ஊ ஒ ஓ ஔ ஐந்தும் பிறத்தற்கேதுவாகிய முயற்சி, **இதழ் குவிவு –** உதடுகள் குவிதலாம், எ–று.

## முகவை இராமானுசக் கவிராயர்

இதுவுமது.

**இ–ள்.: உ ஊ ஒ ஓ ஔ** – இவ்வைந்தும் பிறத்தற்கு உரிய முயற்சி, **இதழ் குவிவு** – உதட்டைக் குவித்துக் கூறுதலாம், **எ – று.**

## கா . கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :– உ ஊ ஒஓ ஔ –** உ ஊ ஒ ஓ ஔ ஐந்தும் (பிறத்தற்கேதுவாகிய முயற்சி), **இதழ்குவிவு –** உதடுகளின் குவிதலாம்.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: உ ஊ ஒ ஓ ஔ –** உ ஊ ஒ ஓ ஔ ஐந்தும் பிறத்தற்கேதுவாகிய

முயற்சி, **இதழ்குவிவு** – உதடுகள் குவிதலாம், எ – று.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள். உ ஊ ஒ ஓ ஔ – உ ஊ ஒ ஓ ஔ ஐந்தும் பிறத்தற்கேதுவான முயற்சி, – **இதழ் குவிவு** – உதடுகள் குவிதலாம். எ–று.

## வை.மு. சடகோபராமானுசாசாரி
## சே. கிருஷ்ணமாசாரி

இ–ள்.: உ ஊ ஒ ஓ ஔ – இந்த ஐந்தும், (பிறத்தற்கு ஏதுவாகிய முயற்சி). **இதழ் குவிவு** – உதடுகளின் குவிதலாம்; எ – று.

## பவானந்தம் பிள்ளை

இ–ள். உ ஊ ஒ ஓ ஔ – உ ஊ ஒ ஓ ஔ என்னும் ஐந்தும் பிறத்தற்கு ஏதுவாகிய முயற்சி, **இதழ் குவிவு** – உதடுகள் குவிதலாம். எ–று.

## கா. நமச்சிவாய முதலியார்

உ ஊ ஒ ஓ ஔ – உ ஊ ஒ ஓ ஔ ஐந்தும் (பிறத்தற்கேதுவாகிய முயற்சி), **இதழ் குவிவு** – உதடுகளின் குவிதலாம்.

(24)

78. **கஙவும் சஞவும் டணவு முதலிடை**
**நுனிநா வண்ண முறமுறை வருமே.**

க ஙவும் ச ஞவும் ட ணவும் முதல் இடை
நுனி நா அண்ணம் உற முறை வருமே.

ka ṅavum sa ñavum ta ṇavum muṭal
itai
nuṉi nā aṇṇam uṟa muṟai varumē.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

### How Pronounced

K and n; c and n'; and t and ñ are pronounced by the pressure of the back, middle and end of the tongue respectively on the back, middle and end of the palate.

---

பாட வேறுபாடு :-

1. ககாரமும் ஙகாரமும் பின்னும் இப்படியே ஒட்டுக.

## ஒப்புமைப் பகுதி

**ககார ஙகாரம் முதல்நா அண்ணம்**

(தொல். எழு. : 89)

**சகார ஞகாரம் இடைநா அண்ணம்**

(தொல். எழு. : 90)

**டகார ணகாரம் நுனிநா அண்ணம்**

(தொல். எழு. : 91)

**அடிநா வடியண மழுத்தக் கஙவரும்**

(மு. வீ. : 47)

**இடைநா விடையண பிறுக்கச் சஞவெழும்**

(மு. வீ.: 48)

**நுனிநா நுனியண நோக்க டணவரும்**

(மு. வீ. : 49)

**அண்ணம் முதலிடை நுனிநாவுற வுடன் முன்னாறாம்**

(சுவாமி. : 17)

## மயிலை நாதர்

**எ—ன்,** இவ்வாறெழுத்துக்கும் முயற்சியா மாறுணர்த்துதல் நுதலிற்று.

**இ—ள்.:** [1]ககரமும் ஙகரமும் முதல்நா முதலண்ணத்தை உரிஞ்சப் பிறக்கும்; சகரமும் ஞகரமும் இடைநா இடையண்ணத்தை உரிஞ்சப் பிறக்கும்; டகரமும் ணகரமும் நுனிநா நுனியண்ணத்தை உரிஞ்சப் பிறக்கும், **எ — று.**

க ங ச ஞ ட ண என உச்சரித்துக் கண்டுகொள்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ — னின்,** இதுவும் அது.

**இ—ள்.:** கவ்வும் ஙவ்வும் முதல்நா முதலண்ணத்தையும், சவ்வும் ஞவ்வும் இடைநா இடையண்ணத்தையும், டவ்வும் ணவ்வும் நுனிநா நுனியண்ணத்தையும் பொருந்த இம்முறையே பிறக்கும், **எ — று.**

## கூழங்கைத் தம்பிரான்

**சூ—ம்,** இதுவுமது.

**இ—ள்.: கஙவும் சஞவும் டணவும்** — க ங ச ஞ ட ண என்னும் இவ்வாறெழுத்தும், **முதலிடை நுனி நா அண்ணமுற** — முதல் நா முதலண்ணத்தைப் பொருந்தக் ககாரமும் ஙகாரமும், இடை நா இடையண்ணத்தைப் பொருந்தச் சகாரமும் ஞகாரமும் நுனி நா நுனியண்ணத்தைப் பொருந்த டகாரமும் ணகாரமும், **முறை வருமே** — முறைமையாகப் பிறக்கும், **எ—று.**

## விசாகப் பெருமாளையர்

இதுவுமது.

**இ–ள்.: கங** – கவ்வும், ஙவ்வும், (நா) **முதல்**–நாக்கினடி, (அண்ணமுதல்) – மேல்வாயடியையும், **சஞ**–சவ்வும் ஞவ்வும், (நா) **விடை**–நாக்கினடு, (அண்ணவிடை) – மேல்வாய் நடுவையும், **டண** – டவ்வும் ணவ்வும், **நாநுனி**– நாக்கின் கடை, **அண்ண** (நுனி) – மேல்வாய்க் கடையையும், **உற** – பொருந்த, **முறை** – இம்முறையே, **வரும்**–பிறக்கும், **எ–று.**

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

*க ங வும் ச ஞவும் ட ணவும் எவ்வாறு பிறக்கும்?*

க ங வுஞ் ச ஞ வும் டணவு முதலடை
நுனிநா வண்ண முறமுறை வருமே
( க ங வும், ச ஞ வும் ட ண வும் முதல் இடை
நுனிநா அண்ணம் உற முறைவருமே)

**இ–ள்.: க ங நா முதல் அண்ண முதல்** – கவ்வும் ஙவ்வும் நாக்கினடி மேல்வாயடியையும், **சஞநாவிடை அண்ணவிடை** – சவ்வும் ஞவ்வும் நாக்கினடு மேல்வாய்நடுவையும், **டண நாநுனி அண்ண நுனி** – டவ்வும் னவ்வும் நாக்கின்கடை மேல் வாய்க்கடையையும், **உற முறைவருமே** – பொருந்த இம்முறையே பிறக்கும், **எ–று.**

*க ஙக்கள் எம் முயற்சியாற் பிறக்கும்?*

"க ங முதனா (முதல்) அண்ண முறவருமே"

*ச ஞக்கள் எம் முயற்சியாற் பிறக்கும்?*

"ச ஞ இடைநா (இடை) அண்ண முறவருமே"

*ட ணக்கள் எம் முயற்சியாற் பிறக்கும்?*

"நுனிநா (நுனி) அண்ண முறவருமே"

## முகவை இராமானுச கவிராயர்

இதுவுமது.

**இ–ள்.: முதலிடை நுனிநா வண்ணம்** – முதலிடை நுனிநாவும் முதலிடை நுனியண்ணமும், **உற** – பொருந்த, **முறை** – முறை நிரனிறையாகவே, **கஙவுஞ் சஞவும் டணவும் வரும்** – முதனா முதலண்ணமுற கஙவும், இடைநா இடையண்ண முற சஞவும், நுனிநா நுனியண்ணமுற, டணவும் பிறக்கும், **எ – று.**

முறை பிறழ்ந்து வருவது, எதிர்நிரனிறை யாதலின் இது முறைநிரனிறை யெனக் காண்க.
நிரல் – வரிசை, நிறுத்துதல் – நிறை.
இங்கே அண்ணமென்றது மேல்வாயகமெனக் காண்க.

இச்சூத்திரம், நிரனிறைப் பொருள்கோளும் அவ்வலங்காரமும் பட நின்றது.

## கா . கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :–** **கங** – கவ்வும் ஙவ்வும் (நா) **முதல்** – நாக்கினடி, (அண்ணமுதல்) – மேல்வாயடியையும், **சஞ** – சவ்வும் ஞவ்வும் (நா), **இடை**–நாக்கின் நடு, **(அண்ணம் இடை)** – மேல்வாய் நடுவையும், **டண**–டவ்வும் ணவ்வும், **நாநுனி** – நாக்கின் கடை, **அண்ணம்** (நுனி) – மேல்வாய்க்கடையையும், **உற** – பொருந்த, **முறை** – இம்முறையே, **வரும்** – பிறக்கும்.

குறிப்பு :–
இதன்பொருள் முறை நிரனிறையாற் கொள்க.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.:** **க ங** (நா) **முதல்** (அண்ணமுதல்) – கவ்வும் ஙவ்வும் நாக்கினடி மேல்வாயடியையும், சஞ(நா) **விடை** (அண்ணவிடை) – சவ்வும் ஞவ்வும் நாக்கினடு மேல்வாய் நடுவையும், **டண நாநுனி அண்ண** (நுனி) **உற** – டவ்வும் ணவ்வும் நாக்கின்கடை மேல்வாய்க் கடையையும் பொருந்த, **முறை வரும்**–இம் முறையே பிறக்கும். எ – று.

## வ. குமாரசாமிப்புலவர்

**இ–ள். க ங (நா)** முதல் **அண்ணமுதல் (உற)** – சகரமும் ஙகரமும் நாக்கினடி மேல்வா யடியைப் பொருந்தவும், **ச ஞ (நா) இடை அண்ண இடை (உற)** – சகரமும் ஞகரமும் நாக்கினடு மேல்வாய் நடுவைப் பொருந்தவும், **ட ண நா நுனி அண்ண நுனி** உற – டகரமும் ணகரமும் நாக்கின் நுனி மேல்வாய் நுனியைப் பொருந்தவும், **வரும்** – பிறக்கும்,எ–று.

நிரனிறையைப் பிரித்துக் கூட்டினமையால் முறை என்பது பொருள் கூறாதுவிடப்பட்டது.

க ங முதல் நா முதல் அண்ணம் உற வரும்; ச ஞ இடை நா இடையண்ணம் உற வரும்; ட ண நுனி நா நுனி அண்ணம் உற வரும் என்று விளக்குதற்கே முறை என்பது நின்றது.

## வை.மு. சடகோபராமானுசாசாரி
## சே. கிருஷ்ணமாசாரி

**இ–ள்.: க ங வும்** –ககரமும் ஙகரமும், **ச ஞவும்** – சகரமும் ஞகரமும், **ட ணவும்** – டகரமும் ணகரமும், **முறை** – முறையே, முதல் **இடை நுனிநா அண்ணம் உற** – நாக்கின் அடியும் நடுவும் கடையும் மேல்வாயின் அடியையும் நடுவையும் கடையையும் பொருந்த, **வரும்** – பிறக்கும்; எ – று.

'முத லிடை நுனி' என்பதை, நா அண்ணம் என்ற இரண்டோடுங் கூட்டுக.

அடிநா மேல்வாயடியைச் சேர்தலாற் ககர ஙகரங்களும், இடைநா மேல்வாயிடையைச் சேர்தலாற் சகர ஞகரங்களும், நுனிநா

மேல்வாய் நுனியைச் சேர்தலால் டகர ணகரங்களும் பிறக்குமென்க.

முறை – நிரனிறை.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள். க ங** (நா) **முதல்** (அண்ணமுதல்) – கவ்வும் ஙவ்வும் நாக்கின் அடி மேல்வாயடியையும், **சஞ** (நா) **இடை** (அண்ணவிடை) – சவ்வும் ஞவ்வும் நாக்கின் நடு மேல்வாய் நடுவையும், **டண நா நுனி** ( அண்ண நுனி) – டவ்வும் ணவ்வும் நாக்கின் கடை மேல்வாய்க் கடையையும், **உற** – பொருந்த, **முறை வரும்** – இம்முறையே பிறக்கும். **எ–று.**

## கா. நமச்சிவாய முதலியார்

**க ஙவும்** – கவ்வும் ஙவ்வும், (நா) **முதல்** – நாக்கினடி, (அண்ணமுதல்) – மேல்வா யடியையும், **ச ஞவும்,** – சவ்வும் ஞவ்வும், (நா) **இடை** – நாக்கின் நடு, (அண்ணம் இடை) – மேல்வாய் நடுவையும், **ட ணவும்** – டவ்வும் ணவ்வும், **நாநுனி** – நாக்கின் கடை, அண்ணம் (நுனி) – மேல்வாய்க் கடையையும், **உற** – பொருந்த, **முறை** – அம் முறையே, **வரும்** – பிறக்கும்.

### மோசசு பொன்னையா ★

மெய்யெழுத்துக்களுள், நாமுதலும், இடையும், நுனியும் அண்ணத்தின் அடியையும், நடுவையும், கடையையும் பொருந்த முறையே க்ங்,ச்ஞ்,ட்ண் என்பனவும், மேல் வாய்ப்பல்லின் அடியை நா நுனி நன்கு பொருந்த த் ந் என்பனவும், மேல் கீழ் உதடுகள்பொருந்த ப் ம் என்பனவும், நாவடி மேல் வாயடியைப் பொருந்த யகரமும், மேல்வாயை நாநுனி தடவ ர் ழ் என்பனவும், மேல்வாய்ப் பல்லடியை நாவின் நுனி தடித்துத் தீண்ட லகரமும், மேல்வாயை நாவின் நுனி தடித்துத் தடவ ளகரமும், மேல்வாய்ப் பல்லைக் கீழுதட்டுடன் பொருத்த வகரமும், மேல்வாயை நாநுனி பொருந்த ற் ன் என்பனவும் பிறக்கும், **எ–று.**

> முடியுறுதல் (80) நுனி நன்கு பதிதல், பகரமும் மகரமும் ஈருதடுகளும் பொருந்தப் பிறக்கும் என்றாரேனும், பகரம் உள்ளிருந்து வரும் வாய் வளியாலும், மகரம் மூக்கு வளியாலும் பிறக்கும் எனக் கொள்க.
>
> எழுத்துக்களின் பிறப்பு, பெரும்பாலும் தொல்காப்பியர் கொள்கைப்படியே கண்டுக் கூறப்பட்டுள்ளது.
>
> தொல்காப்பியர் யகரந் தோன்றுதற்கு முதற் காரணமாக, மிடற்று வளியைக் குறிப்பிட்டு, அண்ணத்தைக் கண்ணுற்றடைய அது பிறக்கும் என்பதை,

---

★ **இவ்வுரையாசிரியர்,மெய்யெழுத்துகளின் முயற்சிப் பிறப்பினைக் கூறும் அடுத்து வரும் ஏழு( நூற்.79-85) நூற்பாக்களின் விளக்கங்களையும் ஒருங்கே வைத்து ஈங்கே விளக்கிச் செல்கிறார்.**

***அண்ணஞ் சேர்ந்த மிடற்றெழு வளியிசை***
***கண்ணுற் றடைய யகாரம் பிறக்கும்***

என்றுரைத்தார். இவ்வாசிரியர் அதனை,

***அடிநா வடியண முறயத் தோன்றும்***

என்றார். யகர ஒலி திண்ணிதாய்க் கேட்கப்படாமல், ஓராற்றான் உயிரொலியே போலக் கேட்கப்படுவதால், யகரப் பிறப்புப் பற்றித் தொல்காப்பியர் உரைத்ததும், அந்நூற்பாவின் உரையில் நச்சினார்க்கினியர்,

***உந்தியில் எழுந்த காற்று, மிடற்றிடத்துச் சேர்ந்த அதனாற் பிறந்த ஓசை அண்ணத்தை அணைந்து உரலாணி இட்டாற் போலச் செறிய யகர ஒற்றுப் பிறக்கும்***

என்று விளக்கியதும் பண்டு பொருந்துவனவாகலாம். இக்காலத்தில் அஃது அண்ண நடுவிட நெகிழிசை யொலியாகவே ஒலிக்கப்படுகிறது.குரல்வளையிலிருந்து வெளிப்படும் ஒலி எவ்விதத்திலாவது தடைப்பட்டோ, அல்லது நெருக்கப்பட்டோ வெளிச்செல்லுமாறு அமையின் மெய்யொலிகள் பிறக்கின்றன. மெய்யொலிகள் குரலிசைப்பைச் சிறிதளவு கூடப் பெறாதவை, நெகிழிசைப்புப் பெற்றவை என இரு பகுப்பைப் பெறும்.

வல்லினம் எனப்படும் க் ச் ட் த் ப் ற் என்னும் ஆறும் குறலிசைப்புப் பெறாத அடைப்பொலிகள்; மெல்லினம் எனப்படும் ங் ஞ் ண் ந் ம் ன் என்னும் ஆறும் மூக்கொலிப்பைப் பெற்ற அடைப்பொலிகள்; இடையினம் எனப்படும் ய் ர் ல் வ் ழ் ள் என்னும் ஆறும் நெகிழிசைப்பைப் பெற்ற அடைப்பில் ஒலிகள் எனப் பகுக்கப்படும். இவ்வாறு ***அடைப்பொலிகள், அடைப்பில் ஒலிகள்*** என மெய்யொலிகளைப் பாகுபடுத்தும் முறையை ஒலிப்பு அல்லது உச்சரிப்பு முறை மெய்ப்பாகுபாடு என்பர்.

வாய் அறையுள் உச்சரிப்பு உறுப்புக்கள் மேற்கொள்ளும் முயற்சி வேறுபாட்டாலும், மூக்கு அறையுள் ஒலிகளுக்கு மூக்கொலிப்புச் சேர்க்கப்படும் முயற்சியாலும் மெய்கள் பாகுபாடு பெறுகின்றன. அவ்வகைப் பாகுபாட்டை முயற்சி அடிப்படை மெய்யொலிப் பாகுபாடு என்பர். அப்பாகுபாட்டின்படி மெய்யொலிகள் ***அடைப்பொலிகள் அல்லது வெடிப்பொலிகள், மூக்கின அடைப்பொலிகள், மைய நெகிழொலிகள், மருங்கொலிகள், உரசொலிகள், அடைப்புரசொலிகள், உரப்பொலிகள், வருடொலிகள், நாமடியொலிகள்*** என வகைப்படுத்தப்படும்.

மூச்சுக் காற்றை வெளிச்செல்லாமலும், பின்னோக்கி உட்செல்லாமலும் முன்னும், பின்னுமாக அடைப்பதும், வெளிக்காற்றிலும் அதிக அழுத்தம் பெறுமாறு அடைபட்ட

காற்றை நெருக்கி அழுத்துவதும், திடீரென விடுப்பதுமாகிய மூவேறு செயல்கள் அடுத்தடுத்து நடப்பதாலேயே அடைப்பொலிகள் எனப்படும் வெடிப்பொலிகள் பிறக்கின்றன. அவ்வாறு முன்னும் பின்னுமாக அமையும் அடைப்புக்களில், வெளியடைப்பு வாய் அறையுள்ளும், உள் அடைப்பு உள்நாக்கு, குரல்வளை, நுரையீரல் ஆகிய இடங்களிலும் உண்டாதல் கூடும் என்றாலும், பெரும்பாலும் குரல்வளையிடத்திலேயே அமைகின்றது. அழுத்தம் பெற்ற பின்னர், வெளியடைப்பு விடுக்கப்பட்ட பின்னரே உள் அடைப்பு விடுக்கப்படுகின்றது.

வாயறையுள் அமையும் வெளி அடைப்பு, பின் அண்ணம், அண்ணம், அண்பல், பல், மேலுதடு என்னும் மேல்வாய்ப் பகுதிகளோடு நாவும் இதழும் பொருந்த அடைப்பதாலேயே அமைகின்றது. தமிழில் கடையண்ணம், இடையண்ணம், முன்னண்ணம், அண்பல்லடி, மேற்பல், மேலிதழ் ஆகிய ஆறு இடங்களில், முறையே கடைநா, இடைநா, நாமுதல், நுனிநா, கீழிதழ் ஆகிய உறுப்புக்கள் பொருந்துவதாலேயே முறையே க், ச், ட்,ற், த்,ப் என்னும் ஆறு குரலிசைப்பில்லா அடைப்பொலிகளும் பிறக்கின்றன. அவற்றின் பிறப்பு முயற்சியோடு மூக்கொலிப்பும் பெறுவதால் ங், ஞ், ண், ன், ந், ம் என்னும் ஆறு மூக்கின அடைப்பொலிகளும் பிறக்கின்றன. அவ்வொலிகள் அசையுந் தன்மையுடைய ஒலிப்பு உறுப்பின் பெயரை முன்னும், அசையாத் தன்மையுடைய ஒலிப்பு உறுப்பின் பெயரைப் பின்னும் அமையப்பெற்று, முறையே கடைநா, கடையண்ண (க் ங்), இடைநா அண்ண (ச், ஞ்), நாமுதல் அண்ண (ட், ண்), நுனிநா அண்பல் (ற், ன்), நாமுதல் பல்லிட (த், ந்), ஈரிதழ் (ப், ம்) ஒலிகள் எனக் குறியீடு பெற்று வழங்கப்படுகின்றன. சுருக்கமாக அவற்றைப் ***பின்னண்ண அடைப்பொலி, அண்ண அடைப்பொலி, முன்னண்ண அடைப்பொலி அண்பல் அடைப்பொலி, பல்லிட அடைப்பொலி, ஈரிதழ் அடைப்பொலி*** என முறையே அவை பிறக்கும் பிறப்பு முனை அடிப்படையில் குறிப்பிடுவதும் உண்டு.

நா அண்ணத்தை நோக்கி எழுந்து அண்ணத்தை நெருங்கி நின்று வாயின் மையப் பகுதியில் மட்டும் காற்றைச் செல்லவிட்டு நிற்பின், சிறிது முன், பின் இடங்களில் முறையே ***அரை உயிர்கள்*** எனப்படும் ய், வ் ஆகிய தொடரொலிகள் பிறக்கின்றன. அவற்றுள், வ் பல்லிதழ்த் தொடரொலியாகவும் உச்சரிக்கப்படுகிறது. அந்நிலையில் நுனிநா அண்பல்லிடத்தை வருடினாலும், அண்பல்லை,நோக்கி நெருங்கி நின்றாலும் ர் பிறக்கின்றது. மையப்பகுதியில் காற்றுச் செல்லும் நிலையில் பிறக்கும். இவ்வொலிகளை மைய நெகிழ் மொழிகள் என்பர்.

வாயின் மையப் பகுதியில் நுனிநா மேல்வாய்ப் பகுதியோடு

பொருந்துவதோடு, இரு மருங்கும் அல்லது ஒரு மருங்கு மட்டும் ஒலிக் காற்றுச் செல்வதால் மருங்கொலிகள் பிறக்கின்றன. தமிழில் ல், ள், ழ் என்னும் மூன்றும் மருங்கொலி மெய்களாக உள்ளன. தொல்காப்பியர் காலத்தில் ல்,ள் ஆயவை முறையே அண்பல்லிடத்தை நாவிளிம்பு வீங்கி ஒற்றுதல் வருடுதல் ஆய முற்சிகளில் பிறந்தன என அவர் கூறுகிறார். நன்னூலார் காலத்தில், ள் உள்நோக்கி நகர்ந்து முன் அண்ணத்தில் பிறப்பதாயிற்று. ஆண்டும் வருடல் முயற்சியாலேயே அது பிறக்கும் என அவர் குறிப்பிடுகிறார். இக்காலத்தில் ள் முன்னண்ணத்தில் பிறக்கும் நாமடி மருங்கொலியாகவே ஒலிக்கப்படுகிறது.

குரல் இதழ்கள் மூடிய நிலையில், குரல்வளைக் குருத்தெலும்புகளின் ஊடாக மட்டும் மூச்சுக்காற்றுச் செல்லுங்கால் உரசொலிகள் பிறக்கின்றன. ஆங்கில f, வடமொழி ஹ, என்பனவும், தமிழ் ஃ என்பதும் உரசு ஒலிகள். தமிழ் ழ் என்னும் மெய்யும் நாமடியோடு உரசும் ஓரளவு பெற்றுள்ளது என்பர்.

ஒரே ஒலியின் முற்பகுதி அடைப்பொலியாகவும், பிற்பகுதி உரசொலியாகவும் இருப்பின், அதை அடைப்பு உரசொலி என்பர். தமிழில் அடைப்பு உரசொலி இல்லை. வடமொழி க்ஷ அடைப்பு உரசொலியாகும்.

ஒலியுறுப்புக்களை நெகிழ்த்தி மூச்சுக் காற்றால் வேகமாகப் பலமுறை தொடர்ந்து அதிரச் செய்வதால் உரப்பொலிகள் பிறக்கின்றன. வாய் இதழ்களாலும், நுனி நாவாலும், உள்நாவாலும் உரப்பொலிகள் உண்டாக்கப்படலாம். இவற்றுள் நுனிநா உரப்பொலியே பெரும்பாலும் பேச்சொலியாக அமைகின்றது. தமிழ் ற் தொடரடி உரப்பொலியாகும். தமிழ் ர் ஓரடி உரப்பொலி எனப் பலரால் கொள்ளப்படுகின்றது. அவ்விருவகை ஒலிகட்கும் முறையே மன்றம், கறுப்பு, கன்று, சிறுவன் என்பவற்றிலும், மார்பு, சார்பு, ஆர்வு என்பவற்றிலும் காணப்படும் அவ்வவ் வொலிகளைக் காட்டாகக் கூறுவர்.

ஒலிப்பு உறுப்பு ஒலிப்பு முனையில் ஒரு தடவை மட்டும் வருடுவதால் அல்லது தட்டுவதால் வருடொலிகள் பிறக்கின்றன. ஓரடி உரப்பான ரகரமும், லகர, ளகர, ழகரங்களும் தமிழில் வருடொலிகளாக அமைந்துள்ளன. படம், மடம், என இவ்வாறு அமையுஞ் சொற்களில் டகரம் வருடொலியாகவே அமைவதைக் கூர்ந்தறிந்து கொள்க.நா மடிக்கப் பெற்று, நுனிநாவின் பிற்பகுதி அண்ணத்தோடு பொருந்திக் காற்றைத் தடை செய்யின், நாமடி ஒலிகள் பிறக்கின்றன. தமிழில் இக்காலத்தில் **ட், ண், ழ், ள்** என்பன நாமடி ஒலிப்புப் பெற்ற மெய்களாக உள்ளன.

பிறப்புமுனை அடிப்படையில் மெய்களைப் பாகுபாடு செய்வதும் உண்டு. அது பிறப்புமுனை அடிப்படை மெய்ப்பாகுபாடு எனப்படும். அம்முறைப்படி

பின்னண்ணத்தில் பிறக்கும் *க், ங், வ்* என்பவை ***பின்னண்ண மெய்கள்*** எனவும்,

இடையண்ணத்தில் பிறக்கும் *ச், ஞ், ய், ஞ்* என்பவை ***இடையண்ண மெய்கள்*** எனவும்,

முன்னண்ணத்தில் பிறக்கும் *ட், ண், ள்* என்பவை ***முன்னண்ண மெய்கள்*** எனவும்,

அண்பல்லிடத்துப் பிறக்கும். *ற், ன், ர், ல்* என்பவை ***அண்பல் மெய்கள்*** எனவும்,

பல்லும் இதழும் பொருந்தப் பிறக்கும் *வ்* ***பல்லிதழ் மெய்*** எனவும்,

பல்லிடத்தில் நா பொருந்தப் பிறக்கும் *த், ந்,* ஆயவை ***பல்லிட மெய்கள்*** எனவும்,

ஈரிதழ் பொருந்தப் பிறக்கும் ***ப், ம்*** என்பன ஈரிதழ் மெய்கள் எனவும் பெயர் பெறும்.

தமிழ் மெய்களை மொழியியல் முறைப்படி வகைப்படுத்துவதாயின், கீழ்வரும் விளக்கத்திற் காணுமாறு அமைக்கலாம்.

**(25)**

**79. அண்ப லடிநா முடியுறத் தநவரும்.**

**அண்பல் அடி நா முடி உறத் த ந வரும்.**

anpal ati nā muti urat ta na varum.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

### Dentals

t and n are pronounced by the end of the tongue pressing upon the root of the front teeth.

## ஒப்புமைப் பகுதி

**அண்ணம் நண்ணிய பல்முதல் மருங்கில்**
**நாநுனி பரந்து மெய்யுற ஒற்ற**
**தாமினிது பிறக்கும் தகார நகாரம்**

(தொல். எழு. : 93)

**அண்பல் லடிநா முடியுறத் தநவரும்**

(மு.வீ. : 50)

**அண்பல் அடிநாமுடி யொத்திடத் தநவாம்**

(சுவாமி.: 17: 1)

## மயிலை நாதர்

எ—ன், இவ்விரண்டிற்கும் முயற்சியாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**இ—ள்.:** அண்பல்லடியை நாநுனி ஒற்றத் தகரமும் நகரமும் பிறக்கும். எ – று.

த ந என உச்சரித்துக் கண்டுகொள்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ – னின்,** இதுவும் அது.

**இ – ள்.:** அண்பல்லடியை நாநுனி பொருந்தத் தவ்வும் நவ்வும் பிறக்கும், எ – று.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ—ம்,** இதுவுமது.

**இ—ள்.: அண்பல்லடி** – அண்ணத்தின் அடியையும் பல்லின் அடியையும், **நா முடியுற** – நாவினது நுனி ஒற்ற, **த ந வரும்** – தகாரமும் நகாரமும் பிறக்கும், எ—று.

## விசாகப் பெருமாளையர்

இதுவுமது.

**இ—ள்.: அண்பல்** – அண்பல்லினது, **அடி**—அடியை, **நாமுடி** – நாக்கு நுனி, **உற**—பொருந்த, **தந**—தவ்வும் நவ்வும், **வரும்**—பிறக்கும், எ – று.

## ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

*த நக்கள் எம்முயற்சியாற் பிறக்கும்?*

அண்பல் லடிநா முடியுறத் தநவரும்.

(அண்பல் அடி நாமுடி உறத் தநவரும்)

**இ—ள்.: அண்பல் அடி** – மேல்வாய்ப் பல்லினது அடியை, நாமுடி உற – நாக்கு நுனி பொருந்த, **த ந வரும்** – தவ்வும் நவ்வும் பிறக்கும், எ—று.

## முகவை இராமானுச கவிராயர்

இதுவுமது.

**இ–ள்.: அண்பலடி** – முன்னம் பல்லடியை, **நாமுடியுற** – நாவினது நுனியானது பொருந்த, **தநவரும்** – தவ்வும் நவ்வும் பிறக்கும், **எ – று.**

## கா . கோபாலாசாரி –தி.கோ.ரங்காசாரி

**உரை :–** அண்பல்அடி – **மேல்வாய்ப் பல்லினது அடியை,** நா முடி உற – **நாக்கு நுனிபொருந்த,** தந – **தவ்வும் நவ்வும்,** வரும் – **பிறக்கும்.**

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: அண்பல் அடி நா முடி உற** – மேல்வாய்ப் பல்லினது அடியை நாக்குநுனி பொருந்த, **த ந வரும்** – தவ்வும் நவ்வும் பிறக்கும், **எ – று.**

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். அண்பல் அடி** – மேல்வாய்ப்பல்லினது அடியை – நாமுடி உற – நாக்குநுனி பொருந்த, **– த ந வரும்** – தகரமும் நகரமும் பிறக்கும். **எ–று.**

## வை.மு. சடகோபராமானுசாசாரி

## சே. கிருஷ்ணமாசாரி

**இ–ள்.: அண்பல் அடி** – மேல்வாய்ப் பல்லின் அடியை, **நா முடி உற** – நாக்குநுனி பொருந்த, த ந – தகரமும் நகரமும், **வரும்** – பிறக்கும்.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள். அண்பல் அடி** நா முடி **உற** – மேல்வாய்ப் பல்லினது அடியை நாக்கு நுனி பொருந்த, **த ந வரும் –** தவ்வும் நவ்வும் பிறக்கும், **எ–று.**

## கா. நமச்சிவாய முதலியார்

**அண்பல் அடி** – மேல்வாய்ப் பல்லினது அடியை, **நாமுடி உற** –நாக்குநுனி பொருந்த, **த ந** – தவ்வும் நவ்வும், **வரும்** – பிறக்கும்.

**(26)**

80. **மீகீ ழிதழுறப் பம்மப் பிறக்கும்**

**மீ கீ ழ் இதழ் உறப் பம் மப் பிறக்கும்**

mī kī ḷ itaḷ uṟap pam map piṟakkum

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

### Labials

The contact of the upper and lower lips produces (the sounds of) p and m.

## ஒப்புமைப் பகுதி

**இதழ் இயைந்து பிறக்கும் – பகார மகாரம்**

**(தொல். எழு. : 97)**

**இரண்டித முறப்ப மவெழுமென மொழிப**

**(மு. வீ. : 51)**

**........................................ இதழ்கள்**
**கண்ணிவிடப் பமவாம்..............**

(சுவாமி. : **17 :1 –2)**

## மயிலை நாதர்

**எ–ன்,** இவ்விரண்டெழுத்திற்கும் முயற்சியாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**இ–ள்.:** மேலிதழும் கீழிதழுமேவப் பகரமும் மகரமும் பிறக்கும், **எ – று.**

ப ம என உச்சரித்துக் கண்டுகொள்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ – னின்,**

இதுவும் அது.

**இ – ள்.:** மேலிதழும் கீழிதழும் பொருந்தப் பவ்வும் மவ்வும் பிறக்கும், **எ – று.**

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்,** இதுவுமது.

**இ–ள்.: மீகீழ் இதழ் உற** – மேலிதழும் கீழிதழும் பொருந்த, **ப ம பிறக்கும்** – பகாரமும் மகாரமும் பிறக்கும், **எ–று.**

## விசாகப் பெருமாளையர்

இதுவுமது.

**இ–ள்.: மீ (யிதழ்)** – மேலுதடும், **கீழிதழ்**–கீழுதடும், **உற**–பொருந்த, **பம்ம**– பவ்வும் மவ்வும், **பிறக்கும்**– பிறக்கும், **எ – று.**

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

ப மக்க ளெம்முயற்சியாற் பிறக்கும்?

மீகீழி தழுறப் பம்மப் பிறக்கும்.

(மீகீழ் இதழ்உறப் பம்மப் பிறக்கும்)

**இ–ள்.: மீ கீழ் இதழ் உற** – மேலுதடுங் கீழுதடும் பொருந்த, **பம்மப் பிறக்கும்** – பவ்வும் மவ்வும் பிறக்கும், **எ–று.**

## முகவை இராமானுசு கவிராயர்

இதுவுமது.

**இ–ள்.: மீகீழிதழுற** – மேலுதடுங் கீழ்உதடும் பொருந்த, **பம்மப் பிறக்கும்** – பவ்வும், மவ்வும் பிறக்கும், **எ – று.**

## கா . கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :– மீ (இதழ்) கீழ் இதழ் உற** – மேலுதடும் கீழுதடும் பொருந்த, **ப,ம** – பவ்வும் மவ்வும், பிறக்கும்.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: மீ** (யிதழ்) **கீழிதழ் உற**–மேலுதடுங் கீழுதடும் பொருந்த, **பம்மப் பிறக்கும்** – பவ்வும் மவ்வும் பிறக்கும், **எ – று.**

## வ. குமாரசாமிப்புலவர்

**இ–ள். மீ (இதழ்) கீழ் இதழ் உற** – மேலுதடுங் கீழுதடும் பொருந்த, **பம பிறக்கும்** – பகரமும் மகரமும் பிறக்கும், **எ–று.**

## வை.மு. சடகோபராமானுசாசாரி

## சே. கிருஷ்ணமாசாரி

**இ–ள்.: மீ கீழ் இதழ் உற**–மேலுதடும் கீழுதடும் **(தம்மிற்)** பொருந்த, **ப ம** – பகரமும் மகரமும், பிறக்கும் – **எ–று.**

## பவானந்தம் பிள்ளை

**இ–ள். மீ (இதழ்) கீழிதழ் உற** – மேலுதடுங் கீழதடும் பொருந்த, **ப ம பிறக்கும் –** பவ்வும் மவ்வும் பிறக்கும், **எ–று.**

## கா. நமச்சிவாய முதலியார்

மீ கீழ் இதழ் உற – மேலுதடும் கீழுதடும் பொருந்த ப ம – பவ்வும் மவ்வும், பிறக்கும் – பிறக்கும்.

**(26)**

81. அடிநா வடியண முறயத் தோன்றும்.

அடி நா அடி அணம் உற யத் தோன்றும்.

ati nā ati aṇam uṟa yat tōṉṟum.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

**How formed – Y**

Y is produced by pressing the lower part of the tongue on the back of the palate.

## ஒப்புமைப் பகுதி

அண்ணம் சேர்ந்த மிடற்றெழு வளிஇசை
கண்ணுற்று அடைய யகாரம் பிறக்கும்

(தொல். எழு. : 99)

அடிநா வடியண முறவரும் யகாரம்

(மு. வீ. : 52)

............................... அண்ணக் குழியின் மிடற்றுக்கால்
அடிநாப்பற்ற யவ்வாம்....

(சுவாமி. : 17: 2)

## மயிலைநாதர்

எ–ன், யகரத்திற்கு முயற்சியாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: அடிநா அடியண்ணத்தைச் சார யகரம் பிறக்கும், எ– று.

ய என உச்சரித்துக் கண்டுகொள்க.

## சங்கர நமச்சிவாயர்

எ– னின், இதுவும் அது.

இ – ள்.: அடிநா அடியண்ணத்தைப் பொருந்த யகரம் பிறக்கும், எ – று.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், இதுவுமது,

**இ–ள்.: அடி நா அடியணம் உற** – அடி நாவானது அடியண்ணத்தைச் சார, **யத் தோன்றும்** – யகாரம் தோன்றும், **எ–று.**

## விசாகப் பெருமாளையர்

இதுவுமது.

**இ–ள்.: நாவடி**–நாக்கினடியானது, **அணவடி**–மேல்வாயடியை, **உற**–பொருந்த, **ய** – யகரமானது, **தோன்றும்** – பிறக்கும், **எ–று.**

## ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

*யகர மெம் முயற்சியாற் பிறக்கும்?*

அடிநா வடியண முறயத் தோன்றும்

(அடிநா அடிஅணம் உற யத் தோன்றும்)

**இ–ள்.: நா அடி அண அடி உற** – நாக்கினடியானது மேல்வாயடியைப் பொருந்த, **ய தோன்றும்** – யகரமானது பிறக்கும், **எ–று.**

## முகவை இராமானுச கவிராயர்

இதுவுமது.

**இ–ள்.: அடிநாவானது** – அடியண்ணத்தைப் பொருந்த, **யத் தோன்றும்** – யகரம் பிறக்கும், **எ – று.**

## கா . கோபாலாசாரி -தி.கோ.ரங்காசாரி

**உரை :– நா அடி** – நாக்கினடியானது, **அணம் அடி உற** – மேல் வாயடியைப் பொருந்த, ய – யகரமானது, **தோன்றும்** – பிறக்கும்.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: நாவடி அணவடி உற** – நாக்கினடியானது மேல்வாயடியைப் பொருந்த, ய **தோன்றும்**–யகரமானது பிறக்கும், **எ – று.**

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். நாஅடி அண்ணஅடி உற** – நாக்கினடி மேல்வாயடியைப் பொருந்த, – ய **தோன்றும்** – யகரமானது பிறக்கும். **எ–று.**

## வை.மு. சடகோபராமானுசாசாரி
## சே. கிருஷ்ணமாசாரி

**இ–ள்.: அடி நா**–நாக்கினடியானது, **அடி அணம் உற** – மேல்வாயடியைப் பொருந்த, ய–யகரம், **தோன்றும்**–பிறக்கும்; எ – று.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள். நாவடி அண்ணவடி உற** – நாக்கின் அடியானது மேல்வாய் அடியைப் பொருந்த, ய தோன்றும் – யகரமானது பிறக்கும், எ–று.

## கா. நமச்சிவாய முதலியார்

**நா அடி** – நாக்கினடியானது, **அண்ணம் அடி உற** – மேல்வாயடியைப் பொருந்த, ய – யகரமானது, **தோன்றும்** – பிறக்கும்.

(27)

82. **அண்ண நுனிநா வருட ரழவரும்**

**அண்ண நுனி நா வருட ர ழ வரும்**

aṇṇa nuṉi nā varuta ra ḷa varum

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

### Linguals

The pronunciation of r and i is effected by passing the tip of the tongue very gently on the palate.

## ஒப்புமைப் பகுதி

**நுனிநா அணரி அண்ணம் வருட**
**ரகார ழகாரம் ஆயிரண்டும் பிறக்கும்**

(தொல். எழு. : 95)

**அண்ண நுனிநா வருட ரழ வரும்**

(மு. வீ. : 53)

**.................. நுனிநா வண்ணத்தின்**
**நண்ணி மேல்வருட ரழவாம்...**

(சுவாமி. : 17: 2–3)

## மயிலைநாதர்

எ–ன், இவ்விரண்டெழுத்திற்கும் முயற்சியாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**இ–ள்.:** அண்ணத்தை நுனிநாத் தடவ ரகரமும் ழகரமும் பிறக்கும், **எ–று.**

ர ழ என உச்சரித்துக் கண்டுகொள்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ–னின்,** இதுவும் அது.

**இ–ள்.:** அண்ணத்தை நுனிநாத் தடவ ரவ்வும் ழவ்வும் பிறக்கும், **எ–று.**

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்,** இதுவுமது.

**இ–ள்.: அண்ண நுனி நா வருட** – அண்ணத்தை நுனி நாவானது தடவ, **ரழ வரும்** – ரகாரமும் ழகாரமும் பிறக்கும், எ–று.

## விசாகப் பெருமாளையர்

இதுவுமது.

**இ–ள்.: அண்ண**(நுனி) – மேல்வாய்க்கடையை, **நா நுனி**–நாக்குநுனியானது, **வருட**–தடவ, **ரழ**–ரவ்வும் ழவ்வும், **வரும்**–பிறக்கும், எ – **று.**

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

*ரழக்க ளெம்முயற்சியாற் பிறக்கும்?*

அண்ண நுணிநா வருட ரழவரும்.

( அண்ணம் நுனிநா வருட ரழவரும்)

**இ–ள்.: அண்ணம் நுனிநா வருட** – மேல்வாயை நாக்கு நுனியானது தடவ, **ர ழ வரும்** – ரவ்வும் ழவ்வும் பிறக்கும், **எ–று.**

## முகவை இராமானுச கவிராயர்

இதுவுமது.

**இ–ள்.: அண்ணம்** – மேல்வாயகத்தை, **நுனிநா** – நாவினது நுனியானது, **வருட** – தடவ, **ரழவரும்** – ரவ்வும் ழவ்வும் பிறக்கும், **எ–று.**

## கா. கோபாலாசாரி –தி.கோ.ரங்காசாரி

**உரை :– அண்ணம்** – மேல்வாயை, **நாநுனிவருட** – நாக்கு நுனியானது தடவ, **ரழ** – ரவ்வும் ழவ்வும், **வரும்** – பிறக்கும்.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: அண்ணம் நா நுனி வருட** – மேல்வாயை நாக்கு நுனியானது தடவ, **ரழ வரும்** – ரவ்வும் ழவ்வும் பிறக்கும், **எ–று.**

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். அண்ணநுனி** – மேல்வாய் நுனியை, **நுனி நா வருட** – நாக்கு நுனி தடவ, **ரழ வரும்** – ரகாரமும் ழகாரமும் பிறக்கும், **எ–று.**

நுனி என்பது, ***காகாக்ஷீ கோளக*** நியாயத்தால் முன்மொழியொடு சேர்ந்தும் பின்மொழியொடு சேர்ந்தும் பொருள்பட்டவாறறிக.

***காகாக்ஷீ கோளக நியாயமாவது:*** – காகப் பக்ஷியினது இரு கண்களுக்கும் ஒரு மணியே சேர்ந்து சேர்ந்து ஒளிகொடுப்பது போல் வாய்ந்த விதம்.

காக + அக்ஷீ + கோளகம் என்பது பகுப்பு. கோளகம் – திரண்ட கருமணி விழி. அப் பறவையின் காட்சி யியல்பு அவ்வாறா மென்பதை,

***காகத்திரு கண்ணுக் கொன்றே மணிகலந் தாங்கிருவர்***<br>
***ஆகத்துளோ ருயிர்கண்டனம் யாமின்றியா வையுமாம்***<br>
***ஏகத்தொரு வனிரும்பொழிலம் பலவன் மலையிற்***<br>
***றோகைக்குந் தோன்றற்கு மொன்றாய் வருமின்ப துன்பங்களே***

என்று திருச்சிற்றம்பலக் கோவையிற் கூறப்பட்டதறிக.

## வை.மு. சடகோபராமானுசாசாரி
## சே. கிருஷ்ணமாசாரி

**இ–ள்.: அண்ணம்**– மேல்வாயை, **நா நுனி வருட** – நாக்கின் நுனியானது தடவ, **ர ழ** – ரகரமும் ழகரமும், **வரும்** – பிறக்கும்; எ – **று.**

**அண்ணம் நுனி** – மேல்வாய் நுனியை, **நாவருட** – நாக்குத் தடவ எனினுமாம். **மத்திமதீபமாக**, நுனியென்பதை அண்ணம் நா என்ற இரண்டுக்குங் கூட்டுதலு மொன்று, மேல் 86 – ஆஞ் சூத்திரத்திலும் இதுகொள்க.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள். அண்ணம் நா நுனி வருட** - மேல்வாயை நாக்கு நுனியானது தடவ, **ரழ வரும்** - ரவ்வும் ழவ்வும் பிறக்கும், **எ–று.**

## கா. நமச்சிவாய முதலியார்

**அண்ணம்** (நுனி) – மேல்வாய்க் கடையை, **நா நுனி வருட** –நாக்கின் நுனியானது தடவ, **ர ழ** – ரவ்வும் ழவ்வும், **வரும்** – பிறக்கும்.

83. **அண்பன் முதலு மண்ணமு முறையின்**
**நாவிளிம்பு வீங்கி யொற்றவும் வருடவும்**
**லகார ளகாரமா யிரண்டும் பிறக்கும்.**

**அண்பல் முதல் அண்ணமும் முறையின்**
**நா விளிம்பு வீங்கி ஒற்றவும் வருடவும்**
**லகார ளகாரமாய் இரண்டும் பிறக்கும்.**

aṇpal mutal aṇṇamum muṛaiyin
nā viḻimpu vīṅki oṟṟavum varutavum
lakāra ḻakāramāy iraṇṭum piṛakkum.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

### How Pronounced-I

l (ல)is produced by the edge of the tongue touching the root of the front teeth, and l (ள) by the same chafing the palate.

## ஒப்புமைப் பகுதி

**நாவிளிம்பு வீங்கி அண்பல் முதலுற**
**ஆவயின் அண்ணம் ஒற்றவும் வருடவும்**
**லகார ளகாரம் ஆயிரண்டும் பிறக்கும்**

(தொல். எழு. : 96)

**லகரமணப் பல்வடி நாவிளிம் புறவரும்**

(மு.வீ. : 54)

**ளகரமேல் வாயை நாநுனி தடவப்**
**பிறக்கு மென்மனார் பெரிதுணர்ந் தோரே**

(மு. வீ. : 54)

**...................... அண்பல் அண்ணம்**
**நாவிளிம்பு ஒத்தித் தைவர லளவாம்...**

(சுவாமி. : 17 : 3)

## மயிலை நாதர்

**எ—ன்,** இவ்விரண்டெழுத்திற்கும் முயற்சியாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**இ—ள்.:** அண்பல் முதலை நா விளிம்பு புடைத்து ஒற்ற லகரம் பிறக்கும்; அண்ணத்தை நா விளிம்பு வீங்கி மெல்ல உற ளகரம் பிறக்கும், **எ—று.**

ல ள என உச்சரித்துக் கண்டுகொள்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ—னின்,** இதுவும் அது.

**இ—ள்.:** அண்பல் முதலை நாவிளிம்பு வீங்கி ஒற்ற லகாரமாகியும், அண்ணத்தை நாவிளிம்பு வீங்கி வருட ளகாரமாகியும் இவ்விரண்டெழுத்தும் பிறக்கும், **எ — று.**

## கூழங்கைத் தம்பிரான்

**சூ—ம்,** இதுவுமது.

**இ—ள்.: அண்பல் முதலும் அண்ணமும் முறையின்** – அண்பல் முதலையும் அண்ணத்தையும் வரன் முறையே, நா **விளிம்பு வீங்கி ஒற்றவும் வருடவும் –** அண்பல் முதலை நா விளிம்பு வீங்கி ஒற்றவும் அண்ணத்தை நா விளிம்பு வீங்கி வருடவும், **லகார ளகாரம் ஆயிரண்டும் பிறக்கும்** – லகாரமும் ளகாரமும் பிறக்கும், **எ—று.**

## விசாகப் பெருமாளையர்

இதுவுமது.

**இ—ள்.: அண்பன்முதல்** – அண்பல்லடியை, **நாவிளிம்பு**–நாவோரமானது, **வீங்கி** – தடித்து, **ஒற்ற** – நெருங்க, **லகார(மாய்)** – லகராமாகியும், **அண்ணம்** – மேல்வாயை, (நாவிளிம்பு) – நாவோரமானது, **வருட** – தடவ, **ளகாரமாய்** – ளகாரமாகியும், **இரண்டும்** – இரண்டெழுத்துகளும், **முறை** – இம் முறையே, **பிறக்கும்** – பிறக்கும், **எ— று.**

## ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

*லகர ளகரம் எம்முயற்சியாற் பிறக்கும்?*

அண்பன் முதலு மண்ணமு முறையின்
நாவிளிம்பு வீங்கி யொற்றவும் வருடவும்
லகார ளகாரமா யிரண்டும் பிறக்கும்.

(அண்பல் முதலும் அண்ணமும் முறையின்
நாவிளிம்பு வீங்கி ஒற்றவும் வருடவும்
லகார ளகாரமாய் இரண்டும் பிறக்கும்)

**இ—ள்.: அண்பல் முதல் நாவிளிம்பு** வீங்கி **ஒற்ற லகாரமாய்** – மேல்

வாய்ப் பல்லடியை நாவோரமானது தடித்து நெருங்க லகாரமாகியும், **அண்ணம் நா விளிம்பு வீங்கி வருட ளகாரமாய்** – மேல்வாயை நாவோரமானது தடித்துத் தடவ ளகாரமாகியும், **இரண்டும் பிறக்கும்** – இரண்டெழுத்துக்களும் இம் முறையே பிறக்கும், **எ—று.**

லகரம் எம்முயற்சியாற் பிறக்கும்?

"அண்பல் முதல் நாவிளிம்பு வீங்கி யொற்ற

லகாரம் பிறக்கும்"

ளகார மெம்முயற்சியாற் பிறக்கும்?

"அண்ணம் நாவிளிம்பு வீங்கி வருட ளகாரம் பிறக்கும்.

## முகவை இராமாநுச கவிராயர்

இதுவுமது.

**இ—ள்.: அண்பன் முதலும்** – முன்னம் பல்லடியையும், **அண்ணமும்** – மேல் வாயகத்தையும், **முறையின்** – நிரனிறையே, **நா விளிம்பு** – நாவினது ஓரமானது, **வீங்கி** – மேலெழுந்து, **ஒற்றவும்** – தீண்டவும், **வருடவும்** – தடவவும், **லகார ளகாரமாயிரண்டும் பிறக்கும்** – லகார ளகாரங்களாகி அவ்விரண்டும் பிறக்கும், எ – று.

இதுவும் **முறைநிரனிறைப் பொருள்கோளாதலால்,** அண்பன் முதலை நா விளிம்பு தீண்ட லகாரமும், அண்ணத்தை வருட ளகாரமும், பிறக்குமெனக் கூட்டுக.

## கா. கோபாலாசாரி –தி.கோ.ரங்காசாரி

**உரை :– அண்பல் முதல்** – அண்பல்லடியை, **நாவிளிம்பு** – நாவோரமானது, **வீங்கி ஒற்ற** – தடித்து நெருங்க, **லகாரம் (ஆய்) உம்** – லகாரமாகியும், **அண்ணம்** – மேல்வாயை, (நாவிளிம்பு) **வீங்கி வருட**– நாவோரமானது தடித்துத் தடவ, **ளகாரமாயும்** – ளகாரமாகியும், **இரண்டும்** – இரண்டெழுத்துக்களும், **முறை** – இம்முறையே, பிறக்கும்.

## ஆறுமுகநாவலர்

**இ – ள்.: அண்பன் முதல் நா விளிம்பு வீங்கி ஒற்ற லகாரம் (ஆய்)** – மேல்வாய்ப் பல்லடியை நாவோரமானது தடித்து நெருங்க லகாரமாகியும், **அண்ணம் (நா விளிம்பு) வீங்கி** வருட **ளகாரம்** ஆய்–மேல்வாயை நாவோரமானது தடித்துத் தடவ ளகாரமாகியும், **இரண்டும் முறை பிறக்கும்** – இரண்டெழுத்துக்களும் இம்முறையே பிறக்கும், **எ – று.**

## வ. குமாரசாமிப்புலவர்

**இ—ள். அண்பல் முதல் நா விளிம்பு வீங்கி ஒற்ற லகாரம்** (ஆய்) – மேல்வாய்ப்பல்லடியை நாவோரமானது தடித்துநெருங்க லகாரமாகியும், **அண்ணம்**

**(நா விளிம்பு) வீங்கி வருட ளகாரம் ஆய்** – மேல்வாயை நாவோரமானது தடித்துத் தடவ ளகாரமாகியும், **இரண்டும்** – இரண்டெழுத்துக்களும், **பிறக்கும்** – தோன்றும், **எ–று.**

> நிரனிறைப் பொருள் பயந்து நின்ற இச் சூத்திரத்தை வேறுவேறாகப் பகுத்து அப் பொருளுரைத்தமையால் நிரனிறை யென்பதை விளங்கிய முறை என்பதற்குப் பொருள் வேறாகக் கூறவில்லை; நான்கு உம்மைகள் விடப்பட்டன.

## வை.மு. சடகோபராமாநுசாசாரி
## சே. கிருஷ்ணமாசாரி

**இ–ள்.: அண்பல் முதலும்**–மேல்வாய்ப் பல்லின் அடியையும், **அண்ணமும்** – மேல்வாயையும், **முறையின் –** முறையே, **நா விளிம்பு** – நாவின் ஒரமானது, **வீங்கி** – தடித்து, **ஒற்றவும் வருடவும்** – பொருந்தவும் தடவவும், **லகார ளகாரம் ஆய்** – லகாரமாகியும் ளகாரமாகியும், **இரண்டும்** – இவ்விரண்டெழுத்துக்களும், **பிறக்கும்,** **எ–று,**

> முறை – நிரனிறை.
> மேல்வாய்ப் பல்லினடியை நாவின் ஓரம் தடித்துப் பொருந்துதலால் லகரமும், மேல்வாயை நாவின் ஓரம் தடித்துத் தடவுதலால் ளகரமும் பிறக்கும்.
>
> லகாரம் ளகாரம் அ இரண்டும் என்று பிரித்து, லகாரமும் ளாகரமுமாகிய அவ் விரண்டும் என்றும் உரைக்கலாம், (அ + இரண்டு = ஆயிரண்டு.)

## பவானந்தம் பிள்ளை

**இ–ள். அண்பன்முதல் நாவிளிம்பு வீங்கி ஒற்ற லகாரம் (ஆய்)** – மேல்வாய்ப் பல்லடியை நாவோரமானுத தடித்து நெருங்க லகாரமாகியும், **அண்ணம் (நாவிளிம்பு) வீங்கி வருட ளகாரம் ஆய்** – மேல்வாயை நாவோரமானது தடித்துத் தடவ ளகாரமாகியும், **இரண்டும் முறை பிறக்கும்** – இரண்டெழுத்துக்களும் இம்முறையே பிறக்கும், எ–று.

## கா. நமச்சிவாய முதலியார்

**அண்பல் முதல்** – அண்பல்லடியை, **நாவிளிம்பு** – நாக்கின் ஒரமானது, **வீங்கி** – தடித்து, **ஒற்ற** – நெருங்க, **லகாரம்** – லகரமும், **அண்ணம்** – மேல்வாயை, (நாவிளிம்பு) **வருட** – நாக்கின் ஓரமானது தடவ, ளகாரம், **ஆஇரண்டும்** – (ஆகிய) அவ்விரண்டெழுத்துக்களும், **முறையின்** – இம் முறையே, **பிறக்கும்** – பிறக்கும்.

## 84. மேற்பல் லிதழுற மேவிடும் வவ்வே.

**மேற் பல் இதழ் உற மேவிடும் வவ்வே.**

mēṟ pal itaḷ uṟa mēvitum vavvē.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

### How Pronounced-V

The pressure of the upper teeth on the lower lip produces the sound of V.

## ஒப்புமைப் பகுதி

**பல் இதழ் இயைய வகாரம் பிறக்கும்**

(தொல். எழு. : 98)

**மேற்பல் இதழுற மேவிடும் வவ்வே**

(மு. வீ. : 54)

**.................................. கீழ் இதழின் விண்ணகை**
**குற்றிட வவ்வாம்...**

(சுவாமி. : 17 : 4)

## மயிலை நாதர்

எ—ன், வகரத்திற்கு முயற்சியாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**இ—ள்.:** மேற்பல்லானது கீழிதழை உற வகரம் பிறக்கும், **எ — று.**

வ என உச்சரித்துக் கண்டுகொள்க.

## சங்கர நமச்சிவாயர்

எ — **னின்,** இதுவும் அது.

**இ — ள்.:** மேற்பல் கீழிதழைப் பொருந்த, வகாரம் பிறக்கும், எ — **று.**

## கூழங்கைத் தம்பிரான்

**சூ—ம்,** இதுவுமது.

**இ—ள்.: மேற்பல் இதழுற**—மேற்பல்லானது கீழிதழைப் பொருந்த, **மேவிடும் வவ்வே** — வகாரம் பிறக்கும், **எ—று.**

## விசாகப் பெருமாளையர்

**இ—ள்.: மேற்பல்** – மேற்பல்லானது, **இதழ்** – கீழுதட்டை, **உற** – பொருந்த, **வ** – வகரமானது, **மேவிடும்** – பிறக்கும், **எ— று.**

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

*வகார மெய்முயற்சியாற் பிறக்கும்?*

மேற்பல் லிதழுற மேவிடும் வவ்வே.

(மேற் பல் இதழ் உற மேவிடும் வவ்வே)

**இ—ள்.: மேற்பல் இதழ் உற** – மேல்வாய்ப்பல்லைக் கீழுதடு பொருந்த, **வவ் மேவிடும்** – வகரமானது பிறக்கும், **எ—று.**

## முகவை இராமானுச கவிராயர்

இதுவுமது.

**இ—ள்.: மேற்பல்** – மேல்வாய்ப் பல்லை, **இதழுற** – கீழ்வாயுதடு பொருந்த, **மேவிடும் வ** – வகரம் பிறக்கும், **எ—று.**

இதனுள் இதழென்பது கீழிதழென்பதும், அது உறவென்னும் வினைக்கு வினைமுதலென்பதும், மேற்பல் செயப்படுபொருளென்பதுங் கூறிக் காண்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :– மேல்பல்** – மேற்பல்லை, **இதழ் உற** – கீழுதடுபொருந்த, **வ**– வகரமானது, **மேவிடும்** – பிறக்கும்.

**குறிப்பு :–**

இதனுள், இதழ் கீழிதழென்பதும், அது 'உற' என்னும் வினைக்கு வினைமுத லென்பதும், மேற்பல் செயப்படுபொருளென்பதுங் கூறிக்காண்க.

## ஆறுமுக நாவலர்

**இ—ள்.: மேற்பல் இதழ் உற** – மேல்வாய்ப்பல்லைக் கீழுதடு பொருந்த, **வ மேவிடும்** – வகரமானது பிறக்கும், **எ – று.**

## வ. குமாரசாமிப் புலவர்

**இ—ள். மேற்பல் இதழ் உற** – மேல்வாய்ப் பல்லைக் கீழுதடு பொருந்த, **வ மேவிடும்** – வகாரமானது பிறக்கும்.

**"வகாரஸ்யதந்தோஷ்டம்"** என்று வடமொழி வியாகாரணங் கூறுதலுங் காண்க.

---

**பாட வேறுபாடு :-**

1.நனியுறிற்

## வை.மு. சடகோபராமானுசாசாரி
## சே. கிருஷ்ணமாசாரி

இ–ள்.: மேல் பல் – மேல்வாய்ப் பல்லை, **இதழ் உற**–கீழுதடு பொருந்த, வ – வகரமானது, **மேவிடும்** – பிறக்கும், எ – று.

மேற்பல் கீழுதட்டைப் பொருந்த எனினுமாம்.

## பவானந்தம் பிள்ளை

இ–ள். **மேற்பல் இதழ் உற** – மேல்வாய்ப் பல்லைக் கீழுதடு பொருந்த, வ **மேவிடும்** – வகரமானது பிறக்கும், எ–று.

## கா. நமச்சிவாய முதலியார்

**மேல் பல்** – மேற்பல்லானது, **இதழ்உற** – கீழுதட்டைப் பொருந்த, **வ** – வகரமானது, **மேவிடும்** – பிறக்கும்.

(30)

85. **அண்ண நுனிநா [1]நனியுற றனவரும்.**

**அண்ண நுனி நா நனி உற ற ன வரும்.**

aṇṇa nuṉi nā naṉi uṟa ṟa ṉa varum.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

**How Pronounced-rn**

The close pressure of the tongue-tip on the palate produces the sounds of r and n.

## ஒப்புமைப் பகுதி

**அணரி நுனி நா அண்ணம் ஒற்ற**
**றஃகான் னஃகான் ஆயிரண்டும் பிறக்கும்**

(தொல். எழு. : 94)

**அண்ண நுனிநா வழுத்த றன வரும்**

(மு. வீ. : 57)

**............................... நுனிநா வண்ணத்தின்**
**மேல் ஒத்தறன வாம்...**

(சுவாமி. : 17: 4)

## மயிலை நாதர்

எ–ன், இவ்விரண்டெழுத்திற்கும் முயற்சியாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**இ–ள்.:** அண்ணத்தை நாநுனி [1]மிகவுற றகரமும் னகரமும் பிறக்கும், **எ – று.**

ற ன என உச்சரித்துக் கண்டுகொள்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ – னின்,** இதுவும் அது.

**இ – ள்.:** அண்ணத்தை நுனிநா மிகப்பொருந்தின் றவ்வும் னவ்வும் பிறக்கும், **எ – று.**

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்,** இதுவுமது.

**இ–ள்.: அண்ண நுனி நா நனியுறின்** – அண்ணத்தின் நுனி நா மிகவும் பொருந்த, **றன வரும்** – றகாரமும் னகாரமும் பிறக்கும், **எ–று.**

## விசாகப் பெருமாளையர்

இதுவுமது.

**இ–ள்.: அண்ணம்** – மேல்வாயை, **நாநுனி** – நாக்குநுனி, **நனியுறின்** – மிகப் பொருந்தின், **றன** – றவ்வும் னவ்வும், **வரும்** – பிறக்கும், **எ – று.**

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

ற ன எம்முயற்சியாற் பிறக்கும்?

அண்ண நுனிநா நனியுறிற் றனவரும்.

(அண்ணம் நுனிநா நனியுறில் றனவரும்)

**இ–ள்.: அண்ணம் நுனிநா நனிஉறில்** – மேல்வாயை நாக்குநுனி மிகப் பொருந்தின், **றனவரும்** – றவ்வும் னவ்வும் பிறக்கும், **எ–று.**

## முகவை இராமாநுச கவிராயர்

இதுவுமது.

**இ–ள்.: அண்ணம்** – மேல்வாயகத்தை, **நுனி நா**–நாவினது நுனியானது, **நனி யுறின்** – மிகுதியும் பொருந்துமாயின், **ற ன வரும்** – றவ்வும் னவ்வும் பிறக்கும், **எ – று.**

லகரப் பிறப்பினுக்கும் இவற்றிற்கும் வேறுபாடு தோன்ற,
நனியுறி னென்றார்.

## கா. கோபாலாசாரி –தி.கோ.ரங்காசாரி

**உரை :– அண்ணம்** – மேல்வாயை, **நா நுனி நனி உறின்** – நாக்கு நுனி மிகப்பொருந்தின், **ற ன** – றவ்வும் னவ்வும், **வரும்** – பிறக்கும்.

**குறிப்பு :–**

லகரப் பிறப்பிற்கும் இவற்றின் பிறப்பிற்கும் வேறுபாடு
தோன்ற 'நனியுறின்' என்றார்.

## ஆறுமுக நாவலர்

இ – ள்.: அண்ணம் நா நுனி நனி உறின் – மேல்வாயை நாக்கு நுனி மிகப் பொருந்தின், ற ன வரும் – றவ்வும் னவ்வும் பிறக்கும், எ – று.

## வ. குமாரசாமிப்புலவர்

இ—ள். அண்ணம் நாநுனி நனி உறின் – மேல் வாயை நாக்கு நுனி மிகப் பொருந்தின், – ற ன வரும் – றவ்வும் னவ்வும் பிறக்கும். எ—று.

## வை.மு. சடகோபராமானுசாசாரி
## சே. கிருஷ்ணமாசாரி

**அண்ணம்** – மேல்வாயை, **நுனிநா** – நாக்கு நுனி, **நனி உறில்** – மிகப் பொருந்தின், ற ன – றகரமும் னகரமும், **வரும்** – பிறக்கும், எ—று.

## பவானந்தம் பிள்ளை

இ—ள். அண்ணம் நாநுனி நனி உறின் – மேல்வாயை நாக்கு நுனி மிகப் பொருந்தின், றன வரும் – றவ்வும் னவ்வும் பிறக்கும், எ—று.

## கா. நமச்சிவாய முதலியார்

**அண்ணம்** – மேல்வாயை, **நா நுனி நனி உறின்** – நான்கு நுனி மிகப் பொருந்தின், ற ன – றவ்வும் னவ்வும், **வரும்** – பிறக்கும்.

**(31)**

# சார்பெழுத்தின் இடமும் முயற்சியும்

**86. ஆய்தக் கிடந்தலை யங்கா முயற்சி**
**சார்பெழுத் தேனவுந் தம்முத லனைய.**

**ஆய்தக்கு இடம் தலை அங்கா முயற்சி**
**சார்பு எழுத்து ஏனவும் தம் முதல் அனைய.**

āyṭakku itam ṭalai aṅkā muyaṛsi
sārpu eḷuṭṭu ēṉavum ṭam muṭal aṉaiya.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

**The pronunciation of ஃ and of secondary letters**

The Guttural originates in the head and is pronounced by opening the mouth. The pronunciation of all other Secondary letters follows that of their respective Primaries.

## ஒப்புமைப் பகுதி

சார்ந்து வரினல்லது தமக்கியல்பில எனத்
தேர்ந்து வெளிப்படுத்த ஏனை மூன்றும்
தத்தம் சார்பின் பிறப்பொடு சிவணி
ஒத்த காட்சியின் தன்னியல்பு இயலும்.

(தொல். எழு. : 101)

உந்தி தனிநிலை யுற்றங் காந்தெழும்

( மு. வீ. : 58)

உன்னுமலாற் குறிலின் கீழ் உயிர்வலிமேல் அங்காந்துரத்
தொலியால் ஒற்றியல் போலுத்திடும் ஆய்தமுமே.

( சுவாமி. : 18: 4)

## மயிலை நாதர்

எ—ன், சார்பெழுத்திற்கு இடமும் முயற்சியும் உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்.: ஆய்தவெழுத்திற்கு இடம் தலையாம்; அங்காந்து சொல்லுதல் முயற்சியாம். அல்லாத [1]சார்பெழுத்துக்களுக்கும் இட முயற்சிகள் தத்தம் முதலெழுத்துக்களோடொப்பனவாம், எ – று.

வ—று.:

க கா, எஃகு, ஆஅ, மங்கலம், கேண்மியா, நாகு,
மைப்புறம், மௌவல், வரும்வணிகன், கஃறீது என முறையே
உச்சரித்துக் கண்டுகொள்க.

## சங்கர நமச்சிவாயர்

எ – னின், சார்பெழுத்துக்கட்கு இடம் முயற்சி வகையால் பிறப்பு உணர் – ற்று.

இ—ள்.: ஆய்தம் பிறத்தற்கு இடம் தலை; முயற்சி அங்காத்தலாம்; ஒழிந்த சார்பெழுத்துக்களும் இட முயற்சிகள் தம் முதலெழுத்துக்களோடு ஒப்பனவாய்ப் பிறக்கும், எ – று.

சார்பின் சார்பாகிய ஆய்தக்குறுக்கமும் தன் முதல் போற்
பிறக்கும் என்பார் எதிரதுதழீஇ ஏனவும் என்றார்.

## கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், சார்பெழுத்துக்களுக்கு இடமும் முயற்சியும் கூறியது.

---

பாட வேறுபாடு :-

1. சார்பெழுத்துக்களுக்கு இடங்காரணங்கள்;
சார்பெழுத்துக்கள் இடமுயற்சிக் காரணங்கள்

**இ–ள்.: ஆய்தக் கிடந்தலை** – ஆய்த எழுத்திற்கு இடம் தலையாம், **அங்கா முயற்சி** – அங்காந்து சொல்லுதல் முயற்சியாம், **சார்பெழுத்தேனவும்** – ஒழிந்த சார்பெழுத்துக்களுக்கு இடமும் முயற்சியும், **தம் முதலனைய** – தத்தம் முதலெழுத்துக்களோடு ஒப்பனவாம், **எ–று.**

உ–ம்.: ககா, எஃகு, ஆஅ, மங்ங்கலம், கேண்மியா, நான்கு, மைப்புறம், மௌவல், வாழும் வணிகன், கஃறீது எனவும் கண்டுகொள்க.

## விசாகப் பெருமாளையர்

இது சார்பெழுத்திற்கு இடமுயற்சி வகையாற் பிறப்பு உணர்த்துகின்றது,

**இ–ள்.: ஆய்தக்கு** – ஆய்தம் பிறத்தற்கு, **இடம்** – இடமானது, **தலை** – தலையாம், **முயற்சி** – தொழிலானது, **அங்கா** – வாயைத் திறத்தலாம், **சார்பெழுத்தெனவும்** – ஆய்தம் நீங்கலாகிய மற்றைச் சார்பெழுத்துகளும், **தம் முதலனைய**–தம் முதலெழுத்துகளோ டொப்பனவாய்ப் பிற்கும், **எ – று.**

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

ஆய்தத்திற்கும் சார்பெழுத்திற்கும் பிறப்பிடமும் முயற்சியுங் கூறுஞ் சூத்திரம் யாது?

ஆய்தக் கிடந்தலை யங்கா முயற்சி
சார்பெழுத் தேனவுந் தம்முதலனைய

(ஆய்தக்கு இடம் தலை, அங்கா முயற்சி சார்பெழுத்து ஏனவுந் தம் முதல் அனைய)

**இ–ள்.: ஆய்தக்கு இடம் தலை** – ஆய்தம் பிறத்தற்கு இடம் தலை, **முயற்சி அங்கா** – தொழில் வாயைத் திறத்தலாம், **சார்பெழுத்து ஏனவும் தம் முதல் அனைய** – சார்ந்து வருவனாகிய ஒழிந்த எழுத்துகளின் பிறப்பும் இடப் பிறப்பு முயற்சியுப் பிறப்புகளினாலே தத்தம் முதலெழுத்துகளை ஒப்பன்வாம்,**எ – று.**

சார்பெழுத்துக்குப் பிறப்பிடமும் முயற்சியும் தத்தம் முதலெழுத்துக்குரிய பிறப்பிடமும் முயற்சியுமே யாமென்றபடி.

ஆய்தத்திற்குப் பிறப்பிடம் யாது?

"ஆய்தக்கிடந்தலை"

ஆய்த மெம்முயற்சியாற் பிறக்கும்?

"அங்கா முயற்சி"

மற்றைச் சார்பெழுத்துக்களுக்கு இடமும் முயற்சியும் யாவை?

"தம் முதலனைய"

## முகவை இராமானுச கவிராயர்

இது, சார்பெழுத்திற்கு இட முயற்சி வகைகளாற் பிறப்பு உணர்த்துகின்றது.

**இ—ள்.: ஆய்தக்கு** – ஆய்த வெழுத்திற்கு, **இடம்** – பிறப்பிடமானது, **தலை** – தலையாகும், **முயற்சி** – அது பிறத்தற்கு உரிய தொழில், **அங்கா** – அங்காத்தலாகிய அண்ண முயற்சியாம், **சார்பெழுத்தேனவும்** – ஒழிந்த சார்பெழுத்துகளும், **தம் முதலனைய** – (இட முயற்சி வகைகளால்) தத்தம் முதலெழுத்துக்களை யொப்பனவாம், **எ—று.**

ஒப்பனவாய்ப் பிறக்குமென விரித்துக் கொள்க, ஏனவும் என்ற வும்மை **எதிரது தழுவிய எச்சவும்மை** யாதலால் சார்பிற் சார்பாகிய ஆய்தக் குறுக்கமும் தன்முத லெழுத்தாகிய இந்த முற்றாய்தத்தைப் போலவே தலையிடத்தில் நின்றும் அங்காத்தல் முயற்சியாற் பிறக்கு மெனக் காண்க.

இச் சூத்திரத்தை இடந்தலை, முயற்சியங்கா, ஏனவு முதலனைய என மூன்று முடிபாக்கி முடித்துக் கொள்க.

## கா. கோபாலாசாரி –தி.கோ.ரங்காசாரி

**உரை :– ஆய்தக்கு இடம்** – ஆய்தம் பிறத்தற்கு இடமானது, **தலை** – தலையாம்; **முயற்சி அங்கா** – தொழிலானது வாயைத் திறத்தலாம்; **சார்பு எழுத்து எனவும்** – (ஆய்தம் நீங்கலாக மற்றைச்) சார்பெழுத்துக்களும், **தம் முதல்** (அனைய – இடமுயற்சி வகைகளால் **தத்தம்**) முதலெழுத்துக்களை யொப்பனவாம்.

## ஆறுமுக நாவலர்

**இ – ள்.: ஆய்தக்கு இடம் தலை** முயற்சி அங்கா – ஆய்தம் பிறத்தற்கு இடந் தலை, தொழில் வாயைத் திறத்தலாம், **சார்பெழுத்து ஏனவும் தம் முதல் அனைய** – ஆய்தமொழிந்த மற்றைச் சார்பெழுத்துக்களும் இடப் பிறப்பு முயற்சிப் பிறப்புக்களினாலே தத்தம் முதலெழுத்துக்களை ஒப்பனவாம், **எ—று.**

## வ. குமாரசாமிப் புலவர்

**இ—ள். ஆய்தக்கு இடம் தலை** முயற்சி **அங்கா** – ஆய்தம் பிறத்தற்கு இடந்தலை முயற்சி வாயைத் திறத்தலாம், **சார்பெழுத்து எனவும்** – ஆய்த மொழிந்த மற்றைச் சார்பெழுத்துக்களும், **தம் முதல் அனைய** – (பிறப்பிடம் பிறப்பு முயற்சிகளினாலே) தத்தம் முதலெழுத்துக்களை ஒப்பனவாம், **எ—று.**

சார்பிற் சார்பாகிய ஆய்தக் குறுக்கத்திற்கு முதலெழுத்துக் குறுகாத ஆய்தமாதலால், ஆய்தக் குறுக்கம் முற்றாய்தம் போலவே தலையிடத்தில் அங்காத்தல் முயற்சியாற் பிறக்குமென்று கொள்க. மற்றச் சார்பெழுத்துக்களுந் தத்தம் முதலெழுத்துக்கள் போற் பிறத்தலை வகுத்தறிக. ஆய்தத்திற்குப் பிறப்பிடம் நெஞ்சென்று இலக்கணவிளக்கம்,

*"ஆய்தநெஞ் சோசையி னங்காந் தியலும்"*

என்னுஞ் சூத்திரத்தாற் கூறுதல் காண்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரி
## சே. கிருஷ்ணமாசாரி

**இ–ள்.: ஆய்தக்கு** – ஆய்த வெழுத்துக்கு, **இடம்** – பிறப்பிடம், **தலை** – தலையாம்; **முயற்சி** – பிரயத்தனம், **அங்கா** – வாயைத் திறத்தலாம்; **சார்பெழுத்து ஏனவும்** – (ஆய்தம் நீங்கலான மற்றைச்) சார்பெழுத்துக்களும், **தம் முதல் அனைய** – (இடமுயற்சி வகைகளினால்) தம் தம் முதலெழுத்துக்களை ஒப்பனவாம்; எ–று.

ஆய்தக்கு = ஆய்தத்துக்கு; விகாரம்.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள். ஆய்தக்கு இடம் தலை** – ஆய்தம் பிறத்தற்கு இடம் தலை; **முயற்சி அங்கா** – தொழில் வாயைத் திறத்தலாம். **சார்பெழுத்து ஏனவும்** – ஆய்தமொழிந்த மற்றைச் சார்பெழுத்துக்களும், **தம் முதல் அனைய** – (இடப்பிறப்பு முயற்சிப் பிறப்புக்களினாலே) தத்தம் முதலெழுத்துக்களை ஒப்பனவாம், **எ–று.**

## கா. நமச்சிவாய முதலியார்

**ஆய்தக்கு இடம்** – ஆய்தம் பிறத்தற்கு இடமானது, **தலை** – தலையாம்; **முயற்சி அங்கா** – தொழிலானது வாயைத் திறத்தலாம்; **சார்பெழுத்து ஏனவும்** – (ஆய்தம் நீங்கலாகிய) மற்றைச் சார்பெழுத்துக்களும், **தம் முதல் அனைய** – தம் முதலெழுத்துக்களோடு ஒப்பனவாய்ப் பிறக்கும்.

## மோசகு பொன்னையா

ஆய்தம் தலையை இடமாகக் கொண்டு பிறக்கும்; அதன் பிறப்பு முயற்சி அங்காத்தலே; ஏனைச் சார்பெழுத்துக்களின் பிறப்பிடமும் முயற்சியும் அவ்வவற்றின் முதலெழுத்துக்களையே போன்று அமையும், **எ–று.**

தொல்காப்பியர் எழுத்துக்களின் பிறப்பிடங்களுள் தலையையும் ஒன்றாகக் கொண்டாலும், தலையிற் பிறக்கும் எழுத்து எதனையுங் குறிப்பிடவில்லை. சார்ந்து வரல் மரபின என அவர் கொண்ட குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்ற மூன்றின் பிறப்பை உணர்த்துங்கால்,

*சார்ந்துவரி னல்லது தமக்கியல் பிலவெனத்*
*தேர்ந்து வெளிப்படுத்த ஏனை மூன்றுந்*
*தத்தம் சார்பிற் பிறப்பொடு சிவணி*
*ஒத்த காட்சியிற் றம்மியல் பியலும்.*

எனக் கூறினாரே யன்றி, ஆய்தம் தலையிற் பிறக்கும் எனக் கூறவில்லை. ஆய்தம் குற்றியலிகர உகரங்களே போல் தன்னால் சாரப்படும் எழுத்தின் பிறப்பையே பிறப்பாகக் கொள்ளும் இயல்பினது என்பதே அவர் கருத்து எனத் தெரிகிறது.

அந் நூற்பாவிற்கு உரை வகுத்த இளம்பூரணர்,

***'ஆய்தத்திற்குக் குற்றெழுத்துச் சார்பே எனினும் தலைவளியாற் பிறத்தலின், உயிரொடு புணந்த வல்லெழுத்துச் சார்பாகவே பிறக்குமென்பது கொள்க'***

எனவும் நச்சினார்க்கினியர்,

*'ஆய்தம் தனக்குப் பொருந்தின நெஞ்சுவளியாற் பிறக்கும்'*

எனவும் கூறினார்.

அவருள் இளம்பூரணரைப் பின்பற்றி இவ்வாசிரியர் 'ஆய்தக்கிடத்தலை' என்றார் என்பது தெளிவுறும். தலையில் எழுத்துக்கள் பிறப்பதில்லை. குற்றியலிகர உகரங்கள், இகர உகரங்களின் குறுக்கங்களே என்னுங் கொள்கையுடைய இளம்பூரணர், நச்சினார்க்கினியர் என்போரின் உரைவழி நின்று இவ்வாசிரியர் அவற்றை முதலெழுத்துக்களின் கூட்டமும், பெருக்கமும் குறுக்கமுமான பிற எழுத்துக்களோடு ஒப்ப வைத்து முடித்துப் பிறப்புணர்த்தினார்.

தத்தஞ்சார்பின் பிறப்பொடு சிவணி, ஒத்த காட்சியில் தம்மியல் நிலையும் என்றதனால், தொல்காப்பியர் குற்றியலிகர உகரங்களும் ஆய்தமும் மொழி நிலைப்பட்ட விடத்தன்றி நில்லா எனவும்; மொழியில் அவை சார்ந்து நிற்கும் எழுத்துக்களின் பிறப்பொடு பொருந்த ஒலிக்கும் இயல்பின எனவும், அவை பெற்றுவரும் ஒலியளவு அவற்றிற்கு இயல்பான அளவே யன்றி, வேறு எழுத்துக்களின் குறுக்கம் அன்று எனவும் கூறிப் போந்தார். எனவே, ஆய்த எழுத்துக்குச் சாரப்படும் எழுத்தே ஆதாரமாவது போல், குற்றியல் இகர உகரங்களுக்கும் சாரப்படும் எழுத்தே ஆதாரமாவதல்லது, வேறு முதலெழுத்து இல்லாமை தெளிவுறும். இவ்வாறு மயங்குவாரும் உண்டென்பதை யுணர்ந்தே அவர்,

*'சார்ந்துவரி னல்லது தமக்கியல் பிலவெனத்*
*தேர்ந்து வெளிப்படுத்த ஏனை மூன்று'*

எனத் தெளிவுறுத்தினார் எனக் கொள்க.

சார்பெழுத்துக்களில் ஆய்தக் குறுக்கம் ஒன்று என இவ்வாசிரியர் கொண்டமையின், ஆய்தத்திற்கும் முதலெழுத்துக்களே போல் பிறப்பிடமும் முயற்சியும் கூறினார்.

ஆய்தம் தன்னாற் சாரப்பட்ட வல்லின மெய்யின் ஒலியை உரசொலியாக்கி அதனைப் பிற இடங்களில் வரும் வல்லினங்களின் ஒலியின் மாற்றொலியாக்கும் குறியாக நிற்பதன்றித் தனக்கென ஓர் ஒலியியல்பைப் பெற்றிலது. ஆதலின், அதற்குப் பிறப்பிடம் வேறு கூறல் பொருந்தாது. **(32)**

# பிறப்பின் புறநடை

87. எடுத்தல் படுத்த னலித லுழப்பில்
திரிபுந் தத்தமிற் சிறிதுள வாகும்.

எடுத்தல் படுத்தல் நலிதல் உழப்பில்
திரிபும் தத்தமின் சிறிது உள ஆகும்.

etuttal patuttal nalital uḷappil
tiripum tattamiṉ siṟitu uḷa ākum.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

**Exceptionals to the production of letters**

(Though general rules have been given for the pronunciation of groups of letters,) the sounds of individual letters may in a few instances be modified by the loud, soft and middling varieties of accent.

## ஒப்புமைப் பகுதி

எல்லா எழுத்தும் வெளிப்படக் கிளந்து
சொல்லிய பள்ளி எழுதரு வளியின்
பிறப்பொடு விடுவழி உறழ்ச்சி வாரத்து
அகத்தெழு வளியிசை அரில்தப நாடி
அளபின் கோடல் அந்தணர் மறைத்தே.

(தொல். எழு. : 102)

அஃதிவண் நுவலாது எழுந்து புறத்திசைக்கும்
மெய்தெரி வளியிசை அளபு நுவன்றிசினே

(தொல். எழு. : 103)

## மயிலை நாதர்

எ–ன், மேலுரைத்தவற்றிற்கு ஒரு புறநடை யுணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: பலவெழுத்துக்களுக்கும் தானமுயற்சிகள் ஒன்றாகச் சொல்லப்பட்டனவேனும், எடுத்தல் படுத்தல் நலிதல் முதலான [1]உழப்பு விகற்பங்களினானே ஒன்றுக்கொன்று சிறிது வேறுபாடு உடையவாம், எ–று.

உதாரணம், முன்னர்க் காட்டினவற்றுட் கண்டு கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ—னின்,** மேற்கூறிய பிறப்பிற்கு ஓர்புறனடை **உணர்—ற்று.**

**இ—ள்.:** பல எழுத்திற்குப் பிறப்பு ஒன்றாகச் சொல்லப் பட்டனவேனும், எடுத்தல் படுத்தல் நலிதல் என்னும் எழுத்திற்குரிய ஒலி முயற்சியான், ஒன்றற்கொன்று பிறப்பு வேறுபாடுகளும் அவ்வவற்றின்கண் சிறிது சிறிதுளவாம், **எ—று.**

## கூழங்கைத் தம்பிரான்

**சூ—ம்,** மேற் கூறியவற்றிற்கு ஓர் புறநடை கூறியது.

**இ—ள்.: எடுத்தல் படுத்தல்** – எடுத்தல் ஓசையினாலும் படுத்தல் ஓசையினாலும், **நலிதல் உழப்பில்** – நலிதல் முதலான உழப்பு விகற்பங்களினாலும், **திரிவும் தத்தமில்** – தத்தம் எழுத்துப் பிறப்பினுள் ஒன்றுக்கொன்று வேறுபாடுகளும், **சிறிதுளவாகும்** – சிறிது உளவாம், **எ—று.**

## விசாகப் பெருமாளையர்

இது முன்சொன்ன பிறப்பிற்கு ஓர் புறனடை உணர்த்துகின்றது.

**இ—ள்.:** (பல வெழுத்திற்குப் பிறப்பு ஒன்றாகச் சொல்லப்பட்டாலும்) **எடுத்தல்** – எடுத்தலும், **படுத்தல்** – படுத்தலும், **நலிதல்** – நலிதலும் ஆகிய, **உழப்பின்**—எழுத்திற்குரிய ஒலி முயற்சியால், **திரிபும்** – ஒன்றற்கொன்று பிறப்பு வேறுபாடு களும், **தத்தமில்**—அவ்வவற்றின்கண், **சிறிது**—சிறிது சிறிது, **உளவாகும்** -உள்ளனவாம், **எ – று.**

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

மேலே கூறப்பட்ட பிறப்புக்குப் புறனடை யாது?

எடுத்தல் படுத்த னலித லுழப்பில்
திரிபுந் தத்தமிற் சிறிதுள வாகும்.

(எடுத்தல் படுத்தல் நலிதல் உழப்பில்
திரிபும் தத்தமில் சிறிது உள ஆகும்.)

**இ—ள்.** பலவெழுத்திற்குப் பிறப்பு ஒன்றாகச் சொல்லப்பட்டன வெனினும்,**எடுத்தல்** – உயர்த்திக் கூறுதலும், **படுத்தல்** – தாழ்த்திக் கூறுதலும் ஆகிய, **உழப்பின்** – எழுத்திற்குரிய ஒலி முயற்சியால், **திரிபும்** – ஒன்றற்கொன்று பிறப்பு வேறுபாடுகளும், **தத்தமில்** – அவ்வற்றின்கண்ணே, **சிறிது உள ஆகும்** – சிறிது சிறிது உள்ளனவாகும், **எ – று.**

அவ்வேறுபாடுக ளெவைகளாலுண்டாகும்?

"எடுத்தல் படுத்தல் நலிதலுழப்பின்"

## முகலைவ இராமானுச கவிராயர்

இது, மேற் சொல்லிய பிறப்பிலக்கணத்திற்குப் புறனடை கூறுகின்றது.

**இ–ள்.:** **எடுத்தல்** – உயர்த்திக் கூறுதலும், **படுத்தல்** – தாழ்த்திக் கூறுதலும், **நலிதல்** – வருந்திக் கூறுதலுமாகிய, **உழப்பின்** – (எழுத்திற்கு உரிய) மூவகை யொலி முயற்சிகளாலே, **திரிபும்** – வேறுபாடுகளும், **தத்தமில்** – (பல வெழுத்துக்களைக் கூட்டிப் பிறப்பு ஒன்றாகச் சொல்லப்பட்ட) அவற்றவற்றுள்ளே, **சிறிதுளவாகும்** – சிறிது சிறிதாக உண்டாம், **எ–று.**

> சிறிது என்பதை – சிறிது சிறிது என அடுக்காக்கிச் சிறிதுசிறிதாக என அவற்றை முற்றெச்சமுமாக்கித் திரிபும் உளவாமென முடித்துக் கொள்க.
>
> இனி ஒலிமுயற்சி நான்கெனக் கூறி ஐ விலங்கலுடையதென உதாரண மெடுத்துக் காட்டுவாருமுளர்.

## கா. கோபாலாசாரி –தி.கோ.ரங்காசாரி

**உரை :–** (பலவெழுத்திற்குப் பிறப்பு ஒன்றாகச் சொல்லப்பட்டன வேனும்) **எடுத்தல்** – உயர்த்திக் கூறுதலும், **படுத்தல்** – தாழ்த்திக் கூறுதலும், **நலிதல்** – வருந்திக்கூறுதலும் ஆகிய, **உழப்பின்** – (எழுத்திற்குரிய) ஒலி முயற்சிவகையால், **திரிபும்** – (ஒன்றற்கொன்று பிறப்பு) வேறுபாடுகளும், **தத்தமில்** – அவ்வவற்றின்கண், **சிறிது உள ஆகும்** – சிறிது சிறிது உள்ளனவாம்.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.:** பலவெழுத்திற்குப் பிறப்பு ஒன்றாகச் சொல்லப்பட்டன வெனினும், **எடுத்தல்** – உயர்த்திக் கூறுதலும், **படுத்தல்** – தாழ்த்திக் கூறுதலும், **நலிதல்**– உயர்த்தியுந் தாழ்த்தியுங் கூறுதலும் ஆகிய, **உழப்பின்** – எழுத்திற்குரிய ஒலி முயற்சியால், **திரிபும் தத்தமின் சிறிது உள ஆகும்** – ஒன்றற் கொன்று பிறப்பு வேறுபாடுகளும் அவ்வவற்றின் கண்ணே சிறிது சிறிது உள்ளனவாம், எ – **று.**

## வ. குமாரசாமிப்புலவர்

**இ–ள். எடுத்தல்** – உயர்த்திக் கூறுதலும், **படுத்தல்** – தாழ்த்திக் கூறுதலும், **நலிதல்** – இவ்விரண்டற்கும் சமம் பெறக் கூறுதலும் ஆகிய, **உழப்பின்** – எழுத்திற்குரிய மூவகை ஒலிமுயற்சிகளாலே, **திரிபும்** – பிறப்பு வேறுபாடுகளும், **தத்தமில்** – (பலவெழுத்துக்களைக் கூட்டிப் பிறப்பொன்றாகச் சொல்லப்பட்ட) **அவ்வவற்றுள்ளே, சிறிது** உளவாகும் – சிறிது சிறிதுண்டாம். **எ–று.**

> சிறிது சிறிது என்னும் அடுக்குச் சிறிதென வந்தமை காண்க.
>
> எடுத்தல், படுத்தல், நலிதல் என்னு மூன்றனையும் வடநூலார் முறையே,

*உதாத்த*

*அநுதாத்த*

*சுவரிதம்*

என்று கூறுவர். அவற்றி னிலக்கணங்களையும் *"உச்சைருதாத்த:" "நீசைரநுதாத்த:" "சமாகார ஸ்வரித:"* என அவர் கூறியவாற்றானறிக.

## வை.மு. சடகோபராமானுசாசாரி சே. கிருஷ்ணமாசாரி

**இ—ள்.:** (பலவெழுத்திற்குப் பிறப்பு ஒன்றாகச் சொல்லப்பட்டனவாயினும்) **எடுத்தல்** – உயர்த்தி உச்சரித்தலும், **படுத்தல்** – தாழ்த்தி உச்சரித்தலும், **நலிதல்** – நடுத்தரமாக உச்சரித்தலும் ஆகிய, **உழப்பின்** – (எழுத்திற்கு உரிய) ஒலி முயற்சி வகையினால், **திரிபும்** – (ஒன்றற்கு ஒன்று பிறப்பு) வேறுபாடுகளும், **தம்தமில்** – அவ்வவற்றுள், **சிறிது உள ஆகும்** – சிறிது சிறிது உள்ளனவாம், எ – று.

ஓர் எழுத்தே வெவ்வேறு வகையாக ஒலித்தலையும் இச் சூத்திரத்திலேயே அடக்க வேண்டும்; அதற்கு உதாரணம் 'தந்தது' என்பதிலுள்ள தகரங்களின் ஒலி வேறுபாடு போல்வன காண்க.

## பவானந்தம் பிள்ளை

**இ—ள்.** (பலவெழுத்திற்குப் பிறப்பு ஒன்றாகச் சொல்லப்பட்டன வெனினும்) **எடுத்தல்** – உயர்த்திக் கூறுதலும், **படுத்தல்** – தாழ்த்திக் கூறுதலும், **நலிதல்** – உயர்த்தியுந் தாழ்த்தியுந் கூறுதலும் ஆகிய, **உழப்பின்** – எழுத்திற்குரிய ஒலி முயற்சியால், **திரிபும் தத்தமின் சிறிது உள ஆகும்** – ஒன்றற் கொன்று பிறப்பு வேறுபாடுகளும் அவ்வவற்றின் கண்ணே சிறிது சிறிது உள்ளனவாம், எ—று.

## கா. நமச்சிவாய முதலியார்

(பலவெழுத்திற்குப் பிறப்பு ஒன்றாகச் சொல்லப்பட்டாலும்) **எடுத்தல்** – உயர்த்திக் கூறுதலும், **படுத்தல்** – தாழ்த்திக் கூறுதலும், **நலிதல்** – நடுத்தரமாகக் கூறுதலும் ஆகிய, **உழப்பின்** – (எழுத்திற்குரிய) ஒலி முயற்சிவகையால், **திரிபும்** – (ஒன்றற்கொன்று பிறப்பு) வேறுபாடுகளும், **தத்தமில்** – அவ்வவற்றின்கண், **சிறிது உள ஆகும்** –சிறிது சிறிது உள்ளனவாம்.

## மோசகு பொன்னையா

பொது முறைமையால் உணர்த்தப்பட்ட பிறப்பு நெறியே நின்று, உயர்த்தியும், தாழ்த்தியும், கெடுத்தும், குழப்பியும் ,திரித்துக் கூறும் ஒலி முயற்சியால் எழுத்துக்கள் இடனோக்கிச் சிறுகச் சிறுக வேறுபட்டு இயங்கும், **எ—று.**

மேல் உயிர், மெய் எழுத்தொலிகளின் தனித்தன்மைகள் பற்றி, உயிர், மெய் எழுத்துக்களின் பிறப்புப் பற்றிய நூற்பாக்களின் உரைகளில் அறிந்தோம். அவை பலவாகத் தொடர்ந்து மொழிநிலை யெய்தி அசையாகவும், சொல்லாகவும், சீராகவும்,

தொடராகவும், வாக்கியமாகவும் நடக்குங்கால் அவை பெறும் மொழிநிலைத் தன்மைகள் பல உள. அவை எழுத்தொலிகள் தனித்தனியே பெற்றுள்ள அளவு, துலக்கம், ஒலியழுத்தப் பண்பு, இசைத்திறன், எடுப்பிசை, இசையழுத்தநிலை ஆயவை காரணமாக அடுத்து நிற்கும் எழுத்தொலிகளை இடனோக்கித் தாக்குவதாலேயே அமைகின்றன. அக் காரணத்தால் எழுத்தொலிகள் தத்தம் தனித்தன்மை நிலையிலிருந்து சிறுகச் சிறுக வேறுபடக் கேட்கப்பட்டாலும் சொல்லின் பொருட்குறிப்பு அவ் வேறுபாட்டால் மாற்றமெய்தாத நிலை உளதாயின் அவையும் எழுத்தொலியாம் தன்மையவாகவே கொள்ளப்படும், அந்நிலையில் அவற்றை இயல்நிலை எழுத்தொலிகளின் மாற்றொலிகளாக கொள்வர். நன்னூலார் அவ்வாறு மாற்ற மெய்துதற்குக் காரணமாவது உச்சரிப்பு நிலையே எனக் கொண்டு இந் நூற்பாவில் அதனைக் குறிப்பிட்டார் எனக் கொள்க. தொல்காப்பியரும், மொழிநிலையில் சிறுகச் சிறுக வேறுபட்டுத் தனிநிலையில் ஓர் எழுத்தொலி பெற்றுவரும் தன்மைகளைச் சிறுகச் சிறுக இழந்து நிற்பினும் அதனை அந்த எழுத்தொலியாகக் கொள்வதே மரபு என்பாராய்,

***மொழிப்படுத் திசைப்பினு தெரிந்துவே றிசைப்பினும்***

***எழுத்தியல் திரியா என்மனார் புலவர்***

என்று நூற்பா செய்துள்ளார். மொழிநூலார் இடனோக்கி ஒரு எழுத்தொலி யினின்று வேறுபட்டுப் பொருண்மைக் குறிப்புக் கெடாத நிலையிலுள்ள எழுத் தொலியை அந்த எழுத்தொலியின் மாற்றொலி என்றே கொள்வர். எழுத்தொலியை ***ஒலியன்*** என்றும், எழுத்தொலி பற்றி விளக்கும் இயலை ***ஒலியனியல்*** என்றும் அவர்கள் குறிப்பிடுவர்.

தம்முன் எதிர்த்தன்மை உள்ள பல வண்ணங்கள் ஒரு ஒழுங்கு முறையில் கூட்டித் தீட்டப்பட்டால், ஒரு பொருளுள்ள ஓவியம் அமைகின்றது. அவ்வாறே தம்முள் எதிர்த்தன்மை உள்ள எழுத்தொலிகள் ஓர் ஒழுங்கு முறையில் கூடி மொழிநிலைப்பட்டாலே பொருளுள்ள சொல்லோ தொடரோ அமைகிறது. எழுத்தொலிகளின் எதிர்நிலைத்தன்மை உயிர் ஒ மெய்; குரலிசைப்புடைமை ஒ குரலிசைப்பு இல்லாமை; வாய் ஒலிப்பு ஒ மூக்கு ஒலிப்பு; அடைப்பு ஒ அடைப்பின்மை; அடைப்பு ஒ தடை; திறப்பு ஒ மூடு; குவிதல் ஒ குவியாமை; விறைப்பு ஒ இயல்பு; விறைப்பு ஒ நெகிழ்வு என இவ்வாறு அமையும். இவ்வெதிர்த் தன்மையாலேயே ஒலியன்களை வேறு பிரித்து அறியமுடிகின்றது.

ஒரு பேச்சொலி தான் பெற்றுள்ள தன்மையால் அடுத்து வரும் பிற ஒலியோடு எதிர்நிலை பெற்றுள்ள சிறப்பால், தான் அமைந்துள்ள சொல்லின் பொருட் குறிப்பிற்கு இன்றியமை யாததாக அமையின், அதனை அம்மொழியின் ஓர் ஒலியன் என்று கொள்வர். மொழிநிலையில் பிற ஒலிகளுக்கிடையில் அது தன் தனிஒலித்தன்மைக் கூறுகளிற் சிற்சில கூறுகளை இழப்பினும், அல்லது சிற்சில ஒலிக்கூறுகளில் மாற்றம் பெறினும் தான்

அமைந்த சொல்லில் அது பொருட் குறிப்புக்குத் துணையாம் எதிர்நிலைத் தன்மையைப் பெற்றிருப்பதுவரை, அது தன் ஒலியத் தகுதியை இழப்பதில்லை என்று மொழி நூலார் கூறுவர்.

இந் நூற்பாவும், மேற்காட்டப்பட்ட தொல்காப்பிய நூற்பாவும் அக் கருத்தையே தத்தம் போக்கில் கூறுகின்றன.மொழிநிலையில் பிற ஒலிகளோடு எதிர்நிலை பெற்றுப் பொருட்குறிப்புக்கு இன்றியமையாத தன்மைபெறுவதாலேயே தனித்தனி ஒலியன்கள் வரையறுக்கப்படுவதால், சொல், அல்லது தொடர்களிலிருந்து ஒலியன்களைத் தனித்தனியே பிரித்துக் காண்பதற்கும் எதிர்நிலைத்தன்மை, சொல்லின் பொருட்குறிப்புக்குத் துணையாதல் ஆய இரண்டையுமே கருவியாகக் கொள்வர்.

ஒருமொழியின் ஒலியன்களைப் பகுத்துக் காண வேண்டின், அம் மொழியில் குறிப்பிட்ட ஓர் ஒலியாலேயே மிகக் குறைந்த அளவில் வேறுபட்டு, மற்ற எல்லா ஒலி வகைகளாலும் ஒத்து, தனித்தனிப் பொருண்மைக் குறிப்புடைய சொற்களை ஒப்பிட்டுப் பார்த்துக் காண்பர். அவ்வாறு அமையும் சொற்களில், குறைந்தது ஏதாவது இரு சொற்கள் ஒலியனைப் பிரித்தறியும் இவ்வொப்புமை ஆய்வுக்கு இன்றியமையாதது. அவ்வாறு அமையும் இரு சொற்களைக் ***குற்றுறழ் இணைகள்*** என்பர்.

தமிழில் படம், தடம் என்பவை குற்றுறழ் இணைகள்: இவற்றில் வேறுபடும் குறைந்த அளவு ஒலிகள் முறையே ப், த் என்பவையே, அவ்வாறே கபம், கதம் என்பவை குற்றுறழ் இணைகள்: இவற்றிலும் வேறுபடும் மிகக் குறைந்த அளவு ஒலிகள் முறையே ப், த் என்பவையே. எனவே, தமிழில் ப், த் என்பவை தனித்தனி ஒலியன்கள் என உறுதி செய்யப்படும்.

இவ்வாறு குற்றுறழ் இணைகளால் தமிழ்ச் சொற்களிலும், தொடர்களிலும் வழங்கும் ஒலிகளை யெல்லாம் பற்பல இட, ஒலிச் சூழ்நிலைகளில் ஆய்ந்து, தமிழில் அ, ஆ, இ ஈ, உ, ஊ, எ, ஏ, ஒ, ஓ என்ற பத்து உயிர் ஒலியன்களும், க், ங், ஞ், முதலிய பதினெட்டு மெய் ஒலியன்களும் உள்ளன என வரையறுத்துள்ளனர். ஐ = அய் = அஇ எனவும்; ஔ = அவ் = அஉ எனவும் ஒலி முறையில் அமைதி பெறுமாதலின் அவ்விரண்டையும் ஒலியன்கள் எனக் கொள்வ தில்லை.ஒலியன்களைனு க னு, னு அ னு என இவ்வாறு இரு சாய்வுக் கேட்டினுள் எழுதிக் குறிப்பது மரபாகும்.

அக்கம், பக்கம்; கடல், கல்வி; காகம், நாகம்; தங்கம், பங்கம்; என அமைந்த குற்றுறழ் இணைகளில் அமைந்துள்ள னு க னு ஒலியனின் ஒலிகள் ஒன்றுபோல் இல்லை என்பது உச்சரித்துக் காணக் கூடியது. அக்கம், பக்கம்; கடல், கல்வி என்பவற்றில் அமைந்த ககர ஒற்று ஒலிப்பில் அடைப்பொலியுடையது; காகம், நாகம் என்பவற்றில் அமைந்த ககர ஒற்று நெகிழிசைப்புப் பெற்றது; தங்கம், பங்கம் என்பவற்றிற் காணப்படும் ககர ஒற்று மூக்கொலிப்புப் பெற்றது. இவை இவ்வாறு வெவ்வேறு இடங்களில் அல்லது சூழ்நிலைகளில் ஒலித்தன்மையில் வேறுபடினும், ஏனை ஒலிகளோடு எதிர்நிலை பெறும் னு க னு ஒலியனின் ஒலித்தன்மையையும், சொல்லின் பொருட் குறிப்புக்குத் துணையாம் தன்மையையும் எந்தச் சூழ்நிலையிலும்

இழந்துவிடவில்லை. எனவே இம்மூன்றுவகை ககர ஒலிகளையும் ஞ *கஜு* ஒலியனின் குடும்ப ஒலிகள் எனவே கொள்வர். அவற்றுள் அக்கம் பக்கம் என்ற சொற்களில் இரட்டித்தும், கடல் கல்வி என்ற சொற்களில் சொல் முதலிலும் ககர ஒலியின் இயல் தன்மையாகிய அடைப்பொலித் தன்மையைச் சிறிதும் இழந்து விடாமல் இருப்பதால் அதனையே *ஜுக* ஒலியனின் வகைக்குறி ஒலி எனக் கொள்வர். ஏனைய இரண்டையும் *க* ஒலியனின் மாற்றொலிகள் எனக் குறிப்பிட்டு, ஸகூ என எழுதி வருவது வழக்கம். இந்நூற்பாவில் ஓர் ஒலியனின் எடுத்தல், படுத்தல், நலிதல், உழப்பு ஒலிகளாகக் குறிப்பிட்டது அவ்வொலியக் குடும்ப ஒலிகளாகிய மாற்றொலிகளையே எனக் கொள்க. இவ்வாறு பொருட்குறிப்புக் கெடாமல், ஒரு ஒலியனின் குடும்ப ஒலிகள் அவ்வொலியனின் ஆட்சி எல்லையுள் பற்பல சூழ்நிலைகளில் அதற்கு துணையாம் மாற்றொலிகளாக அமைந்து அதனோடு எதிர்நிலை பெறாது பிற அனைத்து ஒலியன்களோடும் எதிர்நிலை பெற்று, ஒன்று வழங்கும் இடத்தில் மற்றது வழங்காமல் அவ்வொலியனின் தன்மையை நிலைபெறச் செய்யும் நியதியைத் ***துணைநிலை வழக்கு*** என்பர்.

(33)

## உருவம் – உயிர்மெய்

88. òŸËÉ£ I › bt hL [1]முன்னுரு பாகியும்
**ஏனை யுயிரோ [2]டுருபு [3]திரிந்தும்**
**மேவிய மேவிய வுயிரள பாயதன்**
**வடிவொழித் திருவயிற் பெயரொடும்**
**ஒற்று முன்னாய் வருமுயிர் மெய்யே.**

**புள்ளி விட்டு அவ்வொடு முன் உருவு ஆகியும்**
**ஏனை உயிரோடு உருபு திரிந்தும்**
**மேவிய மேவிய உயிர் அளபு ஆய் அதன்**
**வடிவு ஒழித்து இரு வயின் பெயரொடும்**
**ஒற்று முன் ஆய் வரும் உயிர் மெய்யே.**

---

பாடவேறுபாடு ;–

1. முன்னுருவு
2. டுருவு
3. திரிந்துமுயிரளவாய்

puḻḻi vittu avvotu mun uruvu ākiyum
ēnai uyirōtu urupu ṭirinṭum
mēviya mēviya uyir aḻapu āy aṭan
vativu oḷiṭṭu iru vayin peyarotum
oṟṟu munāy varum uyir meyyē.

**இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )**

## Vowel consonants

Consonants (on being animated), drop the dot, and retain their original form for the Vowel 'A,' but change it for all other vowels; they then have the quantity of the (animating) vowel, but not its form, and also possess a name (Vowel-consonant) corresponding to their double origin, while (the sound of) the Consonant precedes (that of the Vowel.)

## ஒப்புமைப் பகுதி

புள்ளி இல்லா எல்லா மெய்யும்
உருவுரு வாகி அகரமொடு உயிர்த்தலும்
ஏனை உயிரொடு உருவு திரிந்து உயிர்த்தலும்
ஆயீர் இயல உயிர்த்தல் ஆறே

(தொல். எழு. : 17)

ஆயுமொன் றெல்லாமும் அப்பான் முன்னுருவாம் உயிர் வெறாகின்
மேற்கீழ் விலங்கு தீர்க்கங் கொண்டி ரட்டாய்க் காயம்
வெவ்வேறாம்; உயிர் அளவு அளவாம் உயிர்பின் காட்டும் உடல்
முன் காட்டும் இவை உயிர்மெய்யாமே

(சுவாமி. : 19 : 1–2)

## மயிலை நாதர்

எ – ன், சார்பெழுத்துக்களின் தோற்றம் இன்னும் ஒருவகையான் உணர்த்துவானெடுத்துக்கொண்டார், அவற்றுள் இச் சூத்திரம் உயிர்மெய் யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: இச்சொன்ன பெற்றியிற் றிரியாது வருவது உயிர்மெய், எ – று.

எனவே ஒருமெய் அகரத்தோடு முன்னருருவே யாகியும், ஒழிந்த உயிர்களோடு உருவு வேறுபட்டும் வருமென்பது போந்தது. போதவே பதினெட்டு மெய்யும் பன்னிரண்டு யிரோடுங் கூடிப் பன்னிரு பதினெட்டு இருநூற்றொரு

பத்தாறாய் மேற்சொன்ன விரியான் வந்தவாறு கண்டு கொள்க.

**வ – று.:**

க கா கி கீ கு கூ கெ கே கை கொ கோ கௌ என வரும். ஒழிந்தனவும் இவ்வாறே ஒட்டிக்கொள்க. உயிர்மெய் யென்பது உம்மைத்தொகை.

## சங்கர நமச்சிவாயர் – சிவஞான முனிவர்

**எ – னின்,** மேல் பிறப்பு உணர்த்திய சார்பெழுத்திற்குச் சார்ந்து வருமாறும் ஓர் பிறப்பாதலின், பிறப்பதிகாரத்துள் அடக்கி உணர்த்துவான் தொடங்கி, அவற்றுள் உயிர்மெய் வருமாறு **உணர் – ற்று.**

**இ – ள்.:** மெய் புள்ளியை விட்டு, அகரத்தோடு கூடியவழி விட்ட உருவே உருவாகியும், ஒழிந்த உயிர்களோடு கூடியவழி உருவு வேறுபட்டும் தன் மாத்திரை தோன்றாது உயிர்மாத்திரையே மாத்திரையாய் அதன் வரிவடிவினது விகார வடிவே வடிவாய் உயிர் வடிவை ஒழித்து, மெய் உயிர் என்னும் பெயராகிய இரண்டிடத்தும் பிறந்த உயிர்மெய் என்னும் பெயருடனே, ஒற்றொலி முன்னும் உயிரொலி பின்னுமாகி வரும் உயிர்மெய் யெழுத்து, **எ – று.**

***உருவு திரிதல் : புள்ளி பெறுவன புள்ளி பெற்றும், மேலும் கீழும் விலங்கு பெறுவன விலங்கு பெற்றும், கோடு பெறுவன கோடு பெற்றும், புள்ளியும் கோடும் உடன் பெறுவன உடன் பெற்றும் வருவனவாம். அருகே பெற்ற புள்ளியை இக் காலத்தார் காலாக எழுதுவர்.***

ஒழித்து என்றும், ஒற்று முன்னாய் என்றும் வந்த சினை வினைகள் இருவயிற் பெயரோடும் வரும் என்னும் முதல்வினையோடு முடிந்தன. பூதி முதலியவற்றில் தீட்டிய வரிவடிவும், ஒலிவடிவு போலப் பயன்தரும் ஒற்றுமை குறித்து ஈண்டு அவ்விருதிறனும் விரவிக் கூறினார்.

இவ்விலக்கணத்தான் ஒவ்வொரு மெய்யில் பன்னீருயிரும் கூடப் பன்னிரு பதினெட்டு இருநூற்றொருபத்தாறாய் வருமாறு வழங்கும் வரிவடிவுள்ளும் ஒலிவடிவுள்ளும் காண்க.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்,** உயிர்மெய் ஆமாறு உரைத்தது.

**இ–ள்.: புள்ளி விட்டு** – மெய்யானது புள்ளியை ஒழிந்து, **அவ்வொடு** – அகரத்துடனே சேர்ந்து, **முன்னுருவாகியும்** – புள்ளியழிந்த உருவே உருவாகியும், **ஏனை உயிரோடு** – ஒழிந்து உயிர்களோடும் சேர்ந்து, **உருபு திரிந்தும்** – தனது உருவு வேறுபட்டும், **உயிரளவாய்** – உயிரினுடைய மாத்திரையே தனக்கு

மாத்திரையாய், **அதன் வடிவொழித்து இரு வயிற் பெயரொடும்** – உயிர் மெய் என்ற இருவகைப் பெயரொடும், **ஒற்று முன்னாய் வரும் உயிர்மெய்** – ஒற்று முன்னாகவும் உயிர் பின்னாகவும் வருவது உயிர்மெய், எ–று.

**உ–ம்.:** க கா கி கீ கு கூ கெ கே கை கொ கோ கௌ.

ஒழிந்தனவும் இவ்வாறே வரும். ஆக உயிர்மெய் 216.

## விசாகப் பெருமாளையர்

**இது,** முன் பிறப்புச் சொல்லிய சார்பெழுத்திற்குச் சார்ந்து வருமாறுமோர் பிறப்பாதலாற் பிறப்பிலக்கணத்துளடக்கி அறிவிக்கத் தொடங்கி அவற்றுள் உயிர்மெய் வருமாறு உணர்த்துகின்றது.

**இ–ள்.: புள்ளி விட்டு** – மெய்புள்ளியை விட்டு, **அவ்வொடு** – அகரத்தோடு கூடிய வழி, **முன்னுருவாகியும்**–அவ் விட்டவுருவே யுருவாகியும், **ஏனை யுயிரோடு** – அது நீங்கலாகிய வுயிர்களோடு கூடிய வழி, **உருவு திரிந்தும்** – உருவு வேறுபட்டும், **உயிரளவாய்**–தன் மாத்திரை தோன்றாது உயிர் மாத்திரையே மாத்திரையாய், **அதன் வடிவொழித்து தன் வரிவடிவின்** விகார வடிவே வடிவாய் உயிர்வடிவை யொழித்து, **இருவயிற் பெயரோடும்** – உயிரும் மெய்யும் ஆகிய இரண்டிடத்தும் பிறந்த உயிர்மெய் யென்னும் பெயருடனே, **ஒற்று முன்னாய்**– ஒற்றொலி முன்னும் உயிரொலி பின்னுமாகி, **உயிர்மெய்** – உயிர்மெய் யெழுத்து, **வரும்**–வரும், எ – று.

| | | |
|---|---|---|
| க் + அ = க, | க் + ஆ = கா, | க் + இ = கி, |
| க் + ஈ = கீ, | க் + உ = கு, | க் + ஊ =கூ, |
| க் +எ = கெ, | க் + ஏ = கே, | க் + ஐ = கை, |
| க் + ஒ = கொ, | க் + ஓ = கோ, | க் + ஔ = கௌ. |

இப்படியே மற்றை மெய்களின் மேலும் பன்னிரண்டுயிர்களுங் கூடலால் இருநூற்றுப் பதினாறாதல் காண்க.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

*உயிர்மெய் வருமாறு கூறுஞ் சூத்திரம் யாது?*

புள்ளிவிட் டவ்வொடு முன்னுரு பாகியும்
ஏனை யுயிரோ டுருபு திரிந்தும்
உயிரள பாயதன் வடிவொழித் திருவயிற்
பெயரொடு மொற்றுமுன் னாய்வரு முயிர்மெய்

(புள்ளி விட்டு அவ்வொடு முன் உருவு ஆகியும்
ஏனை உயிரோடு உருபு திரிந்தும்
உயிர் அளபு ஆய் அதன் வடிவு ஒழித்து இரு வயின்
பெயரொடும் ஒற்று முன் ஆய் வரும் உயிர்மெய்.)

**இ – ள். புள்ளி விட்டு** – மெய் புள்ளியை விட்டு, **அவ்வொடு** – அகரத்தோடு கூடிய வழி, **முன் உரு ஆகியும்** – அவ் விட்ட உருவே உருவாகியும்,**ஏனை உயிரோடு** – அஃகொழிந்த உயிர்களோடு கூடிய வழி, **உருபு திரிந்தும்** – உருவு வேறுபட்டும், **உயிர் அளபு ஆய்** – தன் மாத்திரை தோன்றாது உயிர் மாத்திரையே மாத்திரையாய், **அதன் வடிவு ஒழித்து** – தன் வரிவடிவின் விகார வடிவே வடிவாய் உயிர் வடிவை யொழித்து, **இரு வயின் பெயரொடும்** – உயிரும் மெய்யுமாகிய இரண்டிடத்தும் பிறந்த உயிர்மெய் யென்னும் பெயருடனே,**ஒற்று முன் ஆய் வரும் உயிர்மெய்** – ஒற்றொலி முன்னும் உயிரொலி பின்னுமாகி உயிர்மெய்யெழுத்து வரும், **எ – று.**

மெய்யெழுத்துப் புள்ளியின்றித் தன்வடிவோடு நிற்பதெவ்விடத்து?

க் + அ = க, ச் + அ = ச என அகரத்தோடு கூடுமிடத்து.

உருவு திரிவதெவ்விடத்து?

க் + ஆ = கா, க் + இ = கி என மற்றை உயிர்களோடு கூடுமிடத்து.

## முகவை இராமானுச கவிராயர்

**இது,** (மேலே பிறப்புச் சொல்லப்பட்ட சார்பெழுத்திற்குச் சார்ந்து வருதலு மோர் பிறப்பாதலால் அதையு மிப் பிறப்பிலக்கணத் துள்ளடக்கிச் சொல்லத் தொடங்கி அவற்றுள்) உயிர்மெய் சார்ந்து வருதலுணர்த்துகின்றது.

**இ–ள்.: புள்ளி விட்டு**–(ஒற்றுக்கள் பெற்று நின்ற) புள்ளிகளைப் போக்கி, **அவ்வொடு** – அகரத்தோடு கூடிய போது, **முன் னுருவாகியும்** – (புள்ளி விடப்பட்ட) பழைய வடிவே வடிவாகியும், **ஏனை யுயிரோடு** – மற்ற வுயிர்களோடு கூடிய போது, **உருபு திரிந்தும்** – தத்தம் வடிவு வேறுபட்டும், **உயிரளவாய்** – (தம் மாத்திரை வெளிப்படாமல் தம்மேலேறிய) உயிரினளவே தமக்கு அளவாகி, **அதன் வடிவொளித்து** – அவ்வுயிரின் வடிவைத் தம்முள்ளே மறைத்து, **இருவயிற் பெயரொடும்** – (உயிரு மெய்யுமாகிய) இரண்டிடத்துப் பிறந்த உயிர்மெய் யென்னும் பெயரோடும், **ஒற்று முன்னாய்** – ஒற்றொலி முன்னாகவும் உயிரொலி பின்னாகவும், **வரு முயிர்மெய்** – உயிர்மெய்யெழுத்துக்கள் வரும், **எ– று.**

இதனுள், புள்ளி விடுதற்கும் முன்னுருவாதற்கும் திரிதற்கும் வடிவொளித்தற்கும் முன்னாதற்கும் வினைமுதல் ஒற்றெனவும், உயிரளவாதற்கும் இருவயிற் பெயரொடு வருதற்கும் வினைமுதல் உயிர்மெய் யெனவுங் கொண்டு, முன்னாய் என்னுஞ் செய்தெனெச் சத்தைச் செயவெனெச்சமாக்கி வருமென்பதனோடு கூட்டி முடித்துக் கொள்க.

இனி இவ் விலக்கணத்தால் ஒவ்வொரு மெய்யிலே பன்னிரண்டுயிருங் கூடப் பதினெட்டுப் பன்னிரண்டாய் இருநூற்றுப் பதினாறாகி வருவதை வழங்குகின்ற வரிவடிவினுள்ளும் ஒலிவடிவினுள்ளுங் காண்க.

**வரலாறு.:**

க் +அ – க, க்+ஆ – கா, க் + இ – கி, க் + ஈ – கீ, க் +உ – கு, க் + ஊ – கூ, க் + எ – கெ, க் + ஏ – கே, க் + ஐ – கை, க் + ஒ –

கொ, க் +ஒ – கோ, க் + ஔ – கௌ என வரும். இவ்வாறே ஒழிந்த மெய்களோடுங் கூட்டிக் காண்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :– புள்ளி விட்டு** – (மெய்) புள்ளியை விட்டு, **அவ்வொடு** – அகரத்தோடு கூடியவழி, **முன் உரு ஆகியும்** – அவ்விட்டவுருவே உருவாகியும், **ஏனை உயிரோடு** – ஆகாரம் முதலிய மற்றை உயிர்களோடு கூடியவழி, **உருவு திரிந்தும்** – உருவு வேறுபட்டும், **உயிர் அளவு ஆய்** – (தன்மாத்திரை தோன்றாது) உயிர் மாத்திரையே மாத்திரையாய், **அதன் வடிவு ஒழித்து** – (தன்வரி வடிவின் விகாரவடிவே வடிவாய்) உயிர்வடிவை யொழித்து, **இருவயிற் பெயரோடும்** – (உயிரும் மெய்யுமாகிய) இரண்டிடத்தும் பிறந்த (உயிர் மெய் யென்னும்) பெயருடனே, **ஒற்று முன் ஆய்** – ஒற்றொலி முன்னும் உயிரொலி பின்னுமாக, **உயிர்மெய் வரும்** – உயிர்மெய்யெழுத்து வரும்.

குறிப்பு :–

பன்னிரண்டுயிரும் பதினெட்டு மெய் மேலுந் தனித்தனி ஏறி வருவதால், உயிர்மெய் இருநூற்றுப் பதினாறாதல் காண்க: க்+அ=க முதலியன. சார்பெழுத்துக்குச் சார்ந்து வருதல் ஒரு பிறப்பாதலால் அதனைப் பிறப்பிலக்கணத் தோடு சேர்த்துக் கூறத் தொடங்கினார். உயிரொடு புணர்ந்த மெய்யானது, அப்பொடு சேர்ந்த உப்பே போலத் தன்மாத்திரை யொழிந்து உயிர் மாத்திரையுளடங்கலால் 'உயிரளவாய்' என்றார். (அப்பு–நீர்).

## ஆறுமுக நாவலர்

இ–ள்.: **புள்ளி விட்டு** – மெய் புள்ளியை விட்டு, **அவ்வொடு முன் உரு ஆகியும்** – அகரத்தோடு கூடியவழி அவ்விட்ட வுருவே உருவாகியும், **ஏனை உயிரோடு உருவு திரிந்தும்** – அஃதொழிந்த உயிர்களோடு கூடியவழி உருவு வேறுபட்டும், **உயிர் அளவு ஆய்** – தன்மாத்திரை தோன்றாது உயிர் மாத்திரையே மாத்திரையாய், **அதன் வடிவு ஒழித்து** – தன் வரிவடிவின் விகார வடிவே வடிவாய் உயிர் வடிவை யொழித்து, **இரு வயிற் பெயரொடும்** – உயிரும் மெய்யுமாகிய இரண்டிடத்தும் பிறந்த உயிர்மெய் யென்னும் பெயருடனே, **ஒற்று முன் ஆய்** – ஒற்றொலி முன்னும் உயிரொலி பின்னுமாகி , **உயிர் மெய் வரும்** – உயிர்மெய்யெழுத்து வரும், எ – று.

பன்னிரண்டுயிரும் பதினெட்டு மெய் மேலுந் தனித்தனி ஏறி வருதலால், உயிர்மெய் இருநூற்றுப்பதினா றாதல் காண்க.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள். **புள்ளி விட்டு** – மெய் புள்ளியை விட்டு, **அவ்வொடு முன் உரு ஆகியும்** – அகரவுயிரோடு கூடியபோது அவ்விட்ட வுருவே யுருவாகியும், **ஏனை உயிரோடு உருவு திரிந்தும்** – அஃதொழிந்த வுயிர்களொடு கூடிய போது உருவு

வேறுபட்டும், **உயிர் அளவு ஆய்** – தன் மாத்திரை தோன்றாது உயிர் மாத்திரையே மாத்திரையாய், **அதன் வடிவு ஒழித்து** – தன் வரிவடிவின் விகார வடிவே வடிவாய் உயிர் வடிவை யொழித்து, **இரு வயின் பெயரொடும்** – உயிரும் மெய்யுமாகிய இரண்டிடத்தும் பிறந்த உயிர்மெய் யென்னும் பெயருடனே, **ஒற்று முன் ஆய்** – ஒற்றொலி முன்னும் உயிரொலி பின்னுமாகி, **உயிர்மெய் வரும்** – உயிர்மெய்யெழுத்து வரும். **எ–று.**

இதனுள், புள்ளி விடுதற்கும் முன்னுருவாதற்கும் திரிதற்கும் வினைமுதல் ஒன்றெனவும், உயிரளவாதற்கும் வடிவொழித்தற்கும் இருவயிற் பெயரொடு வருதற்கும் வினைமுதல் உயிர்மெய் யெனவுங் கொள்க.மெய் பதினெட்டில் ஒவ்வொரு மெய்யும் பன்னிரண்டுயிரொடுந் தனித்தனி கூடப் பன்னிரு பதினெட்டா உயிர்மெய் இருநூற்றுப் பதினாறாதல் காண்க.

**வரலாறு:–**

க் அ=க, க் ஆ=கா, க் இ=கி, க் ஈ=கீ, க் உ=கு, க் ஊ=கூ, க் எ=கெ, க் ஏ=கே, க் ஐ=கை, க் ஒ=கொ, க் ஓ=கோ, க் ஔ=கௌ என்று ககர மெய் ஒன்று பன்னிரண்டுயிரொடுந் தனித்தனி கூடுதலாற் பன்னிரண்டுயிர் மெய் உண்டாயின. இவை க வர்க்க மெனப்படும். மற்ற மெய்களையும் இவ்வாறே பன்னிரண்டுயிரொடுந் தனித்தனி கூட்டி உயிர்மெய்த் தொகை முழுவது மறிக. இவ் வுயிர்மெய்கள் க வர்க்கம், ங வர்க்கம், ச வர்க்கம், ஞ வர்க்கம், ட வர்க்கம், ண வர்க்கம், த வர்க்கம், ந வர்க்கம், ப வர்க்கம், ம வர்க்கம், ய வர்க்கம், ர வர்க்கம், ல வர்க்கம், வ வர்க்கம், ழ வர்க்கம், ள வர்க்கம், ற வர்க்கம், ன வர்க்கம் என்று பதினெட்டு வருக்கமாய் நிற்கும். ஒவ்வொரு வருக்கத்திலும் பன்னிரண்டுயிர்மெய் யிருத்தலறிக.

ஒவ்வொரு வருக்கத்திலும் குற்றுயிர்மெய் ஐந்தும், நெட்டுயிர்மெய் ஏழுமாக அமைந்து பதினெட்டு வருக்கத்திலும் உயிர்மெய்க் குற்றெழுத்துத் தொண்ணூறும், உயிர்மெய் நெட்டெழுத்து நூற்றிருபத்தாறுமாய் வந்த அவ்விரு நூற்றுப் பதினாறுங் காண்க.

இருநூற்றுப் பதினாறு உயிர்மெய்யுள்ளும் வல்லின வுயிர்மெய் எழுபத்திரண்டும், மெல்லின வுயிர்மெய் எழுபத்திரண்டும், இடையின வுயிர்மெய் எழுபத்திரண்டுமாக முப்பகுப்பிருத்தலும் அறிக.

உயிர்மெய்க் குற்றெழுத்து ஒவ்வொன்றும் ஒரு மாத்திரையும், உயிர்மெ் நெட்டெழுத்து ஒவ்வொன்றும் இரண்டு மாத்திரையும் ஒலிக்குமென்று தெளிக. உயிர்மெய்க்குறிலுக்கு ஒரு மாத்திரையும், உயிர்மெய் நெடிலுக்கு இரு மாத்திரையுமாம் என்னுங் கருத்தைச் சுருங்கச் சொல்லல் என்னும் அழகு பற்றி

ஆசிரியர் *'உயிரளவாய்'* என்பதனால் விளக்கினார். இதனை யறியாதார் பலர் 'உயிரளவாய்' என்றதனால் உயிர்மெய்யில் மெய்யினுடைய மாத்திரை சிறிதும் ஒலித்தலின்றி உயிரினுடைய மாத்திரை முழுவதும் ஒலிக்குமென்று விபரீதமாக விளங்குகின்றனர். மெய்யினது மாத்திரை ஒலிக்காது உயிரினது மாத்திரையே ஒலிக்குமாயின்; க, கா முதலான உயிர்மெய்களுக்கும், அ, ஆ முதலான உயிர்களுக்கும் ஒலியிலே பேதமில்லாதிருத்தல் வேண்டும்: அவை பேதமாகவே யுச்சரிக்கப்படுதலைச் *சுரோத்திரேந்திரியப் பிரத்தியக்ஷத்தாற்* றெளியலாம். தெளிந்து அந்த விபரீத விளக்கத்தை மாற்றி விடுக. இவ்விபரீத விளக்கம் அறியலுறுவோரும் அறிவிப்போருமாகிய மாணாக்கர் உபாத்தியாயர் என்போரிற் பலரிடத்தன்றி நூலாசிரியரிடத்துச் சிறிதாயினுமில்லையென்பது *'ஒற்றுமுன்னாய் வருமுயிர்மெய்'* என்று *வரகோட்டி நியாயத்தாற்* கூறியதினாலு முணரப்படும். (இதில் ஒற்று முன்னாய் எனவே உயிர் பின்னாய் என்பது உணரப்படும்). இதனையு நோக்காது,

*நின்றநெறியே யுயிர்மெய்ம்முதலீறே*

என்பதையு நோக்காது,

*'பன்னீருயிருங் க ச த ந ப ம வ ய*
*ஞ ங வீ ரைந்துயிர் மெய்யுமொழிமுதல்'*

என்பதனையு நோக்காது,

*உ ஊ ஒ ஓ வல்வொடு வம் முதல்*
*அ ஆ உ ஊ ஓ ஔ யம் முதல்*

என்பவை முதலிய சூத்திரங்களையு நோக்காது தம் மனஞ் சென்றவாறே விபரீத விளக்கங் கொள்கின்றோர் எங்ஙனம் வியக்கப்படுவர்! ஆயின், ஒற்று உயிரென்னு மிரண்டினுடைய மாத்திரையு மொலிக்கப் பெறுமாயின், உயிர்மெய்க் குற்றெழுத்திற்கு ஒன்றரை மாத்திரை யென்றும், உயிர்மெய் நெட்டெழுத்திற்கு இரண்டரை மாத்திரையென்றுங் கூறாமல்; ஒரு மாத்திரையும் இரு மாத்திரையுங் கூறியதென்னையெனின்; கலப்புற்ற மெய்யினுடைய மாத்திரையி லொருகூறும் உயிரினுடைய மாத்திரையி லொருகூறுமாக அரை மாத்திரை ஒடுங்கியதினா லென்றறிக.

இங்ஙன மன்றி மெய்யினது மாத்திரை முழுவதுங் கெட்டு உயிரினது மாத்திரை முழுவது மொலிக்கு மென்று கொள்வது அசம்பாவிதமாம்.

## வை.மு. சடகோபராமானுசாசாரி
## சே. கிருஷ்ணமாசாரி

**இ–ள்.: அவ்வொடு**–(மெய்) அகரவுயிரோடு, (கூடியபொழுது), **புள்ளி விட்டு** – புள்ளியை விட்டு, **முன் உரு ஆகியும்** – அவ்விட்ட வடிவே வடிவாகியும், **ஏனை உயிரோடு** – ('ஆ' முதலிய) மற்றை உயிர்களோடு (கூடிய பொழுது,) **உருவு திரிந்தும்**–(புள்ளிவிடுதல் மாத்திரமே யன்றி) வடிவு வேறுபட்டும், **உயிர் அளவு ஆய்** – உயிர் மாத்திரையே மாத்திரையாய் (மெய்யின் மாத்திரை தோன்றாமல்), **அதன் வடிவு ஒழித்து** – (வரிவடிவில்) உயிரின் வடிவை ஒழித்து (மெய்யெழுத்து விகாரப்பட்ட வடிவே வடிவாய்), **இருவயின் பெயரொடும்**–(உயிரும் மெய்யும் ஆகிய) இரண்டிடத்தும் பிறந்த (உயிர்மெய் என்னும்) பெயருடனே, **ஒற்று முன் ஆய்** – மெய்யினொலி முன்னும் உயிரினொலி பின்னுமாகி, **உயிர்மெய்** – உயிர்மெய்யெழுத்து, வரும்,**எ – று.**

பன்னிரண்டு உயிரும் பதினெட்டு மெய்யின் மேலும் தனித்தனி ஏறி வருதலால் உயிர்மெய் இரு நூற்றுப்பதினாறாம்; க்+அ = க, க்+ ஆ= கா முதலியன.

***'உயிரளவாய்'*** என்றதனால், உயிர்மெய்க் குற்றெழுத்துக்கு ஒரு மாத்திரையும் உயிர்மெய் நெட்டெழுத்துக்கு இரண்டு மாத்திரையுமா மென்க.

***ஙா*** முதலிய மொழிமுதற் காரணமாகாத ஒலிகளையும் இங்கே எழுத்தெனத் தழுவுதல், அவற்றுள் முதலாகிய ஙகரம் மொழிமுதற் காரணமாதலால்; இது எண்ணிறைத்தற் பொருட்டுச் சுருங்கச் சொல்லலாகக் கூறப்பட்டு வருவதோர் அனாதி வழக்கமாமென அறிக.

இங்கே ***"ஙப்போல் வளை"*** என்னும் ஔவையார் வாய்மொழியின் அரும்பொருள் ஆராயத் தக்கது.

சார்பெழுத்திற்குச் சார்ந்து வருதல் ஓர் பிறப்பாதலால், அதனைப் பிறப்பிலக்கணத்தோடு சாரவைத்துச் சொல்லத் தொடங்கினார்.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள். புள்ளி விட்டு** – (மெய்) புள்ளியை விட்டு, **அவ்வொடு முன் உரு ஆகியும்** – அகரத்தோடு கூடிய வழி புள்ளிவிட்ட உருவே உருவாகியும், **ஏனை உயிரோடு உருவு திரிந்தும்** – அஃதொழிந்த உயிர்களோடு கூடிய வழி உருவு வேறுபட்டும், **உயிர் அளவு ஆய்** – (தன்மாத்திரை தோன்றாது) உயிர் மாத்திரையே மாத்திரையாய், **அதன் வடிவு ஒழித்து** – (தன் வரிவடிவின் விகார வடிவே வடிவாய்) உயிர் வடிவை யொழித்து, **இருவயிற் பெயரொடும்** – (உயிரும் மெய்யுமாகிய) இரண்டிடத்தும் பிறந்த உயிர்மெய் என்னும் பெயருடனே, **ஒற்று முன் ஆய்** – ஒற்றொலி முன்னும் உயிரொலி பின்னுமாகி, **உயிர் மெய் வரும்** – உயிர்மெய்யெழுத்து வரும், **எ–று.**

பன்னிரண்டுயிரும் பதினெட்டு மெய்யின் மேலுந் தனித்தனி ஏறி வருதலால், உயிர்மெய் இருநூற்றுப் பதினா றாதல் காண்க.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள். புள்ளிவிட்டு** – (மெய்) புள்ளியை விட்டு, **அவ்வொடு** – அகரத்தோடு கூடியவழி, **முன் உரு ஆகியும்** – அவ் விட்ட உருவே உருவாகியும், **ஏனை உயிரோடு** – அது நீங்கலாகிய உயிர்களோடு கூடிய வழி, **உருவு திரிந்தும்** – உருவு வேறுபட்டும், **உயிர் அளவு ஆய்** – (தன்மாத்திரை தோன்றாது) உயிர் மாத்திரையே மாத்திரையாய், **அதன் வடிவு ஒழித்து** – (தன் வரிவடிவின் விகார வடிவே வடிவாய்) உயிர் வடிவை ஒழித்து, **இருவயின் பெயரொடும்** – (உயிரும் மெய்யும் ஆகிய) இரண்டிடத்தும் பிறந்த (உயிர்மெய் யென்னும்) பெயருடனே, **ஒற்று முன் ஆய்** – ஒற்றொலி முன்னும் உயிரொலி பின்னுமாகி, **உயிர்மெய் வரும்** – உயிர்மெய் யெழுத்து வரும். **எ–று.**

**பொ–ரை.:**

மெய் புள்ளியை விட்டு அகரத்தோடு கூடுங்கால் புள்ளி நீங்கிய மெய்யெழுத்தின் வடிவமே தன் வடிவமாகியும், அகரம் அல்லாத மற்ற உயிர்களோடு கூடும் போது வடிவு வேறுபட்டும் உயிரினது மாத்திரையே தனக்கு மாத்திரையாய் (தத்தன் வரிவடிவின் விகார வடிவே வடிவாய்) உயிர் வடிவை ஒழித்து, உயிர்மெய் என்னும் பெயருடனே, ஒற்றொலி முன்னும் உயிரொலி பின்னுமாகி உயிர்மெய் யெழுத்து வரும்.

**உ–ம்.**

க்+அ=க, க்+ஆ=கா, க்+இ=கி, க்+ஈ=கீ, க்+உ=கு, க்+ஊ=கூ, க்+எ=கெ, க்ஏ=கே, க்+ஐ=கை, க்ஒ=கொ, க்+ஓ=கோ, க்+ஔ=கௌ.

இப்படியே மற்றை மெய்களின் மேலும் பன்னிரண் டுயிர்களும் ஏறி வர, உயிர்மெய் இருநூற்றுப் பதினாறாதல் காண்க.

**'உயிரளவாய்'** என்றதனால், உயிர்மெய்க் குற்றெழுத்துக்கு ஒரு மாத்திரையும், உயிர்மெய் நெட்டெழுத்துக்கு இரண்டு மாத்திரையும் ஆம் என்க.

சார்பெழுத்திற்குச் சார்ந்து வருதலே பிறப்பாதலால் பிறப்பிலக்கணத்தோடு சாரவைத்தார். உயிர்மெய் – உயிரும் மெய்யும் கூடிப் பிறக்கும் எழுத்து.

## கா. நமச்சிவாய முதலியார்

**புள்ளி விட்டு** – (மெய்) புள்ளியை விட்டு, **அவ்வொடு** – அகரத்தோடு கூடியவழி, **முன் உரு ஆகியும்** – முன் உருவே உருவாகியும், **ஏனை உயிரோடு** – அது நீங்கலாகிய உயிர்களோடு கூடிய வழி, **உருவு திரிந்தும்** – உருபு வேறுபட்டும். **உயிர் அளவு ஆய்** – (தன்மாத்திரை தோன்றாது தன்னைச் சார்ந்த) உயிரின் மாத்திரையே மாத்திரையாய், **அதன் வடிவு ஒழித்து** – (தன்னைச் சார்ந்த) உயிரின்

வடிவை யொழித்து (தன் வரிவடிவின் விகார வடிவே வடிவாய்) **இருவயின் பெயரொடும்** – (உயிரும் மெய்யும் ஆகிய) இரண்டிடத்தும் பிறந்த (உயிர்மெய்யென்னும்) பெயருடனே, **ஒற்று முன் ஆய்** – ஒற்றொலி முன்னும் உயிரொலி பின்னுமாகி, **உயிர் மெய்** – உயிர்மெய்யெழுத்து, **வரும்** – பிறக்கும்.

| | | |
|---|---|---|
| க் + அ = க, | க் + உ = கு, | க் + ஐ = கை, |
| க் + ஆ = கா, | க் + ஊ = கூ, | க் + ஒ = கொ, |
| க் + இ = கி, | க் + எ = கெ, | க் + ஓ = கோ |
| க் + ஈ = கீ, | க் + ஏ = கே, | க் + ஔ = கௌ. |

இப்படியே மற்றை மெய்களின் மேலும் பன்னிரண்டு உயிர்களும் தனித்தனி ஏறிவர உயிர்மெய் இருநூற்றுப் பதினாறாகும்.

க் + அ எனப் பிரிந்திசைக்கும் போது, ககர மெய்க்கு அரை மாத்திரையும் அகர உயிர்க்கு ஒரு மாத்திரையுமாக ஒன்றரை மாத்திரை யாகும் என்னும் ஐயத்தை விலக்கி, இரண்டும் கூடிய வழி உயிர் மாத்திரையே நிற்கும் என்பதை அறிவித்தற்கு **"உயிரளவாய்"** என்றார்.

## மோசகு பொன்னையா

அகரத்தோடு புள்ளி நீங்கப் பெற்ற தன் வடிவையே வடிவாகவும், ஏனைய உயிரொடு திரிந்த தனது வடிவையே வடிவாகவும், ஏறிய உயிரின் அளவையே அளவாகவும் பெற்று, உயிரும் மெய்யும் பொருந்துதலின் உயிர்மெய் என்னும் பெயரொடு, தன் ஒலி முன்னும் உயிரொலி பின்னுமாக ஒலித்து, உயிரேறிய மெய் நிற்கும், எ–று.

உயிர்மெய் உருவாகியும், உருவு திரிந்தும், அளவாய், வடிவொழித்து,பெயரொடு வரும் என முடிக்க.

மெய்யின் திரிந்த வடிவமானது, மேலும் கீழும் விலங்கு பெற்றும், கோடு (கொம்பு) பெற்றும், புள்ளி (இக்காலத்தில், கால்) பெற்றும், கோடும் புள்ளியும் பெற்றும் உருவு திரிந்து வருவதாம் என்பது ***நச்சிரினார்க்கினியர்*** கருத்து. அது கொம்பும், காலும், வீச்சும், பெற்று வேறு வடிவு பெறுதல் என்பது ***நேமிநாத உரைகாரர்*** கருத்து.

பன்னிரு உயிரும் பதினெண் மெய்களொடு கூடி இருநூற்றுப் பதினாறு உயிர்மெய்கள் பிறக்கும் என்றார்.

உள் என்றவிடத்து உயிர் முன்னும் மெய் பின்னும் நின்று மயங்கிய வாறே, பூ என்ற விடத்தும் மெய் முன்னும் உயிர் பின்னும் நின்று மயங்கின எனக் கோடல் வேண்டும்.

உடல் மேல் உயிர்வந் தொன்றி, பூ என இயல்பாகப் புணர்ந்து நின்ற தெனினும், வன்மை என்ற மெய்யின் தன்மையையும், நெடில் என்ற உயிரின் தன்மையையும் பெற்றுத் தம்மியல்பிலேயே மெய்யும் உயிருமாகக் கூடி எதிர்நிலை பெற்று நின்றன எனவே

போதரும். மெய் தனித்து நின்றவிடத்தே மாத்திரை கொள்ளவும் எழுத்தெண்ணவும் படுதலானும், உயிரேறிய விடத்து மாத்திரை கொள்ளவும் எழுத்தெண்ணவும் படாததாலும், அவ் வேறுபாடு புலப்படற்கே உயிரேறாத மெய்யை ஒற்று, புள்ளி, மெய் எனவும், உயிரேறிய மெய்யை உயிர்மெய், புள்ளியில்லா மெய்யெனவும் குறியிட்டாளுதல் ***தொல்காப்பியர்*** கருத்தெனப் புலனாகின்றது.

அவர் புள்ளி இல்லா மெய்யின் செயலாகவே உருவுருவாகி அகரமொடு உயிர்த்தலையும், ஏனை உயிரோடு உருவு திரிந்து உயிர்த்தலையும் குறிப்பிட்டபடியே, இவ்வாசிரியரும் உயிர்மெய் முன்னுருவாகியும், உருபு திரிந்தும், அளவாய், அதன் வடிவொழித்து, பெயரொடு வரும் எனக் கூறினார். ஒலிவடிவு பற்றித் தொல்காப்பியர், மெய்யோடியையினும் உயிரியல் திரியா என உயிர்மேல் வைத்துக் கூறியவாறே இவ்வாசிரியரும் ***'உயிரளவாய்'*** எனக் கூறி உடன்பட்டார். இவ்வாறு ஒற்றுமை நயம்பட இருவரும் மெய்மேல் வைத்தோ, உயிர்மேல் வைத்தோ கூறினும் இவ்வாசிரியர் வேற்றுமை நயம்பட, ***'நின்ற நெறியே உயிர்மேல் முதலீறே'*** எனவும் கூறி, மெய்யும் உயிரும் இயல்புப் புணர்ச்சியாய்க் கூடி நின்றன என்பதையும் உடன்பட்டுக் கூறினார். எனவே, ***மெய்யும் உயிரும் கூடி ஒரே எழுத்தாகி நின்று சார்பெழுத்தாம் என்ற இவ்வாசிரியர் கொள்கை முதனூலோடு முரண்பட்ட முடிபேயாம்.***

உயிர்மெய் மெய் + உயிர் என இரண்டாகவே மொழியியல் முறைப்படிக் கொள்ளப்படுமாதலின், அஃது ஒரு தனி ஒலியன் என்றோ மாற்றொலி என்றோ கருதப்படமாட்டாது. நன்னூலார் சார்பெழுத்துக்கள் என்றவற்றுள் உயிர்மெய்யும், ஆய்தமு மல்லாத அணைத்து ஒலிகளும் மாற்றொலிகளே என்பது போக்கி யுரைக்கப்படும்.

**(34)**

## முற்றாய்தம்

89. **குறியதன் முன்ன ராய்தப் புள்ளி**
**உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே.**

குறிஅதன் முன்னர் ஆய்தப் புள்ளி
உயிர்ஒடு புணர்ந்த வல்ஆறன் மிசைத்தே

kuṟi ataṉ muṉṉar āytap puḷḷi
uyirarotu puṇarnta val āṟaṉ
misaittē

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

### Aytham between a short vowel and a hard vowel consonant

The Guttural may be employed between a short vowel and (any of) the six Hard Vowel Consonants.

## ஒப்புமைப் பகுதி

**குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி**
**உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே**

(தொல். எழு. : 38)

**ஆய்தம் குறில் வலிக்கு ஆகும் நடுவே**

(தொன். : 13:1)

**தனிநிலை குறில்வலி தனக்கிடை வருமே**

(மு.வீ. : 25)

**உன்னுமலாற் குறிலின்கீழ் உயிர்வலிமேல் அங்காந்துரத்**
**தொலியால் ஒற்றியல் போல் உதித்திடும் ஆய்தமுமே**

(சுவாமி: 18: 4)

## மயிலை நாதர்

**எ – ன்,** நிறுத்தமுறையானே ஒருமொழி யிடத்து வரும் முற்றாய்தத் தோற்றமாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**இ–ள்.:** குற்றெழுத்தின் முன்னர் உயிரோடு கூடிய வலலெழுத்து ஆறன்மிசையே பெறப்படும், ஆய்தவொற்று, **எ – று.**

ஆய்தமான புள்ளி ஆய்தப்புள்ளி. ***'ஆய்தப்புள்ளி'*** என்றார், இதனையும் ஒற்றின்பாற் சார்த்துதற்கென்க. ஒற்றேல் உயிரேறப் பெறல் வேண்டுமெனின் சார்பெழுத்தாதலின் உயிரேறப் பெறாதெனக் கொள்க.

**வ – று.:** எஃகு, கஃசு, கஃடு, கஃது, கஃபு, கஃறு என வரும். அஃகாமை, வெஃகாமை, அஃகி, வெஃகி, [1]அஃகோ என்பன பிறவுயிர்களோடும் வந்தன.

**[2]விலஃஃகி வீங்கிரு ளோட்டுமே மாதர்**
**இலஃஃகு முத்தி னினம்**

என இவ்வாறு குறிலிணைக் கீழும் ஆய்தம் வருமாலோ வெனின், அன்ன இயல்பாகவே ஆய்தமாய் நிற்பனவல்ல. ஓசை நிறைத்தற் பொருட்டு ஒற்றில்வழி ஒற்றாக்குதலின், ஈண்டு ஆய்தமும் ஒற்றாய் வருமெனக் கொள்க. இருபஃது, அஃகடிய எனப் புணர்ச்சியிடத்து வரும் ஆய்தங்களை அவ்விதியிற் காண்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ — னின்,** முற்றாய்தம் வருமாறு **உணர் — ற்று.**

**இ—ள்.:** புள்ளி வடிவினதாய ஆய்தம், குற்றெழுத்தின் முன்னதாய் உயிரோடு கூடிய வல்லெழுத்து ஆறன் மேலதாய் வரும், **எ — று.**

உயிர்வருக்கத்து இறுதிக்கண் தந்த ஆய்த வடிவைப் பிற்காலத்து வேறுபட வரைந்து வழங்குவராதலின் தொல்லை வடிவுதோன்ற ஆய்தப்புள்ளி என்றார்.

**உ—ம்.:**

எஃகு, கஃசு, இருபஃது, அஃகடிய, அஃகான், மஃகான் எனவும், தனிக்குறில் என்று வரைந்தோதாமையின்,

**"விலஃஃகி வீங்கிரு ளோட்டுமே மாதர்**
**இலஃஃகு முத்தி னினம்"**

எனவும் வரும். பிறவும் அன்ன.

இச் சூத்திரம் மேற்கோளாதலால் **தானெடுத்துமொழிதல்** என்னும் உத்தி:

வல்லின வகையான் இயல்பாக வந்த ஆய்தம் ஆறனோடு, புணர்ச்சி விகாரத்தான் வரும் ஆய்தமும் செய்யுள் விகாரத்தான் வரும் ஆய்தமுங் கூடி எட்டாய் வருமாறு காண்க.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ—ம்,** முற்றாய்தத் தோற்றம் வருமாறு கூறுகின்றது.

**இ—ள்.: குறியதன் முன்னர்** — குற்றெழுத்துக்கு முன்னாக, **ஆய்தப் புள்ளி** — முற்றாய்த எழுத்தானது, **உயிரொடு புணர்ந்த** — உயிரொடுங் கூடிய, **வல்லாறன் மிசைத்தே** — வல்லெழுத்து ஆறின்மேல் வரும், **எ—று.**

**உ—ம்.:**

எஃகு, கஃசு, கஃடு, கஃது, கஃபு, கஃறு,
விலஃஃகி — ஓசை நிறைத்தற் பொருட்டு வந்த ஆய்தம்.
இருபஃது — புணர்ச்சிக்கண் வந்த ஆய்தம்.
ஆக ஆய்தம் 8.

## விசாகப் பெருமாளையர்

**இது,** முற்றாய்தம் வருமாறு உணர்த்துகின்றது.

**இ—ள்.: ஆய்தப்புள்ளி** — புள்ளி வடிவினதாகிய வாய்தம், **குறியதன் முன்னர்** — குற்றெழுத்தின் முன்னதாய், **உயிரொடு புணர்ந்த** — உயிரோடு கூடிய, **வல்லாறன் மிசைத்து** — வல்லெழுத்தாறனு ளொன்றன் மேலதாய் வரும், **எ— று.**

**உ—ம்.:**

எஃகு, கஃசு, இருபஃது என வரும், பிறவுமன்ன.

இச் சூத்திர மேற்கோளாதலால் **"தானெடுத்து மொழிதல்"** என்னு முத்தி, வல்லின வகையாலியல்பாக வருமாய்த மாறனோடு,

***அஃகடிய*** எனப் புணர்ச்சி விகாரத்தால் வருமாய்தமும், ***அஃகான்*** எனச் செய்யுள் விகாரத்தால் வருமாய்தமும் கூடி யெட்டாதல் காண்க.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

ஆய்த மெய்வெழுத்தைச் சார்ந்து வரும்?

குறியதன் முன்ன ராய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே.
(குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே)

**இ – ள். ஆய்தப்புள்ளி** – புள்ளி வடிவினதாகிய ஆய்தம், **குறியதன் முன்னர்** – குற்றெழுத்தின் முன்னதாய், **உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்து** – உயிரொடு கூடிய வல்லெழுத்தாறனுள் ஒன்றன் மேலதாய் வரும், எ – று.

**உ – ம்.**

எஃகு, கஃசு, இருபஃது, பஃறி.

*எனவே முற்றாய்தம் எத்தனை?*

வல்லின வகையான் வரும் ஆய்தம் ஆறு.

அவ் + கடிய – அஃகடிய எனத் திரிதலென்னும் புணர்ச்சி விகாரத்தான்வருமாய்த மொன்று.

அ + கான் – அஃகான் என விரித்தலென்னும் செய்யுள் விகாரத்தான் வரும் ஆய்தம் ஒன்று. ஆக **முற்றாய்தமெட்டு.**

## முகவை இராமானுச கவிராயர்

**இது**, முற்றாய்தம் வருமாறு கூறுகின்றது.

**இ–ள்.: ஆய்தப்புள்ளி** – புள்ளி வடிவாகிய ஆய்தமானது, **குறியதன்முன்னர்** – குற்றெழுத்தின் முன்னதாகி, **உயிரொடு புணர்ந்த** – உயிரொடு கூடிய, **வல்லாறன்மிசைத்து** – ஆறு வல்லெழுத் தினுள் ஒன்றின் மேலதாம், (மேலதாகி வரும்), **எ – று.**

**உதாரணம்.:**

எஃகு–கஃசு–கஃடு–இருபஃது–அஃபு–கஃறு–என இவை வல்லின வகையால் ஒருமொழிக்கண் வந்த ஆய்தம் ஆறு, அஃகடிய இது புணர்ச்சி விகாரத்தால் வந்தது.

***'விலஃஃகி வீங்கிரு ளோட்டுமே மாத
ரிலஃஃகு முத்தி னினம்'***

இக் குறட்பாவில் வந்த ஆய்தஞ் செய்யுள் விகாரத்தால் வந்தது. ஆக முற்றாய்தம் எட்டாய் வருதல் காண்க. தனிக்

குறிலென்னாமையால் குறலிணைக் கீழும் ஆய்தம் வருமெனக் காண்க. இச்சூத்திரம் மேற்கோளென்னும் ஆசிரிய வசனமாதலால் **தானெடுத்து மொழித லென்னும்** உத்தி.

## கா. கோபாலாசாரி - தி.கோ.ரங்காசாரி

**உரை :- ஆய்தப் புள்ளி** - புள்ளி வடிவினதாகிய ஆய்தம், **குறியதன் முன்னர்** - குற்றெழுத்தின் முன்னதாய், **உயிரொடு புணர்ந்த** - உயிரொடு கூடிய, **வல் ஆறன் மிசைத்து** - வல்லெழுத்தாறனுளொன்றன் மேலதாய் வரும்.

குறிப்பு :-

***வல்லாறன் மிசைத்து*** என்றதனாலும், ஈண்டுப் ***புள்ளி*** என்றதானலும், ஆய்தத் தொடர்மொழியென மேற்கூறுதலாலும், ***உயிர்*** என்றது ஈண்டுப் பெரும்பான்மையும் குற்றுகரமே யாம். சிறுபான்மை ஏனை உயிர்களையுங் கொள்க.

**உ-ம்:**

எஃகு, கஃசு, கஃடு, இஃது, அஃபு, கஃறு என உகரத்தோடும்; வெஃகாமை, அஃகி, வெஃகி, அஃகம், பஃறி எனப் பிற உயிர்களோடும் வந்தது. கஃசியாது எனப் புணர்ந்ததுவும் குற்றியலுகரத்தோடு புணர்ந்ததாம்.

வல்லின வகையால் இயல்பாக வரும் ஆய்தம் ஆறு;

அவ்+கடிய = அஃகடிய எனப் புணர்ச்சி விகாரத்தால் வரும் ஆய்தம் ஒன்று;

அ+கான் = அஃகான் எனச் செய்யுள்விகாரத்தால் வரும் ஆய்தம் ஒன்று; ஆக முற்றாய்தம் எட்டாதல் காண்க.

தனிக்குறி லென்னாமையால் குறிலிணைக் கீழும் ஆய்தம் வருமெனக் கொள்க.

இச்சூத்திரம் இவ்வாசிரியர் தொல்காப்பியத்தினின்றெடுத்துக் கொண்ட மேற்கோளாதலின் **தானெடுத்து மொழிதல்** என்னும் உத்தி.

ஆய்தம் - ஆயுதம், அடுப்புக் கூட்டுப்போல ஒருவகை ஆயுதவடிவாக மூன்று புள்ளிவைத்து எழுதப்படலால் ஆய்தம் எனப்பட்டது. ஆயுதம் - இங்கே போர்க்கருவியாகிய கேடகமும், சமைத்தற் கருவியாகிய அடுப்புமென்க.

## ஆறுமுக நாவலர்

**இ-ள்.: ஆய்தப் புள்ளி** - புள்ளி வடிவினதாகிய ஆய்தம், **குறியதன் முன்னர்** - குற்றெழுத்தின் முன்னதாய், **உயிரொடு புணர்ந்த வல்லாறன்**

**மிசைத்து** – உயிரோடு கூடிய வல்லெழுத்தாறனுள் ஒன்றன் மேலதாய் வரும், எ—று.

**உ—ம்.:**

எஃகு, கஃசு, இருபஃது, பஃறி என வரும்.

இச் சூத்திரம் மேற்கோளாதலால், **தானெடுத்து மொழிதலென்னு** முத்தி.

வல்லின வகையால் இயல்பாக வரும் ஆய்தம் ஆறு; அவ் + கடிய = அஃகடிய எனத் திரிதலென்னும் புணர்ச்சி விகாரத்தால் வரும் ஆய்தம் ஒன்று;

அ+கான் = அஃகான் என விரித்தலென்னுஞ் செய்யுள் விகாரத்தால் வரும் ஆய்தம் ஒன்று; ஆக முற்றாய்தம் எட்டாதல் காண்க.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ—ள். ஆய்தப்புள்ளி** – புள்ளி வடிவினதாகிய ஆய்தம், – **குறியதன் முன்னர்** – குற்றெழுத்தின் முன்னதாய், – **உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்து** – உயிரொடு கூடிய வல்லெழுத் தாறனுள் ஒன்றன் மேலதாய் வரும்.

**உ—ம்.** :எஃகு, கஃசு, இருபஃது, பஃறி, வெஃகாமை எனவரும்.

இச்சூத்திரம் அகத்தியத்திலுளதாய் மற்கோளாதலின் தானெடுத்து மொழிதலென்னு முத்தி.

வல்லின வகையால் இயல்பாக வரும் ஆய்தம் ஆறு;

அவ்+கடிய= அஃகடிய என ஓரெழுத்து மற்றொரெழுத்தாகத் திரிதலாகிய புணர்ச்சி விகாரத்தால் வரும் ஆய்தம் ஒன்று;

மஃகான் என விரித்தலாகிய செய்யுள் விகாரத்தால் வரும் ஆய்தம் ஒன்று. ஆகவே முற்றாய்தம் எட்டாதல் காண்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரி
## சே. கிருஷ்ணமாசாரி

**இ—ள்.: ஆய்தம் புள்ளி** – (மூன்று) புள்ளி வடிவாகிய ஆய்த வெழுத்தானது, **குறியதன் முன்னர்** – குற்றெழுத்தின் முன்னதாய், **உயிரொடு புணர்ந்த வல் ஆறன் மிசைத்து ஏ**–உயிரோடு கூடிய வல்லெழுத்தாறனுள் ஒன்றன் மேலதாகியே வரும்; **எ — று.**

முன் – இங்கே, இடமுன்.

"ஆய்தவொற்று என்றவாறு. ஆய்தமான புள்ளி, 'ஆய்தப்புள்ளி' என்றார். இதனையும் ஒன்றின்பாற் சார்த்துதற்கு என்க" என்பது, பழைய உரை.

அடுப்புக் கூட்டுப் போல ஒருவகை ஆயுத வடிவாக மூன்று புள்ளி வைத்து எழுதப்படுதலால், ஆய்தமென்று பெயர்.

ஆய்தம் = ஆயுதம்; இங்கே, போர்க் கருவியாகிய கேடகமென்னும் படை: சமைத்தற் கருவியாகிய அடுப்புமாம்.

முற்றாய்தம்–மாத்திரை குறையாத ஆய்தம். இச் சூத்திரத்தால் ஆய்தம் தனிமொழி தொடர்மொழிகளின் இடையிலன்றி மற்றைய இடங்களில் வாராதென்பது நன்கு விளங்கும்.

**உ–ம்.:** எஃகு, கஃசு, ஒன்பஃது, பஃறி, பிறவுங் கண்டுகொள்க.

(எஃகு–வேல், கஃசு–ஓர்எடையளவு, ஒன்பஃது–ஒன்பது. பஃறி–ஓடம்.)

வல்லின வகையால் இயல்பாக வரும் ஆய்தம் ஆறு;அவ்+கடிய =அஃகடிய எனத் திரிதலென்னும் புணர்ச்சி விகாரத்தால் வரும் ஆய்தம் ஒன்று; செய்வது = செய்வஃது என விரித்தலென்னுஞ் செய்யுள் விகாரத்தால் வரும் ஆய்தம் ஒன்று; ஆக, முற்றாய்தம் எட்டாதல் காண்க.

இது, தொல்காப்பியச் சூத்திரமாதலால், இதனை எடுத்துக் கொண்டது, **தானெடுத்துமொழிதல்** என்னும் உத்தி. (தான் எடுத்துமொழிதல் – பழஞ் சூத்திரத்தைத் தான் எடுத்துச் சொல்லுதல்.)

## பவானந்தம் பிள்ளை

இ–ள். ஆய்தப் புள்ளி – புள்ளி வடிவினதாகிய ஆய்தம், குறியதன் முன்னர் – குற்றெழுத்தின் முன்னதாய், உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்து – உயிரோடு கூடிய வல்லெழுத்தாறனுள் ஒன்றன் மேலதாய் வரும். எ–று.

**உ – ம்:**

**எஃகு**

**கஃசு**

**கஃடு**

**இஃது**

**அஃபு**

**பஃறி**

அஃகடிய .... இவை ஆறும் உயிரொடு புணர்ந்த வலெழுத்து ஆறன் மேலாவய் வந்தன.

இது, 'அவ்+கடிய' என்னும் இருமொழிகள் சேர்ந்த புணர்ச்சி விகாரத்தால் வந்தது.

அஃகான்.... இது விரித்தல் என்னும் செய்யுள் விகாரத்தால் வந்தது. இவ்வகையே முற்றாய்தம் எட்டாதல் காண்க.

இச்சூத்திரம் மேற்கோளாதலால், ***தானெடுத்து மொழிதல்*** என்னும் உத்தி.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள். ஆய்தப் புள்ளி** – புள்ளி வடிவினதாகிய ஆய்தம், **குறியதன் முன்னர்** – குற்றெழுத்தின் முன்னதாய், **உயிரொடு புணர்ந்த**–உயிரோடு கூடிய, **வல் ஆறன் மிசைத்து** –வல் எழுத்து ஆறனுள் ஒன்றன் மேலதாய் வரும் , **எ–று.**

**பொ–ரை.:**

புள்ளி வடிவை யுடையதாகிய ஆய்தம் குற்றெழுத்தின் பின்னே உயிரோடு கூடிய வல் எழுத்து ஆறன் மேலதாய் வரும்.

**உ–ம்.**

எஃகு, கஃசு, கஃடு, இருபஃது, அஃபு, கஃறு, பஃறி. – வல்லின வகையால் இயல்பாக வரும் ஆய்தம் ஆறு.

(எஃகு–வேல், கஃசு–கால் பலம், கஃடு – ஒலிக் குறிப்பு, இருபஃது – இருபது, அஃபு – சுருங்குதல், கஃறு – கருமை, பஃறி – படகு)

அவ்+கடிய = அஃகடிய, அல் + திணை = அஃறிணை – புணர்ச்சி விகாரத்தால் வரும் ஆய்தம் ஒன்று.

அ+கான். அஃகான் – செய்யுள் விகாரத்தால் வரும் ஆய்தம் ஒன்று.

இப்படியே முற்றாய்தத்தின் தொகை எட்டாதல் காண்க. அடுப்புக் கூட்டுப் போல ஒருவகை ஆயுத வடிவாக மூன்று புள்ளி வைத்து எழுதப்படுதலால், ஆய்தம் என்று பெயர்.

ஆய்தம் – ஆயுதம், இங்கே போர்க் கருவியாகிய கேடகம் என்னும் படை; சமைத்தற் கருவியாகிய அடுப்புமாம். முற்றாய்தமாவது, மாத்திரை குறையாத ஆய்தம். இச் சூத்திரத்தால், ஆய்தம் தனிமொழி தொடர் மொழிகளின் இடையிலன்றி மற்றைய இடங்களில் வாராதென்பது நன்கு விளங்கும்.

இச் சூத்திரம் மேற்கோளாதலால், தானெடுத்து மொழிதலென்னும் உத்தி. தான் எடுத்து மொழிதல் – தான் (பழைய சூத்திரத்தை) எடுத்துச் சொல்லுதல்.

## கா. நமச்சிவாய முதலியார்

ஆய்தப் புள்ளி – மூன்று புள்ளி வடிவினதாகிய ஆய்தம், **குறிய தன் முன்னர்** – குற்றெழுத்தின் முன்னதாய், **உயிரொடு புணர்ந்த** – உயிரோடு கூடிய, **வல் ஆறன் மிசைத்து** – வல்லெழுத்து ஆறனுள் ஒன்றன் மேலதாய் வரும்.

**உ – ம்.:**

எஃகு, கஃசு, இருபஃது, பஃறி,

இவற்றோடு கஃடு, கஃபு என்பவற்றைக் கூட்டி, முற்றாய்தம் ஆறு

எனக் காட்டுவர். இவ்விரண்டிற்கும் யாதும் பொருள் விளங்கவில்லை. பொருள் விளங்கக்கூடிய வேறு சொற்கள் காணும்வரை இவற்றையே உதாரணமாகக் கொள்க.

எஃகு – வேல், கஃசு – காற்பலம், இருபஃது – இருபது, பஃறி – ஓடம்.

மேற்காட்டியவாறு வல்லினவகையால் இயல்பாக வரும் ஆய்தம் ஆறு;

அவ் + கடிய = அஃகடியஎனத் திரிதல் என்னும் புணர்ச்சி விகாரத்தால் வரும் ஆய்தம் ஒன்று;

அ + கான் = அஃகான் என விரித்தல் என்னும் செய்யுள் விகாரத்தால் வரும் ஆய்தம் ஒன்று; ஆக முற்றாய்தம் எட்டாதல் காண்க.

இது தொல்காப்பியர் சூத்திரமாதலால், **"தானெடுத்து மொழிதல்"** என்னும் உத்தி.

## மோசசு பொன்னையா

குற்றெழுத்தின் முன்னும், வல்லொற்று ஆறனுள் யாதனுமொன்றன் மேலதாயும் ஆய்தம் என்னும்புள்ளி எழுத்து வரும், **எ–று.**

இது தொல்காப்பிய நூற்பா.

**எ–டு.**

எஃகு, கஃசு. ஒன்பஃது, பஃறி – எனவும் அஃகாமை, வெஃகாமை, அஃகி, வெஃகி எனவும் வரும்.

வல்லின வகையால் வரும் ஆறோடும், அவ் + கடிய = அஃகடிய எனத் திரிதல் என்னும் புணர்ச்சி விகாரத்தால் வரும் ஒன்றையும், செய்வது – செய்வஃது என விரித்தல் என்னும் செய்யுள் விகாரத்தால் வரும் ஒன்றையும் கூட்டி ஆய்தம் எட்டு என்பர்.

ஆய்தம் தன்னாற் சாரப்பட்ட வல்லின மெய்யின் ஒலியை உரசொலியாக்கி, அதனைப் பிறவிடத்து வரும் வல்லின ஒலியின் மாற்றொலியாக்கி நிற்ப தன்றித் தனக்கென ஓர் ஒலியியல்பைப் பெற்றிலது. அஃகேனம், தனி நிலை ஆய்தம் என்பன ஒருபொருட் பல சொற்கள்.

## உயிரளபெடை

90. இசைகெடின் மொழிமுத லிடைகடை நிலைநெடில்
அளபெழு மவற்றவற் றினக்குறில் குறியே.

இசை கெடின் மொழி முதல் இடை கடை நிலை நெடில்
அளபு எழும் அவற்று அவற்றின் இனக் குறில் குறியே.

isai ketin̲ moḻi mutal itai katai nilai netil
aḷapu eḻum avaṟṟu avaṟṟin̲ in̲ak kuṟil
kuṟiyē.

### இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

**Poetical prolongation of the sound of vowels**

When the metre is deficient, long vowels, take an increased quantity (of sound), in the beginning, middle and end of words-such increase being indicated by the insertion of their kindred short vowels.

### ஒப்புமைப் பகுதி

குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்
நெட்டெழுத் திம்பர் ஒத்தகுற் றெழுத்தே

(தொல். எழு. : 41)

ஐ ஒள என்னும் ஆயீ ரெழுத்திற்கு
இகர உகரம் இசைநிறை வாகும்

(தொல். எழு. : 42)

உயிர்நெடில் இனைக்குறில் உற்று அளப்பெடுக்கும்
.....................................

( தொன். : 18:1)

இசைகெடி னெட்டெழுத் தெல்லாந் தமக்கினம்
ஆகிய குறிலொடு மளபெழு மெனலே

( மு.வீ. : 31)

ஏயஇசை கெடின் மொழிக்கு முன்பின் இடை உயிர்க்

குற்றொற்று நெடிநீளும் ஐயெளவ் விவ்வுப் வேற்று உயிரிற்
கூய் அளவாம்.....

(சுவாமி. : 19: 4)

## மயிலை நாதர்

**எ — ன்**, வைத்தமுறையானே உயிரளபெடைத் தோற்றமாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**இ—ள்.:** செய்யுட்கள் ஓசை சிதைய வந்தவிடத்து மொழி முதலிடை கடையென்னும் மூன்றிடத்தும் நின்ற நெட்டெழுத்துக்கள்தாம் இரண்டு மாத்திரையின் நீட்டிசைக்கப் பெறும். ஆண்டு அவற்றிற்கு இனமாகிய குற்றெழுத்துக்கள் அவ்வளவிற்குக் குறியாய் வந்து நிற்கும். **எ — று.**

எனவே இரண்டு மாத்திரையானது மூன்று மாத்திரையாய் நீடலல்லது இரண்டெழுத்துக் கூடி மூன்று மாத்திரையா மென்பாரை விலக்கினாருமாம்.

**வ—று.:** வாஅகை, ஈஇகை, ஊஉகம், பேஎகன், தைஇயல், [1]தோஒகை, மௌஉவல் எனவும்; படாஅகை, [2]பரீஇகம், கழூஉமணி, பரேஎரம், வளைஇயம், புரோஒசை, [3]மனௌஉகம் எனவும்; [4]குராஅ, குரீஇ, [5]குழூஉ, [6]விலேஎ, விரைஇ, உலோஒ, [7]அனௌஉ எனவும் முறையே மூவிடத்தும் ஏழுநெட்டெழுத்தும் அளபெழுந்தன. தனிநிலை யளபெடை வேண்டாராயினார். அது நெட்டெழுத்தோரெழுத் தொருமொழியாய் முதனிலை யளபெடையாய்த்தான் இறுதிநிலை யளபெடையாய்த்தான் அடங்குதலினென்க. அஃதேல்,

*தனிநிலை முதனிலை யிடைநிலை யீறென*
*நால்வகைப் படூஉமள பாய்வருமிடனே*

என்னும் முன்னோர் மதத்தோடு முரணும் பிறவெனின்,

*இருவர் நூற்கு மொருசிறை தொடங்கித்*
*திரிபுவே றுடையது புடைநூ லாகும்*

என்பதனாலும் மாறுபாடாகாதென்க.

*ஐ ஔ இ உச் செறிய*

என்பதனான், ஐகாரத்துக்கு இகரமும், ஔகாரத்துக்கு உகரமும் இனக் குறிலாமெனக் கொள்க.

*எழுத்துக் குறியிட மாத்திரை நான்கும்*
*வழுக்காது வைக்க வகுத்து*

என்பவாகலின், ஈரெழுத்துக் கூடி அளபாமென்பார் குறி கூறிற்றிலருமாம்.

## சங்கர நமச்சிவாயர் - சிவஞான முனிவர்

**எ — னின்**, உயிரளபெடை வருமாறு **உணர்—ற்று.**

**இ — ள்.:** செய்யுட்கண் இசைகுன்றின் மொழி முதலினும் இடையினும் கடையினும் நின்ற நெட்டெழுத்து ஏழும் அவ்விசை நிறைக்கத் தத்தம் மாத்திரையின் மிக்கொலிக்கும்; அவ்வாறு அளபெடுத்தன அறிதற்கு, அவற்றின் பின் அவற்றிற்கு இனமாகிய குற்றெழுத்துக்கள் வரிவடிவின்கண் அறிகுறியாய் வரும், **எ — று.**

உ–ம்.:

*ஆஅ வளிய அலவன்றன் பார்ப்பினோடீஇ*
*ரிரையுங்கொண் டீரளைப் பள்ளியுட்டூஉந்*
*திரையலைப்பத் துஞ்சா திறைவன்றோள் மேஎ*
*வலைப்பட்ட நம்போல் நறுநுதால்ஓஒ வுழக்குந் துயர்*

எனவும்,

*உறாஅர்க் குறுநோய் உரைப்பாய் கடலைச்*
*செறாஅஅய் வாழிய நெஞ்சு*

எனவும்,

*அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு*
*நல்ல படாஅ பறை*

எனவும் வரும்.

செறாஅஅய் வாழிய என்புழி நான்கு மாத்திரையாயும், ஏனைய மூன்று மாத்திரையாயும் அலகு பெற்றுச் செய்யுளிசை நிறைத்து மூவிடத்தும் வந்தவாறு காண்க. பிறவும் அன்ன.

இனி, இசை கெடின் என்று பொதுப்படக் கூறினமையால்,

***கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே எடுப்பதூஉம் எல்லாம் மழை***

எனக் குறில் நெடிலாய் அளபெழுந்து அலகு பெற்றும் பெறாதும் இன்னிசை நிறைப்ப வருவனவும்,

***உரனசைஇ உள்ளம் துணையாகச் சென்றார் வரனசைஇ இன்னும் உளேன்***

என அளபெழுந்து அலகுபெற்றும் பெறாதும் சொல்லிசை நிறைப்ப வருவனவும்,

***வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்***
***வீழப் படாஅர் எனின்***

என்பதனுள் கெழீஇயிலர் என அளபெழுந்து அலகு பெறாது சொல்லிசை நிறைப்ப வருவனவும் கொள்க.

எழுத்துப் பலவாயின ஒலி வேற்றுமையானன்றே, அங்ஙனமாதலின் நெடிலது விகாரமாய் ஓரொலியாய்ப் பிறப்பதே. ***அளபெடை என்பார் நெடில் அளபெழும் என்றும், அவற்றவற் றினக்குறில் குறியே என்றும் கூறினார். ஆசிரியர் தொல்காப்பியரும் நீரும் நீரும் சேர்ந்தாற்போல நெட்டெழுத்தோடு குற்றெழுத்து 'ஒத்து நின்று நீண்டு இசைப்பதே அளபெடை என்பார்,***

***குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும் நெட்டெழுத்திம்பர் ஒத்தகுற் றெழுத்தே"***

***என்றார்.*** இங்ஙனம் ஒலிபற்றிக் கூறும் வகையால் இருவர்க்கும் கருத்து ஒன்றேயாயினும் ***குறியே என்றது இவ்விரண்டு மேற்கோளில் ஒன்று துணிதலான் ஒருதலை துணிதல்***

*என்னும் உத்தியும் அம்மதமும்பட வந்தது என்க.*

*இப்பெற்றி யறியாதார், நெடிலும் குறிலும் விரலும் விரலும் சேர நின்றாற்போல இணைந்து நின்று அளபெடுக்கும் எனத் தமக்கு வேண்டியவாறே கூறுப. நெடிலும் குறிலும் அவ்வாறு நின்று அளபெடுக்கும் என்றல் பொருந்தாமைக்கு, எழுத்தெடை என்னாது அளபெடை என்னும் குறியீடே சான்றாதல் அறிக. அற்றேல் ஓரெழுத்தினையே இரண்டு மாத்திரையும் ஒரு மாத்திரையுமாகப் பிரித்து, அசைத்து அதனாற் சீர்செய்து தளையறுத்தல் பொருந்தாது எனின்:– அற்றன்று; எழுத்து வகையான் என்னாது,*

*மாத்திரை வகையால் தளைதம கெடாநிலை யாப்பழி யாமையென் றளபெடை வேண்டும்*

*எனக் கூறப ஆகலின் எழுத்திற்கு மாத்திரை கோடலும், அசைத்தலும், சீர் செய்தலும், தளையறுத்தலும் ஓசைபற்றி யல்லது எழுத்துப் பற்றியல்ல என்க.*

*இதனுள் செப்பலோசை முதலிய ஓசை குன்றாது நெட்டெழுத்து ஏழும் மொழி முதலிடைகடைகளினின்று அளபெடுக்குங்கால், ஔகாரம் மொழியிடை கடைகளின் வரப்பெறாமையின் அவ்விடங்களின் அஃதொழிய நின்று அளபெடுக்கும் அளபெடை பத்தொன்பதோடு, இன்னிசை நிறைப்பவும் சொல்லிசை நிறைப்பவும் அளபெடுக்கும் அளபெடை இரண்டும் கூடிம்* உயிரளபெடை எழுமூன்றாய் வருமாறு காண்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், உயிரளபெடைத் தோற்றம் கூறியது.

**இ–ள்.: இசை கெடின்** – செய்யுட்கள் ஓசை அரிய வந்தவிடத்து, **மொழி முதல் இடை கடை** – மொழிக்கு முதற்கண்ணும் மொழிக்கு இடையினும் மொழிக்கு ஈற்றினும், **நிலை நெடில்** – இம் மூன்று இடத்து நின்ற நெட்டெழுத்துக்கள், **அளபெழும் –** இரண்டு மாத்திரை யினீண்டு இசைக்கப்படும், **அவற்றவற்று இனக்குறில் –** அவ்வவ் நெட்டெழுத்துக்களுக்கு இனமாகிய குற்றெழுத்துக்கள், **குறியே** – அவ்வளவிற்குக் குறியாய் வந்து நிற்கும், **எ–று.**

**உ–ம்.:**

வாஅகை, ஈஇகை, ஊஉகம், பேஎகன், தைஇயல், தோஒரை, மௌஉவல் எனவும்; படாஅகை, பரீஇகம், கழூஉமணி, பரேஎரம், வளைஇயம், புரோஒசை, மணிமௌஉலி எனவும்; கடாஅ, குரீஇ, கழூஉ, விலேஎ, விரைஇ, உலோஒ, அனௌஉ எனவும் வரும். ஆக உயிரளபெடை 21.

## விசாகப் பெருமாளையர்

**இது,** உயிரளபெடை வருமாறு உணர்த்துகின்றது.

**இ–ள்.: இசைகெடின்**–பாட்டிலோசை குறையின், **மொழி** – அவ்வோசை குறைந்த சொல்லுக்கு, **முதல்** – முதலிலாகிலும், **இடை**– நடுவிலாகிலும், **கடை** – இறுதியிலாகிலும், **நிலை** – நின்ற, **நெடில்** – நெட்டெழுத்தேழுளொன்று, **அளபெழும்** – அவ்வோசையை நிறைக்கத் தன்மாத்திரையின் மிகுந்தொலிக்கும், **அவற்று** – அவற்றின் பின், **அவற்றினக்குறில்** – அதத‌ற்கு இனமாகிய குற்றெழுத்துகள், **குறி** – அளபெடுத்தமையை அறிதற்கு வரிவடிவில் அறிகுறியாய் வரும், எ – **று.**

**உ–ம்.:**

*ஓஒதல் வேண்டுமொளி மாழ்குஞ் செய்வினை*
*யாஅது மென்னு மவர்*
*உறாஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்*
*செறாஅஅய் வாழிய நெஞ்சு*
*அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாணுசுப்பிற்கு*
*நல்ல படாஅ பறை*

எனவரும், ''ஓதலில்'' 'ஓ' முதலிலும், 'உறாரில்' 'ஆ' இடையிலும், 'படாவில்' 'ஆ' இறுதியிலும் அளபெடுத்தன, மற்றை நெட்டெழுத்துகளும் இப்படியே அளபெடுக்கும். 'செறாய்' ஈரளபெடுத்தது. (ஔகாரஞ் சொல்லுக்கு நடுவிலும், கடையிலும், வராமையால் அவ்விடங்களில் அது நீங்கலாக நின்று அளபெடுக்கின்ற அளபெடை பத்தொன்பதோடும்,

*"கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே*
*எடுப்பதூஉ மெல்லா மழை"*

என வின்னிசை நிறைக்க வருமளபெடையும்

*"உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார்*
*வரனசை இ யின்னு முளேன்"*

எனச் சொல்லிசை நிறைக்க வருமளபெடையுங் கூடி உயிரளபெடை யிருபத்தொன்றாய் வருதல் காண்க.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

*உயிரளபெடையாவன யாவை ?*

இசைகெடின் மொழிமுத லிடைகடை நிலைநெடில்
அளபெழு மவற்றவற் றினக்குறில் குறியே.
(இசை கெடின் மொழி முதல் இடை கடை நிலை நெடில்
அளபெழும் அவற்று அவற்று இனக் குறில் குறியே.)

**இ – ள். இசைகெடின் மொழிமுதல் இடை கடை நிலைநெடில் அளபு எழும்** – பாட்டில் ஓசை குறையின் மொழிக்கு முதலிலும் நடுவிலும் இறுதியிலும் நின்ற நெட்டெழுத்தேழும் அவ்வோசையை நிறைக்கத் தத்தம் மாத்திரையின் மிக்கொலிக்கும், **அவற்று அவற்று இனக்குறில் குறியே** – அப்படி யளபெடுத்தமையை அறிதற்கு அவற்றின் பின் அஃததற்கு இனமாகிய குற்றெழுத்துக்கள் வரிவடிவில் அறிகுறியாய் வரும், எ – **று.**

**உ–ம்.**

***ஓஒதல் வேண்டும் மொளிமாழ்குஞ் செய்வினை***
***யாஅது மென்னுவர்***

எனவும் ,

***உறாஅர்க் குறுநோய் உரைப்பாய் கடலைச்***
***செறாஅஅய் வாழிய நெஞ்சு***

எனவும்,

***அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு***
***நல்ல படாஅ பறை***

எனவும் வரும்.இவற்றுள், ஓதல் என்பதில் ஓ வென்னும் நெட்டெழுத்து மொழிக்கு முதலிலும்,உறார் என்பதில் ஆவென்னு நெட்டெழுத்துக் கடையிலும் அளபெடுத்த வாறு காண்க.செறாய் என்பதில் ஆவென்னு நெட்டெழுத்து ஈரளபெடுத்து வந்தது.

*அளபெடையென்பதன் பொருள் யாது?*

அளபு – மாத்திரை. எடை – எடுத்தல். ஒலியளவில் நீண்டு ஒலித்தல்.

*இவ்வளபெடைகளே யன்றி வேறு அளபெடைகளு முளவோ?*

செய்யுளோசை குன்றாவிடத்தும் இன்னிசை நிறைக்கவுஞ் சொல்லிசை நிறைக்கவும் வரும் அளபெடைகளும் உண்டு.

இன்னிசை நிறைக்க வரும் அளபெடையாவது யாது?

இன்னிசை நிறைக்க வரும் அளபெடையாவது குற்றெழுத்து நெட்டெழுத்தாக நீண்டு இன்னிசை நிறைத்தற் பொருட்டு அளபெடுப்பது.

சொல்லிசை நிறைக்க வரும் அளபெடையாவது யாது?

சொல்லிசை நிறைக்க வரும் அளபெடையாவது பெயர்ச்சொல் வினையெச்சச் சொல்லின் இசையை நிறைத்தற் பொருட்டு அளபெடுப்பது.

***கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே***

***எடுப்பதூஉம் எல்லாம் மழை***

இதனுள்,கெடுப்பதும் எடுப்பதும் என நிற்பினும் செய்யுளோசை

குன்றாதாயினும்,இன்னிசை நிறைத்தற் பொருட்டுக் குறில் நெடிலாய் அளபெடுத்தமை காண்க.

*உரனசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்*

*வரனசைஇ இன்னும் உளேன்*

இதனுள்,உரனசை வரனசை என நிற்பினுஞ் செய்யுளோசை குன்றாதாயினும், விருப்பமெனப் பொருள்படும் நசையென்னும் பெயர்ச்சொல், விரும்பியென வினையெச்சப் பொருள்படும் பொருட்டு வினையெச்சச் சொல்லாதற்கு நசைஇ என அளபெடுத்தமை காண்க.

உயிரளபெடை எதனாலிருபத்தொன்றாயின?

நெட்டெழுத்து ஏழும் மொழிக்கு முதல் இடை கடை என்னும் மூன்றிடத்தும் அளபெடுக்கும் எனவே உயிரளபெடை இருபத்தொன்றாதல் பெறப்படும்.ஔகாரம் மொழிக்குநடுவிலும் கடையிலும் வாராமையால் அவ்விரண்டும் கழிக்க நின்ற உயிரளபெடை பத்தொன்பது.அப்பத்தொன்பதொடுஇன்னிசை நிறைக்க வரும் அளபெடை, சொல்லிசை நிறைக்க வரும் அளபெடை என்னும் இரண்டும் கூட்ட உயிரளபெடை இருபத்தொன்றாதல் காண்க.

உயிரளபெடைக்கு வரிவடிவில் வரும் அறிகுறி யாவை ?

அவற்றவற்றின் இனக் குறில்குறியே

## முகவை இராமானுச கவிராயர்

**இது,** உயிரளபெடைவருமாறுணர்த்துகின்றது.

**இ–ள்.: இசைகெடின்** – செய்யுள் ஓசை குறையுமாயின், **மொழிமுதலிடைகடை** – (அவ்வோசைகுறைந்த) மொழியின் முதலிலாவது, இடையிலாவது, கடையிலாவது, **நிலைநெடில்** – நின்ற நெட்டெழுத்துக்கள், **அளபெழும்** – (அவ்வோசை நிரம்பும்படி) தத்தம் மாத்திரையின் மேற்பட்டு ஒலிக்கும், **அவற்று** – அவற்றிற்கு, (அவ்வாறு அளபெடுத்தன அறிதற்கு) **அவற்றினக்குறில்** – அவற்றிற்கு இனமாகிய குற்றெழுத்துக்கள், **குறி** – (அவற்றின் பின்) அறிகுறியாய் வரிவடிவில் வரும், **எ – று.**

**உ–ம்.:**

வாஅகை, ஈஇகை, ஊஉகம், பேஎகன், தைஇயல், தோஒரை, மௌஉவல் எனவும்,

*"ஆஅ வளிய வலவன்றன் பார்ப்பினோ*
*டீஇ ரிரைக்கொண் டீரளைப் பள்ளியுட்*
*டூஉந் திரையலைப்பத் துஞ்சா திறைவன்றோண் மேஎ*
*வலைப்பட்ட நம்போ லறுநுதா லோஒ வுழக்குந்துயர்"*

எனவும் வரும். இவை முதனிலையளபெடை. படாஅகை, பரீஇகம், கழூஉமணி, பரேஎரம், வளைஇயம், பரோஒரம், மனௌஉகம் எனவும்,

*"உறாஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச் செறாஅஅய் வாழிய நெஞ்சு"*

எனவும் வருமிவை இடைநிலையளபெடை. கடாஅ, குரீஇ, குழூஉ, மிலேஎ, கடைஇ, அரோஒ, அரௌஉ எனவும்.

*"அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தா ணுசுப்பிற்கு நல்ல படாஅ பறை"*

எனவும் வருமிவை இறுதிநிலையளபெடை, பிறவு மிவ்வாறு காண்க.

இனி இவை இயற்கையளபெடை, செயற்கையளபெடை என விருவகைப்படும். குரீஇ, ஆடூஉ, மகடூஉ, குழூஉ என்றாற் போல்வன இயற்கையளபெடை, இசைநிறைதற் பொருட்டுச் செய்யுளில் அளபெடுத்து வருவன செயற்கையளபெடை எனக் காண்க. குறினெடி லென்னாது பொதுப்பட இசைகெடி னென்றதினால்.

*"கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே யெடுப்பதூஉ மெல்லா மழை"*

எனக் குறில் நெடிலாயளபெடுத்து இன்னிசை நிறைக்க வருவனவும்,

*"உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார் வரனசைஇ யின்னு முளேன்"*

என அளபெடுத்துச் சொல்லிசை நிறைக்க வருவனவுங் கொள்க. சொல்லிசை நிறைத்தலாவது நசை என்பது ஆசை, ஆசைப்பட்டு என வினையெச்சம் நிறைதற் பொருட்டு நசைஇ என அளபெடுத்து நிற்பது. இதனுள் இடவகையால் உயிரளபெடை இருபத்தொன்றாய் வருதல் காண்க. இனி இவற்றொடு தனிநிலையளபெடையென ஒன்றுகூட்டி இருபத்தெட்டென்பாருமுளர். அது இவர்கூறிய மூவகையுளடங்கு மெனக் கொள்க. இச்சூத்திரத்தை நெடில் அளபெழும், குறில்– குறி என இரண்டு முடிபாக்குக.

## கா. கோபாலாசாரி -தி.கோ.ரங்காசாரி

**உரை :– இசை கெடின்** – பாட்டில் ஓசை குறையின், **மொழி** – சொல்லுக்கு, **முதல் இடை கடை** – முதலிலாகிலும் இடையிலாகிலும் இறுதியிலாகிலும், **நிலை நெடில்** – நின்ற நெட்டெழுத்தேழும், அளபெழும் – (அவ்வோசையை நிறைக்கத்) தத்தம் மாத்திரையின் மிகுந்தொலிக்கும்; **அவற்று** – அவற்றின்பின், **அவற்று இனக்குறில்** – அதததற்கு இனமாகிய குற்றெழுத்துக்கள், **குறி** – (அளபெடுத்தமையை அறிதற்கு வரி வடிவில்) அறிகுறியாய் வரும்.

**உ–ம் :–**

"ஓஒதல்வேண்டும்" என முதலிலும், "உறாஅர்க்குறுநோய்" என இடையிலும், "நல்லபடாஅ" எனக்கடையிலும் அளபெடுத்தன.

இவை செய்யுளிசை நிறைக்கவந்தன. "செறாஅய்வாழிய" என்பதில் ஆ ஈரளபெடுத்தது.

**குறிப்பு:–**

செய்யுளோசை குன்றாவிடத்தும் இன்னிசை நிறைக்கவும் சொல்லிசை நிறைக்கவும் வரும் அளபெடைகளும் உண்டு. இன்னிசையளபெடையாவது – குற்றெழுத்து நெட்டெழுத்தாக நீண்டு இனிய ஓசையைத் தரும்பொருட்டு அளபெடுப்பது. நெடில் அளபெடுப்பினும் அது செய்யுளோசை குன்றாவிடத்தாயின், இன்னிசையளபெடையேயாம். சொல்லிசையளபெடையாவது – ஒருசொல் மற்றொருசொல்லின் இசையை நிறைத்தற்பொருட்டு அளபெடுப்பது.

**உ–ம் :**

"கெடுப்பதூஉம் எடுப்பதூஉம்"

இதனுள், "கெடுப்பதும்", "எடுப்பதும்" என நிற்பினும் செய்யுளோசை குன்றாதாயினும், இன்னிசை நிறைத்தற்பொருட்டுக் குறில் நெடிலாகி அளபெடுத்தமைகாண்க.

"உரனசைஇ" "வரனசைஇ"

இதனுள், "உரனசை," "வரனசை" என நிற்பினும் செய்யுளோசை குன்றாதாயினும், 'விருப்பம்' எனப்பொருள்படும் 'நசை' என்னும் பெயர்ச்சொல் 'விரும்பி' என வினையெச்சப் பொருள்படும் பொருட்டு வினையெச்சச் சொல்லாதற்கு 'நசைஇ' என அளபெடுத்தமை காண்க. செய்யுளோசை குறைந்த விடத்தே யன்றி வழக்கிடத்தும் சொல் விகாரப்பட்டு அளபெடுக்கும் குரீஇ, ஆடூஉ முதலியவும் இதிலடங்கும்.

நெட்டெழுத்தேழும் மொழிக்கு முதல், இடை, கடை என்னும் மூன்றிடத்தும் அளபெடுக்கும் எனவே, உயிரளபெடை இருபத்தொன்றாதல் பெறப்படும். ஔகாரம் மொழிக்கு இடையிலும் கடையிலும் வாராமையால் அவ்விரண்டும் நீங்க நின்ற உயிரளபெடை பத்தொன்பது; அப்பத்தொன்பதோடு இன்னிசை நிறைக்க வரும் அளபெடை சொல்லிசை நிறைக்க வரும் அளபெடை என்னும் இரண்டுங் கூட்ட உயிரளபெடை இருபத்தொன்றாதல் காண்க.

இனி, தனிநிலை யளபெடை என்பதையுங் கூட்டி இருபத்தெட்டு என்பாருமுளர். அது இம் மூவகையு ளடங்கு மென்க.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: இசை கெடின்** – பாட்டில் ஓசை குறையின், **மொழி முதல் இடை கடை நிலை நெடில்** – மொழிக்கு முதலிலும் நடுவிலும் இறுதியிலும் நின்ற நெட்டெழுத்தேழும், **அளபு எழும்** – அவ்வோசையை நிறைக்கத் தத்தம் மாத்திரையின் மிக்கொலிக்கும், **அவற்று அவற்று இனக்குறில் குறி** – அப்படி

யளபெடுத்தமையை அறிதற்கு அவற்றின் பின் அததற்கு இனமாகிய குற்றெழுத்துக்கள் வரிவடிவில் அறிகுறியாய் வரும், எ – று.

உ – ம்.:

*"ஓஒதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை யாஅது மென்னு மவர்."*

எனவும்,

***"உறாஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச் செறாஅய் வாழிய நெஞ்சு"***

எனவும்,

***"அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாளுசுப்பிற்கு நல்ல படாஅ பறை."***

எனவும் வரும். இவற்றுள், ஓதல் என்பதில் ஓ வென்னு நெட்டெழுத்து மொழிக்கு முதலிலும், உறார் என்பதில் ஆ வென்னு நெட்டெழுத்து இடையிலும், படா என்பதில் ஆ வென்னு நெட்டெழுத்துக் கடையிலும் அளபெடுத்தவாறு காண்க.

செறாய் என்பதில் ஆ வென்னு நெட்டெழுத்து ஈரளபெடுத்து வந்தது.

செய்யுளோசை குன்றா விடத்தும் இன்னிசை நிறைக்கவுஞ் சொல்லிசை நிறைக்கவும் வரும் அளபெடைகளும் உண்டு. 'இன்னிசை நிறைக்க வரும் அளபெடையாவது குற்றெழுத்து நெட்டெழுத்தாக நீண்டு இன்னிசை நிறைத்தற் பொருட்டு அளபெடுப்பது. சொல்லிசை நிறைக்க வரும் அளபெடையாவது பெயர்ச்சொல் வினையெச்சச் சொல்லின் இசையை நிறைத்தற் பொருட்டு அளபெடுப்பது.

உ – ம்.:

***கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே யெடுப்பதூஉ மெல்லா மழை"***

இதனுள், கெடுப்பதும் எடுப்பதும் என நிற்பினுஞ் செய்யுளோசை குன்றாதாயினும், இன்னிசை நிறைத்தற் பொருட்டுக் குறில் நெடிலாய் அளபெடுத்தமை காண்க.

***உரனசைஇ யுள்ளந் துலணயாகச் சென்றார் வரனசைஇ யின்னு முளேன்.***

இதனுள் உரனசை வரனசை என நிற்பினுஞ் செய்யுளோசை குன்றாதாயினும், விருப்பமெனப் பொருள்படும் நசை யென்னும் பெயர்ச்சொல், விரும்பியென வினையெச்சப் பொருள்படும் பொருட்டு வினையெச்சச் சொல்லாதற்கு நசைஇ என அளபெடுத்தமை காண்க.

நெட்டெழுத்தேழும் மொழிக்கு முதலிடை கடையென்னும் மூன்றிடத்தும் அளபெடுக்கு மெனவே உயிரளபெடை இருபத் தொன்றாதல் பெறப்படும்; ஔகாரம் மொழிக்கு நடுவிலுங்

கடையிலும் வாராமையால் அவ்விரண்டுங் கழிக்க; நின்ற உயிரளபெடை பத்தொன்பது; அப்பத்தொன்பதோடு இன்னிசை நிறைக்க வரும் அளபெடை சொல்லிசை நிறைக்க வரும் அளபெடை என்னும் இரண்டுங்கூட்ட, உயிரளபெடை இருபத்தொன்றாதல் காண்க.

## வ. குமாரசாமிப்புலவர்

**இ–ள். இசைகெடின்** – பாட்டில் ஓசை குறையின் – **மொழி முதல் இடை கடை நிலை நெடில்** – மொழிக்கு முதலிலும் நடுவிலும் இறுதியிலும் நின்ற நெட்டெழுத்தேழும், – **அளபு எழும்** – அவ்வோசையை நிறைக்கத் தம் மாத்திரையின் மிக்கொலிக்கும், – **அவற்று அவற்று இனக்குறில்** – அப்படி அளபெடுத் தமையை அறிதற்கு அவற்றின் பின் அதற்கு அதற்கு இனமாகிய குற்றெழுத்துக்கள், – **குறி** – வரிவடிவில் அறிகுறியாய் வரும். **எ–று.**

**உ–ம்.**

*ஓஒதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை*
*ஆஅது மென்னுமவர்’*

எனவும்

*உறாஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்,*
*செறா அஅய் வாழிய நெஞ்சு*

எனவும்,

*“அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாளுசுப்பிற்கு,*
*நல்ல படாஅ பறை”*

எனவும் வரும். இவற்றுள் ஒதல் என்பதில் ஓ என்னு நெட்டெழுத்து மொழிக்கு முதலிலும், உறார்க்கு என்பதில் ஆ என்னு நெட்டெழுத்து இடையிலும், படா என்பதில் ஆ என்னு நெட்டெழுத்துக் கடையிலும் அளபெடுத்தமை காண்க. செறாய் என்பதில் ஆ வென்னு நெட்டெழுத்து ஈரளபெடுத்து நின்றது.

செய்யுளோசை குன்றாதவிடத்தும் இன்னிசை நிறைக்கவுஞ் சொல்லிசை நிறைக்கவும் வரும் அளபெடைகளும் உண்டு. இன்னிசை நிறைக்க வரும் அளபெடையாவது குற்றெழுத்து கெட்டெழுத்தாக நீண்டு இன்னிசை நிறைத்தற்பொருட்டு அளபெடுப்பது.

**உ–ம்.**

*கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே,*
*எடுப்பதூஉ மெல்லா மழை”*

இதனுள் கெடுப்பதும் எடுப்பதுமென நிற்பினும் வெண்பாவுக்குரிய செப்பலோசை குன்றாதாகவும் இன்னிசை நிறைத்தற்பொருட்டுக் குறில் நெடிலாகி அளபெடுத்தமை

காண்க. செப்பலோசையாவது வெண்டளையால் வருமோசை. இது யாப்பிலக்கணத்தில் விரித்துணர்த்தப்படும். சொல்லிசை நிறைக்க வரும் அளபெடையாவது பெயர்ச்சொல் வினையெச்சச் சொல்லாய் நிறைதற்பொருட்டு அளபெடுத்து நிற்பது.

*உ—ம்.*

*"உரன்சைஇ யுள்ளந் துணையாகச் சென்றார்,*
*வரனசைஇ யின்னு முளேன்,"*

நசை என்பது ஆசை, ஆசைப்பட்டு என வினையெச்சம் நிறைதற்பொருட்டு நசைஇ என அளபெடுத்தது. நசைஇ என்பதற்கு ஆசைப்பட்டு என்பது பொருள். குரீஇ, ஆடூஉ, மகடூஉ, குழூஉ, அல்லதூஉம் என்பன செய்யுளிற் புக முன்பும் தசொல்வடிவாகவே யிருந்து அளபெடுத்தமையால் இவையியற்கை யளபெடை யெனப்படும்.ஒளகாரமல்லாத நெட்டெழுத்தாறும் மொழிக்கு முதல் இடை ஈறு என்னுமூன்றிடத்தும் அளபெடுத்தலால் வரும் அளபெடை பதினெட்டும், ஒளகாரம் மொழிக்கு (இடையிலு மீற்றிலு மளபெடுக்க வராமல்) முதலில் மாத்திரம் வந்தளபெடுத்தது ஒன்றும், இன்னிசை நிறைக்கவரும் அளபெடை சொல்லிசை நிறைக்கவரும் அளபெடை என்னுமிரண்டுங்கூடி உயிரளபெடை இருபத்தொன்றாதல் காண்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரி
## சே. கிருஷ்ணமாசாரி

**இ—ள்.:** **மொழி** – சொல்லுக்கு, **முதல் இடை கடை** – முதலிலும் நடுவிலும் இறுதியிலும், **நிலை** – நின்ற, **நெடில்** – நெட்டெழுத்து ஏழும், **இசைகெடின்** – (பாட்டில்) ஓசை குறையுமிடத்து, **அளபு எழும்** – (அவ்வோசையை நிறைக்கத்) தம்தம் (இரண்டு) மாத்திரையின் மிக்கு ஒலிக்கும், **அவற்று** – அந் நெட்டெழுத்துக்களின் பின், **அவற்று இனம் குறில்** – அதற்கு இனமாகிய குற்றெழுத்துக்கள், **குறி** – (அளபெடுத்தமையை அறிதற்கு வரிவடிவில்) அடையாளமாக வரும், **எ—று.**

குறி – அவ்வளவிற்குக் குறியாய் வந்து நிற்கு மென்றபடி; எனவே, ஒரு மாத்திரைக்கு ஒன்றாக வைத்து எழுதப்படு மென்க.

உயிர் அளபு எடை – உயிரெழுத்து மாத்திரை அதிகப்படுவது. இது, வடமொழியில், 'ப்லுதம்' எனப்படும்.

**உ—ம்.:**

*ஓஒதல் வேண்டும், ஆஅது மென்னுமவர்* – என முதலிலும்,
*உறாஅர்க் குறுநோய், செறாஅஅய் வாழிய"*– என இடையிலும்,

*நல்லபடாஅ, அடாஅ வடுப்பினவர்* – எனக் கடையிலும் வந்தன.

மற்றை நெட்டெழுத்துக்களும் இப்படியே அளபெடுக்கும். '**செறாஅஅய்**' என்பதில், ஆ ஈரளபெடுத்தது; ஆதலின் இருகுறில் குறியாக எழுதப்பட்டது.இவை, **செய்யுளிசை நிறைக்க வந்த அளபெடை.**

செய்யுளோசை குன்றாவிடத்தும் (1.) இனிய ஓசையைத் தருதற் பொருட்டாகவே அளபெடுப்பதும்,( 2.) ஒருசொல் மற்றொரு சொல்லின் இசையை நிறைத்தற் பொருட்டு அளபெடுப்பதும் உண்டு.

உ–ம்.:

1. **கெடுப்பதூஉங் கெட்டார்க்கு எடுப்பதூஉ மெல்லாம்** இவற்றுள் கெடுப்பதும், எடுப்பதும் என நிற்பினும் செய்யுளோசை குன்றாதாயினும், இன்னிசை நிறைத்தற் பொருட்டுக் குறில் நெடிலாய் அளபெடுத்தது; இது, **இன்னிசையளபெடை.** நெடில் அளபெடுத்தாலும் செய்யுளோசை குறையா விடத்தாயின் இன்னிசை யளபெடையே யாம்.

2. **உரனசைஇ யுள்ளம் – வரனசைஇ யின்னும்** இவற்றுள் உரனசை, வரனசை என நிற்பினும் செய்யுளோசை குன்றாதாயினும், விருப்பமெனப் பொருள்படும் நசையென்னும் பெயர்ச்சொல் விரும்பியென வினையெச்சப் பொருள்படும் பொருட்டு வினையெச்சச் சொல்லாதற்கு 'நசைஇ' என அளபெடுத்தது; இது, **சொல்லிசையளபெடை.** சொல் விகாரப்பட்டு அளபெடுக்கும். தழீஇ – (தழுவி) குரீஇ – (குருவி) வளைஇ (வளைந்து) முதலியனவும் இதில் அடக்கப்படும். ஆகவே, உயிரளபெடைகளெல்லாம் அடங்குமாறு அறிக.

நெட்டெழுத்து ஏழும் மொழியின் மூன்றிடத்தும் அளபெடுக்கு மெனவே, உயிரளபெடை இருபத்தொன்றாம்; ஔகாரம் மொழிக்கு நடுவிலும் கடையிலும் வாராமையால் அவ்விரண்டையும் கழிக்க, நின்ற உயிரளபெடை பத்தொன்பது; அப் பத்தொன்பதனோடு இன்னிசை யளபெடை, சொல்லிசையளபெடை என்னும் இரண்டையும் கூட்ட உயிரளபெடை இருபத்தொன்றாதல் காண்க.

## பவானந்தம் பிள்ளை

இ–ள். **இசை கெடின்** – பாட்டில் ஓசை குறையின், **மொழிமுதல் இடை கடை நிலை நெடில்** – மொழிக்கு முதலிலும் நடுவிலும் இறுதியிலும் நின்ற நெட்டெழுத்தேழும், **அளபு எழும்** – அவ்வோசையை நிறைக்கத் **தத்தம்** மாத்திரையின் மிக்கொலிக்கும், **அவற்று இனக் குறில் குறி** – (அப்படி அளபெடுத்தமையை அறிதற்கு அவற்றின் பின்) அதற்கு இனமாகிய குற்றெழுத்துக்கள் வரிவடிவில் அறிகுறியாய் வரும், **எ–று.**

உ---ம்.

*ஓஒதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை*
*யாஅது மென்னு மவர்*

*உறாஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்*
*செறாஅஅய் வாழிய நெஞ்சு.*

*அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தா ணுசுப்பிற்று*
*நல்ல படாஅ பறை*

இவற்றுள், ஓதல் என்பதில் ஓ வென்னும் நெட்டெழுத்து மொழிக்கு முதலிலும்; உறார் என்பதில் ஆ வென்னும் நெட்டெழுத்து இடையிலும்; படா என்பதில் ஆ வென்னு நெட்டெழுத்துக் கடையிலும் அளபெடுத்தவாறு காண்க. செறாய் என்பதில் ஆ வென்னு நெட்டெழுத்து ஈரளபெடுத்து வந்தது.

செய்யுளோசை குன்றாவிடத்தும் இன்னிசை நிறைக்கவும் சொல்லிசை நிறைக்கவும் வரும் அளபெடைகளும் உண்டு. இன்னிசை நிறைக்க வரும் அளபெடையாவது குற்றெழுத்து நெட்டெழுத்தாக நீண்டு இசை நிறைத்தற்பொருட்டு அளபெடுப்பது. சொல்லிசை நிறைக்க வரும் அளபெடையாவது பெயர்ச்சொல் வினையெச்சச் சொல்லின் இசையை நிறைத்தற் பொருட்டு அளபெடுப்பது.

உ-ம்.

*கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே*
*யெடுப்பதூஉம் மெல்லா மழை*

இதனுள், கெடுப்பதும், எடுப்பதும் என நிற்பினுஞ் செய்யுளோசை குன்றாயினும், இன்னிசை நிறைத்தற்பொருட்டுக் குறில் நெடிலாய் அளபெடுத்தமை காண்க.

*உரனசைஇய யுள்ளந் துணையாகச் சென்றார்*
*வரனசைஇ யின்னு முளேன்.*

இதனுள், உரனசை, வரனசை என நிற்பினும் செய்யுளோசை குன்றதாயினும், விருப்பமெனப் பொருள்படும் நசையென்னும் பெயர்ச்சொல்லாதற்கு நசைஇ என அளபெடுத்தமை காண்க.

நெட்டெழுத்தேழும் மொழிக்கு முதல் இடை கடை என்னும் மூன்றிடத்தும் அளபெடுக்குமெனவே, உயிரளபெடை இருபத்தொன்றாதல் பெறப்படும்; ஔகாரம் மொழிக்கு நடுவிலுங் கடையிலும் வாராமையால் அவ்விரண்டுங் கழிக்க, நின்ற உயிரளபெடை பத்தொன்பது, அப்பத்தொன்பதோடு இன்னிசை நிறைக்க வரும் அளபெடை சொல்லிசை நிறைக்க வரும் அளபெடை என்னும் இரண்டுங் கூட்ட, உயிரளபெடை இருபத்தொன்றாதல் காண்க.

## கோ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள். இசை கெடின்** – பாட்டில் ஓசை குறையின், **மொழி முதல் இடை கடை** – (அவ் வோசை குறைந்த) சொல்லுக்கு முதலிலாகிலும் நடுவிலாகிலும் இறுதியிலாகிலும், **நிலை நெடில்** – நின்ற நெட்டெழுத்து ஏழில் ஒன்று, **அளபு எழும்** – (அவ் வோசையை நிறைக்கத்) தன் மாத்திரையில் மிகுந்து ஒலிக்கும்; **அவற்று**– அவற்றின் பின் (அளபெழுந்த எழுத்துக்களின் பின்), **அவற்று இனக்குறில்** – அவ்வெழுத்திற்கு இனமாகிய குற்றெழுத்து, குறி – (அளபெடுத்தமையை அறிதற்கு வரிவடிவில்) அறிகுறியாய் வரும். **எ–று.**

**பொ–ரை.:**

பாட்டில் இசை குறைந்தால், மொழி முதலில், நடுவில், இறுதியில் இந்த நெட்டெழுத்து ஏழும் அவ் வோசையை நிறைக்கத் தத்தம் மாத்திரையில் மிகுந்து ஒலிக்கும்; அப்படி அளபெடுத்தன அறிதற்கு அளபெழுந்த எழுத்துக்களின் பின் அவற்றிற்கு இனமாகிய குற்றெழுத்துக்கள் வரிவடிவில் அறிகுறியாய் வரும்.

**உ–ம்.**

*ஓஒதல் வேண்டுமொளி மாழ்குஞ் செய்வினை*
*ஆஅது மென்னு மவர்.*
*உறாஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்*
*செறாஅஅய் வாழிய நெஞ்சு.*
*அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தா ணுசுப்பிற்கு*
*நல்ல படாஅ பறை.*

என வரும்.ஓதல் என்பதில் ஓ முதலிலும், உறார் என்பதில் ஆ இடையிலும், படா என்பதில் ஆ இறுதியிலும் அளபெடுத்தன. மற்றை நெட்டெழுத்துக்களும் இப்படியே அளபெடுக்கும். செறாய் என்பதில் ஆ ஈர் அளபெடுத்தது; ஆகலின் இரு குறில் குறியாக எழுதப்பட்டது. இவை **செய்யுளிசை நிறைக்க வந்த அளபெடை.**

ஔகாரம் சொல்லுக்கு நடுவிலும், கடையிலும் வாராமையால், அவ் விடங்களில் அது நீங்கலாக நின்று அளபெடுக்கின்ற அளபெடை பத்தொன்பதும்,

*கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே*
*எடுப்பதூஉ மெல்லா மழை."*

என,இன்னிசை நிறைக்கவரும் அளபெடை ஒன்றும்,

*உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார்*
*வரனசைஇ யின்னு முளேன்."*

என, ***சொல்லிசை நிறைக்கவரும் அளபெடை*** ஒன்றும் கூடி, உயிரளபெடை இருபத்தொன்றாய் வருதல் காண்க.

உயிரளபெடை யாவது, உயிரெழுத்து மாத்திரை அதிகப்படுவது.

குறி – அவ் வளவிற்குக் குறியாய் வந்து நிற்கும் என்றபடி; எனவே ஒரு மாத்திரைக்கு ஒன்றாகவும், இரண்டு முதலிய மாத்திரைக்கு இரண்டு முதலியனவாகவும் எழுதப்படும் என்க.

இன்னிசை யளபெடையாவது, செய்யுளோசை குன்றாவிடத்தும் இனிய ஓசையைத் தருதற் பொருட்டாகவே அளபெடுப்பதும்.

**கெடுப்பதூஉங் கெட்டார்க்கு எடுப்பதூஉமெல்லாம்** இவற்றுள் கெடுப்பதும், எடுப்பதும் என நிற்பினும் செய்யுளோசை குன்றாதாயினும், இன்னிசை நிறைத்தற் பொருட்டுக் குறில், நெடிலாய் அளபெடுத்தது என்க. நெடில் அளபெடுத்தாலும் செய்யுளோசை குறையாவிடத்தாயின் இன்னிசை யளபெடையே யாம்.

சொல்லிசை யளபெடையாவது, ஒரு சொல் மற்றொரு சொல்லின் இசையை நிறைத்தற் பொருட்டு அளபெடுப்பது.

**உரனசைஇ யுள்ளம் வரனசைஇ யின்னும்** இவற்றுள் உரனசை, வரனசை என நிற்பினும் செய்யுளோசை குன்றாதாயினும், விருப்ப மெனப் பொருள்படும். நசை என்னும் பெயர்ச்சொல் விரும்பி, என வினையெச்சுப் பொருள்படும் பொருட்டு வினையெச்சச் சொல்லாதற்கு நசைஇ என அளபெடுத்தது. சொல் விகாரப்பட்டு அளபெடுக்கும். தழீஇ – (தழுவி), வளைஇ – (வளைந்து) முதலியனவும் இதில் அடக்கப்படும். ஆகவே உயிரளபெடைகளெல்லாம் அடங்குமாறு அறிக.

நெட்டெழுத்து ஏழும் மொழியின் மூன்றிடத்தும் அளபெடுக்கும். எனவே, உயிரளபெடை இருபத் தொன்றாம்; ஔகாரம், மொழிக்கு நடுவிலும், கடையிலும் வாராமையால், அவ் விரண்டையும் கழிக்க, நின்ற உயிரளபெடை பத்தொன்பது: அப்பத் தொன்பதனோடு இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை என்னும் இரண்டையும் கூட்ட உயிரளபெடை இருபத்தொன்றாதல் காண்க.

## கா. நமச்சிவாய முதலியார்

**இசைகெடின்** – (பாட்டில்) ஓசை குறையின், **மொழி** – (அவ்வோசை குறைந்த) சொல்லுக்கு, **முதல் இடை கடை** – முதலிலாகிலும் இடையிலாகிலும் கடையிலாகிலும், **நிலை** – நின்ற, **நெடில்** – நெட்டெழுத்து ஏழிலொன்று, **அளபெழும்** – அவ்வோசையைநிறைக்கத் தன் மாத்திரையின்) மிகுந்தொலிக்கும்; **அவற்று** – அவற்றின்பின், **அவற்று இனக்குறில்** – அவற்றின் இனமாகிய குற்றெழுத்து, குறி– (அளபெடுத்தமையை அறிதற்கு வரிவடிவில்) அறிகுறியாய் வரும்.

**உயிரளபெடை** – செய்யுளிசை யளபெடை, இன்னிசை யளபெடை, சொல்லிசை யளபெடை என மூன்று வகைப்படும்.

**செய்யுளிசை யளபெடை**

*'ஓஒதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை*

*ஆஅது மென்னு மவர்'*

*'உறாஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச் செறாஅஅய் வாழிய நெஞ்சு'*

*'அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தா ணுசுப்பிற்கு நல்ல படாஅ பறை'*

என வரும். 'ஓதல்' என்பதில் ஓ முதலிலும், 'உறார்' என்பதில் ஆ இடையிலும் 'படா' என்பதில் ஆ இறுதியிலும் அளபெடுத்தன. நெட்டெழுத்துக்களில் ஔகாரம் முதலில் மட்டும் அளபெடுக்குமாதலால், ஔகார அளபெடை ஒன்றே யாயிற்று. ஏனைய ஆறு நெடில்களும் முதல் இடை கடை என்னும் மூவிடத்தும் அளபெடுத்தலால் பதினெட்டாயிற்று. ஆகவே, செய்யுளிசை யளபெடை பத்தொன்பது ஆதல் அறிக. செறாய் என்பதில் ஆகாரம் ஈரளபெடுத்து வந்தது.

**இன்னிசை யளபெடை**

இன்னிசை யளபெடையாவது, குற்றெழுத்து நெட்டெழுத்தாக நீண்டு அளபெடுத்து இன்னிசை நிறைத்து வருவதாம்.

**உதாரணம்**

*'கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே எடுப்பதூஉ மெல்லா மழை'*

இதில், கெடுப்பதும், எடுப்பதும் என அளபெடாது நிற்பினும் செய்யுளிலக்கணம் கெடாது; ஆயினும், இன்னிசை நிறைத்தற் பொருட்டுக் குறில் நெடிலாய், கெடுப்பதூஉம், எடுப்பதூஉம் என அளபெடுத்தமை அறிக.

**சொல்லிசை யளபெடை**

சொல்லிசை யளபெடையாவது, பெயர்ச்சொல் வினையெச்சத் தன்மை அடைதற்பொருட்டு அளபெடுப்பது.

**உதாரணம்**

*'உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார் வரனசைஇ யின்னு முளேன்'*

இதில், உரனசை, வரனசை என அளபெடாது நிற்பினும் செய்யுளிலக்கணம் கெடாது; ஆயினும், விருப்பம் எனப் பொருள்படும். நசை யென்னும் பெயர்ச்சொல் விரும்பி என வினையெச்சப் பொருள்படும் பொருட்டு, நசைஇ என அளபெடுத்தமை அறிக.

செய்யுளிசை யளபெடை பத்தொன்பதோடும் இன்னிசை யளபெடை, சொல்லிசை யளபெடை இரண்டும் கூடி, உயிரளபெடை இருபத்தொன்றாதல் உணர்க.

இனி ஆடூஉ, மகடூஉ, குழூஉ, குரீஇ என அளபெடுத்தே நிற்கும் தனிமொழிகளை ***இயற்கை யளபெடை*** யென்றும், இசை நிறைத்தற் பொருட்டுச் செய்யுளில் அளபெடுத்து வரும் மேற்கூறிய அளபெடைகளை யெல்லாம் ***செயற்கை யளபெடை*** யென்றும் கூறுவர்.

## மோசகூ பொன்னையா

இசைவு அல்லது ஒலி இணக்கம் கெடுமாயின், சொல்லின் முதல், இடை, கடைகளில் நிற்கும் நெட்டெழுத்துக்களின் ஓசை மிகுந்தொலிக்கும். அவ்வவற்றின் இனமான குறில்கள் இசை நிறைவுகளாக அமைந்து நிற்கும், எ—று.

இசை முதனிலைத் தொழிற்பெயர். ஓசையும் இனிமையும் பொருளும் காரணமாக வழக்கிலும் செய்யுளிலும் நிலவும் இசைவு அல்லது இணக்கம் இசை எனப்பட்டது. இசை நீட்டி எழுப்பப்பட்டு மிகுந்தொலிக்கும் என்பார் அளபெழும் என்றார். இசைநிறைவைக் குறி என்றார்.

தொல்காப்பியர்,

***'இகர உகரம் இசைநிறை வாகும்'***

என்ற விடத்து இசைநிறைவு என்று குறிப்பதையே ஈண்டுக் குறி என்றார் என்பது. குற்றுயிர் அளபின் ஈறாம் என இவ்வாசிரியர் கீழ்க் கூறிச் சென்றதனால் அது புலனாகும்.

தொல்காப்பியர் நெட்டெழுத்து ஏழும் ஈரளபு இசைக்கும் எனக் கூறி, ஒரெழுத்தின் ஒலியளவிற்கு மேல் வரம்பு விதிப்பாராய், மூவளபு இசைத்தல் ஒரெழுத்தின்றே எனக் கூறினார். அதன் பின்னர், யாதானும் காரணம் பற்றி ஈரளபு அளவுள்ள நெடிலின் ஒலியினும் நீண்ட ஒலி இசை நிறைவுக்கு இன்றியமையாத ஒரு நிலை வரின், அவண் நின்ற நெடிலின் ஒலியைக் கூட்டி எழுப்புக என்பாராய்,

***நீட்டம் வேண்டின் அவ்வள புடைய***

***கூட்டி எழூஉதல் என்மனார் புலவர்***

என்று விதித்தார். எழுப்பப்படும் ஒலிக்கு இசைநிறைவாக ஒத்த குற்றெழுத்து நிற்கும் என்பதே அதற்கு அவர் காட்டும் வரிவடிவு. இவ்வாசிரியரும் அவர் வழிநின்று நூல் செய்ததனால், அதனை ஏற்று அவ்விசை நிறைவுகளாக வரும் குற்றெழுத்துக்களைக் ***'குற்றுயிர்'*** என்று குறிப்பிட்டும், அவை அளபெடை மொழியின் ஈற்றில் நின்றால் அவற்றை மொழி ***இறுதிநிலை எழுத்துக்கள்*** எனக் கொள்ளுதல் பொருந்தும் எனக் கூறியும் அமைந்தார்.

இசைவு அல்லது இணக்கம் கெடுமிடத்து அமையும் அளபெடை பயனோக்கிக் கூட்டி எழுப்பப்படுவதாகலின் செயற்கையளபெடை யெனப்படும். ஒற்றளபெடைக்கும் இஃது ஒக்கும். இசை, விளி,

பண்டமாற்று,நாவல், குறிப்பிசை, ஆகியவற்றின்கண் அமைவது, இயற்கையளபெடை எனப்படும் எனக் கொள்க.

எ–டு.

**ஓஒதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை**
**யாஅது மென்னு மவர்.**

**உறாஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்**
**செறாஅஅய் வாழிய நெஞ்சு.**

**அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தா**
**ணுசுப்பிற்கு**
**நல்ல படாஅ பறை.**

செய்யுளின் ஓசை இணங்காமல் நின்றவிடத்து நெடில்கள் மொழி முதல் இடை கடைகளில் அளபெடுத்தன. இவற்றைச் செய்யுள் இசைநிறை அளபெடை என்பர்.

**கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற்**
**றாங்கே**
**யெடுப்பதூஉ மெல்லா மழை,**

என்ற குறளில், 'தூஉ' என்பது இனிமை குன்றி இணங்காமல் நின்றவிடத்துக் குறில் நெடிலாகி அளபெடுத்தது என்று கூறி அதனை இன்னிசை அளபெடை எனக் கொண்டும்,

**உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார் வ ர ன சை இ இன்னு முளேன்,**

என்ற குறளில் 'ஐஇ' என்பது சொற்பொருள் இணங்காமல் நின்றவிடத்துப் பெயர்ப்பொருளை வினையெச்சப் பொருளாக்கி அளபெடுத்தது என்றும் கூறி அதனைச் சொல்லிசை அளபெடை எனக் கொண்டும் மரபாகக் உரைகூறப்பட்டு வருகிறது.

அவ்வாறே எழூஉ, மரூஉ, பொரூஉ, ஒரூஉ, ஆடூஉ, மகடூஉ, குரீஇ என்பவற்றை அளபெடைகள் என்பாரும் உளர். அவை உடம்படுமெய் பெற்றுப் புணரின் எழுவு, மருவு, பொருவு, ஒருவு, ஆடுவு, மகடுவு, குரியி என இவ்வாறு முடியும். உடம்படுமெய் கொள்ளுதல் தொல்காப்பியர் காலத்துக்கு அண்மைப்பட்ட முற்காலத்தில் வழக்கிற் புகுந்தது என்பது,

**எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே உ ட ன் ப டு மெய்யின் உருபுகொளல் வரையார்,**

என அவர் அதனை ஏற்று மொழிதலாக நூற்பாவை அமைத்துள்ளதால் புலனாகும். அவர் காலத்திற்குச் சேய்மைப்பட்ட பழங்காலத்தில் நிலைமொழியின் ஈற்றில் குற்றுயிர் நின்று விகுதியாகவோ அன்றி வருமொழி முதலெழுத்தாகவோ வேறொரு குற்றுயிரைப் பெற்றுப் புணரின், நிலைமொழி ஈற்றுக் குற்றுயிர் ஒரு தனிப் பொருளசையின்

ஈற்றில் தான் நிற்பதைக் காட்டி வருமொழி முதற் குற்றுயிரின் நெடிலாக நீண்டு நிற்க, வரும் உயிர் இயல்பாகப் புணர்ந்து நிற்கும் மரபு இருந்தது என்பதை நமக்கு அறிவுறுத்தி நிற்பவையே ,

**எழு + உ = எழூஉ;**

**மரு + உ = மரூஉ;**

**பொரு + உ = பொரூஉ;**

**ஒரு + உ = ஒரூஉ;**

**ஆடு + உ = ஆடூஉ;**

**மகடு + உ = மகடூஉ;**

**குரு + இ = குரீஇ;**

**தழு + இ = தழீஇ**

எனவிவ்வாறு புணர்ந்து நிற்பவை எனக் கொளல் வேண்டும். இவற்றையோ, பலாஅக்கோடு, யாஅக்கோடு, மாஅங்கோடு, பழூஉப்பல், பனாஅட்டு என விவ்வாறு உயிர் மிக வரு புணர்ச்சியாக அமைவனவற்றை அளபெடை எனல் பொருந்தாமை அறிக.

தொல்காப்பியர்,

**குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்**
**நெட்டெழுத்திம்பர் ஒத்தகுற் றெழுத்தே,**

என நூற்பா வோதி, குன்றிசை மொழியின் இசை ஒலியாம் குறில், நெடிலின் இசைநிறை யாதற்கு விதியமைத்தாராக, அந்நூற்பா அளபெடையின் இலக்கணம் ஓதிற்றெனப் பிறழ உணர்ந்த உரையாசிரியர்கள் கொள்கையால் நேர்ந்த பிழை வழக்கே அதுவென்பது ஈண்டு மனங்கொளற் குரியது.

உயிர் நெட்டெழுத்தேழும் அளபெடுக்கு மிடத்துத் தனிநிலை, முதனிலை, இடைநிலை,இறுதிநிலை யென்னும் நான்கனோடும் உறழ இருபத்தெட்டாம்.

நெட்டெழுத்து அளபெடுத்தால் நெட்டெழுத் தென்றே கொள்ளப்படும் ஆதலின், அஃது அந்தந்த நெட்டெழுத்தான ஒலியனின் மாற்றொலியே யாம். ***கெடுப்பதூஉ, அசைஇ, எழூஉ, மரூஉ, பலாஅசு, வடாஅது*** என இவ்வாறு நெடிலும் குறிலுமாகக் காணப்படும் அமைப்பெல்லாம் பொருளசை ஒலிய மாறுபாடுகள். அவை பற்றி உயிரீற்றுப் புணரியலில் கூறப்படும். ஈண்டுக் குறில் நெடிலாக ஒலித்துக் குறிலின் பொருட் குறிப்புடன் ஏனை ஒலிகளோடு எதிர்நிலை கொள்ளின் அது குறிலின் மாற்றொலி என மட்டும் அறிக.

# ஒற்றளபெடை

91. ஙஞண நமன வயலள வாய்தம்
அளபாங் குறிலிணை குறிற்கீ ழிடைகடை
மிகலே யவற்றின் குறியாம் வேறே.

ங ஞ ண ந ம ன வ ய ல ள ஆய்தம்
அளபு ஆம் குறில் இணை குறில் கீழ் இடை கடை
மிகலே அவற்றின் குறி ஆம் வேறே.

ṅa ña ṇa na ma ṉa va ya la ḻa āyṭam
aḻapu ām kuṛil iṇai kuṛil kīḷ itai katai
mikalē avaṟṟiṉ kuṛi ām vēṟē.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

**Poetical prolongation of the sound of consonants**

(Similarly), the consonant n, ñ, ñ, m, n, v, y, l, i and the Guttural, increase their quantity after single or double short vowels, and in the middle or end of words,—the doubling (of the letters themselves) being the sign (of their prolongation).

## ஒப்புமைப் பகுதி

ஒற்ற ளபெடுப்பினும் அற்றென மொழிப

(தொல். எழு. : 326)

வன்மையொடு ரஃகான் ழஃகான் ஒழிந்தாங்கு
அல்மெய் யாய்தமோ டளபெழு மொரோவழி

(அவிநயம்)

ஒற்றளவு எழும் வேறு உற்று குறில்கீழ்,
இயைந்து ரழஒழி இடைமெலி ஆய்தம்

(தொன். : 18 : 2 – 3)

.... ஆய்தம் வயலள ஙஞண நமன குறிற்கீழாய்
இடை கடை யொற்றெற்றிடும் ஒற்றளபே.

( சுாமி. : 19 : 4)

## மயிலை நாதர்

எ – ன், ஒற்றளபெடைத் தோற்றம் உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்.: இச் சொல்லப்பட்ட பத்தொற்றும் ஆய்தமும் குறிலிணைக் கீழும்

குறிற்கீழும் மொழி யிடையினும் ஈற்றினும் நின்று அளபெடுக்கும்; அவை இரட்டித்து நிற்றல் அவற்றிக்கு அளவு குறியாம், **எ – று.**

ஆய்தம் இடையிலன்றித் தோன்றாமையின், இரண்டிடத்தும் ஈற்றில் வந்து அளபெழா தெனக் கொள்க. இஃது, **'உய்த்துணர வைப்பு'** என்னும் தந்திரவுத்தி.

**வ – று.:**

அரங்ங்கம், முரஞ்ஞ்சு, முரண்ண்டு, பருந்ந்து, அரும்ம்பு, முரன்ன்று, குரவ்வ்வை, அரய்ய்யர், குரல்ல்கள், திரள்ள்கள், வரஃஃகு எனவும்; மங்ங்கலம், மஞ்ஞ்சு; மண்ண்ணு, பந்ந்து, அம்ம்பு, மின்ன்னு, தெவ்வ்வர், வெய்ய்யர், செல்ல்க, கொள்ள்க, எஃஃகு எனவும், ஈரிடத்தும் இடைநிலை யளபெழுந்தன.

**'அரண்ண்கொண்ட வடுதோளினர்'**

**'வலம்ம்பட்ட [1]வாய்வாளர்'**

**'கலன்ன்கொண்ட [2]கன்மார்பர்'**

**'பகல்ல்லன்ன பண்புரைஇ'**

**'திரள்ள்சேனை செலநீக்கி'**

எனவும்,

**'கண்ண்டண்ண்ணெனக் கண்டுங்கேட்டும்'**

**'தம்ம்படையைத் தாநோக்கி',**

**'மின்ன்னன்ன வேல்விளக்கி',**

**'இவ்வ்வுலகை யினிதாண்டு[3],**

**'செய்ய் தொழிலிற் செலநோக்கி',**

***'கல்ல்லன்ன வன்னெஞ்சின்',***

***கொள்ள்ளென்று கொடுக்கலராய்',***

எனவும், ஈரிடத்தும் இறுதிநிலை அளபெழுந்தன. ஈண்டுக் காட்டாதொழிந்தன அருகியன்றி வாராவெனக்கொள்க.

**இசைகெடின்** என்று உயிரளபெடைக்கு உரைத்ததனை ஈண்டும் வருவித்துக் கொள்க. 'வேறு' என்றதனானே, குரவை, அரயர் என்புழி ஒற்றுக்களும், வரகு என்புழி ஆய்தமும், முன் இல்லையே யெனினும், இசைகெடின் அவற்றையு ண்டாக்கியும், அவற்றானும் நிரம்பாவிடின் அவற்றை அளபெடுப்பித்தும் ஓசை நிறைக்கப்படும்; என்னை?

*"செய்யுட்க ளோசை சிதையுங்கா லீரளபு*
*மையப்பா டின்றி யணையுமா – மைதீரொற்*
*றின்றியுஞ் செய்யுட் கெடினொற்றை*
*யுண்டாக்குகுன்றுமே லொற்றளபுங் கொள்"*

என மாபுராணமுடையாரும் சொன்னாராகலின்.

*அம்பொ ரைந்துடைய்ய காமனைய னென்ன வந்தண*
*னம்புநீரரல்லர்நன்குரங்குநீர யினுந்தங்கு ரவ்வர்*

*தாங்கொ டுப்பி னெஞ்சு நேர்ந்து தாழ்வர்தாம்*
*பொங்க ரவ்வவல்கு லாரெ னப்பு கன்று சொல்லினான்"*

(சீவக. 1997)

இதனுள் ஒற்றில்வழி ஒற்று வந்தவாறு கண்டுகொள்க. பிறவுமன்ன.

## சங்கர நமச்சிவாயர்

**எ – னின்,** ஒற்றளபெடை வருமாறு **உணர் – ற்று.**

**இ–ள்.:** செய்யுட்கண் இசை குன்றின் குறிலிணைக்கீழும் குறிற்கீழுமாய் மொழியிடையினும் ஈற்றினும் நின்ற இப்பத்து ஒற்றும், ஆய்தமும் அவ்வோசை நிறைக்கத் தம் மாத்திரையின் மிக்கொலிக்கும்; இவ்வாறு அளபெடுத்தன அறிதற்கு, அவற்றின்பின் அவ் வெழுத்துக்களே வரிவடிவின்கண் வேறறிகுறியாய் வரும், **எ – று.**

'ஒருமொழி யொழிதன் இனங்கொளற் குரித்தே' என்பதனான் மேல் 'இசைகெடின்' என்பதனை இவ்வளபெடைக்கும் வருவித்துக் கொள்க. மாத்திரை நிறைத்தற்கன்றி அறிகுறி மாத்திரையாய் வரும் என்று கோடற்கு வேறே என்றார்.

**உ–ம்.:**

*"இலங்ங்கு வெண்பிறைசூ டீசனடி யார்க்குக் கலங்ங்கு நெஞ்சமிலை காண்"*

எனவும்,

*"எங்ங் கிறைவனுளன் என்பாய் மனனேயான்*
*எங்ங் கெனத்திரிவா ரின்"*

எனவும்,

*"கலங்ங்கொண்ட கவின்மார்பர்"*

*"மடங்ங் கலந்த மனனேகளத்து*
*விடங்ங் கலந்தானை வேண்டு"*

எனவும்,

*"அங்ங் கனிந்த அருளிடத்தார்க் கன்புசெய்து நங்ங் களங்கறுப்பா நாம்"*

எனவும், ஙகரம் குறிலிணைக் கீழும் குறிற்கீழும் மொழிக்கு இடையினும் கடையினும் முறையே அளபெழுந்தது.

*"கண்ண் கருவிளை கார்முல்லை கூரெயிறு பொன்ன் பொறிசுணங்கு போழ்வாய் இலவம்பூ மின்ன் னுழைமருங்குல் மேதகு சாயலாள் என்ன் பிறமகளா மாறு"*

என ணகரமும் னகரமும், குறிற்கீழ் மொழியீற்றின் அளபெழுந்தன.

*"எஃஃ கிலங்கிய கையரா யின்னுயிர்*
*வெஃஃகு வார்க்கில்லை வீடு"*

என ஆய்தம், குறிற்கீழ் மொழிக்கு இடையில் அளபெழுந்தது. பிறவும் அன்ன. ஆய்தம் ஒற்றொடும் ஒருபுடை யொத்து வருதலின் ஈண்டுத் தந்துரைத்தார்.

ஙகரம் விதியீறாய் வருதலின் அதனை விலக்காது, ஆய்தம் ஒருமொழிக்கண்ணும் தொடர்மொழிக்கண்ணும் விதித்த முதலெழுத்துக்கள் இருமருங்கும் நின்று எழுப்ப இருசிறகெழுப்ப எழுமுடலதுபோல் இடையெழுந்து ஒலிப்பதன்றி ஒருவாற்றானும் ஈறாய் வருந் தன்மையதன்று ஆகலின், அஃகடிய முதலிய வற்றின்கண் திரிந்த ஆய்தம் அஃகான் முதலிய வற்றின்கண் தோன்றிய ஆய்தம் போலத் தொடர்மொழிக்கண் இடைநிலையாய தன்றி விதியீறன்று என்று அதனுண்மை துணிந்து, அதனை இறுதிக்கண் விலக்கி, ஒற்றளபெடை நாற்பத்திரண்டு என்று மேலுரைத்தவாறு இங்ஙனம் வருதல் காண்க.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ—ம்,** ஒற்றளபெடைத் தோற்றம் கூறியது.

**இ—ள்.: ஙஞண நமன வயலள ஆய்தம்** – ஙஞண நமன வயலள என்னும் இப் பத்தொற்றும் ஆய்தமும், **அளபாம்** – தத்தம் அரை மாத்திரையின் நீண்டு இசைக்கப்படும், **குறிலிணை குறிற்கீழ்** – குறிலிணைக் கீழும், குறிக்கீழும், **இடை கடை** – மொழிக்கு இடையினும் ஈற்றினும், **மிகலே அவற்றின் குறியாம்** – அவ்வவொற்றுக்கள் தாமே இரட்டித்து நிற்றல் அவற்றுக்கு அளவு குறியாம், **வேறே** – இவ்விதியன்றி வேறே விதியானும் அளபெடுக்கும், **எ—று.**

**உ—ம்.:**

அரங்ங்கம் முரஞ்ஞ்சு, முரண்ண்டு, முரந்ந்து, அரும்ம்பு, முரன்ன்று, குரவ்வ்வை, அரய்ய்யர், குரல்ல்கள், திரள்ள்கள், வரஃஃகு எனக் குறிலிணைக்கீழ் மொழிக்கு இடையிலே நின்று அளபெடுத்தது. மங்ங்கலம், மஞ்ஞ்சு, மண்ண்ணு, பந்ந்து, அம்ம்பு, மின்ன்னு, தெவ்வ்வர், வெய்ய்யர், செல்ல்க, கொள்ள்க, எஃஃகு எனக் குறிற் கீழ் மொழிக்கிடையினின்று அளபெழுந்தது. கலங்ங்கொண்ட, கலஞ்ஞ் சார்ந்த, அரண்ண் கொண்ட, அரந்ந் தாழ்ந்த, அரம்ம்பட்ட, பலன்ன்கொண்ட, தகவ்வ்நன், துணைய்ய்நன், பகல்ல்நன், திரள்ள்சேனை எனக் குறிலிணைக்கீழ் மொழிக்கு ஈற்றினின்று அளபெழுந்தது. கங்ங்கண்டான், கஞ்ஞ்சார்ந்தான், மண்ண் கொண்டான், கந்ந்தரித்தான், கம்ம்பத்தான், பொன்ன்கொண் டான், தெவ்வ்யானை, மெய்ய்யழகு, சொல்ல்லரிது, கள்ள் வலிமை எனக் குறிற்கு ஈற்றினின்று அளபெழுந்தன. ஆய்தம் குறிற்கீழ் ஈற்றினும் குறிலிணைக் கீழ் ஈற்றினும் வாரா என்க. ஆக ஒற்றளபெடை நாற்பத்திரண்டு.

## விசாகப் பெருமாளையர்

**இது,** ஒற்றளபெடை வருமா றுணர்த்துகின்றது,

**இ–ள்.:** (இசைகெடின்) – பாட்டிலோசைக் குறையின், **குறிலிணைக் (கீழ்)** – குறிலிணையின் கீழாவது, **குறிற்கீழ்**–குறிற்கீழாவது, **இடை**–சொல்லுக்கு நடுவிலாகிலும், **கடை**–சொல்லுக்குக் கடையிலாகிலும், **ஙஞணநமனவயலள** – ஙம் முதலிய விப்பத்துளொன்றேனும், **ஆய்தம்** – ஆய்தமேனும், **அளபுமிகலாம்** – அவ்வோசையை நிறைக்கத் தன்மாத்திரையின் மிகுந்தொலிக்கும், **அவற்றின் வேறுகுறியாம்** – அப்படி யளபெடுத்தமையை யறிதற்கு அவற்றின்பின் அவ்வெழுத்துகளே வரிவடிவில் அறிகுறியாய் வரும், **எ – று.**

முன் சூத்திரத்தில் "இசைகெடின்" என்றது இதற்குங் கூட்டப்பட்டது.

**உ–ம்.:**

***"இலங்ங்கு வெண்பிறைசூ டீசன டியார்க்குக் கலங்ங்கு நெஞ்சமிலை காண்"***

எனவும்,

***"எங்ங் கிறைவனுள னென்பாய்***
***மனனேயா னெங்ங் கெனத்திரிவரின்"***

எனவும்,

***"மடங்ங் கலந்த மனனே களத்து விடங்ங் கலந்தானை வேண்டு"***

எனவும்,

***"அங்ங் கனிந்த வருளிடத்தார்க் கன்புசெய்து நங்ங் களங்கறுப்பா நாம்"***

எனவும் வரும், 'இலங்கு' குறிலிணைக்கீ ழிடையிலும், 'எங்கு' குறிற் கீழிடையிலும், 'மடங்' குறிலிணைக்கீழ்க் கடையிலும், 'அங்' குறிற் கீழ்க்கடையிலும் ஙகரம் அளபெடுத்தது,

***"எஃஃ கிலங்கிய கையரா யின்னுயிர்***
***வெஃஃகு வார்க்கில்லை வீடு"***

ஆய்தமளபெடுத்தது, மற்றமெய்களுமிப்படியே யளபெடுக்கும், (ஙகரம்போலவிதி யீறாகவும் வாராமையால் ஆய்தத்தை இறுதியில் விலக்கி ஒற்றளபெடை நாற்பத்திரண்டாதல் காண்க.)

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

*ஒற்றளபெடையாவன யாவை?*

ங ஞ ண ந ம ன வ ய ல ள வாய்தம்
அளபாங் குறிலிணை குறிற்கீ ழிடைகடை
மிகலே யவற்றின் குறியாம் வேறே.

(ங ஞ ண ந ம ன வ ய ல ள ஆய்தம் அளபு ஆம் குறில்இணை குறிற்கீழ் இடைகடை; மிகலே அவற்றின் குறி ஆம் வேறே)

**இ—ள்.:** (இசைகெடின்) **குறில் இணைகுறிற்கீழ் இடைகடை ங ஞ ண ந ம ன வ ய ல ள ஆய்தம் அளபு ஆம்** —பாட்டில் ஓசைகுறையின், குறிலிணையின் கீழுங் குறிலின் கீழும் மொழிக்கு நடுவிலுங் கடையிலும் நின்ற ஙம்முதலிய இப்பத்தும் ஆய்தமுமாகிய பதினோரெழுத்தும் அவ்வோசையை நிறைக்கத் தத்தம் மாத்திரையின் மிக்கொலிக்கும், **அவற்றின் குறிவேறு மிகல் ஆம்** – அப்படி அளபெடுத்தமையை அறிதற்கு அவற்றின்பின் அவ்வெழுத்துக்களே வரிவிடிவில் வேறறிகுறியாய் வரும், **எ—று.**

**உ—ம்.:**

இலங்ங்கு வெண்பிறைசூ டீசனடி யார்க்குக்
கலங்ங்கு நெஞ்சமிலை காண்"

எனவும்,

"எங்ங் கிறைவனுள னென்பாய் மனனேயா
னெங்க் கெனத்திரிவா ரின்"

எனவும்,

"மடங் கலந்த மனனே களத்து
விடங்ங் கலந்தானை வேண்டும்"

எனவும்,

அங்ங் கனிந்த வருளிடத்தார்க் கன்புசெய்து
நங்ங் களங்கறுப்பா நாம்

எனவும் வரும். இவற்றுள், இலங்கு என்பதிற் குறிலிணைக் கீழிடையிலும், எங்கு என்பதிற் குறிற்கீழிடையிலும் ஙகரம் அளபெடுத்தது. மடம் என்பதிற் குறிலிணைக் கீழ்க்கடையிலும் நம் என்பதிற் குறிற்கீழ்க்கடையிலும் மகரந்திரிந்த ஙகரம் அளபெடுத்தது.

*விலஃஃகி வீங்கிரு ளோட்டுமே மாத*
*ரிலஃஃகு முத்தி னினம்*
*எஃஃகிலங்கிய கையரா யின்னுயிர்*
*வெஃஃகு வார்க்கில்லை வீடு*

இவற்றுள் விலஃகி என்பதிற் குறிலிணைக் கீழிடையிலும், எஃகு என்பதிற் குறிற்கீழிடையிலும் ஆய்தம் அளபெடுத்தது. "முரஞ்ஞ்சு" "முரண்ண்டு", "பருந்ந்து", "அரும்ம்பு", "முரன்ன்று", "குரவ்வ்வை" "அரய்ய்யர்", "கல்ல்லன்ன" "கொள்ள்ளென்று" எனவும் வரும்.

## முகவை இராமாநுச கவிராயர்

இது, ஒற்றளபெடை வருமா றுணர்த்துகின்றது.

**இ—ள்.: ஙஞணநமனவயலள ஆய்தம்** – (செய்யுளோசை குன்றுமாயின்)

இப்பதினோரொற்றும், **குறிலிணைகுறிற்கீழ்** – இரண்டு குற்றெழுத்தின் பின்னும் ஒருகுற்றெழுத்தின் பின்னும், **இடைகடை** – மொழி யிடையிலுங் கடையிலும், **அளபாம்** – தத்தம் மாத்திரையின் மேற்பட்டு ஒலிக்கும், **வேறேமிகல்** – மற்றும் அவ்வொற்றுக்களே (வரிவடிவில்) அவற்றின் பின் மிக்கிருப்பது, **அவற்றின்குறியாம்**–அவற்றிற்கு அறிகுறியாம், **எ–று.** மேலிசைகெடினென்றதை இதற்குங் கூட்டுக.

**உதாரணம்.:**

அரங்ங்கம், முரஞ்ஞ்சு, முரண்ண்டு, பருந்ந்து, அரும்ம்பு, முரன்ன்று, குரல்ல்கள், திரள்ள்கள், விலஃஃகி எனவும்,

***"இலங்ங்கு வெண்பிறைசூ டீச னடியார்க்குக் கலங்ங்கு நெஞ்சமிலைக் காண்"***

எனவும், இவை குறிலிணைக்கீழ் மொழியிடையில் அளபெடுத்தன. மங்ங்கலம், மஞ்ஞ்சு, மண்ண்ணு, பந்ந்து, அம்ம்பு, மின்ன்னு, தெவ்வ்வர், வெய்ய்யர், செல்ல்க, கொள்ள்க, எஃஃகு எனவும்,

***"எங்ங் கிறைவனுள னென்பாய் மனனேயா னெங்ங் கெனத்திரிவா ரின்"***

எனவும், இவை குறிற்கீழ் மொழியிடையில் அளபெடுத்தன. பரண்ண், மரம்ம், நலன்ன், குரல்ல், திரள்ள் எனவும்,

*அரண்ண் கொண்ட வடுதோளினர்*
*வலம்ம் பட்ட வாள்வயவர்*
*பகல்ல் லன்ன பண்புரையீர்*
*'திரள்ள்சேனை செலநீக்கி'*

எனவும், இவை குறிலிணைக்கீழ் மொழியீற்றில் அளபெடுத்தன. மண்ண், அம்ம், பொன்ன், கல்ல், கொள்ள் எனவும்,

**'கண்ண் டண்ணெனக் கண்டுங் கேட்டும்'**
**'தம்ம்படையைத் தானோக்கி**
**மின்ன்னன்ன வேல்விளக்கி**
**யிவ்வ்வுலகை யினிதாண்டு**
**செய்ய்தொழிற் செயநோக்கிக்**
**கல்ல்லன்ன வன்ன்னெஞ்சிற்**
**கொள்ள்ளென்று கொடுக்கலராய்'**

எனவும், இவை குறிற்கீழ் மொழியீற்றில் அளபெடுத்தன.

ஆய்தத்திற்கு ஒற்றாந் தன்மையுமுளதாதலால் இங்கே ஒற்றளபெடையொடு கூட்டி யுரைத்தார். ஆய்தங் குறிலிணைக் கீழுங் குறிற்கீழும் மொழியிறுதியில் வாராமையால் அதனை அவ் விரண்டிடத்தும் விலக்கி ஒற்றளபெடை நாற்பத்திரண்டாய் மேற்கூறியவாறு வருதல் காண்க. உதாரணங் காட்டா தொழிந்தன வந்தவிடத்திற் கண்டுகொள்க. இச்சூத்திரத்தை, பதினோரொற்றும் அளபாம் எனவும், மிகல் குறி எனவும் இருமுடிபாக முடித்துக் கொள்க.

# கா. கோபாலாசாரி -தி.கோ.ரங்காசாரி

**உரை :- (இசைகெடின்)** – பாட்டில் ஓசைகுறையின், **குறிலிணை** (கீழ்), – இரண்டுகுற்றெழுத்தின் பின்னும், **குறில்கீழ்** – ஒரு குற்றெழுத்தின் பின்னும், (மொழி) **இடைகடை** – மொழிக்குநடுவிலும் கடையிலும் நின்ற, **ஙஞணநமன வயலள ஆய்தம்** – ங முதலிய இப்பத்துமெய்யும் ஆய்தமும் ஆகிய பதினோரெழுத்தும், **அளபு ஆம்** – (அவ்வோசையை நிறைக்கத் தம்மாத்திரையின்) மிகுந்தொலிக்கும்; **அவற்றின்குறி வேறு மிகல் ஆம்** – (அப்படி அளபெடுத்தமையை யறிதற்கு) அவற்றின்பின் அவ்வெழுத்தே (வரிவடியில்) அறிகுறியாய்வரும்.

**குறிப்பு :-**

முன்சூத்திரத்தில் "இசைகெடின்" "மொழி" என்பன இதற்குங் கூட்டப்பட்டன.

உ–ம் :

"இலங்ங்கு வெண்பிறை" எனக் குறிலிணைக்கீழிடையிலும்,

"எங்ங்கிறைவன்" எனக் குறிற்கீழிடையிலும், "மடங்ங் கலந்த" எனக் குறிலிணைக்கீழ்க்கடையிலும்,

"அங்ங்கனிந்த" எனக் குறிற்கீழிடையிலும், ஙகரம் அளபெடுத்தது. மற்றையமெய்களும் இவ்வாறே அளபெடுக்கும். ஙகரம் கடையில் விதியீறாகவே வருதலன்றி இயல்பீறாக வாராது என்க.

"விலஃஃகி", "எஃஃகிலங்கிய" என ஆய்தம் குறிலிணைக் கீழிடையிலும் குறிற்கீழிடையிலும் அளபெடுத்தது.

பதினோரொற்றும் நான்கிடத்தும் அளபெடுக்கும் எனவே, ஒற்றளபெடை நாற்பத்துநான்காதல் பெறப்படும். ஆய்தம் ஙகரம் போலவிதியீறாகவும் வாராமையால் அதற்குக் குறிலிணைக் கீழ்க்கடை, குறிற்கீழ்க்கடை என்னு மிரண்டிடத்தைக் கழிக்க ஒற்றளபெடை நாற்பத்திரண்டாதல் காண்க. ஆய்தம் மெய்யோடு மாத்திரை முதலியவற்றில் ஒத்திருத்தல் பற்றி அதனையுங் இங்குக் கூட்டி யுரைத்தார்.

ஆய்தம் அவ் + கடிய = அஃகடிய என ஈறாகுமெனக் கொள்ளக் கிடப்பினும், "குறியதன் முன்னராய்தப் புள்ளி உயிரொடுபுணர்ந்த வல்லாறன் மிசைத்தே" என அதற்கு இடம்வகுத் தோதினமையின் இறுதி யில்வாரா தென்றுரைத்த தென்க. ஙகரமும் தனித்தீறாகவிடினும், அதற்கு அங்ஙனம் இடம்வகுத்துக் கூறாமையின் ஏனைய எழுத்துக்களையொழித்து 'ஙகரம்போல்' என்றதூஉம் என்க.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.: (இசை கெடின் – பாட்டில் ஓசை குறையின்), **குறிலிணைக் (கீழ்) குறிற்கீழ் இடை கடை** – குறிலிணையின் கீழுங் குறிலின்கீழும் மொழிக்கு நடுவிலுங் கடையிலும் நின்ற, **ங ஞ ண ந ம ன வ ய ல ள ஆய்தம்** – ஙம் முதலிய இப்பத்தும் ஆய்தமுமாகிய பதினோரெழுத்தும், **அளபு ஆம்** – அவ்வோசையை நிறைக்கத் தத்தம் மாத்திரையின் மிக்கொலிக்கும், **அவற்றின் குறி வேறு மிகல் ஆம்** – அப்படி யளபெடுத்தமையை அறிதற்கு அவற்றின்பின் அவ்வெழுத்துக்களே வரிவடிவில் வேறறிகுறியாய் வரும், எ–று.

முன் சூத்திரத்தில் 'இசை கெடின்' என்றது இதற்குங் கூட்டப்பட்டது.

உ–ம்.:

*"இலங்ங்கு வெண்பிறைசூ டீசனடி யார்க்குக்*
*கலங்ங்கு நெஞ்சமிலை காண்."*

எனவும்,

**"எங்ங் கிறைவனுள னென்பாய் மனனேயா**
**னெங்ங் கெனத்திரிவா ரின்,"**

எனவும்,

*"மடங்ங் கலந்த மனனே களத்து விடங்ங்*
*கலந்தானை வேண்டு"*

எனவும்,

*"அங்ங் கனிந்த வருளிடத்தார்க் கன்புசெய்து*
*நங்ங் களங்கறுப்பா நாம்"*

எனவும் வரும். இவற்றுள், இலங்கு என்பதிற் குறிலிணைக்கீ ழிடையிலும், எங்கு என்பதிற் குறிற்கீ ழிடையிலும் ஙகரம் அளபெடுத்தது. மடம் என்பதிற் குறிற்கீழ்க் கடையிலும் அம் என்பதிற் குறிலிணைக் கீழ்க் கடையிலும் மகரந் திரிந்த ஙகரம் அளபெடுத்தது.

*"விலஃஃகி வீங்கிருளோட்டுமே*
*மாத ரிலஃஃகு முத்தி னினம்.'*

*"எஃஃகிலங்கிய கையரா யின்னுயிர்*
*வெஃஃகு வார்க்கில்லை வீடு."*

இவற்றுள், விலஃகி என்பதிற் குறிலிணைக் கீழிடையிலும், எஃகு என்பதிற் குறிற்கீழிடையிலும் ஆய்தம் அளபெடுத்தது.

பதினோரொற்றும் குறிலிணைக் கீழிடை குறிற்கீழிடை குறிலிணைக் கீழ்க்கடை குறிற் கீழ்க்கடை என்று நான்கிடத்தும் அளபெடுக்கு மெனவே, ஒற்றளபெடை நாற்பத்துநான் காதல் பெறப்படும்; ஆய்தம் ஙகரம்போல விதியீறாகவும் வாராமையால், அதற்குக் குறிலிணைக் கீழ்க்கடை குறிற் கீழ்க்கடை என்னும் இரண்டிடத்தைக் கழிக்க, ஒற்றளபெடை நாற்பத்திரண்டாதல் காண்க.

# வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். இசைகெடின்** – பாட்டில் ஓசை குறையின், **குறலிணை** (கீழ்) (இடைகடை) – குறிலிணைக் கீழிடையிலும் **குறிலிணைக் கீழ்க்கடையிலும், – குறிற்கீழ் இடை கடை** – குறிற்கீழிடையிலும் குறிற்கீழ்க்கடையிலும் நின்ற, ங ஞ **ண ந ம ன வ ய ல ள ஆய்தம்** – நம்முதலிய இப்பத்தும் ஆய்தமுமாகிய பதினோரெழுத்தும், **அளபு மிகல் ஆம்** – (அவ்வோசையை நிறைக்கத்) தம் மாத்திரையின் மிக்கொலிக்கும், **அவற்றின் வேறு குறியாம்** – அப்படியளபெடுத்தமையை அறிதற்கு அவற்றின்பின் அவ்வவ்வெழுத்துக்களே வரிவடிவில் வேறறிகுறியாய் வரும். **எ–று.**

முற்சூத்திரத்தில் இசைகெடின் என்றது இதற்குங் கூட்டப்பட்டது. குறி எனினும், அறிகுறி எனினும், அடையாளம் எனினும் ஒக்கும். குறிலிணை என முன் விதந்தமையாற் பின் குறிலென்றது இணையாத தனிக் குறிலே.

**உ–ம்.**

*"இலங்ங்கு வெபிறைசூ டீசனடி யார்க்குக்*
*கலங்ங்கு நெஞ்சமிலை காண்"*

எனவும்,

*"மடங்ங் கலந்த மனனே களத்து*
*விடங்ங் கலந்தானை வேண்டு"*

எனவும்,

*"எங்ங் கிறைவனுள் னென்பாய் மனனேயா,*
*னெங்ங் கெனத்திரிவாரின்"*

எனவும்,

*"அங்ங் கனிந்த வருளிடத்தார்க் கன்பு செய்து,*
*நங்ங் களங்கறுப்பா நாம்"*

எனவும் வரும். இவற்றுள், இலங்கு கலங்கு என்னுஞ் சொற்களிற் குறிலிணைக் கீழிடையிலும்; மடம், விடம் என்னுஞ் சொற்களிற் குறிலிணைக் கீழ்க்கடையிலும்; எங்கு என்னுஞ் சொல்லிற் குறிற்கீழிடையிலும்; அம், நம் என்னுஞ் சொற்களிற் குறிற்கீழ்க் கடையிலும் ஙகரவொற் றளபெடுத்தது.

*"விலஃஃகி வீங்கிரு ளோட்டுமே மாத,*
*ரிலஃஃகு முத்தி னினம்"*

எனவும்,

*"எஃஃகி லங்கிய கையரா யின்னுயிர்,*
*வெஃஃகு வார்க்கில்லை வீடு"*

எனவும் வரும். இவற்றுள், விலஃகி, இலஃகு என்னுஞ் சொற்களிற் குறிலிணைக் கீழிடையிலும், எஃகு, வெஃகு என்னுஞ் சொற்களிற் குறிற்கீழிடையிலும் ஆய்தம் அளபெடுத்தது. காட்டாதனவற்றிற்கு உதாரணம் வந்தவிடத்துக் கண்டுகொள்க.

ங் ஞ் ண் ந் ம் ன் வ் ய் ல் ள் என்னும் பத்து மெய்களும் குறிலிணைக்கீழிடை குறிலிணைக் கீழ்க்கடை, குறிற்கீழிடை குறிற்கீழ்க்கடை என்னும் நான்கிடத்தும் அளபெடுத்தலால் வருமளபெடை நாற்பதும், ஆய்தம் ஈற்றில் வாராமற் குறிலிணைக் கீழிடையிலும், குறிற்கீழிடையிலும் அளபெடுத்தலால் வருமளபெடை இரண்டுங்கூடி ஒற்றளபெடை நாற்பத் திரண்டானமை காண்க.

ஆய்தவெழுத்து செய்யுட்சீரசையில் சிலவிடத்து அலகுபெற்று உயிர்போன்றும், சிலவிடத்து அலகு பெறாமல் மெய்போன்றும் வருதலால் உயிரெனப் படுதற்கும் மெய்யெனப்படுதற்கும் ஒருவாறு ஒக்குமேனும், இயல்பான மாத்திரை அரையாகவும் அளபெடுத்த மாத்திரை ஒன்றாகவும் ஒலித்தலால் மெய்போலுந் தன்மையே மிகுதியாதலின் ஆய்தமளபெடுத்ததையும் 'ங ஞ ண ந ம ன வ ய ல ள வாய்தமளபாம்' என்று ஒற்றளபெடையிலடக்கினார்.

*அற்றா லளவறிந் துண்க வஃதுடம்பு*

*பெற்றா னெடி துய்க்கு மாறு*

என்னுங் குறள் வெண்பாவில், ஆய்தம் உயிர்போல அலகு பெற்றது.

**வரலாறு.:–**

அற்றா – தேமா, லளவறிந் – கருவிளம், துண்க – தேமா, வஃதுடம்பு – கருவிளங்காய், பெற்றா – தேமா, னெடிதுய்க்கு – புளிமாங்காய், மாறு – காசு. இந்த ஏழுசீர்களின் பொருத்துகளாகிய தலைகள் ஆறையும் முறையே, இயற்சீர் வெண்டளை, இயற்சீர் வெண்டளை, இயற்சீர்வெண்டளை, வெண்சீர் வெண்டளை, இயற்சீர்வெண்டளை, வெண்சீர் வெண்டளை என்று கண்டு ஆய்தம் உயிர்போல அலகுபெற்றதறிக. இக்கவியில் ஆய்தத்தை அலகு பெறாததாய் மெய்போலக் கொண்டால் வஃதுடம்பு என்பது கூவிளங்காய் என்னுஞ் சீராம். இச்சீரைத் துண்க என்னும் முதற்சீரொடு சேர்த்தபோது நேரொன் றாசிரியத்தளையாம். ஆகவே "வெள்ளையுட்பிற தளைவிரவா" என்ற விதிக்கு மாறாகி வெண்பாவின் செப்பலோசை சிதையுமாதலின் அங்ஙனஞ் சிதையாமல் ஆய்தம் அலகுபெற்றமை காண்க.

*"தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்*

*தோன்றலிற் றோன்றாமை நன்று"*

என்னுங் குறள்வெண்பாவில், ஆய்தம் அலகுபெறாமல் மெய்போல நின்றது.

**வரலாறு.:–**

தோன்றிற் – தேமா, புகழொடு – கருவிளம், தோன்றுக – கூவிளம், வஃதிலார் – கூவிளம், தோன்றலிற் – கூவிளம், தோன்றாமை – தேமாங்காய், நன்று – காசு. இந்த ஏழுசீர்களின் பொருத்துகளாகிய தளைகள் ஆறையும் முறையே இயற்சீர்

வெண்டளை, இயற்சீர் வெண்டளை, இயற்சீர் வெண்டளை, இயற்சீர் வெண்டளை, இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, என்று கண்டு வஃதிலார் என்பதில் ஆய்தம் அலகு பெறாது மெய்போல நின்றதறிக. இக்கவியில் ஆய்தத்தை உயிர்போல அலகிடின் வஃதிலார் என்பது கருவிளம் என்னுஞ் சீராம். இச்சீரை உண்க என்னும் முதற்சீரொடு சேர்த்தபோது நிரையொன்றாசிரியத் தளையாய் வெண்பாவிற் பிறதளை கலந்து செப்பலோசை குன்றிப் பிழைபடுமாதலின் அங்ஙனம் பிழை படாமைப் பொருட்டு ஆய்தம் அலகு பெறாது நின்றமை காண்க.

இவையெல்லாம் யாப்பிலக்கணம் கற்றவர் தாமே யறிகுவர். ஙகரமெய்யும் ஆய்தம்போல மொழிக்கிடையிலன்றி மொழிக்கீற்றில் அளபெடுக்க மாட்டாது என்று இலக்கண விளக்க நூலார் கூறினர்.

## வை.மு. சடகோபராமாநுசாசாரி
## சே. கிருஷ்ணமாசாரி

இ—ள்.: (இசைகெடின்)—பாட்டின் ஓசை குறையுமிடத்து, **ங ஞ ண ந ம ன வ ய ல ள ஆய்தம்** – ங முதலிய இப்பத்து மெய்யும் ஆய்தமும் ஆகிய பதினோரெழுத்தும், **குறில் இணை குறில் கீழ்** – இரண்டு குற்றெழுத்தின் பின்னும் ஒரு குற்றெழுத்தின் பின்னும், **இடை கடை** – (மொழிக்கு) நடுவிலும் கடையிலும், **அளபு ஆம்** – (அவ்வோசையை நிறைக்கத்) தம்தம் (அரை) மாத்திரையின் மிக்கு ஒலிக்கும்; **அவற்றின் குறி** – அப்படி அவை அளபெடுத்தமையை அறிதற்கு அடையாளம், **வேறு மிகலே ஆம்**—அம் மெய்யெழுத்துக்களின் பின் அவ்வெழுத்துக்களே (வரிவடிவில்) மற்றொருமுறை அளவுகுறியாய் வருதலாம்; **எ—று.**

ஒற்று அளபு எடை – மெய்யெழுத்து மாத்திரை அதிகப்படுவது. ('ஒற்றுக்கள் ஊன்றிச் சொல்ல அளபெழும், நெட்டெழுத்தை நீட்டிச் சொல்ல அளபெழும்' என்ற நேமிநாதவுரை வாக்கியங்கள் கருதத்தக்கன.)

ஆய்தம், மாத்திரை முதலியவற்றில் மெய்யெழுத்தோடு ஒத்திருத்தலால், அதனையும் இங்குக் கூட்டி உரைத்தார்; கீழ் "ஆய்தப்புள்ளி" என்றதும் காண்க.

முன்சூத்திரத்தின் 'இசைகெடின்' என்றது, இதற்குங் கூட்டப்பட்டது.

**உ—ம்.:**

"இலங்ங்கு வெண்பிறை" "கலங்ங்கு" எனக் குறிலிணைக் கீழிடையிலும், "எங்ங்கிறைவன்" "எங்ங்கென" எனக் குறிற் கீழிடையிலும், "மடங்ங்கலந்த" "விடங்ங்கலந்தான்" எனக் குறிலிணைக் கீழ்க்கடையிலும்; "அங்ங்கனிந்த" "நங்ங்களம்" எனக் குறிற்கீழ்க் கடையிலும் ஙகரம் அளபெடுத்தது; மற்றை மெய்யெழுத்துக்களும் இப்படியே அளபெடுக்கும். (ஙகரம் கடைசியில் விதியீறாகவே வரும்; இயல்பீறாக வாராது.)

"விலஃஃகி வீங்கிருள்" "இலஃஃகு முத்து" எனக் குறிலிணைக்கீ ழிடையிலும், "எஃஃகிலங்கிய", "வெஃஃகுவார்க்கு" எனக் குறிற் கீழிடையிலும் ஆய்தம் அளபெடுத்தது.

குறிலிணைக்கீ ழிடை குறிற்கீழிடை குறிலிணைக்கீழ்க் கடை குறிற்கீழ்க் கடை என்னும் நான்கிடத்தும் பதினோரெழுத்து அளபடுக்கு மெனவே, ஒற்றளபெடை நாற்பத்து நான்காம்; ஆய்தம் மொழியிடையில் மாத்திரம் வருமேயன்றி (விதியீறாக வாயினும்) மொழியிறுதியில் வாராமையால், அதற்குக் குறிலிணைக் கீழ்க்கடை குறிற் கீழ்க்கடை என்னும் இரண்டிடத்தைக் கழிக்க, ஒற்றளபெடை நாற்பத்திரண்டாதல் காண்க.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள். இசை கெடின்** – பாட்டில் ஓசை குறையின், **குறிலிணைக்** (கீழ்) **குறிற்கீழ் இடை கடை** – குறிலிணையின் கீழும் குறிலின் கீழும் மொழிக்கு நடுவிலும் கடையிலும் நின்ற, **ங ஞ ண ந ம ன வ ய ல ள ஆய்தம்** – ஙம் முதலிய அப் பத்தும் ஆய்தமுமாகிய பதினோரெழுத்தும், **அளபு ஆம்** – அவ்வோசையை நிறைக்கத் தத்தம் மாத்திரையின் மிக்கொலிக்கும். **அவற்றின் குறி வேறு மிகல் ஆம்** – அப்படி அளபெடுத்தமையை அறிதற்கு அவற்றின் பின் அவ்வெழுத்துக்களே வரிவடிவில் வேறு அறிகுறியாய் வரும், **எ–று.**

முன் சூத்திரத்தில் 'இசை கெடின்' என்றது இதற்குங் கூட்டப்பட்டது. 'குறிலிணை' யாவது இரண்டு குற்றெழுத்க்கள் சேர்ந்து வருவது.

**உ–ம்.**

*இலங்ங்கு வெண்பிறைசூ டீசனடி யார்க்குக்*
*கலங்ங்கு நெஞ்சமிலை காண்*
*எங்ங் கிறைவனுள னென்பாய் மனனேயா*
*னெங்ங் கெனத் திரிவா ரின்*
*"மடங்ங் கலந்த மனனே களத்து*
*விடங்ங் கலந்தானை வேண்டு*
*அங்ங் கனிந்த வருளிடத்தார்க் கன்புசெய்து*
*நங்ங் களங்கறுப்பா நாம்*

இவற்றுள், இலங்கு என்பதில் குறிலிணைக் கீழிடையிலும், உங்கு என்பதிற் குறிற்கீ ழிடையிலும் ஙகரம் அளபெடுத்தது. மடம் என்பதில் குறிலிணைக்கீழ்க் கடையிலும் அம் என்பதில் குறிற்கீழ்க் கடையிலும் மகரந் திரிந்த ஙகரம் அளபெடுத்தது.

*விலஃஃகி வீங்கிரு ளோட்டுமே மா*
*ரிலஃஃகு முத்தி னினம்*
*எஃஃ கிலங்கிய கையரா யின்னுயிர்*
*வெஃஃகு வார்க்கில்லை வீடு*

இவற்றுள், விலஃகி என்பதில் குறிலிணைக்கீ ழிடையிலும், எஃகு என்பதில் குறிற்கீ ழிடையிலும் ஆய்தம் அளபெடுத்தது.

பதினோரொற்றும் குறிலிணைக்கீழிடை குறிற்கீழிடை குறிலிணைக் கீழ்க்கடை குறிற் கீழ்க்கடை என்னும் நான்கிடத்தும் அளபெடுக்கு மெனவே, ஒற்றளபெடை நாற்பத்து நான்காதல் பெறப்படும். ஆய்தம் நகரம் பேல விதியீறாகவும் வாராமையால், அதற்குக் குறிலிணைக் கீழ்க்கடை குறிற் கீழ்க்கடை என்னும் இரண்டிடித்தைக் கழிக்க ஒற்றளபெடை நாற்பத்திரண்டாதல் காண்க.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ—ள். இசை கெடின்** – பாட்டில் ஓசை குறையின், **குறிலிணைக்** (கீழ்) **–** குறிலிணையின் கீழும், **குறில் கீழ்** – குறிலின் கீழும், **மொழி இடை கடை –** மொழிக்கு நடுவிலும் கடையிலும், **ங ஞ ண ந ம ன வ ய ல ள ஆய்தம் –** ஙம் முதலிய இப் பத்தும், ஆய்தமும் ஆகிய பதினோரெழுத்து ளொன்று, **அளபு மிகல் ஆம்** – (அவ் வோசையை நிறைக்கத் தன் மாத்திரையின்) மிகுந்தொலிக்கும்; **அவற்றின் குறி ஆம் வேறு** – அப்படி (அளபெடுத்தமையை அறிதற்கு) அதன் அதன்பின் அவ் வெழுத்தே (வரிவடிவில்) அறி குறியாய் வரும். **எ—று.**

முன் சூத்திரத்தில் 'இசை கெடின்' என்றது இதற்குங் கூட்டப்பட்டது.

**பொ—ரை.:**

பாட்டில் ஓசை குறைந்தால், குறிலிணைக் கீழும், குறிற்கீழும், மொழிக்கு நடுவிலும், இறுதியிலும் நிற்கும் ங ஞ ண ந ம ன வ ய ல ள ஆகிய ஒற்றுக்களும், ஆய்தமும் தம் மாத்திரையில் மிகுந்தொலிக்கும்; அவற்றின்பின் அவ் வெழுத்துக்களையே வரிவடிவில் எழுதுதல் அவ் வளபெடையை அறியும்படி வேறு அறிகுறியாம்.

**உ—ம்.**

*இலங்ங்கு வெண்பிறைசூ டீசனடி யார்க்குக்*
*கலங்ஙகு நெஞ்சமிலை காண்.*

*எங்ங் கிறைவனுள னென்பாய் மனனேயா*
*னெங்ங் கெனத்திரிவா ரின்*

*மடங்ங் கலந்த மனனே களத்து*
*வீடங்ங் கலந்தானை வேண்டு*

*அங்ங் கனிந்த வருளிடத்தார்க் கன்புசெய்து*
*நங்ங் களங்கறுப்பா நாம்*

எனவரும்.

'இலங்ங்கு'—குறிலிணைக்கீழ் இடையிலும், 'எங்ங்கு'—குறிற் கீழ் இடையிலும், 'மடங்ங்' – குறிலிணைக் கீழ்க் கடையிலும், 'அங்ங்' குறிற்கீழ்க் கடையிலும் ஙகரம் அள பெடுத்தது. மற்றை மெய் யெழுத்துக்களும் இப்படியே அளபெடுக்கும். ஙகரம் கடைசியில் விழியீறாகவே வரும்; இயல்பீறாக வாராது.

*விலஃஃகி வீங்கிரு ளோட்டுமே மாத*

*ரிலஃஃகு முத்தி னினம்*

*எஃஃகி லங்கிய கையரா யின்னுயிர்*

*வெஃஃகு வார்க்கில்லை வீடு*

என வரும். 'விலஃஃகி' குறிலிணைக்கீழ் இடையிலும், 'எஃஃகு' குறிற்கீழ் இடையிலும் ஆய்தம் அளபெடுத்தது. ஒற்றளபெடை யாவது, மெய்யெழுத்து மாத்திரை அதிகப்படுவது. ஒற்றுக்களை ஊன்றிச் சொல்ல அளபெழும்; நெட்டெழுத்தை நீட்டிச் சொல்ல அளபெழும், ஆய்தம் மாத்திரை முதலியவற்றில் மெய்யெழுத் தோடு ஒத்திருத்தலால் அதனையும் இங்குக் கூட்டியுரைத்தார்; கீழ் ஆய்தப்புள்ளி என்றதும் காண்க.

குறிலிணைக்கீழிடை, குறிற்கீழிடை, குறிலிணைக் கீழ்க்கடை, குறிற்கீழ்க்கடை என்னும் நான்கிடத்தும் பதினோரெழுத்து அளபெடுக்கும் எனவே, ஒற்றளபெடை நாற்பத்து நான்காம்; ஆய்தம் மொழி இடையில் மாத்திரம் வருமே யன்றி, (விதி யீறாகவாயினும்) மொழியிறுதியில் வாராமையால் அதற்குக் குறிலிணைக் கீழ்க்கடை குறிற்கீழ்க்கடை என்னும் இரண் டிடத்தைக் கழிக்க, ஒற்றளபெடை நாற்பத்திரண்டாதல் காண்க.

## கா. நமச்சிவாய முதலியார்

**இசைகெடின்** – பாட்டில் ஒசை குறையின், **குறிலிணை** (க்கீழ்) – குறிலிணையின்கீழாவது, **குறில் கீழ்** – குறிலின் கீழாவது, **மொழி இடைகடை** – மொழிக்கு இடையிலும் கடையிலும், **ஙஞண நமன வயலள** ஆய்தம் – ஙஞண நமன வயலள ஆய்தம் (ஆகிய பதினோரெழுத்துள் ஒன்று), **அளபு ஆம்** – (அவ்வோசையை நிறைக்கத் தன் மாத்திரையின்) மிகுந் தொலிக்கும்; **அவற்றின் குறி** – அப்படி அளபெடுத்தமையை யறிதற்கு அறிகுறி, **வேறு மிகல் ஆம்** – (அவற்றின்பின் அவ்வெழுத்துக்களே வரிவடிவில்) வெவ்வேறு மிகுந்து வருதலாகும்.

முன் சூத்திரத்தில் வந்த, 'இசைகெடின்' என்றது இதற்குங் கூட்டப்பட்டது.

**உதாரணம்**

*'இலங்ங்கு வெண்பிறைசூ டீசனடி யார்க்குச் கலங்ங்கு நெஞ்சமிலை காண்'.*

**'எங்ங் கிறைவனுள னென்பாய் மனனேயா**

**னெங்ங் கெனத்திரிவா ரின்'**

*'மடங்ங் கலந்த மனனே களத்து*

*விடங்ங் கலந்தானை வேண்டு'*

*'அங்ங் கனிந்த வருளிடத்தார்க் கன்புசெய்து நங்ங் களங்கறுப்பா நாம்'* என வரும்.

இவற்றுள், **'இலங்கு'** என்பதில் குறிலிணைக்கீழ் இடையிலும், 'எங்கு' என்பதில் குறிற்கீழ் இடையிலும், **'மடங்'** என்பதில்

குறிலினைக்கீழ்க் கடையிலும், 'அங்' என்பதில் குறிற்கீழ்க் கடையிலும், ஙகரம் அளபெடுத்தது.

*விலஃஃகி வீங்கிரு ளோட்டுமே மாதர்*
*இலஃஃகு முத்தி னினம்',*
*'எஃஃகி லங்கிய கையரா யின்னுயிர்*
*வெஃகுவார்க் கில்லை வீடு'*

எனக் குறிலிணைக்கீழ் இடையிலும், குறிற்கீழ் இடையிலும் ஆய்தம் அளபெடுத்தது.

மற்ற மெய்களும் இப்படியே அளபெடுக்கும்

ஆய்தம் குறிலிணைக் கீழும் குறிற் கீழும் மொழிக்கிறுதியில் வாராமையால் அதனை அவ்விரண்டிடத்தும் விலக்க, ஒற்றளபெடை நாற்பத் திரண்டாதல் அறிக. ஙகரம் குறிலிணைக் கீழும் குறிற்கீழும் விதியீறாக நின்று அளபெடுக்கும்.

## மோசகூ பொன்னையா

ஙஞண நமன வயலள என்னும் மெய்களும் ஆய்தமும் இணைக்குறில்களையும், தனிக்குறிலையும் அடுத்து மொழியின் இடையிலும் கடையிலும் நிற்க ஆண்டு இசைவு கெடுமாயின், அவற்றின் நெகிழிசை மிகுந்து ஒலிக்கும்; அவ்விடத்து இசை நிறைவாக அவ்வம் மெய்யே நிற்கும், **எ—று.**

அதிகாரப்பட்டமையின் இசைகெடின் என்பது ஈண்டும் கூட்டி உரைக்கப்பட்டது. மெய்களில் இப்பத்துமே மூக்கொலிப்பு அல்லது நெகிழிசைப்புப் பெற்ற இமுமைமெய்கள் ஆதலின், இமுமைமெய்களே அளபெழும் என்றார் என்பதாயிற்று.

**எ—டு.**

*இலங்ங்கு வெண்பிறைசூ டீசனடி யார்க்குக்*
*கலங்ங்கு நெஞ்சமில்லை காண்.*

*எங்ங் கிறைவனுள னென்பாய் மனனேயா*
*னெங்ங் கெனத்திரிவா ரின்.*

குறிலிணை, குறிற்கீழ் இடையில் மெய் அளபெடுத்தது.

*மடங்ங் கலந்த மனனே களத்து*
*விடங்ங் கலந்தானை வேண்டு.*

*அங்ங் கனிந்த வருளிடத்தார்க் கன்புசெய்து*
*நங்ங் களங்கறுப்பா நாம்.*

குறிலிணை, குறிற்கீழ் கடையில் மெய் அளபெடுத்தது.

*விலஃஃகி வீங்கிரு ளோட்டுமே மாத*
*ரிலஃஃ முத்தி னினம்.*

*எஃஃ கிலங்கிய கையரா யின்னுயிர்*
*வெஃஃ குவார்க்கில்லை வீடு.*

குறிலிணை, குறிற்கீழ் ஆய்தம் அளபெடுத்தது.

பத்து மெய்யும் இடை, கடை என்ற ஈரிடத்தும், ஆய்தம் இடை ஓரிடத்தும் நின்று அளபெழ, ஒற்றளபெடைகள் நாற்பத்திரண் டாயின என்பர்.

(37)

## குற்றியலிகரம்

**92. யகரம் வரக்குற ளுத்திரி யிகரமும்**
**அசைச்சொன் மியாவி னிகரமுங் குறிய.**

**யகரம் வரக் குறள் உத் திரி இகரமும்**
**அசைச் சொல் மியாவின் இகரமும் குறிய.**

yakaram varak kuṛa<u>l</u> uṭ ṭiri ikaramum
asais sol miyāvi<u>n</u> ikaramum kuṛiya.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

**Shortened I**

The letter i which is formed by the combination of short 'u' with an initial 'y' and then 'I' in the particle ***miya*** are shortened (in quantity)

## ஒப்புமைப் பகுதி

**குற்றியலிகரம் நிற்றல் வேண்டும்**
**யாவென் சினைமிசை உரையசைக் கிளவிக்கு**
**ஆவயின் வரூஉம் மகரம் ஊர்ந்தே**

( தொல். : 34)

**புணரியல் நிலையிடைக் குறுகலும் உரித்தே**
**உணரக் கூறின் முன்னர்த் தோன்றும்**

(தொல். எழு. : 35)

**யகரம் வருவழி இகரம் குறுகும்**
**உகரக் கிளவி துவரத் தோன்றாது**

(தொல். : 411)

........................ யகரமோ டியையின்
இகரமும் குறுகும் என்மனார் புலவர்

(அவிநயம்)

தொடர்நெடிற் கீழ் வன்மை மேலுகரம் யப்பின்
படைய வருமிகர மன்றி....

(நேமி. : 4: 1–2)

இகரங் குறுகி வருங்குற் றுகரம்பின் யவ்வரினே

(வீ. : 3:4)

யம்முதல் இய்ஆம் இருகுறள் உக்கெடில்
அஃகும் அற்றுஆம் அசைச்சொல் மியாவே

(தொன். : 14)

யகரம் வரும்வழி யிகரங் குறுகும்

(மு. வீ. : 34)

அசைச்சொன் மியாவி னிகரமு மற்றே

(மு. வீ. : 35)

...... குறள் உவின் கீழ்யவரிற்
சொன்மியா வினில் இகரங் குறுகும்...

(சுவாமி. : 18: 1–2)

## மயிலை நாதர்

**எ – ன்,** குற்றியலிகரத் தோற்றம் உணர்த்துதல் நுதலிற்று.

**இ–ள்.:** யகரம் மொழிக்கு முதலில் வந்தவிடத்துக் குற்றுகரம் திரிந்துவரும் இகரமும் மியாவென்னும் அசைநிலை யிடைச்சொல் இகரமும் குற்றியலிகரமாம், **எ – று.**

வ – று.: நாகியாது, எஃகியாது, வரகியாது, கொக்கியாது, குரங்கியாது, [1]தொள்கியாது எனவும்; கேண்மியா, சென்மியா எனவும் வரும். பிறவும் இவ்வாறே ஒட்டிக் கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ–னின்,** குற்றியலிகரம் வருமாறு **உணர்–ற்று.**

**இ – ள்.:** யகரம் வருமொழிக்கு முதலாகி வர, நிலைமொழிக்கு ஈறாகி நின்ற குற்றியலுகரம் திரிந்த இகரமும், மியா என்னும் அசைச்சொல்லின்கண் இகரமும் குற்றியலிகரங்களாம், **எ–று.**

எனவே, இங்ஙனம் வருமாயின் இவ்வெழுத்தின் தொடர்பால் குறுகும் என்பதும் பெற்றாம்.

---

**பாட வேறுபாடு .:**

**1. தெள்கியாது**

**உ–ம்.:**

நாகியாது எஃகியாது வரகியாது கொக்கியாது குரங்கியாது அல்கியாது எனவும், கேண்மியா சென்மியா எனவும் வரும். பிறவும் அன்ன.பொதுப்படக் கூறிய குற்றியலுகரம் முப்பத்தாறானும், அசைச்சொல் மியாவினானும் குற்றிய லிகரம் முப்பத்தேழாய் வருமாறு காண்க.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்**, குற்றியலிகரத் தோற்றம் கூறியது.

**இ–ள்.:யகரம் வர** – வருமொழி முதலாய் யகரம் வந்தவிடத்து, **குறளுத்திரி இகரமும்** – நிலைமொழி ஈற்றுக்கண் நின்ற குற்றிய லுகரம் திரிந்த இகரமும், **அசைச்சொல் மியாவின் இகரமும்** – மியாவென்னும் அசைச்சொல்லின் வந்த இகரமும், **குறிய** – குற்றியலிகரமாம், **எ–று.**

**உ–ம்.:** நாகியாது, எஃகியாது, வரகியாது எனவும்; கேண்மியா, சென்மியா எனவும் வரும். பிறவும் இவ்வாறு ஒட்டுக. ஆகக் குற்றியலிகரம் 37.

## விசாகப் பெருமாளையர்

**இது**, குற்றியலிகரம் வருமாறு உணர்த்துகின்றது,

**இ–ள்.: யகரம்வர** – யகரத்தை முதலிலே யுடைய சொல்வர, **குறளு** – குற்றியலுகரம், **திரி** – திரிந்த, **இகரமும்** – இகரமும், **அசைச்சொல்** – அசைச்சொல்லாகிய, **மியாவின்** – மியாவென்பதின் மகரத்தின் மேலிருக்கிற, **இகரமும்** – இகரமும், **குறிய**– குற்றியலிகரங்களாம், **எ – று.**

**உ–ம்.:–**

நாகியாது, எஃகியாது, வரகியாது, கொக்கியாது, குரங்கியாது, அல்கியாது எனவும், கேண்மியா எனவும், பிறவு மிப்படியே வரும். நாகு – யாது, நாகியாது என்றாதல் காண்க. (பொதுப்படக் கூறிய குற்றியலுகரம் முப்பத்தாறாலும் அசைச்சொன் மியாவினாலும் குற்றியலிகரம் முப்பத்தேழாய் வருமாறு காண்க).

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

*குற்றியலிகரமாவன யாவை ?*

**யகரம் வரக்குற ளுத்திரி யிகரமும்**
**அசைச்சொன் மியாவி னிகரமுங் குறிய.**

(யகரம் வரக் குறள் உத் திரி இகரமும்
அசைச் சொல் மியாவின் இகரமும் குறிய.)

**இ – ள்.யகரம் வரக் குறள் உத் திரி இகரமும்** – யகரத்தை முதலிலே உடைய சொல் வரக் குற்றியலுகரந் திரிந்த இகரமும்,**அசைச் சொல் மியாவின் இகரமும் குறிய** – அசைச்சொல்லாகிய மியாவென்பதின் மகரத்தின் மேலிருக்கிற இகரமும் குற்றியலிகரங்களாகும்.

உ – ம்.

நாகு + யாது = நாகியாது, எஃகு + யாது = எஃகியாது, வரகு + யாது = வரகியாது, கொக்கு + யாது = கொக்கியாது,

குரங்கு + யாது = குரங்கியாது, தெள்கு + யாது = தெள்கியாது எனவும், கேண்மியா எனவும் வரும்.

*குற்றியலிகரம் முப்பத்தேழாதல் எங்ஙனம் ?*

பொதுப்படக் கூறிய குற்றியலுகரம் முப்பத்தாறினாலும் அசைச்சொல் மியாவினாலுங் குற்றியலிகரம் முப்பத்தேழாதல் காண்க.

## முகவை இராமானுச கவிராயர்

**இது,** குற்றியலிகரம் வருமாறுணர்த்துகின்றது.

**இ–ள்.: யகரம்வர** – யகரமுதல் மொழிவந்துபுணர, **குறள்உ** – (நிலைமொழியிறுதியிலே நின்ற) குற்றியலுகரமானது, **திரிஇகரமும்**–திரிந்த இகரமும், **அசைச்சொல்மியாவின்** – உரையசைச் சொல்லாகிய மியாவென்னுஞ் சொல்லினது, **இகரமும்** – (மகர ஒற்றின்மேலேறிநின்ற) இகரமும், **குறிய** – குற்றியலிகரங்களாம், **எ – று.**

**உ–ம்.:** நாகு+யாது – நாகியாது, எஃகு+யாது–எஃகியாது, வரகு+யாது=வரகியாது, கொக்கு+யாது–கொக்கியாது, குரங்கு+யாது = குரங்கியாது, தெள்கு+யாது = தெள்கியாது, எனவும்; கேண்மியா, சென்மியா எனவும் வரும். பொதுப்படக் கூறிய குற்றியலுகரம் முப்பத்தாறினாலும் அசைச் சொல்மியாவினாலும் குற்றயலிகரம் முப்பத்தேழாய் வருதல் காண்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

உரை :– **யகரம்வர** – யகரத்தை முதலில் உடைய சொல்வர, **குறள் உதிரி இகரமும்** – குற்றியலுகரம் திரிந்த இகரமும், **அசை (சொல்**–அசைச் சொல்லாகிய, **மியாவின் இகரமும்** – 'மியா' என்பதன் (மகரத்தின்மேலிருக்கிற) இகரமும், **குறிய** – குற்றியலிகரங்களாம்.

**குறிப்பு** : – குற்றியலிகரம் – ஒரு மாத்திரையினதாகிய இகரம்குறுகி அரைமாத்திரையினதாய் நிற்பது.

**உ–ம்:**– நாடு + யாது = நாடியாது எனவும், கேண்மியா எனவும் வரும். இனிக் கூறப்படும் குற்றியலுகரம் முப்பத் தாறினாலும் அசைச்சொல் 'மியா' வினாலும் குற்றிய லிகரம் முப்பத்தேழாய் வருமாறு காண்க. 'யகரம்வர' என்றமையால் இகரம்குறுகுதற்கு ''யவ்வரினிய்யாம்'' என்பதனால் யகரம் காரணமாம். குற்றியலுகரம் அறிந்தபின்பே இஃது அறிய வேண்டுமாயினும், எழுத்துமுறைபற்றி இது முன்வைக்கப்பட்டது. கதவு + யாது.

**கதவியாது** என முற்றியலுகரமும் இகரமாகு மிடத்தும் மாத்திரை குறைதலால், குற்றியலிகரத்துள் அடக்கப்படும்.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: யகரம் வரக் குறள் உத்திரி இகரமும்** – யகரத்தை முதலிலே யுடைய சொல் வரக் குற்றியலுகரந் திரிந்த இகரமும், **அசைச்சொல் மியாவின் இகரமும்** – அசைச்சொல்லாகிய மியாவென்பதின் மகரத்தின் மேலிருக்கிற இகரமும், **குறிய** – குற்றியலிகரங்களாம், **எ–று.**

**உ–ம்.:** நாகு + யாது = நாகியாது, எஃகு + யாது = எஃகியாது, வரகு + யாது = வரகியாது, கொக்கு + யாது = கொக்கியாது, குரங்கு + யாது = குரங்கியாது, தெள்கு + யாது = தெள்கியாது எனவும் கேண்மியா எனவும் வரும்.

> பொதுப்படக் கூறிய குற்றியலுகரம் முப்பத்தாறினாலும், அசைச்சொன் மியாவினாலுங் குற்றியலிகரம் முப்பத்தேழாதல் காண்க.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். யகரம் வரக்குறள் உத்திரி இகரமும் –** யகரத்தை முதலிலேயுடைய சொல்வரக் குற்றியலுகரந் திரிந்த இகரமும், **– அசைச்சொல் மியாவின் இகரமும்** – அசைச்சொல்லாகிய மியாவென்பதின் மகரத்தின் மேலிருக்கிற இகரமும், **– குறிய** – குற்றியலிகரங்களாம். **எ–று.**

**உ–ம்.:–**

> நாகு + யாது= நாகியாது; எஃகு + யாது = எஃகியாது; வரகு + யாது = வரகியாது; கொக்கு + யாது = கொக்கியாது; குரங்கு + யாது = குரங்கியாது; தெள்கு + யாது = தெள்கியாது; எனவும் கேண்மியா எனவும் வரும். ஈற்றில் வருங் குற்றியலுகரம் முப்பத்தாறின் திரிபினாலும், மியா என்னும் அசைச் சொல்லி னாலுங் குற்றியலிகரம் முப்பத்தேழாதல் காண்க.

## வை.மு. சடகோபராமாநுசாசாரி
## சே. கிருஷ்ணமாசாரி

**இ–ள்.: யகரம் வர** – யகரத்தை முதலிலுடைய சொல் (வருமொழியாய்) வர, **குறள் உ திரி** – குற்றியலுகரம் திரிந்த, **இகரமும்**– இகரமும், **அசைச்சொல்** – முன்னிலை யசைச் சொல்லாகிய, **மியாவின்** – மியாவென்பதன் (மகரத்தின் மேலுள்ள) இகரமும், **குறிய** – குற்றியலிகரங்களாம்; **எ–று.**

குற்றியலிகரம் – ஒரு மாத்திரையாகிய இகரம் குறுகி அரை மாத்திரையாய் நிற்பது; குற்றியலுகரமும் இவ்வாறே.

**உ – ம்.:**

> வீடு + யாது = வீடியாது எனவும், கேண்மியா எனவும் வரும்.
>
> மேற்கூறுங் குற்றியலுகரம் முப்பத்தாறினாலும், அசைச் சொல் மியாவினாலும் குற்றியலிகரம் முப்பத்தேழாக வருதல் காண்க.

குற்றியலுகரம் அறிந்த பின்பே இது அறியப்படுவ தாயினும், எழுத்து முறைமை பற்றி, இதனை அதற்குமுன் வைத்தார்.

## பவானந்தம் பிள்ளை

**இ—ள். யகரம் வர குறள் உ திரி இகரமும்** – யகரத்தை முதலிலேயுடைய சொல் வரக் குற்றியலுகரந் திரிந்த இகரமும், **அசைச் சொல் மியாவின் இகரமும்** – அசைச் சொல்லாகிய மியாவென்பதின் மகரத்தின் மேலிருக்கிற இகரமும், **குறிய** – குற்றியலிகரங்களாம், **எ—று.**

**உ—ம்.**

நாகு + யாது = நாகியாது, எஃகு+யாது = எஃகியாது, வரகு + யாது = வரகியாது, கொக்கு + யாது = கொக்கியாது, குரங்கு + யாது = குரங்கியாது, தெள்கு + யாது = தேள்கியாது. கேண்மியா.

பொதுப்படக் கூறிய குற்றியலுகரம் முப்பத்தாறினாலும், அச்சைசொல் மியாவினாலுங் குற்றியலிகரம் முப்பத்தேழாதல் காண்க.

குற்றியலுகரம் (36) வருமாறு.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ—ள். யகரம் வர** – யகரத்தை முதலிலே உடைய சொல்வர, **குறள் உ திரி இகரமும்** – குற்றியலுகரம் திரிந்த இகரமும், **அசைச் சொல் மியாவின் இகரமும்** – அசைச் சொல்லாகிய மியா என்பதின் (மகரத்தின்மேல் இருக்கிற) இகரமும், குறிய–குற்றியலிகரங்களாம். **எ—று.**

**பொ—ரை.:**

யகரத்தை முதலிலே உடைய சொல் வாக் குற்றியல் உகரத் திரிந்த இகரமும், அசைச்சொல் ஆகிய மியா என்பதில் உள்ள இகரமும் குற்றியலிகரங்களாம்.

**உ—ம்.**

நாகு+யாது=நாகியாது எனவும்,
எஃகு + யாது = எஃகியாது
வரகு + யாது = வரகியாது
கொக்கு + யாது = கொக்கியாது
குரங்கு + யாது = குரங்கியாது
அல்கு + யாது = அல்கியாது
கேண்மியா எனவும் வரும்.

பொதுப்படக் கூறிய குற்றியலுகரம் முப்பத்தாறாலும், அசைச் சொல் மியாவினாலும் குற்றியலிகரம் முப்பத்தேழாய் வருமாறு காண்க. பொதுப்பட என்றது ஒவ்வொன்றின் வகை கூறித் தொகை கூறாமையை.குற்றியலுகாம் அறிந்த பின்பே குற்றியலிகரம் அறியப்படுவதாதலால் இது அதற்குப்பின் வைக்கப்பட்டது.

## கா. நமச்சிவாய முதலியார்

**யகரம் வர** – யகரத்தை முதலிலே யுடைய சொல் வர, **குறல் உதிரி இகரமும்** – குற்றியலுகரமே திரிந்த இகரமும், **அசைச்சொல்** – அசைச்சொல்லாகிய, **மியாவின் இகரமும்** – மியா என்பதன் (மகரத்தின்மேலிருக்கிற) இகரமும், **குறிய** – குற்றிய லிகரங்களாம்.

**உதாரணம்**

நாகு + யாது = நாகியாது.
எஃகு + யாது = எஃகியாது
வரகு + யாது = வரகியாது
கொக்கு + யாது = கொக்கியாது
குரங்கு + யாது = குரங்கியாது
இயல்பு + யாது = இயல்பியாது எனவும்,
கேண்மியா எனவும் வரும்.

பொதுப்படக் கூறிய குற்றியலுகரம் முப்பத்தாறாலும், அசைச்சொல் மியாவினாலும் குற்றியலிகரம் முப்பத்தேழாய் வருமாறு காண்க.

## மோசகு பொன்னையா

வருமொழி முதலில் யகரம் வர நிலைமொழியீற்றுக் குற்றியலுகரந் திரிந்து வரும் இகரமும், அசைநிலை இடைச்சொல்லாகிய மியா என்பதன் இகரமும் குற்றியலுகரங்கள், **எ–று.**

எ–டு.:–

நாகியாது, எஃகியாது, வரகியாது, நோக்கியாது, குரங்கியாது, தெள்கியாது எனவும், கேண்மியா எனவும் வரும்.

குற்றியலுகரம் மொழியீற்றில் மெய்யேபோல் புள்ளி பெறும் என்றும், மெய்யெழுத்தே போல் உயிரேற இடங்கொடுத்து நிற்கும் என்றும் புணர்ச்சியில் மெய் பிறிதாதல் போன்று திரிந்து நிற்கும் என்றும் தொல்காப்பியர் கொண்டார். அவர் வழிநின்று இவ்வாசிரியரும் யகரம் வரக் குறள் உகரம் இகரமாகத் திரியும் என்றார்.

தொடர்மொழியில் மேற்சொன்ன இடத்தில் நிற்பதொடு, தனிமொழியில் யா என்னும் அசைச்சொல் புணர்ந்த உரையசைக் கிளவியின் மகரமிசை நிற்பதும் குற்றியலிகரமே என்றார்.

***குற்றிய லிகரம் நிற்றல் வேண்டும்***
***யாவென் சினைமிசை உரையசைக் கிளவிக்கு***
***ஆவயின் வரூஉம் மகரம் ஊர்ந்தே.***

என்ற நூற்பா மகரமிசை வரும் குற்றிய லிகரத்தின் இடத்தைத் தெளிவுபடுத்துகின்றது.

தொல்காப்பியர் அம்ம, ஆங்க, போலும் என்ற மூன்றையும் உரையசை என்றார். பவணந்தியார் 'அம்ம வுரையசை கேண்மினென்றாகும்' எனக் கூறி, அம்ம ஒன்றையும் உரையசை என்றதொடு கேண்மின் என்பதே அதன் பொருளாகும் என்றும் தெளிவுபடுத்தினார்.

இளம்பூரணர் மியா உரையசை என்றார். நச்சினார்க்கினியர் 'கேள்' என்பதே உரையசை எனக் கூறி, அதனைச் சார்ந்து தனக்கு இயல்பின்றி நின்றது மியா எனவும், தான் கூறும் பொருளைக் கோடற்கு ஒருவனை எதிர்முகமாக்குஞ் சொல்லே உரையசையாகும் எனவும் கூறினார். சேனாவரையர் மியா இக முதலாகிய அசை நிலை ஒரு பொருளுணர்த்தாவாயினும், முன்னிலைக்கண்ணல்லது வாராமையான் அவ்விடமுணர்விக்குமாறு போல, அம்ம வென்பதூஉம் ஒரு பொருளுணர்த்தாதாயினும் ஒன்றனைக் கேட்பிக்குமிடத்தல்லது வாராமையான் கேட்பிக்கு மென்றார் எனக் கூறி மியா முன்னிலை யசைமொழியே யன்றி உரையசை யன்று என்பதை விளக்கி யுரைத்தார். சங்கர நமச்சிவாயர் 'அம்ம வாழி தோழி' என்பது ஒன்று சொல்லுவன் கேளென்னும் ஏவற் பொருள் தந்தது என அம்ம என்ற உரையசையின் உரையசைப் பொருளை விளக்கினார். இவ்வாறு உரையசைச் சொற்களுக்கெல்லாம் விளக்கந் தந்து நிற்கும் உரையசையாகிய கேண்ம் என்பது யாவொடு புணர்ந்து நிற்கும் நிலையில் அதனைத் தொல்காப்பியர் 'ஏவல் குறித்த உரையசை மியா' எனக் குறிப்பிட்டார். இவற்றையும், உரைகாரர் அனைவரும் கேண்மியா என்பதை விடாமல் மகரமிசைக் குற்றியலிகரத்திற்கு எடுத்துக்காட்டாகக் கூறுவதையும் கூர்ந்து நோக்குவார்க்குக் கேண்ம் + யா = கேண்மியா என்பதின் மகரமிசை இகரமே குற்றியலிகரம் என்பதும், கேள் + மியா என்பது பிறழ்பிரிப்பே என்பதும் தெளிவுறும்.

அன்றியும், தொல்காப்பியர்

**மியாயிக மோமதி யிகுஞ்சின் னென்னு**

**மாவயி னாறு முன்னிலை யசைச் சொல்,**

என்றும் நன்னூலார்,

**மியாயிக மோமதி அத்தை இத்தை**

**வாழிய மாளஈ யாழமுன் னிலையசை,**

என்றும் மியா முன்னிலை யசைச்சொல் என்றனர். இந்நிலையில், முன்னிலை யசைச் சொல்லாகிய மியாவின் இகரம் குற்றியலிகரம்

எனின், நடமியா, வம்மியா, படிமியா, சீமியா, விடுமியா என இவ்வாறு எல்லா முன்னிலை ஏவல்களொடும் புணர்ந்து வருமிடமெல்லாம் அது நிற்றலை உடன்படுவதாகும். அதனை ஏற்றுக்கொள்வார் இல்லையெனின், அசைச்சொல் மியாவின் இகரமுங் குறிய என இவ்வாசிரியர் நூற்பா செய்தது முதனூலோடு மாறுபட்டும் வழக்கொடு முரணியும் அமைவதாகும் என்க.

குற்றியலுகரந் திரிந்து அமையும் குற்றியலிகரம் முப்பத்தாறும், கேண்மியாவின் இகரம் ஒன்றுமாகக் குற்றியலிகரம் முப்பத்தேழு என்பர். குற்றியலுகரம் அமையும் இடச்சூழ்நிலையில் ஈண்டுக் குற்றியலிகரம் அமைகிறது. குற்றியலுகரம் மிக மிதந்த ஒலியாகி உயிர்த்திறன் இழந்த இழைவு இசையாகவே உச்சரிக்கப்படினும், அது தான் உள்ள ஞு உ ஞு ஒலியனின் பொருட்குறிப்புக்கும், துணைநிலைவழக்கிற்கும் இசைந்தும், ஏனை ஒலியக் குடும்ப ஒலிகளோடு எதிர்நிலை வழக்குப் பெற்றும், தன் உரிய இடச்சூழ்நிலையில் வழங்குவதால், அஃது ஞுஉஞு ஒலியனின் மாற்றொலியே யாகும்.

குற்றியலிகரமும் மிக மிதந்த ஒலியாகி உயிர்த்திறன் இழந்த இழைவு இசையாகவே உச்சரிக்கப்படுகிறது. எனினும், இவ்விடச் சூழ்நிலையில் ஞு இ ஞு ஒலியனின் பொருட்குறிப்புக்கோ, துணை நிலைவழக்கிற்கோ எவ்வாற்றானும் துணை செய்யாது தன் கட்டை விடுத்து, வேறுபட்ட ஞு உ ஞு ஒலியனின் மாற்றொலியான குற்றியலுகரத்தின் பொருட்குறிப்பைப் புலப்படுத்தி, ஞு இ ஞு ஒலியக்குடும்ப ஒலிகளோடு எதிர்நிலை வழக்குப் பெறாமல், ஞு உ ஞு ஒலியக் குடும்பத்துடன் துணைநிலை வழக்குப் பெறுவதால் அது ஞு உ ஞு ஒலியக் குடும்பக் கட்டில்லா வேறுபாட்டொலியாக அமைந்துள்ளது.

கேண்மியா என்பதன்கண் அமைந்த இகரம் பொருட் குறிப்புக்குத் துணை செய்யாததால் அஃது இழைவு இசையாக மட்டும் அமைந் துள்ளது. மகர உச்சரிப்பின் பின்னர் யகர உச்சரிப்புக்கு நா எழுந்து செல்லும் நாவீச்சில் பிறந்ததே கேண்மியாவின் இகரமாகும்.

**(38)**

**நன்னூல் உரைவளம்**

**எழுத்தியல் (தொகுதி–1) முற்றிற்று.**

***

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை - 600 113.

## அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை |
|---|---|
| உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 901 - கி.பி.1300 | 100.00 |
| பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார் | 40.00 |
| பெண்ணிய உளப்பகுப்பாய்வும் பெண் எழுத்தும் | 40.00 |
| தொல். பொருள். (அகம்-புறம்) -ஆங்கில மொழிபெயர்ப்பு | 50.00 |
| தமிழ் ஆய்வு இதழகள் | 50.00 |
| வேதாத்திரியத்தில் சமூகவியல் இறையியல் சிந்தனைகள் | 130.00 |
| தமிழிலக்கிய வகைமையியல் தொகுதி - 3 | 150.00 |
| தமிழிலக்கிய வகைமையியல் தொகுதி - 2 | 115.00 |
| தமிழிலக்கிய வகைமையியல் தொகுதி - 1 | 130.00 |
| தமிழரின் மரபுச் செல்வங்கள் - அறிவியல்-தொழில்நுட்பம் II | 110.00 |
| தமிழரின் மரபுச் செல்வங்கள்-அறிவியல்-தொழில்நுட்பம் I | 90.00 |
| மௌனத்தின் அதிர்வுகளும் மொழியும்-பெண் | 40.00 |
| உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 1851-2000 | 180.00 |
| இதழாளர் பெரியார் | 160.00 |
| திராவிட இயக்க இதழ்கள் - தொகுதி | 60.00 |
| சைவ சித்தாந்தத்தில் ஆன்மக் கொள்கை | 65.00 |
| பெரியபுராணம்-திருமுறைகளின் கவசம் | 55.00 |
| காஞ்சிபுரம் கி.பி.6 -ஆம் நூற்றாண்டுக்கு முன் | 65.00 |
| திருவாவடுதுறைப் புராணயம் | 250.00 |
| மகாவித்துவான் ரா.ராகவையங்கார் | 30.00 |
| சித்தாந்தச் செல்வர் க.வெள்ளைவாரணனார் | 25.00 |
| திருக்குறளில் பொதுநிலை உத்திகள் | 30.00 |
| தமிழிலக்கத்தில் மனித நேயம் | 115.00 |
| தமிழ்க்கடல் இராய சொக்கலிங்கம் | 30.00 |
| தமிழ் இதழ்கள் - விடுதலைக்குப் பின் | 40.00 |
| பாவாணரின் ஞாலமுதன்மொழிக் கொள்கை | 45.00 |
| பெண்ணியப் படைப்பிலக்கியம் | 75.00 |
| தமிழக வானவியல் சிந்தனைகள் | 35.00 |
| பள்ளு இலக்கியம் மறுவாசிப்பு பிரதிக்கு வெளியே | 75.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை | 80.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள்-நாட்டுப் புறவியல் கலை, கண்பாடு | 90.00 |
| தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 150.00 |
| வாழிய செந்தமிழ் | 140.00 |
| பேராசியிார் அ.மு.பரமசிவானந்தம் | 40.00 |
| திறனாய்வு அணுகுமுறைகள் | 120.00 |

**நன்னூல் உரை வளம்**